# யாழ்ப்பாண நினைவுகள்

## பாகம் 01



வேதநாயகம் தபேந்திரன்

சிவகாமி பதிப்பகம்

# யாழ்ப்பாண நினைவுகள்

## பாகம் 01

(தினக்குரல் வாரமலரில் பிரசுரமாகிய கட்டுரை எழுத்துக்களின் முதற்பாகம்)

**வேதநாயகம் தபேந்திரன்**
B.Com (Jaf), PGD.Population Development Studies (Jaf)
M.A in Development Studies (Jaf)

**சிவகாமி பதிப்பகம்**
'தேன் தமிழ்'
கைதடி வடக்கு, கைதடி,
யாழ்ப்பாணம்.

நூல்:

**யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 01**

விடயம்:

**யாழ்ப்பாண வாழ்வியல் குறித்தான காலப் பதிவுகள்**

ஆசிரியர்:

**வேதநாயகம் தபேந்திரன்**

முதற்பதிப்பு:

**2014 ஜூலை**

வெளியீடு:

**சிவகாமி பதிப்பகம்**

"தேன் தமிழ்"

கைதடி வடக்கு, கைதடி,

யாழ்ப்பாணம்.

vethaben@yahoo.com

வடிவமைப்பும், அச்சுப்பதிப்பும்:

**தேவி Printers**

140/1 மானிப்பாய் வீதி, யாழ்பாணம்.

0215100467

Deviprinters.com

Deviprinters@live.com

பக்கங்கள்:

**194**

விலை

**இலங்கை ரூபா : 390**

ISBN No 978-955-41392-0-6


# சமர்ப்பணம்

எழுத்துலகின் என் முதற்குரு என் தந்தை



அமரர். வேலுப்பிள்ளை வேதநாயகம் அவர்களுக்கும்

எம் தந்தையினதும் எம் குடும்பத்தினதும் உயர்வுக்கு ஒளியூட்டிய என் பெரிய தந்தை, பெரிய தாயார்



அமரர்கள் கோவிந்தசாமி சரஸ்வதி தம்பதிகளுக்கும் இந் நூல் சமர்ப்பணம்.

# வாழ்த்துரை

ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் யாழ்ப்பாண நினைவுகள் என்ற தலைப்பில் தொடர்ச்சியாக எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து ஒரு நூலாக வேதநாயகம் தபேந்திரன் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். யாழ்ப்பாணத்தின் அண்மைக் கால வரலாற்றின் சுவாரஸ்யமான அம்சங்கள் பலவற்றை நினைவுபடுத்தும் இந்த நூல் உள்நாட்டிலும் புலம்பெயர்ந்தும் வாழும் தமிழர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பைப் பெற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

யாழ்ப்பாணத்தின் பண்பாடு பல சிறப்பம்சங்களைக் கொண்டது. இந்தப் பண்பாடு ஒரு கட்டுக்கோப்பானதும்கூட. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் தலைநகரான யாழ்ப்பாணம் குறுகிய காலத்துக்குள்ளேயே பல மாற்றங்களைக் கண்டிருக்கின்றது. போர், அதனால் ஏற்பட்ட புலம்பெயர்வு மற்றும் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் என்பன யாழ்ப்பாண வாழ்வில் சடுதியான பல மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. யாழ்ப்பாணத்தின் பண்பாடும் அதன் சிறப்பம்சங்கள் பலவும் கூட இதனால் மாற்றத்தைக் கண்டிருக்கின்றது.

இந்தப் பின்னணியில்தான் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள் என்ற இந்தக் கட்டுரைத் தொடர் முக்கியத்துவம் பெறுகின்றது, யாழ்ப்பாண வாழ்வியலில் அற்றுப்போய்விட்ட அல்லது மறக்கப்பட்டுவிட்ட சுவாரஸ்யமான மற்றும் உள்ளத்தைத் தொடும் பல விடயங்களை தபேந்திரன் இங்கு நினைவுபடுத்துகின்றார். இது வெறுமனே ஒரு நினைவுபடுத்தல் என்றில்லாமல், எமது சமூகத்தின் வாழ்வியல் பதிவாகவும் இருந்துள்ளது என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

அதனால்தான் இந்தக் கட்டுரைத் தொடர் சமூகவியல் சார்ந்தவர்கள் மத்தியிலும், பல்கலைக்கழக சமூகத்திலும் பெரு

வரவேற்பைப் பெற்றிருந்தது.

எதிர்கால ஆய்வுகளுக்கும் இது பயன்படலாம். இந்தத் தொடரை செம்மையாகத் தொடர்வதற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக கடினமான தேடலில் ஈடுபடவேண்டியராக தபேந்திரன் இருந்துள்ளார். சளைக்காத கடினமான ஒரு முயற்சியாக இதனை அவர் மேற்கொண்டிருக்கின்றார்.

இந்தக் கட்டுரைத் தொடர் பத்திரிகையில் வெளிவந்து கொண்டிருந்த காலத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழர்கள் பலர் தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு கூடஇந்தக் கட்டுரை குறித்த தமது உணர்வுகளை வெளிப்படுத்தியிருந்தார்கள். இந்தத் தொடர் இப்போது நூலாக்கப்பட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. யாழ்ப்பாண வரலாற்றின் முக்கியமான சில பகுதிகளை இதன் மூலம் தபேந்திரன் ஆவணப்படுத்தியுள்ளார்.

தபேந்திரன் எழுதியிருக்கும் முதலாவது பகுதியாக நூல் அமைந்துள்ளது. ஏனெனில் இந்தத் தொடரை அவர் எழுதி முடித்த ஏனைய பகுதிகள் மற்றொரு நூலாகவும் வெளிவருமென நிச்சயமாகக் கூறமுடியும். அவரது இந்த முயற்சி தொடர எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பாரதி இராஜநாயகம்,**
ஆசிரியர்,
ஞாயிறு தினக்குரல்,
68, எலி ஹவுஸ் வீதி. கொழும்பு - 15

# நினைவுகளின் நுழைவாயிலில்...

யாழ்ப்பாணத்தில் வாழ்வியல் நினைவுகள் குறித்து எழுதிய ஆக்கங்கள் எட்டுடன் சேர்த்து 29 ஆக்கங்களைக் கொண்டதாக எனது பூத்திடும் பனந்தோப்பு நூல் 2012 பெப்ரவரியில் வெளி வந்தது.பெரு வரவேற்பைப் பெற்றது. இந்நூலுக்கு சான்றளித்த இலங்கை கலை இலக்கியப் பேரவைக்கும் என் நன்றிகள்.

யாழ்ப்பாண வாழ்வியல் நினைவுகள் குறித்து எழுதுபவர்கள் மிக அரிது. தொடர்ந்து எழுதுங்கள் என புலமைசார் எழுத்தாளர்கள் சிலரும் மதிப்பிற்குரிய வாசகர்களும் வேண்டுதல் விடுத்தனர்.

நினைவுகளின் தடம் பதிக்க தினக்குரல் வாரமலரின் பிரதம ஆசிரியர் திரு.இராஜநாயகம் பாரதி சாளரம் பகுதியில் இடம் தந்தார். வாசகர்களின் பலத்த வரவேற்பு இத் தொடரின் ஆயுளை இருபத்தொரு மாதங்களாக நீடிக்கச் செய்துள்ளது. நேரில் காணும் போதும், தொலைபேசி மூலமாகவும் அபிமான வாசகர்கள் கூறிய கருத்துக்கள் புதிய புதிய ஆக்கங்களுக்கு தேடல்களுக்கு தந்த தகவல்கள் இத் தொடரின் நீடிப்பிற்கு உதவியது.

மூத்த எழுத்தாளர்கள் சிலர் மனம் திறந்து பாராட்டியது எனக்கு ஊக்க மாத்திரையாக அமைந்தது. யாழ்ப்பாண நினைவுகள் ஒவ்வொரு கிளைகளாக வளர்ந்து இன்றைய விருட்சம் உங்களின் கைகளில் கிடைக்க வழிகாட்டியவர்கள் யாவருக்கும் என் நன்றிகள்.

வாராவாரம் பொருத்தமான படங்களை மிகக்கடுமையாக உழைத்து தேடிப்பிடித்தும் அவ்வப்போது நான் அனுப்பும் படங்களை பிரசுரித்தும் உதவிய தினக்குரல் வாரமலர் ஆசிரியர் குழாமிற்கு என் நன்றிகளும் பாராட்டுக்களும். வாழ்வை ஆவணப் படுத்துதல் எனும் விடயத்தில் உலக இனங்களில் எம் தமிழர்கள் மிகவும் பலவீனமாக உள்ளமையையிட்டு வருத்தப்படுகிறேன்.

யாழ்ப்பாண மண்ணின் நினைவுகளில் எனக்குத் தெரிந் தவற்றை, தெரிந்த காலத்தை ஆவணப்படுத்தியது போல எமது நாட்டின் ஏனைய தமிழ் பேசும் மக்களும் தமது வாழ்வியல் ஆவணங்களை முன் வைக்க வேண்டுமென்பது என் பெரு விருப்பும் வேண்டுகோளுமாகும்.

யாழ்ப்பாணத்தின் நினைவுகள் மிகத்துல்லியமாக இடம் பெற மிகக் கடுமையாக உழைத்துள்ளேன். இதற்காக பிரயாணங்கள் பல செய்தும் தகவல்களைப் பெற வேண்டியிருந்தது. இங்குள்ள என் எழுத்துக்களில் சில இடைவெளிகள் இருப்பின் சுட்டிக்காட் டுங்கள். அடுத்த பதிப்புக்களில் திருத்திக் கொள்ளலாம்.

இத் தொடரை பிரசுரித்து ஊக்கம் தந்த தினக்குரல் நாளி தழ் நிறுவனத்திற்கும் நன்றிகள் கோடி. இத் தொடரை வீட்டில் எழுதும் போதெல்லாம் உறுதுணை புரிந்த அன்பு மனைவிக்கும் எனக்கு உதவிய என் அன்பு மகன்மார் இலக்கியன், இந்துயன் ஆகியோ ருக்கும் நன்றிகள்.

**வேதநாயகம் தபேந்திரன்**
"தேன்தமிழ்"
கைதடி வடக்கு, கைதடி,
யாழ்ப்பாணம்,
*2014 - ஜூலை 03*

# நினைவுகளின் சுவடுகள்


1. சந்தைகளுடன் பிணைக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை முறை 01

2. நினைவுகளில் நிற்கும் தட்டிவான். 07

3. சமூகக் கூட்டுறவும் யாழ்ப்பாண மக்களும். 12

4. திருமணப்பந்தல் முதல் திருமண மண்டபம் வரை. 17

5. சமூக எழுச்சியில் பணவரவுவைபவம் 21

6. போர்க் கால அச்சுத் தொழில் 27

7. கிளாலிப் படகும் தென்பகுதிப் பயணங்களும். 34

8. மே தினமும் சினிமாத் தியேட்டர்களும். 40

9. கப்பல்களும் பயணங்களும். 45

10. விமானங்களும் எமது பயணங்களும். 52

11. போர்க்காலம் கற்றுத்தந்த சொற்கள். 58

12. அருகிவரும் சிறுவர் விளையாட்டுகள். 63

13. கொம்படி ஊரியான் பாதையும் பயணங்களும். 69

14. போர்க்கால வாழ்வாதாரத் தொழில்கள். 76

15. அருகிவரும் கைத்தொழில்கள். 84

16. கிராமிய வறுமை தணித்த அற்ஹோம் முறைமை. 92

17. வாகனங்களும் வாழ்வியலும். 97

18. உலக சாதனை முயற்சிகள் மீளும் நினைவுகள் 107

19. யாழ்ப்பாணத்தில் சம்போ இல்லாத காலம். 112

20. வானொலியும் யாழ்ப்பாணத்தவரும். 118

21. கால வெள்ளத்தில் கரைந்து போன தொழிற்சாலைகள். 127

22. வெற்றிலையும் எம்மவரும் 135

23. சனசமூக நிலையங்களும் சமூகமும். 142

24. கிணறும் வாழ்வியலும். 149

25. சினிமாப்பாடல் புத்தக காலங்களில். 155

26. பொப்பிசைப் பாடல் யுகத்தில். 164

27. துலா மிதித்தல் காலம். 169

28. இசைக் குழுக்களின் காலங்களில். 175


29. துறைமுகப் பட்டினமொன்றின் கதை. 181

30. சவாரிப் போட்டிக் காலங்கள். 188



“பட்டங்கள் வழங்கும் பல்கலைக்கழகம் பற்றி நீங்கள் அறிவீர்கள். பத்திரிகைத்துறையும் ஒரு பல்கலைக் கழகம் தான். இத்துறையில் அரசியல், பொருளாதாரம், சமுதாய அமைப்பு, விவசாயம், கைத்தொழில் போன்ற விடயங்களையும் உலக மக்களின் வாழ்வும் வளமும் பற்றிய விபரங்களையும் நீங்கள் கற்றுக்கொள்ள முடியும். இவ் விடயங்களில் நீங்கள் பெறும் அனுபவமும் முதிர்ச்சியும் உங்களை முழு மனிதனாக்கும்.”

**எஸ்.ரி.சிவநாயகம்**
*வீரகேசரி அமுதவிழா*
*(80 ஆம் ஆண்டு) சிறப்புமலர்*
*06.08.2010*



# சந்தைகளுடன் பிணைக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை முறை

யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான மக்களின் வாழ்க்கை முறை விவசாய விளைபொருள்கள் சந்தைகளுடன் ஏதோவொரு வகையில் பிணைக்கப்பட்டே உள்ளது. மக்களின் வாழ்வியலுடன் இரண்டறக் கலந்த சந்தைகள் பண்பாட்டம்சங்களுடன் நினைவு கூரத்தக்க ஒன்றுதான். விவசாயம் சார்ந்த யாழ்ப்பாணத்தின் பொரு ளாதாரத்தில் நெல்விவசாயம் சிறியளவாகவும் மரக்கறி, உப உணவு, கால் நடை வளர்ப்பு பெரும் பகுதியாகவும் உள்ளது. உற்பத்தி என்ற ஒன்று இருந்தால் விற்பதற்கு சந்தை என்ற ஒன்று இருக்க வேண்டும் தானே. ஆம் சந்தைகள் உருவாகின, இருந்தன, இன்றும் இருக்கின் றன.

ஆனால் மாற்றம் என்ற சொல் அவற்றையும் மாற்றமுறவே செய்துவிட்டது. ஒரு நாற்பது வருடம் பின்னோக்கிப் பயணித்து அன்றைய சந்தைகளின் அழகிய அம்சங்களை முறைமைகளைக் கவனிப்போம். கால நதியின் மீது நீந்தி பின் இன்றைய சந்தைக் கும் வருவோம். அன்றைய நாளில் யாழ் குடா நாட்டில் இரு மிகப்

பெரும் சந்தைகளாக தென்மராட்சியில் 1933 இல் உருவாகிய சாவகச்சேரி சந்தையும் வலிகாமம் தெற்கில் உருவாகிய சுன்னாகம் சந்தையும் தான் இருந்தன.

அன்றைய சாவகச்சேரி சந்தை கூடும் நாட்களாக வாரத்தின் செவ்வாய், வியாழன், சனிக்கிழமை இருக்கும். சுன்னாகம் சந்தை திங்கள், புதன், வெள்ளி நாட்களில் கூடும். ஞாயிற்றுக்கிழமையை எம்மவரும் உலகப் பொது விடுமுறை நாளாக மதித்துள்ளார்கள் போலத்தான் தெரிகின்றது. அன்று சகல சந்தைகளுக்கும் ஓய்வு தான். சுன்னாகம் சந்தைக்கு தெற்குப்புறமாக கூப்பிடு தூரத்தில் உள்ள மருதானார்மடம் சந்தை பின்னாளில் செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் கூடும் சந்தையாகியது.

1970 களின் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட கிளிநொச்சி சந்தை இலங்கையின் மிகப்பெரிய மரக்கறிச் சந்தையாகச் சனிக் கிழமைகளில் கூடியது. ஏனைய நாட்களில் சந்தை வெறிச்சோடிப் போயிருக்கும்.அது போலத்தான் சாவகச்சேரி, சுன்னாகம், மருதனார்மடம் சந்தைகளும் ஏனைய நாட்களில் வெறிச்சோடிப் போயிருக்கும். தென்மராட்சியின் கொடிகாமத்தில் 1950 களின் இறுதியில் சந்தையொன்று உருவாகி அது திங்கள், புதன், வெள்ளி நாட்களில் மட்டும் கூடியது. இதனை விட சங்கானை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, அச்சுவேலி, நெல்லியடி, பருத்தித்துறை, வேலணை, ஊர்காவற்றுறை, திருநெல்வேலி, கல்வியங்காடு போன்ற சந்தைகளும் இருந்தன.

ஆனால் விவசாய விளைபொருள்களின் பெருமளவு வியாபாரங்கள் இங்கு நடைபெறுவதில்லை. முன்சொன்ன ஏனைய சந்தைகளிலேயே அவை தாராளமாகப் புழங்கியது. விவசாய உற்பத்தியாளர்களால் தன்னிச்சையாக உருவாக்கப்பட்ட சந்தைகளாக சாவகச்சேரி, சுன்னாகச் சந்தைகளைத் தான் மூத்தோர் கூறுகின்றனர். கொடிகாமம் சந்தை தேங்காய்க்குப் பிரபலமாக இருந்தது. சாவகச்சேரிச் சந்தை மாம்பழம், பலாப்பழ சீசனில் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும். பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் இச்சந்தை மட்டுவில் கத்தரிக்காயால் நிறைந்து இருக்கும். அது

போல ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் கச்சாய் கத்தரிக்காயின் வாசம் வீசும்.

புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களின் பருவமழை கழிந்த பின்புதான் மரக்கறிகளின் அணிவகுப்பைச் சந்தைகளில் காணலாம். சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளில் வரும் விவசாய விளைபொருட்களில் கணிசமானவை வடமராட்சியின் நெல்லியடி, பருத்தித்துறை சந்தைக்கு அணிவகுப்பைச் சந்தைகளில் காணலாம். அதைவிட ஊர்க்கோழி முட்டை விற்கும் காட்சிகளையும் சந்தை ஓரங்களில் காணலாம். புரட்டாதி மாதம் முதல் மழைத்துளி மண்ணில் பட்டதும் சேவல், பேட்டுக் கோழிகளின் வருகை அதிகமாகி விலையும் குறைவாக இருக்கும். வயல் விதைப்பைப் பாதுகாக்கத்தான் கோழிகள் இறைச்சிக்காக விற்கப்படும்.

சாவகச்சேரி, கொடிகாமம், நெல்லியடி, பருத்தித்துறைச் சந்தைகளில் தட்டிவானில் ஆட்களும், பொருட்களும் வருவதும் போவதுமாகக் காணப்படும் ஆரவாரம் தனி அழகுதான். தட்டிவான் என்றால் என்ன அதன் வரலாறு என்னவென்பதையெல்லாம் அழகொளிர இன்னொரு நாளில் பார்ப்போம். 2009 ஆம் ஆண்டின் நீதிமன்றத் தீர்ப்பொன்று தட்டிவானை சேவையிலிருந்தே தட்டிவிட்டது. பழவகைக் காலங்களில் என் பேரனுடன் ரக்சியில் சாவகச்சேரி சந்தைக்குப் போய் ஆசைதீர பழங்களும் வடை, வாய்ப்பனும் உண்டது மறக்கவொணா நினைவுதான். சுன்னாகம் சந்தை வாழைக் குலைக்குப் பிரபலமாக இருந்தது. நீர்வேலியில் ஐக்கிய வாழைக்குலை வியாபாரிகள் சங்கமெனும் கூட்டுறவு அமைப்பு அன்றைய நாளில் உருவாகி இன்றும் வெற்றி நடை போடுகின்றது. வலிகாமம் பிரதேசத்தின் வளமான மண்ணில் விளைந்த வாழைக் குலைகளின் பெரும் பகுதி சுன்னாகம் சந்தை வந்து குடாநாடெங்கும், சகல பிரதேசங்களுக்கும் செல்வதை அன்றைய விவசாயிகள் இன்றும் பெருமை பொங்க நினைவு கூருகின்றனர்.

சாவகச்சேரி சந்தையிலும் பெருமளவு வாழைக்குலைகள் சந்தைப்படுத்தப்பட்டன. வலிகாமம் பகுதியின் கறணைக்கிழங்கு பெருமளவுக்கு இச்சந்தைக்குத் தான் வரும்.சாவகச்சேரி, கொடிகா

மம் சந்தைகளில் வரும் விவசாய விளைபொருட்களில் கணிசமா னவை வடமராட்சியின் நெல்லியடி, பருத்தித்துறை சந்தைக்கு வியாபாரிகளால் எடுத்துச் செல்லப்படும். பூநகரிப் பிரதேசத்தில் மழைகாலத்தை அண்டிச் செய்யப்படும் விவசாய பொருட்களும் சாவகச்சேரி சந்தையை அலங்கரித்தன. மாவிட்டபுரம், தெல்லிப் பழையின் உயர்ரக வெற்றிலைகளும், திராட்சைப் பழங்களும் சுன்னாகம் சந்தையில் மதிப்புடன் விற்பனையாகின.

மேலே சொன்ன சந்தைகள் எல்லாம் அதிகாலை 4 மணியளவில் ஆரவாரத் திருவிழாக்களாக ஆரம்பித்து மதிய உச்சிவெயில் சரியச் சனக்கூட்டமும் வற்றி அடங்கிவிடும். தினமல்லாத நாட்களில் வெறிச்சோடி, நிசப்தமாகவே இருக்கும். சந்தை நாட்களில் சலசலப்புடன் தோசை, இடியப்பம், பிட்டு, அப்பம், எனச் சிற்றுண்டி வியாபாரங்களும் களை கட்டும்.

நானும் தம்பி தாத்தாவுடன் சென்று சில சமயம் அப்பாவு டன் சென்று வாங்கி உண்ட இனிமை இப்போதும் நாவில் சுவையூட்டுகிறது. அன்றைய நாளில் இன்று போல கைத்தொலைபேசியோ, சி.டி.எம்.ஏ தொலைபேசிகளோ, கேபிள் இணைப் புக்களோ இல்லை. அதனால் சந்தையின் விலையையும் பொருள் வரத்தையும் சில நமிடங்களில் மாற்ற முடியாதிருந்தது.

1990 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட புதிய முறையில் விவசாயியிடம் ஒவ்வொரு 10 கிலோ பொருள்களுக் கும் ஒரு கிலோ கழிக்கும் நீதியற்ற வியாபாரமும் அன்றிருக்க வில்லை. ஊர்கூடித் தேரிழுத்த ஒற்றுமையின் பண்பாடாகவே சந்தை திகழ்ந்தது. அன்றய கிளிநொச்சியின் சனிக்கிழமை வாரச் சந்தைக்கு இலங்கையின் சகல பாகங்களிலும் இருந்தும் மரக்கறி கள் வாங்க லொறிகள் வந்து நிற்கும். வங்கிகள் படு சுறுசுறுப்பாக பணம் புழக்கம் செய்தன. வடக்கின் விவசாய விளை பொருள்க ளின் அழகுக் கண்காட்சிக் கூடமாக கிளிநொச்சி இருந்தது. இன் றைய நாளைப்போல கிருமிநாசினிகள், உரப்பாவனையும் மிகக் குறைவாகவே இருந்தன.

சமூக வலுவூட்டல் (Social Mobilization) என்று வெளி நாட்டவரும், உள்நாட்டவரும் கூறுகின்றனர். ஆனால், அன்றைய சந்தை முறையில் அது எம்மிடம் இருந்தது. காலச் சக்கரம் சுழன்றது. யுத்த மேகம் எம் மீது மாரி பொழிந்தது. சந்தைகளின் கட்டமைப்பை அடியோடு புரட்டிப் போட்டது.சந்தையை நிர்வகிக்க வந்தவர்களை நாள் சந்தை முறைகளை மறுதலித்தார்கள். வருமானம் ஒன்றை மட்டும் குறியாகக் கொண்டார்கள். எல்லாச் சந்தைகளையும் நாள்தோறும் இயங்கும் சந்தையாக மாற்றினார்கள். இலங்கையில் மாபெரும் மரக்கறிச் சந்தையான கிளிநொச்சிச் சந்தையை மூன்று தசாப்த கால யுத்தம் கோரமாகத் தின்று தீர்த்து விட்டது. சந்தைக் குத்தகையாளர்களின் நாட்டாண்மைப் போக்கு விவசாயிகளின் வருமானத்திற்கும் வேட்டு வைத்துவிட்டது.

பகலிரவாக இயற்கையுடன் போராடி, வியர்வை சிந்திப் பணத்தைக் கொட்டி கொண்டு போகும் தமது உற்பத்திகளை வியாபாரிகள் மலிவு விலைக்கு வாங்கி அதிக இலாப மீட்டுவதாகக் குமுறுகின்றனர். மரக்கறிகளுக்கு ஒவ்வொரு 10 கிலோ விற்கும் ஒரு கிலோ கழிவெடுக்கும் புதிய முறையால் தாம் நட்டப்படுவதாகவும் குறைபடுகின்றனர். கைத்தொலைபேசிகளின் பாவனை பொருள்களின் வரவையும் விலையையும் தீர்மானிக்கும் சக்தியாகிவிட்டமை கால மாற்றம் தான். மாட்டு வண்டில்களும் தட்டி வான்களும் காணாமல் போய் லான்ட் மாஸ்ரர்களும், கன்ரர்களும், ட்ராக்டர்களும், ஆட்டோக்களும், எம்.டி.90 மோட்டார் சைக்கிள்களும் அந்த இடத்தைப் பிடித்ததும் காலம் எழுதிய வரிகள் தான். சாதாரண தராசு மட்டுமிருந்த சந்தையில் டிஜிற்றல் தராசு புகுந்து பவுண் அளப்பது போல பொருள் அளக்கும் முறை வந்தது. இறாத்தல், போத்தல் அளவை முறைகள் காணாமல் போய் கிலோ கிராம், லீற்றர் முறைகள் வந்ததுவும் காலத்தின் மாற்றம்தான்.

கொட்டில்கள், தறப்பால்களாலான சந்தையின் கிராமியச் சுவடுகள் அழிந்து போய் கொங்கிறீற் கட்டிடங்கள் வந்ததுவும் காலம் தந்த பதிவுகள்தான். ஒரு சந்தையில் பொருள் தட்டுப்பாடென்றால் கைத்தொலைபேசி மணி ஒலித்தால் தம்புள்ள முதல், வன்னி என்ன, யாழ்ப்பாணத்தின் பிற சந்தைகளிலிருந்தெல்லாம்

- வேதநாயகம் தபேந்திரன் -

பொருட்கள் விரைந்து வரும். விலை விழுந்து விடும். 1990 களின் பின்னர் யாழ்ப்பாணச் சந்தைகளில் முக்கியமான மாற்றம் ஒன் றைக் காணக் கூடியதாகவுள்ளது. குடாநாட்டிலுள்ள ஏனைய சந்தைகளைவிட திருநெல்வேலிச் சந்தையின் முக்கியத்துவம் அதிக ரித்து அது குறிப்பிடத்தக்களவு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. சந்தைப் புறோக்கர் தொழிலும் முன்னையதைப் போல ஓகோவென இப்போது இல்லை. நவீனத்துவம் எமது யாழ்ப்பாணச் சந்தை களையும் மாற்றித்தான் விட்டது. வாழ்ந்த வாழ்வின் சுவடுகளை ஆவணமாக்கிச் சந்ததிகள் பார்க்க எழுத்தாக்கம் செய்துள்ளேன்.

**நன்றி. தினக்குரல் வார வெளியீடு 2012.03.18**




# நினைவுகளில் நிற்கும் தட்டிவான்

**த**ரைவழிப் போக்குவரத்தில் இருந்து கால மாற்றத்தால், தொழில் நுட்ப வேகத்தால் ஈடுகொடுக்க முடியாமல் விலகிப் போன ஒன்று தான் தட்டிவான். யாழ்ப்பாணப் பண்பாட்டில் மறக்க வொணாத பாகத்தில் ஒன்றாக இதுவும் உள்ளது. இரும்பினால் முழுமையாக அமைக்கப்பட்ட உறுதியான ஓர் வாகனம் தான் எமது தட்டிவான். ஆள்களும், சாமான்களும் உள்ளேயிருந்து போகக் கூடியதாக அமைக்கப்பட்ட வாகனத்தின் பின் புறம் உறுதியான பலகையிலான தட்டியை அமைத்து சங்கிலியால் பிணைத்த போது இவ்வாகனத்திற்கு தட்டிவான் என எம்மவர் பெயரிட்டனர்.

பிரித்தானியக் கம்பனியால் Chavalat Lorry எனும் பெயரில் அமைக்கப்பட்டு எமது நாட்டிற்கு கப்பல் மூலமாகப் பாகங்க ளாக்கப்பட்டு அனுப்பப்பட்டதே இவ்வாகனம். கொழும்பில் வைத் துப் பாகங்கள் பொருத்தப்பட்டு அது தட்டிவானாக எம் மண்ணில் உலா வந்தது. ஜப்பானியர்கள் விவசாய நிலங்களை உழுவதற்கு உருவாக்கிய லான்ட் மாஸ்டர் என எம்மவர்கள் கூறிய சிறியரக

உழவு இயந்திரத்திற்கு பெட்டியடித்து எம்மவர்கள் சாதனை புரிந் தவர்கள் அல்லவா. அதனையொத்த சாதனையை 1920 களில் சவ்லட் லொறிக்கும் செய்து தட்டிவான் எனப் பெயர் சூட்டினார் கள். தட்டிவான் இலங்கையின் சகல பாகங்களிலும் அறிமுகமாகி னாலும் கூட அது மக்களால் விரும்பப்பட்டு நீண்ட காலம் ஏற்றுக் கொள்ளப்பட்ட இடமாக யாழ்ப்பாணம் தான் இருந்தது.

வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களிலும் தட்டிவான் சேவை யில் ஓரளவு பங்கை வகித்தாலும் யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பிரதேசத்தின் தலைப்பட்டினம் என்று கூறக் கூடிய பருத்தித்துறை பிரதேசம் தான் தட்டிவான் உரிமையாளர்களை அதிகமாகக் கொண்ட இடமெனலாம், அதற்கடுத்ததாக நெல்லியடி, அச்சு வேலி, கொடிகாமம் போன்ற பிரதேசங்களைக் குறிப்பிடலாம். தட்டிவானில் உள்ள பெரிய நன்மையென்ன வென்றால் இதற்கு மூடப்பட்ட கதவுகளோ யன்னல்களோ கிடையாது. அதனால் காற் றோட்டத்தை அனுபவித்தவாறே செல்லலாம்.

போக்குவரத்துப் பொலிஸாரின் கெடுபிடிகள் இல்லாத காலத்தில் தட்டிவானின் பின் தட்டியிலும் கூரையிலும் ஏறியும் இருந்தும் பயணம் செய்தார்கள். 1970 களில் எமது தட்டிவான் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம், மானிப்பாய், அச்சுவேலி, கொடிகாமம், பூநகரி, பரந்தன், உடையார் கட்டு போன்ற பிரதே சங்களுக்கெல்லாம் சேவையில் ஈடுபட்டது. பருத்தித்துறை, கொடி காமம் சேவையிலேயே தட்டிவான் கூடுதலான பங்கை வகித்தது. கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கி வரும் புகையிரதம் கொடிகாமம் புகையிரத நிலையத்திலும் நின்று போகும். வடம ராட்சி பிரதேசத்திற்கென புகையிரதப் பாதைகள் இல்லை. இதனால் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் கொழும்பி லும் நாட்டின் பிற பாகங்களிலும் இருந்து எடுத்து வரும் பொருட் களை தமது ஊர்களுக்கு எடுத்து செல்ல வசதியான வாகனப் போக்கு வரத்து தேவைப்பட்டது.

அதற்கு வசதியானதாக எமது தட்டிவான் இருந்தது. அதில் ஆள்களும் பொருள்களும் நிறைய ஏற்றப்பட்டு காற்றோட்ட வச

தியுடன் பயணம் செய்து தமது இருப்பிடங்கள் திரும்பினார்கள். ஏனைய வாகனங்களில் காற்றோட்ட வசதி குறைவாகத் தானிருக்கும் ஆனால் எமது தட்டிவானில் காற்று மிகத் தாராளமாகவே வந்து போகும். திறந்த வெளிகளைக் கொண்டது போன்ற தட்டி வானை இதனால் பலரும் விரும்பினார்கள்.பயணித்தார்கள். இதனால் தட்டிவானும் தனித்துவமான பிரபலம் பெற்றது.

வருடத்தின் மிகப் பெரும் காலமும் வெய்யில் எறிக்கும் எமது பிரதேசத்தில் தட்டிவானில் ஏறுவதென்றால் மக்களுக்கு பெ..ரி..ய...விருப்பம் தான்.

வடமராட்சி பிரதேசத்தில் உள்ள மக்களால் இச்சேவை அதிகம் விரும்பப்பட்டதால் பருத்தித்துறை பிரதேசத்தைச் சேர்ந்தோர் அதிகளவிலும் நெல்லியடி பிரதேசத்தைச் சேர்ந்தோர் கணிசமான அளவிலும் தட்டிவான் சொந்தக்காராகளாக மாறினார்கள். பிரித்தானியர்கள் பெற்றோல் எரிபொருளைக் கொண்டு தான் இயங்கக் கூடியதாக தட்டிவானை வடிவமைத்தார்கள். சிக்கனங்களை உருவாக்குவதிலும் புத்தாக்கம் செய்வதிலும் பேர் போனவர்களல்லவா. யாழ்ப்பாணத்தவர்கள்.

மூளை சுறுசுறுப்படைந்து சிந்தித்தது. விடை கிடைத்தது. பெற்றோலால் இயங்கிய வாகனத்தை டீசலால் இயங்கும் வாகனமாக்கினார்கள். கொடிகாமச் சந்தை தேங்காய் வியாபாரத்திற்கு பிரபலமாக இருந்தது. தென்னை வளம் செறிந்த தென்மராட்சியின் தேங்காய்களின் மிகப் பெருமளவு பங்கும், வன்னிப் பெருநிலப்பரப்பின் தேங்காய்களில் கணிப் பிடத்தக்க வீதமும் கொடிகாமம் சந்தைக்குத் தான் வரும்.

திங்கள், புதன், வெள்ளி நாட்களில் கூடும். கொடிகாமம் சந்தையின் தேங்காய்களை சாக்கு மூடைகளில் ஏற்றிச் செல்லும் பெரும் போக்குவரத்து வாகனமாகத் தட்டிவானே திகழ்ந்தது. தட்டியின் பின்புறம் தேங்காய் மூடைகளால் நிரம்பியிருக்கும்.

*1940* கள் *1950* களின் காலப் பகுதியிலிருந்து *1980* களின்

இறுதி வரையில் ரவிக்கை அணியாது நூல் சேலையால் மார்ப கத்தை மூடிக் குறுக்குக் கட்டணிந்த பெண்கள் தட்டிவானில் பயணிப்பதைக் காணக் கூடியதாயிருக்கும். இளம் பெண்களும் நடுத்தர வயது, முதுமை அண்மித்த பெண்களும் குறுக்குக் கட்டுடன் பயணிப்பது சர்வசாதாரணமாயிருந்தது. கால மாற்றம் நாகரீக மாற்றத்தை ஏற்படுத்தி குறுக்குக் கட்டணிந்த பெண்களை யாழ்ப்பாணத்தில் தேடியும் கண்டு பிடிக்க முடியாதநிலையை ஏற்படுத்திவிட்டது. மங்கல, அமங்கல, பிற நிகழ்வுகளுக்கு அந்தநா ளில் எமது தட்டிவான் தான் பெருமளவுக்கு ஓடும்.

எனக்கு ஏழுவயதிருக்கும் போது வடமராட்சியின் அல் வாய் கிராமத்திலிருந்து கிளிநொச்சியின் வட்டக்கச்சிக் கிராமத் துக்கு திருமண நிகழ்வொன்றிற்கு தட்டிவானில் சென்று வந்ததாக ஞாபகமாக மனதில் பசுமையாக நிழலாடுகின்றது. தட்டிவானின் ஹோர்ண்சத்தம் எழுப்ப இரப்பரினாலான குழல் ஒன்று பொருத் தப்பட்டிருக்கும். பீம்...பீம்... என்று அது சத்தம் எழுப்புவது தனித் துவமானது. சைக்கிளில் மீன் பெட்டி கட்டி மீன் விற்பவனின் குழல் ஒலியை இச்சத்தம் ஒத்ததாக இருக்கும்.

கோயில் திருவிழாக்களிற்கு குறிப்பாக முல்லைத்தீவு, வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயிலுக்கு தட்டிவானில் களை கட்டிபக்தர்கள் சென்று வந்த காலங்கள் பசுமையானவை. 1990 ஜூ னில் யுத்தம் தொடங்கி யாழ். குடாநாட்டிற்கும் வெளி யிடங்களுக் குமான தரைவழிப் போக்குவரத்து தடைப்பட்ட போது கேரதீவு சங்குப்பிட்டி, கிளாலி படகுத் துறைகளுக்கும் சில தட்டிவான்கள் பயணங்களை மேற்கொண்டன. 1977 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசால் திறந்த பொருளாதாரக் கொள்கை வந்த போது போக்கு வரத்தும் தனியார் துறைக்கு திறந்து விடப்பட்டது. அப்போது மினிபஸ் யுகமொன்று நாட்டில் எங்கும் விஸ்வரூபம் எடுத்தது. எமது தட்டிவானுக்குப் போட்டியாக வந்த மினிபஸ்க ளின் கவர்ச்சி யும், ஜப்பானிய உயர் தொழில் நுட்பமும் மெல்ல தட்டிவானைக் காணாமல் போகச்செய்தது. வடமராட்சியை மையப் படுத்தி மட்டும் சில தட்டிவான்கள் உலா வந்தன. தட்டிவான் உரிமையாளர்களில் அதிகமானோர் மினிபஸ் யுகத்துள் உள்வாங்கப்பட்டனர்.

- வேதநாயகம் தபேந்திரன் -

கொடிகாமச் சந்தையின் தேங்காயையும் பயணிகளையும் ஏற்றிக் கொண்டு பயணித்த எஞ்சிய சில தட்டிவான்களுக்குச் சோதனைக் காலம் வந்தது. 2008 ஆம் ஆண்டில் கொடிகாமத் திலிருந்து தட்டிவான் பலகையில் தேங்காய்களை ஏற்றிச் சென்ற போது எருவன் எனுமிடத்தில் பின்பலகைத் தட்டு அறுந்தது. 13 வயது பாடசாலை மாணவனின் முகத்தின் மேல் தேங்காய் மூடைகள் விழுந்து மரணத்தை ஏற்படுத்தியது. இருபயணிகள் காயப்பட்டனர். அதன் விளைவாக தட்டிவானின் பின்புறப் பல கைத் தட்டை கழற்றிய பின் தான் சேவையில் ஈடுபட முடியுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டது.

சிம்மாசனம் இல்லாத ராஜா இருக்க முடியுமா என்பது போல தட்டிவானும் சேவையில் இருந்து நின்றேபோனது. தட்டி வான் உரிமையாளர்கள் மினிபஸ், டாட்டா பஸ் வாங்கி புதிய பாதையைத் தேடிக் கொண்டார்கள். யாழ்ப்பாண வாழ்வியலின் பழமையிலும் பெருமையிலும் அழகு செய்த தட்டிவானை நூத னசாலையில் வைத்தால் தான் இனிப் பார்க்க முடியும். காலமாற் றத்தின் சுவடுகள் மீது நடந்து எம்தட்டிவானின் அழகியலை மன திற்குள் ரசிப்போம்.

**நன்றி– தினக்குரல் வாரவெளியீடு– 25-03-2012**



# சமூகக் கூட்டுறவும் யாழ்ப்பாணமக்களும்

சமூக அணிதிரட்டல் (Social mobilization) என்ற சொல் இன்று அரச துறையிலும் சரி, அரசசார்பற்ற துறையிலும் சரி உச்சரிக்கப்படுகின்ற சொல்லாகிவிட்டது. நாடு முழுவதும் இச்சொல் சர்வசாதாரண உத்தியோகப் பேச்சு வழக்காகி விட்டது. யாழ்ப்பாணத்திலும் இச்சொல் கேட்கும் தானே. ஆனால் யாழ்ப்பாண மக்களின் பாரம்பரிய வாழ்வியலில் சமூக அணி திரட்டல் என்ற இச்சொல் சமூககூட்டுறவின் சின்னமாக இருந்தது. மிகப்பலமாக ஒருகாலம் இருந்தது அந்தப் பொற் காலத்தை மூத்தோரின் துணை கொண்டு நினைவூட்டிப் பார்ப் போம்.

யாழ்ப்பாணம் என்பது கிராமியக் கட்டமைப்பின் பலமான கூட்டமைப்பாகவே ஒருகாலத்தில் இருந்தது. இன்றும் அதன் சுவடுகள் காலத்தின் மாற்றங்கள் சிலவற்றுடன் தொடங்குகின் றது. சமூககூட்டுறவு முறைகளின் தரிசிப்பிற்குச் செல்வோம்.

வீடுமேய்தல் என்பதிலிருந்து பயணத்தை ஆரம்பிப் போம். அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகிய வீட்டின் கூரை பெரும்பாலும் தென்னை ஓலையால் பின்னப்பட்ட கிடுகாலோ அல்லது பனை ஓலையால் வேயப்பட்டதாகவோ இருக்கும். இப்போதையதைப் போலக் கல் வீடுகள் அக்காலத்தில் பெரிதாக இருப்பதில்லை. வீடு வேய்வது என்பது சமூகக் கூட்டுறவாகவே இடம் பெற்றது. ஒருவரின் வீட்டின் கூரையை புனரமைக்கும் பணியில் அயலில் உள்ள குடும்பங்களின் ஆண்களும் பெண் களும் இணைந்து வேலை செய்வார்கள். கூலி கொடுத்து ஆள் பிடிப்பது கிடையாது. முறை வைத்து ஒவ்வொருவரின் வீடா கச் சமூக கூட்டுறவு அடிப்படையில் ஈடுபட்டோருக்கு உணவு, தேநீர் என்பவற்றைக் குறித்த வீட்டாரே வழங்குவார்கள். இது போலவே வளவு, பூவரசு, கிளுவை மரங்களின் கதிகால் வெட்டு தல், வேலி அடைத்தல் போன்ற வற்றையும் கூலி கொடுக்காது ஒற்றுமையாகவே செய்தார்கள்.

ஓர்மிக மூத்த அரச அதிகாரி என்னுடன் கதைக்கும் போது கூறினார் “அந்தக் காலத்தில் வறுமை காரணமாக வேலை செய்து பிழைக்கும் போது ஆடை அழுக்காக இருக்கும். ஆனால், அவர்களின் மனமோ மிகவும் தூய்மையாக இருக்கும். ஆனால் இக்காலத்தில் பணவசதிகள் கூடி ஆடைகள் எப்போதும் பளிச் சென்று இருக்கும். ஆனால், மனம் தான் அழுக்காகி விட்டது பாருங்கள்.” அந்தக் காலத்து மனிதர்களின் மனத் தூய்மையின் உயர்வை இதன் மூலம் காணமுடிகின்றது. அக்காலத்தில் தோட்டங்களை உழுவதற்கு மாடு பூட்டிய கலப்பையையே பயன்படுத்தினார்கள். தோட்ட நிலத்தை மண் வெட்டியால் கொத்தி பண்படுத்தினார் கள். ஒருதரம் தோட்டத்தைக் கொத்தி மண்ணைப் பண்படுத் துவது ஏழுமுறை கலப்பை பூட்டி உழுவதற்கு சமமென மூத்த விவசாயி ஒருவர் கூறினார். தோட்ட நிலத்தைக் கொத்துவது கூட சமூகக்கூட்டுறவின் அடிப்படையிலேயே செய்தார்கள். இப்போதைய பணக்கார வருத்தங்களான சலரோகம், பிறசர் போன்றவை அக்கால விவசாயப் பெருமக்களுக்கு என்னவெனத் தெரியாது.

பயிர்நடுதல், களைபிடுங்குதல், அறுவடை, மூடைகட்டு தல், சந்தைக்கு வண்டியில் எடுத்து செல்லல் என்பவையெல் லாம் கூட சமூகக்கூட்டுறவின் அடிப்படையிலேயே இயங்கியது. இப்பண்பு கிராமங்களின் ஒற்றுமையைக் கூட்டியது. சேர்ந்து வாழும் பண்பைக் காட்டியது. மனிதவாழ்வின் முன்னேற்றத்திற் குத் தேவையான மதித்தல், கீழ்ப்படிதல், நன்றியுணர்வு கொள் ளல், என்பதெல்லாம் அக்கால மனிதர்களிடையே இயல்பாகவே வலுவாக இருந்தது. இயற்கையின் நியதி அவர்களின் உண்மைத் தன்மையை ஆசீர்வதித்தது. அதனால் உயர்ந்தார்கள்.

யாழ்ப்பாணம் என்று சொன்னாலே பனையை அடை யாளப்படுத்திப் பார்க்கும் வழக்கம் அன்றும் இன்றும் உள்ளது. ஆனி, ஆடி மாதங்கள் வர பனங்காய் என அழைக்கப்பட்ட பனம் பழங்கள் மரத்தால் மெல்ல மெல்ல விழ ஆரம்பிக்கும் அவற்றை ஓடியோடி சேகரிப்பார்கள். நன்கு முற்றிய பனங்காய்களை மரத்திலி ருந்து வெட்டி விழுத்துவார்கள். அவற்றைக் கடகங்க ளிலும் மாட்டு வண்டிகளிலும் சேகரித்து தமது வீட்டு வளவிற்கோ அல்லது பனம் பாத்தி போடும் இடத்திற்கோ எடுத்துச் செல்வார்கள். புரட்டாதி மாதம் முதல் மழை கண்டவுடன் பனம் பாத்தி போடும் படலம் ஆரம்பமாகும். அப்போதும் குடும்பங்கள் பல ஒன்றுகூடி முறை வைத்து பாத்திபோடுவார்கள். மாசி, பங்குனி மாதங்களில் பனம் பாத்தி கிண்டி பனங் கிழங்கு எடுப்பார்கள். இந்நிகழ்வுகளில் எல்லாம் ஊர் கூடிச் சமைத்து கலகலப்பாக பேசி மகிழ்ந்து உண்பார்கள். இங்கும் சமூக அணி திரட்டல் என்ற பெயரில் மேற்கத்தைய நாட்டவர் எமக்கு இன்று கற்றுத் தர முற்படும் சமூகக்கூட்டுறவு உயர்வாக இருக்கும்.

அக்காலத்தில் திருமணம், மங்கைப் பருவ மங்கல நீராட்டு விழா என்பவை வீடுகளில் தான் நிகழும். திருமண வைபவம் கோயில் களில் நிகழ்ந்து வீட்டிற்கு மணமக்கள் அழைத்து வரப்படு வார்கள். இப்போதையதைப் போல திருமண மண்டபங்கள் மிகப் பெருமளவில் இல்லாத காலம். அப்போது பலகாரம் சுடுதல், பந்தல் போடுதல் எல்லாமே ஊர்கூடித்தேரிழுக்கும் உயர்வான ஒற்றுமையின் சின்னமாக இருந்தது. கிராமங்களின்

சந்தோச சாம்ராச்சியங்களாக மங்கல நிகழ்வுகள் இருந்தன.

பெரிசு, சிறிசு, இளசு, கிழடு என எல்லோருமே நிகழ்வு நடைபெறும் வீட்டிலும் சுற்றாடலிலும் இருப்பார்கள். கல கலப்பாக சந்தோசப் பரிமாறல்களுடன் நிகழ்வை ஒழுங்கமைத் தார்கள். உறவு முறை பாராட்டி உரிமையுடன் கதைப் பார்கள் முகந்தெரிந்தது முகவரியும் தெரிந்தது. அது ஓர் பொற் காலம் தானே. அணி திரட்டல் என இதற்கு அப்போது அவர்கள் பெயரிடா விட்டாலும் கூட அதனை விட உயர் பண்பாடாக இது இருந்தது. ஒருவர் நோயுற்ற போது முழுக் கிராமமுமே ஓடோடிச் சென்று அது தங்களுக்கு வந்தது போலப் பதைபதைப் பார்கள். உணர்வு பூர்வமாக நோயாளிகளுக்கு ஆதரவைக் கொடுத் தார்கள்.


மரணம் நிகழ்ந்து விட்டால் அந்த வீட்டிற்கு அடுத்த கணமே முழு ஊரும் திரண்டு விடும். பந்தல் கால்கள் ஊரெங்கும் இருந்து அவ்வீட்டுக்கு எடுத்து வரப்படும். ஊரோடு ஒன்று கூடி பந் தல் போடுவார்கள். அமங்கல நிகழ்விற்குரிய தோரணம் கட்டு வார்கள் .மௌனமாக ஆனால், உறுதியுடன் உணர்வு பூர்வமாக மரண வீட்டை ஓரிரு மணித் துளிகளில் ஒழுங்கமைப்பார்கள். நான் முந்தி நீ முந்தியெனப் போட்டி போட்டு அக்குடும்பத் திற்கு உதவுவார்கள். ஊர் பெண்கள் ஒன்று கூடி ஒப்பாரிவைப் பார்கள். இறந்தவரின் பெருமை, கிராமத்தின் பெருமை எல்லாம் ஓசையோடு இணைந்த அழகிய நாட்டார் பாடல்களாக ஒப் பாரிவரும். மரண வீட்டில் உள்ளோரை அந்தியேட்டி வரையும் சமைக்க விடாமல் முறை வைத்து காலை, மதியம், இரவு என உணவு கொடுப்பார்கள். தமக்குள் ஓர் புரிந்துணர்வை ஏற்படுத்தி உணவளிப்பார்கள்.

இன்பத்திலும் துன்பத்திலும் சமூகக் கூட்டுறவு அக்காலத் தில் இருந்தது. கோயில் திருவிழா வந்து விட்டால் சுற்று சூழல் துப்பரவாக்குதல், பந்தல், தண்ணீர் பந்தல் அமைத்தல், கோயிலை துப்பராவாக்குதல் என எல்லாவற்றிலும் ஊர்கூடி இயங்கும். பெரியோர்கள், மூத்தோர்களின் சொற்கேட்டு ஊர் இயங்கும்.

வாசிகசாலை ஆண்டு விழா, விளையாட்டு கழக நிகழ்வுகள் எல்லாவற்றிலுமே சமூக கூட்டுறவு மேலோங்கி நிற்கும். பாடசாலைகளில் நிகழும் கலை விழா, விளையாட்டு விழா, யாவற்றிலும் இத் தன்மை ஒளிரும்.

சமூக அணி திரட்டல் எனும் சொல் தெரியாத அக்காலத்தில் எம் சமூகங்கள் இயங்கிய ஒற்றுமை அதினிலும் மேலானதாக இருந்தது. மேற்கத்தைய நாகரிகங்கள், கல்வி முறைகள் எத்தனையோ ஆங்கிலப் பெயர்களிலும் சுருக்கச் சொற்களிலும் கூறலாம். ஆனால், அவையெல்லாம் எம் மூத்தோரிடம் இருப்பதைத் தான் புதுப் பெயர் கொண்டு அழைக்கின்றன என்பதே மெய்யானது.

**நன்றி. தினக்குரல் வார வெளியீடு. 01.04.2012**



# திருமணப் பந்தல் முதல் திருமண மண்டபம் வரை

இருமனம் இணையும் திருமண நிகழ்வு மனித வாழ்வில் முதன்மையான ஒன்று. யாழ்ப்பாணப் பண்பாட்டிலும் திருமண நிகழ்வு பெரும் பாரம்பரியங்களைக் கொண்டதாகவே உள்ளது. காலமாற்றம் நாகரீக மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. சமூகக் கட்டமைப்பின் அசைவு பண்பாட்டு முறைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. திருமணப்பந்தல் என்பது யாழ்ப்பாணப் பண்பாட்டின் தொன்மைகளைக் கூறும் ஒன்றாகும். திருமணப் பந்தல் முறைமை அற்றுப் போய் திருமண மண்டபம் என்னும் நவீனத்துவத்தினுள் வந்து நிற்கின்றது. திருமணப் பந்தல் முறை மையை பார்ப்போம் . முன்னைய காலத்தில் திருமணம் என்பது பெரும்பாலும் வீட்டில் நிகழும் ஓர் சடங்கு முறையாகவே இருந்தது.

கோயில்களில் திருமணம் நிகழ்ந்து மணமகள் வீட்டிற்கு அழைத்து வரப்படுவதும் நிகழ்ந்தது. ஆனாலும் வீட்டில் திரு மணப் பந்தல் போடப்படும். திருமண நிகழ்விற்கு 11 நாள்கள்

முன்னதாக திருமணப் பந்தல் போடப்படுவதற்குரிய ஆயத் தங்கள் ஆரம்பமாகும். உறவினர்கள் தமது வீட்டிலுள்ள மரத் தடிகள், பந்தல் கால் மரங்கள் கொண்டு திருமணம் நடைபெற வுள்ள வீட்டிற்குச் செல்வார்கள். நல்ல நாள் பார்த்து பெரி யோர் ஒருவரால் முதல் பந்தல் கால் நடப்படும். பின்னர் பந்தல் மரங்கள் நடப்பட்டு பந்தல் அமைப்பு உருவாக்கப்படும். பனை மரத்தினால் ஆக்கப்பட்ட பந்தல் கால்களே இவ்விதம் நடப் படும். பந்தல் புத்தம்புதுக் கிடுகளால் வேயப்படும். உள்ளே வெள்ளை கட்டப்படும். பந்தல் கால்களைச் சுற்றி ரிசுபேப்பர், அல்லது வர்ணப் பேப்பரால் அழகுபடுத்தப்படும். பந்தல்க ளில் பல பல வகைகள் இருந்தாலும். சொக்கட்டான் பந்தல், கூரைப்பந்தல், தான் பெரும்பாலும் போடப்படும். தட்டிப் பந் தல் மரண வீடுகளில் போடப்படும். அமங்கலப் பந்தல் ஆகையால் அதனையாருமே திருமணப் பந்தல்களில் போடுவது இல்லை.

பந்தல் திருமண நிகழ்விற்கு கூடும் மக்கள் எண்ணிக்கை யின் அளவிற்கேற்ப பருமனில் மாறுபடும். இளைஞர்கள் மூத்தோ ரின் வழிகாட்டலில் பந்தல் போடுவதில் ஈடுபடுவார்கள். பெண்கள் பலகாரம் சுடுவதில் ஈடுபடுவார்கள். அரிசி, மா, பயறு, உழுந்து போன்ற போசனைப் பெறுமதி கூடியவற்றைக் கொண்டே அக்கா லத்தில் பலகாரம் சுடுதலில் ஈடுபட்டார்கள். இவர்கள் இவ்வி தம் இருக்க சின்னஞ் சிறுசுகள் ஓடியாடி விளையாடி புழுதி அளைந்து வியர்த்து நனைவார்கள். இளையோர், பெரியோர், சிறியோர் உறவு முறை பாராட்டி மகிழும் சந்தோச மன்றமா கவே அக்கால திருமண நிகழ்வு அமைந்தது. ஊர்கூடித்தேரிழுத்த ஒற்றுமையின் சின்னமான திருமண நிகழ்வு பெரும்பாலும் இரவு தான் நிகழும்.

மின்சாரத்தின் வருகை குறைந்த அக்காலத்தில் பெற்றோமக்ஸ் வெளிச்சத்தில் மணமக்கள் ஊர் வலமாக அழைத்துவர ஊரே திரண்டு வருவது கண் கொள்ளாக் காட்சிதான். உறவுகள் ஒன்று கூட நட்பும் உறவும் விருத்தியடையும். சந்தோச சங்கமமாகவே திருமண நிகழ்வு அமைந்தது. யுத்தத்தின் சத்தம் மெல்ல மெல்ல கேட்கத் தொடங்கியது. இளைஞர்கள் சுயபாதுகாப்பு தேடி

புலம் பெயர நேரிட்டது. குடும்பங்களும் இடம் பெயர நேரிட்டது. திருமணப்பந்தல் போட கூலிக்கு ஆள் பிடிக்கும் நிலை வந்தது. மாற்று வழியாகத் தகரப்பந்தல்கள் எனும் புதிய பண்பாட்டுக் கோல மொன்று முளைத்தது. கூடவே, தகரக் கதிரைகள் பந்தலில் போடும் பழக்கமும் வந்தது. ஆனால், தகரப்பந்தல் முறைமையில் மக்கள் திருப்தி கொள்ளவில்லை. சில வேளை முதல் நாள் மரண வீட்டில் போடப்பட்ட பந்தலும் கதிரைகளும் அடுத்தநாள் திருமண வீட்டை அலங்கரித்தன. 1985 இன்பின்பு தான் இந்த தகரப் பந்தல் முறையும் பெரிதும் பிரபல்யம் ஆகியிருந்தது குறிப்பிடத்தக்கது. மங்கலம், அமங்கலம் இரண்டிற்கும் மாறி மாறிச் சென்ற தகரப் பந்தலிற்கு மாற்றீடு காண முயன்றனர். திருமண மண்டபங்கள் மெல்ல மெல்ல முளைக்க ஆரம்பித்துள்ளன.

கொழும்பு போன்ற இட நெருக்கடி மிகுந்த இடங்களில் இருந்த திருமண மண்டப முறை யாழ்ப்பாண வாழ்வியலில் புதியதோர் வரவாக வெற்றிநடை போட ஆரம்பித்தது. ஊர் ஒன்று, திசை ஒன்றாகத் திருமண மண்டபங்கள் முளைக்க ஆரம்பித்தன. இளைய தலை முறையினரில் பெரும் பாலானோரும் ஊரவரும் புலம்பெயர திருமணப் பந்தல் என்பது முற்றாகவே கை விடப்பட்டது. திருமண மண்டபங்கள் போட்டி போட்டுக் கொண்டு ஊரவரால், கோயில்களால், தனிப்பட்டவர்களால் கட்டப் பட ஆரம்பிக்கப்பட்டது. எவ்வளவுதான் பெரிய வீடு வளவு இருந்தாலும் திருமண மண்டபத்தில் செய்தால்தான் மதிப்பார்கள் என்ற கட்டாய நிலை உருவாகியது. இதுவும் புதியதொரு நாகரீக பண்பாட்டுக் கோலமாகியது. இரவுத் திருமணங்கள் முற்றாகவே அற்றுப் போனது. பகல் நேரத் திருமணங்கள் ஆகின. மண்டபத்தில் செய்தால் சமூக வேறுபாடின்றி யாவரும் வருவார்கள் என்பதும் ஒர் காரணம் எனலாம்.

ஊர், உறவுகள் கூடி நின்று அமைதியாக கழிந்த திருமண முறைகள் காணாமல் போக அவதி, அவதியாக ஒரேநாளில் பல திருமண மண்டபங்களுக்கு செல்லும் முறையும் வந்தது. கணவர் ஓர் திருமண நிகழ்விற்கும், மனைவி ஓர் திருமண நிகழ்விற்கும்


ஒரே நாளில் ஓடியோடிப் போகும் சந்தர்ப்பங்களும் அமைந்தன. மணமக்களை அட்சதை போட்டு ஆசீர்வதிப்பது அவர்களை விட வயதில் மூத்த குடும்பஸ்தர்களால், மட்டும் செய்யும் சரியான முறையும் காணாமல் போகத் தொடங்கியது. சிறிசு பெரிசெல்லாம் அட்சதை போடும் பழக்கம் மரபை மறுத்து புதுப்பழக்கமாக வந்தது.

மணமக்களின் தலையில் இருந்து கால் நோக்கி ஆசீர்வதிப் பது சரியான முறையாகும். உயிருடன் இருப்பவர்களை ஆசீர்வ திக்கும் இம்மங்கல கரமான முறையிலும் மாற்றம் வந்தது. அபரக் கிரியைகளில் செய்வது போல காலில் இருந்து தலை நோக்கி அட்சதை போடும் பிழையான வழக்கமே பெரும் பாலானவர்க ளால் செய்யப்படுகின்றது. என இந்துமதச் சடங்கு, ஆசாரங்கள் தெரிந்தோர் குறைப் படுகின்றனர். மதச் சம்பிரதாயங்களைச் சரி யாக தெரிந்து வைத்திருக்காது பிழை பிழையாகச் செய்வதைக் கால மாற்றம், நாகரீக மாற்றமெனக் கூறி சிலர் நியாயப்படுத் துவது தவறானது எனப் பெரியோர்கள் கூறினர்.

கிராமியக் கூட்டுறவின் உயர் பண்பாடாக இருந்த திருமணப் பந்தல் முறைமை கால வெள்ளத்தில் அள்ளுண்டு காணாமல் போனது கவலைக் குரியதுதான். ஓர் இனத்தின் பிரதே சத்தின் பண்பாட்டு வேர்களை தேடிப் போக வேண்டிதுள்ளது. வாழ்வியல் மாற்றங்களை விஞ்ஞான வளர்ச்சியும் பண வசதிக ளின் விரிவாக்கமும் சமூகக் கட்டமைப்பின் அசைவியக்கமும் தீர் மானிக்கின்றன. திருமணப் பந்தல் எனும் உயர் பண்பாடு கால வெள்ளத்தில் மெல்ல மெல்ல அமிழ்ந்து ஆடம்பரங்கள்களை கட்டும், செலவினங்கள் உச்சத்தில் ஏறும் திருமண மண்டபமாக வந்து நிற்கின்றது.

வாழ்ந்த வாழ்வின் சுவடுகள் மீது பின்னோக்கி நடந்து பார்க்க விரும்புவோர் எம்மில் பலர் இருப்பார்கள் அல்லவா. அதற்காக மூத்தோர் ஞாபகப் பக்கங்களில் இருந்து தகவல்களைப் பெற்று எழுத்து ஆவணம் ஆக்கியுள்ளேன்.

**நன்றி. தினக்குரல் வாரவெளியீடு, 08.04.2012**



# சமூக எழுச்சியில் பணவரவு வைபவம்

யாழ்ப்பாணத்தின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்திய ஓர் பொருளாதார முறைமையாக பணவரவு என்பதும் உள்ளது. சமூக ரீதியில் தாழ்த்தப்பட்ட சமூகம் எனச் சமூகத்தில் அடையாளப் படுத்தப்பட்ட மக்கள் பகுதியினரின் பொருளாதார வளர்ச்சியில் வாழ் கைத் தரமேம்பாட்டில் இதன் பங்களிப்பு குறிப்பிடத் தக்கது. கிறிஸ்தவ மதப்பிரிவினர் இதனை அற்ஹோம் (Athome) என அழைக்கின்றனர். ஆனால் இதன் வடிவங்கள் மாறு பட்டாலும் இது ஓர் சமூக கூட்டுறவு பொருளாதார முறை என்ப தில் மறுகருத்திற்கு இடமில்லை. பொருளாதார ரீதியில் மிகவும் பின் தங்கி யிருந்த தாழ்த்தப்பட்ட சமூக மக்களில் தோன்றிய தலைவர்கள் தமது மக்களின் பொருளாதார வளத்தை எவ் விதம் மேம் படுத் தலாமெனச் சிந்தனை வயப்பட்டனர்.

வடபகுதிக் கூட்டுறவின் தந்தை வீரசிங்கம் தோன்றி கோலோச்சிய காலத்தில் தாமும் கூட்டுறவு முறையில் பொருளாதாரத்தை வளர்த்தால் என்னவென இத்தலைவர்கள் சிந்தித்

தனர். அதன் பெறுபேறாக பணவரவு எனும் அற்புதமான கிரா மியப் பொருளாதாரக் கூட்டுறவு முறையை வகுத்தனர். சிறுதுளி பெருவெள்ளம் என்பார்கள். காப்புறுதித்துறையில் பகிர்தல் தத் துவம் என்பார்கள். அது போல இப் பணவரவு பொறிமுறையும் உருவானது. 1920 களின் ஆரம்ப காலத்தில் பணவரவு முறை யில் உருவாகுவதற்கான அடித்தளம் உருவாக்கப்பட்டது என லாம். பிரதேசத்திற்குப் பிரதேசம் மாறுபட்ட முறையில் இதன் ஆரம்பங்கள் அமைந்தன. ஆரம்ப காலங்கள் பெரும்பாலும் இவர்களின் கிராமிய குல தெய்வங்களின் முன்னிலையில் தான் அமைந்தன.

கோயில்களில் வாரத்தில் ஓர் நாள் கூடிச் சீலை கட்டி உண்டியல் போல துளையிட்ட பானை ஒன்றில் சில்லறைக் காசுகளைப் போடுவார்கள். அங்கு சமூகமளித்த மக்களுக்கு பனங் கட்டியும் தேங்காய்ச் சொட்டும் வழங்கப்படும். திருவுளச் சீட்டு போடப்பட்டு ஒருகுடும்பம் தெரிவு செய்யப் பட்டு பணத் தொகை முழுவதும் வழங்கப்படும். அக்காலத்தில் ஒருசதம், இரண்டு சதம், 5 சதம், 10 சதம், 25 சதம், 50 சதம், ஒரு ரூபாய் என்பவையெல்லாம் பெறுமதியாக இருந்த காலம். ஒருவருக்கு 10 ரூபா வழங்குவது என்பது பெரிய ஒரு தொகையாக இருந்தது. வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இப்பணம் ஓரளவிற்கு உதவியது. கிழமைக்கு கிழமை உண்டியலில் பணம் இடுவதும் திருவுளச் சீட்டு இடுவதும் தொடர்ந்தது. இந் நிகழ்வை இலம்பைச் சடங்கு எனவே அழைத்தார்கள்.

இலம்பை என்றால் வறுமை என்று தமிழில் பொருள்படும். வறுமை நீக்க உருவான சடங்கு முறைதான் இது வாகும்.

காலம் செல்ல இவ்வைபவம் பணச் சடங்கு எனவும் அழைக் கும் நிலை வந்தது. கோயில்களில் ஆரம்பிக்கப்பட்ட இந் நிகழ்வு மெல்ல மெல்ல வீடுகளில் செய்யும் சடங்கு ஆகியது. பணத்தின் பெறுமதி தேய்வும் கூடக் கூட பணவரவு வைபவத்தில் பணம் கொடுக்கும் அளவு கூடியது. வீடுகளில் கொப்பி வைத்து பெயர், ஊர் எழுதும் வழக்கமும் வந்தது. ஒருவர் முன்பு கொடுத்த

பணத்தை பழையது எனவும் புதிதாகக் கொடுப்பதை புதியது எனவும் கொப்பியில் எழுதிக் கொள்ளுவார்கள். ஒருவர் 10 ரூபா பணம் முன்பு கொடுத்திருந்தால் அவரது வீட்டிற்கு பணவரவு நிகழ்விற்கு வரும் ஒருவர் அதற்கு 2 ரூபா வட்டி போட்டு 12 ரூபா கொடுத்து அம் முறையிலிருந்து விலக முடியும். அல்லது 10 ரூபா பழையதற்கு 10 ரூபா புதியதை வழங்கி மொத்தமாக 20 ரூபா கொடுத்து தொடர முடியும்.

ஒருவர் தனது வீட்டு நிகழ்வில் தான் கொடுத்த பணத்தை வாங்கும் போது மற்றையவர்கள் குறைவான தொகையைப் போட்டுள்ளார் எனக் கண்டால் பின்பு அவரது வீடு சென்று பண வரவுக் கொப்பியைப் பார்த்து தனது தொகையை உறுதி செய்ய முடியும். தனக்குரிய வருமதியை அறவிட முடியும். இதனால் பணவரவு முறையும் சீட்டு முறையை ஒத்த ஓர் வங்கி முறையே எனலாம். வறிய வீட்டுப் பெண் ஒருவருக்கு திருமணம் நடை பெற சீதனம் தேவையாயின் ஊர் பெரியவர்களால் அவ்வீட்டில் பண வரவு நிகழ்வு ஒழுங்கு செய்யப்படும்.

அவரது ஊரவர், உறவினர் எல்லோரும் ஒன்று கூடி பணத்தை வழங்குவார்கள். மொத்தமாக கிடைத்த பணத்தை அவ்வறியவர்கள் தனது உழைப்பிலிருந்து மெல்ல மெல்ல ஈடு செய்வார்கள். ஒரு வீட்டில் பணவரவு நிகழும் போது இந்நி கழ்வை நடத்த உள்ள ஏனையோர் தமது நிகழ்வின் நோட் டீஸ்களை ஒட்டுவதைக் காண முடியும். ஊர்ப் பெரியவர்கள் ஒன்று கூடி இவ் வருடம் யார் யார் பணவரவுவைக்கலாமென தீர்மானிப்பார்கள். பணவரவு வீட்டில் நிகழும் போது அதற் கென கிடுகுப் பந்தல் அமைக்கப்படும். அதில் இறை வழிபாட் டிற்குரிய பிள்ளையார், முருகன், லட்சுமி ஆகிய தெய்வங்களின் முன்னால் சுபநேரம் பார்த்து கைவிசேசம் பரிமாறிக் கொள் வார்கள். கைவிசேசம் கொடுப்பவர் முதல் தொகையாக பெரும் தொகை கொடுப்பது வழமையாகும்.

பணவரவு வைபவம் நிகழும் வீட்டை அடையாளப் படுத்த ஒலி பெருக்கியை பனை, தென்னை போன்ற மரங்களில் உயரக் கட்டி

விடுவார்கள். அந்தக் காலப் பகுதிக்குரிய மக்கள் ரசனைக்கு ரிய பாடல்களை கேட்கக் கூடியதாயிருக்கும். நிகழ்விற்கு வருவோருக்கு மதிய உணவு வழங்கப்படும். மதியம் 3 மணிக்குப்பின்பு வருவோருக்கு பணிஸ், தேநீர் அல்லது வடை, வழங்கப்படும். பந்தலில் ஆண்கள் ஒரு புறமாகவும் பெண்கள் ஒரு புறமாகவும் கூடியிருந்து உரையாற்றுவார்கள். பணத்தின் வரவைப் பதிய ஆண்களுக்கு தனியான கொப்பி ஒன்று வைக்கப்பட்டிருக்கும். பெண்களுக்கு தனியாக கொப்பி வைக்கப்பட்டிருக்கும். நூற்றுக் கணக்கான ஆண்கள் ஒன்று கூடும் பணவரவு நிகழ்வில் வரவு பதியும் கொப்பியில் ஊர்களுக்கு எனத் தனியான பக்கங்கள் ஒதுக்கப்பட்டிருக்கும். பணவரவு தனித் தனியாகவும் மேசை கள் போடப்பட்டு ஆள்கள் இருப்பார்கள். அவற்றில் வரவுத் தொகை பழையது, புதியது, மொத்தம் எனப்படும் 3 நிரல்களிலும் பதியப்படும். இதன்மூலம் நிதிக்கம்பனி, வங்கி முறைமை யொன்று அந்நாளில் கல்வியறிவுகுறைந்த இம்மக்களிடம் பேணப் பட்டது.

பங்களாதேசில் பேராசிரியர் முகமது யூனூஸ் கிராம மக்களின் வறுமை குறைக்க கிராமின் வங்கியை ஆரம்பித்தார். நுண்பாகக் கருத்திட்டங்களை உருவாக்கி கிராமிய மக்களைச் சிறு குழுக்கள் ஆக்கினார். இத்திட்டம் பாரிய வெற்றியை அளித்தது. உலகெங்கும் பேசப்பட்டது. அவருக்கு நோபல் பரிசும் வழங்கி உலகமே கௌரவம் வழங்கியது. இந்தியாவில் பொருளியல் பேராசிரியர் அமர்த்தியாகுமார் சென் நகரப்புறச் சேரி மக்களின் வாழ்க்கையை ஆராய புதுடில்லியின் சேரியில் மக்களுடன் மக்களாக சேரிவாசியாக தன்னை இனங் காட்டாது இரு வருடங்கள் வசித்தார்.

அதன் அனுபவ அறிவு புத்தகமாக வெளிவந்த போது 1998 இல் பொருளியல் துறைக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஆனால் யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப் பட்ட சமூக மக்களின் கிராமிய வறுமையை மிகப் பெருமளவில் குறைத்து பலமான புதுப் பணக்கார வர்க்கம் ஒன்றை உருவாக்கிய பணவரவு, அற்ஹோம் முறை குறித்து இங்குள்ள பேராசிரியர்கள் ஆராய்ந்து ஆங்கில மொழி மூலம் புதியதொரு தத்துவமாக உலகிற்கு வெளிப்படுத்

தவில்லை இக் குற்றச் சாட்டை சமூகவியலாளர் பலர் முன் வைக் கின்றனர்.

இதனை ஒரு இழிவான சடங்காக வகுத்து மனதில் அவர்கள் வைத்திருந்தமையால் தான் அவ்வாறு செய்யவில்லை எனவும் குற்றம் சுமத்துகின்றார்கள். இப்போதும் காலம் போக வில்லை. இதன் நூற்றாண்டு கால வரலாற்றை ஆராய்ந்து பொரு ளாதார துறையில் கலாநிதி (ph.D) பட்டம் கூடப் பெறலாம். எம்மவரின் கிராமிய வறுமையை மிகவும் திறமையாகக் குறைத்த இந்த தத்துவத்தை சர்வதேச அரங்கிற்கு வெளிப்படுத்தினால் நோபல் பரிசு கூட கிடைக்கலாம். வெளி நாட்டவர் சொல்வது செய்வது தான் உயர்வானதென்ற உளப் பாங்கை மாற்றுங்கள். எமது திறமைகளை உலகறியச் செய்யுங்கள். மதிப்பு தானாகத் தேடி வரும். பணவரவு நிகழ்வின் பக்கம் மீண்டும் போவோம். 1970 களின் இறுதியில் மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில் தேடிச் செல்லும் புதிய யுகமொன்று வந்தது. 1980 களில் மேற்கு ஐரோப்பிய, வடஅமெரிக்க, ஓசானிக் நாடுகளுக்கு அகதிகளாக புலம்பெயரும் நிலை வந்தது. அப்போது இதற்காக பல்லாயிரம் ரூபா பணம் தேவைப்பட்டது. அதற்கு இப்பணவரவு முறை உத வியது.

தாழ்த்தப்பட்ட சமூக மக்களில் பொருளாதாரம் பலம் மிக்க சமூக அமைப்பொன்றின் வேகமான வளர்ச்சிக்கு உதவியது. சகோ தரிகளுக்கு திருமணம் செய்து வைத்தல், வீடுகட்டுதல், காணி வாங்குதல், தோட்டம் வாங்குதல், வியாபாரம், கைதொழில் சாலைகள் நிறுவுதல், வாகனம் வாங்குதல், போன்ற பொருளாதார உயர் வெல்லாம் ஏற்பட்டது. மூலதனத் திரட்சி தான் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படை என்பார்கள். அந்த கோட்பாடு பண வரவு நிகழ்வின் ஊடாக பெரும் சமூகமாற்றத்தை வாழ்க்கைத்தர உயர்வைக் கொண்டு வந்தது.


பணவரவு முறைமையில் ஓர் உள்ளக ஒழுங்கு முறையும் பின் பற்றப்பட்டது. ஒரு குடும்பம் இந்நிகழ்வை வைத்துப் பணத் தைப் பெற்றுக் கொண்டால் பெற்ற பணத்தின் குறிப்பிட்ட

வீதத்தை மீளளித்த பின்னர் தான் மறு முறைவைக்க முடியும். இந்நிகழ்வின் மூலம் திரட்டிய பணம் ஆரம்ப காலங்களில் சில நூறு ரூபாக்களாக இருந்தது. பின்னர் சில ஆயிரம், பல ஆயிரம் ஆகியது. இந்நாளில் இவை சில இலட்சம், பல இலட்சம் என ஆகியது. பணவரவின் மூலம் பெற்ற பணத்தை முதலிட்டு பெரும் செல்வந்தர்கள் ஆகியவர்களும் உள்ளனர். பணத்தை கண்மண் தெரியாமல் செலவழித்து பெற்ற பணத்தை மீளக் கொடுக்க வகையற்று ஒட்டாண்டி ஆகியோரும் உள்ளனர். இந் நிகழ்வை முறைதலையற்றுச் செய்வதைத் தடுத்து ஒழுங்கு முறை யாக்க கடந்த **2011** ஆம் ஆண்டில் வடமராட்சி பிரதேச மக்கள் சமூகபொருளாதார மேம்பாட்டுச் சபை என்ற ஓர் அமைப்பை நிறுவினார்கள்.

இவ்வமைப்பிற்கென ஓர் யாப்பு நிறுவப்பட்டு பணவரவு நிகழ்வுகள் ஓர் ஒழுங்கு முறைக்குள் கொண்டுவரப் பட்டுள்ளது. வடமராட்சி பிரதேசத்தின் பல கிராமங்களில் இப் பணவரவு நிகழ்வு காலத்திற்கேற்ப நவீன வடிவம் பெற்று பலமான சமூக பொருளாதார முறைமையாக வெற்றிநடை போடுகிறது. குடா நாட்டின் ஏனைய பிரதேசங்களில் இம் முறைமை அண்மைய **15** வருடகாலத்தில் அற்றுப் போய் விட்டது எனலாம். தென்மராட்சி பிரதேசத்தின் சில கிராமங்களில் பிறந்த நாள் கொண்டாட்டம் எனும் பெயரில் நிகழுகின்றது.

ஆயினும் திருமணம், புதுமனைப்புகு விழா, மங்கைப் பருவ மங்கல நீராட்டு விழா போன்ற நிகழ்வுகளில் கொப்பி வைத்து எழுதி கொடுத்த பணத்தை பழையது, புதியது என வாங்கும் நடைமுறை ஒன்று இன்னமும் தொடர்கின்றது. யாழ்ப்பாணத்து கிராமிய பொருளாதாரத்தின் அச்சாணியில் பெரும்பாய்ச்சலை குறித்த ஒரு சமூக மக்களின் வாழ்வில் ஏற்படுத்திய பணவரவு முறைமையின் பெறுமதிகளும் நிச்சயம் ஆவணப்படுத்த வேண்டிய ஒன்றேயாகும்.

**நன்றி. தினக்குரல்வாரவெளியீடு . 15.04.2013**



# போர்க்கால அச்சுத் தொழில்

இலங்கையின் முதல் தமிழ் பத்திரிகை 'உதய தாரகை' 1924 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலிருந்து தான் வந்தது. பிரித்தானியர் காலத்தில் அச்சு இயந்திரங்களின் வருகை நிகழ்ந்தது. கைத்தொழிலின் பாரம்பரியங்கள் பெருமைகளைக் கூறக் கூடியதாக அச்சுப் பாரம்பரியம் யாழ்ப்பாணத்தை அடிப்படையாகக் கொண்ட வடமாகாணத்தில் இருந்திருக்கின்றது.

ஒல்லாந்தர் 1658 இல் யாழ்ப்பாணம், மன்னார் கரையோரங்களை வந்தடைந்தனர். 1707 இல் யாழ்ப்பாணமாகாண (வடமாகாணம்) தேசவழமைகளுக்கு சட்ட அந்தஸ்து வழங்கினார்கள். யாழ்ப்பாண மாகாணம் என்பது வவுனியா ஈரற்பெரியகுளத்திலிருந்து வடக்காக வரும் இன்றைய 5 மாவட்டங்களையும் குறிக்கப் பயன்பட்டுள்ளது.

அதனால் போர்க்கால அச்சுத்தொழில் என்பதை இந்த 5 மாவட்டங்களினதும் புலத்தில் பார்ப்போம் 1990 யூன் 10 ஆம் திகதி கிழக்கு

மாகாண மட்டக்களப்பில் உருக்கொண்ட இரண்டாவது ஈழப்போர் 15 ஆம் திகதியன்று தான் வடக்கில் தனது முகத்தைக் காட்டிக் கொண்டது.

போர் முகத்தின் ஓர் வெளிப்பாடாக வடமாகாணத்தில் அரசாங்கப் படைகளின் கட்டுப்பாடின்றி விடுதலைப் புலிகளின் ஆளுகைக்குள் உட்பட்ட நிலப்பரப்புக்களின் மீது இறுக்கமான பொருளாதாரத் தடையொன்று விதிக்கப்பட்டது.

இக் காலப்பகுதியில் போர்க்கால அச்சுத் தொழில் என்ற ஓர் விடயத்தை மட்டும் தரிசிக்கச் செல்வோம். 1990 யூனில் நூற்றாண்டு காலப்பாரம்பரியம் வழிவந்த அச்சுத் தொழில் முறைமை புழக்கத்தில் இருந்தது.

ஈயக்குற்றிகளில் செதுக்கப்பட்ட எழுத்துகளை இரும்புத் தகடு ஒன்றில் அச்சுக் கோர்த்து மின்சாரத்தில் இயங்கும் இயந்திரம் மூலமாக அச்சுக் கோர்ப்பார்கள். சிறியளவு இயந்திரங்களை உடல் வலிமை பாவித்து கையால் இயக்கவும் முடிந்தது. இந்தப் பாரம்பரியமான அச்சுக்கோர்ப்பு முறையைப் பயன்படுத்தி வடக்கில் அரச படைகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் அச்சுத்தொழில் நடந்தது.

நடந்தது என்பதை விட கடும் போராட்டத்துடன் நடத்தினார்கள் எனக் கூறுவது தான் மெய்யானது. அக்காலத்தில் (1990) யாழ்ப்பாணத்தில் உதயன், முரசொலி, ஈழநாடு, ஈழநாதம் (இது முன்னாளில் ஈழமுரசு என்ற பெயரில் 1987 ஒக்ரோபர் வரை வந்தது ) ஆகிய நாளிதழ்கள் வெளிவந்தன.

இந்நாளில் உதயன் நாளிதழைத் தவிர ஏனைய ஈழநாடு, ஈழநாதம் முரசொலி என்பவை காலவெள்ளத்தில் அமிழ்ந்து காணாமல் போனமை வாசக நெஞ்சங்களுக்கு கவலைக்குரிய மனப்பதிவு தான்.

அதுவும் இற்றைக் கணக்கில் 50 வருடங்களென வரலாறு கூறக் கூடிய கொழும்பிற்கு வெளியே யாழ்ப்பாணத்தில் வெளிவந்து வெற்றி நடை போட்ட ஈழநாடு நாளிதழ் முற்றாகவே அற்றுப் போனதும் கவலைக்குரியது.

1990 ஜூன் மாதத்தின் பின்பான சில மாதங்கள் பழைய கையி ருப்பை வைத்து அச்சுத்தொழில் நடந்தது. பத்திரிகை அச்சிடுவதற் கான நியூஸ் பிரிண்ட் தாள்கள் தென்பகுதியிலிருந்து வடக்கே எடுத்து வருவது தடைசெய்யப்பட்டிருந்தது. இவற்றின் கையிருப்பு முடிய என்ன செய்வதென்ற வினா பத்திரிகை நிறுவனங்களின் முன்பாக எழுந்தது.

வர்ண நிறத்திலான நீளப் பேப்பர்களைப் பயன்படுத்தினார்கள். பைல் கவர் மட்டைகளைப் பயன்படுத்தினார்கள். பல பக்கங்கள் வெளிவந்த பத்திரிகைகள் சில பக்கங்கள் உள்ளதாக மட்டும் வெளி யாகியது. ஈழநாடு நாளிதழ் ஒரு காலகட்டத்தில் பிரிஸ்டல் போட் மட்டையில் மட்டும் வந்தது.

அப்போது பாடசாலை மாணவர்கள் பரீட்சை நடக்கும் காலங்களில் பைல்கவர் வாங்க வசதி இல்லாது கஷ்டப்பட்டவர்கள் ஈழநாடு பத்திரிகை வந்த பிரிஸ்டல் போட் மட்டைகளை எடுத்துச் சென்றது ஞாபகத்திரையில் நிழலாடுகிறது.

அக்கால பொருளாதாரத் தடையினால் மாணவர்கள் பட்ட கஸ்டங்கள் கணக்கில் அடங்காது. பொருளாதாரத் தடையினால் மாணவர்கள் பட்ட கஷ்டங்களுக்கு இது மிகச்சிறந்த உதாரணம். வடபகுதியில் அரச படைகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதே சங்களில் எல்லாம் இந்நிலையிருந்தது.

யாழ்ப்பாணத்தில் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்களுக்கு அஞ்சி பதுங்கு குழியினுள் இருந்தும் பத்திரிகை நடத்திய நிலையும் இருந்தது. ஒரு கட்டத்தில் அச்சு இயந்திரங்களைப் பாதுகாக்க பங்கர் எனப்படும் பதுங்கு குழியினுள் வைத்திருந்து பத்திரிகை வெளியிட்ட நிறுவனம் ஒன்றும் இருந்தது.

மின்சாரம், தொலைபேசி, தொலைநகல் வசதிகள் எதுவும் இல்லாத அக்காலத்தில் நிருபர்கள் வானொலிச் செய்திகள், அரச தொலைக் காட்சியான ரூபவாகினியின் செய்திகள் மூலமே தகவல் திரட்டப்பட்டது. அக்காலத்தில் இப்போதைய இணைய, மின்ன

ஞ்சல், கேபிள் தொலைக்காட்சி வசதிகள், தனியார் தொலைக்காட்சி அலை வரிசைகள் வட மாகாணத்தில் மட்டுமல்ல இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் இருக்கவில்லை.

தொலைத்தொடர்பு யுகத்தின் இருண்ட யுகத்தினுள் வடபகுதி இருந்தது. ஆயினும் அச்சவாலை வெற்றி கொண்டு செய்திகளை அச் சிட்டு வெளியிட்டனர்.

*1991* மே மாதம் *21* ஆம் திகதி இரவு *10* மணி *10* நிமிடம் இந் திய தமிழகத்தில் சிறிபெரும் புதூரில் தேர்தல் பிரசாரக் கூட்ட மொன்றில் கலந்து கொண்டிருந்த இந்திய முன்னாள் பிரதமர் ரஜீவ் காந்தி தற்கொலைக்குண்டுதாரி ஒருவரால் கொல்லப்பட்டார்.

லண்டன் பி.பி.சி (B.B.C) உலகச் சேவை அச்செய்தியை மணித் தியாலத்திற்கொருமுறை ஒலிபரப்பாகும் ஆங்கிலச் செய்தியில் இரவு *11.30* மணிக்கு ஒலிபரப்பியது. யாழ்ப்பாணத்தில் வெளியாகும் பத் திரிகை நிறுவனமொன்றின் செய்தி ஆசிரியர் ஒருவர் கண்விழித்து செய்தி தேடலுக்காக காத்திருந்தார். அவர் இச்செய்தியை உடனே ஒலிப்ப திவு செய்தார். எழுத்துருவில் செய்தி ஆக்கினார். அடுத்த நாள் பத் திரிகைக்கு போட்டிருந்த முன்பக்கத் தலைப்புச் செய்தி கோர்க்கப் பட்டிருந்த பெட்டி கழற்றப்பட்டது.

இச்செய்தியைத் தாங்கிய ஈய எழுத்துகள் செய்தியாக கைக ளால் அச்சுக்கோர்க்கப்பட்டது. 4 பத்திரிகைகள் வெளியாகி போட்டி போட்ட அக்காலத்தில் இந்தப் பத்திரிகை மட்டும் முழுஉலகத்தை யும் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கிய ரஜீவ் காந்தி படுகொலைச் செய் தியை அடுத்த நாள் காலை வெளியிட்டது.

தகவல் தொழிநுட்பத்தின் இருண்ட யுகத்திலும் இச் சாதனை நிகழ்த்தப்பட்டதை இன்று வரை யும் சிலாகித்துக் கூறும் வாசகர்கள் உள்ளனர்.

அச்சடிக்க காகிதங்கள் தட்டுப்பட்ட நேரங்களில் புள்ஸ்காப் தாளிலும் பிறவுண் பேப்பரிலும் கூட பத்திரிகைகள் அச்சிடப்பட்டன.

அச்சுமை இல்லாத நிலைமையையும் மாற்றுத் தொழிநுட்பங்களைப் பிரயோகித்து ஈடுசெய்தனர்.

பத்திரிகை விநியோகிக்க மோட்டார் சைக்கிள்கள் மிகக் குறை வாயிருந்த அக்காலத்தில் சைக்கிள்கள் மூலமாகவே பத்திரிகைகள் விநியோகிக்கப்பட்டன. உள்நாட்டு யுத்தம் தீவிரமடைந்திருந்த அக்கா லத்தில் யுத்தச் செய்திகளைத் தாங்கி வரும் பத்திரிகைகள் விரை வாக விற்று முடிந்து விடும்.

பத்திரிகை நிருபர்கள் செய்தித் தேடலுக்காகச் சைக்கிள்களில் தான் செல்வார்கள். சைக்கிள் ஓடி களைத்து வேர்த்து விறுவிறுத்து வந்து செய்தி எழுதுவார்கள்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து நங்கூரம், சாளரம், அறிவுக் களஞ்சியம் என்ற 3 மாதாந்த இதழ்கள் வெளிவந்தன. காகிதா திகளின் தட்டுப்பாட்டுடன் போட்டி போட்டு இவை கல்விச் சமூகத் தவரினதும் பெரியோரினதும் அறிவுப்பசியை தீர்த்தன.

நங்கூரம், சஞ்சிகை 1996 ஆம் ஆண்டிற்குப் பின்பாக தற்போது மீண்டும் வரத் தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. இளையோரது எழுத்துத் திறமைகளை பல வகையிலும் வளர்க்க உதவிய சாளரம் சஞ்சிகை யாழ் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள கட் டிடத்திலிருந்து வெளியாகியது.

இதனூடாக எழுத்துத்துறையில் பிரவேசித்த இளையோர் தலை முறையொன்று இன்று நிலத்திலும் புலத்திலும் எழுத்து துறை யில் பிரகாசிக்கின்றது. சாளரம் சஞ்சிகை பின் னாளில் 1995 ஒக்டோபர் யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின்பாக நின்று போனது.

அறிவுக் களஞ்சியம் எனும் பொது அறிவு மாதாந்த வெளி யீடு மூத்த எழுத்தாளர் வரதரின் ஆனந்தி பதிப்பகத்தின் வெளியீடாக வந்து பொது அறிவுப் பசியைப் போக்கியது. நங்கூரம், அறிவுக்களஞ்சியம் போன்றவை பருவ இதழ்கள் இளையோரை எழுத்தாளர்களாக்கியது. இதுவும் 1995 இன் பின்பான காலங்களில் நின்று போனது. இவற்றை விட அக்காலத்தில்

அவ்வப்போது தோன்றிய பருவ இதழ்கள் பல இருந்தன.

அக்கால அச்சுக்கூடத் தொழிலும் நூற்றாண்டு கால பழமை வாய்ந்த அச்சுக்கோர்க்கும் தொழிலாகவே இருந்தன. வட பகுதியில் இருந்த அச்சுக்கூடங்கள் பாடசாலை மாணவர்களின் பரீட்சை வினாத் தாள்கள், அச்சிடக் காகிததாதிகள் இல்லாத போது சீ.ஆர் கொப்பி யின் தாள்களை எடுத்து அச்சிட்டனர்.

பல்கலைக்கழகம் தெரிவாகிய மாணவர்களுக்கு வழங்கிய பாராட்டு விழாவின் போது வழங்கிய பாராட்டுப் பத்திரம் ஒற்றை றூள் கொப்பியில் அச்சிட்டு வழங்கப்பட்டது. இன்று பெரி யவர்களாகி தாய், தந்தை ஆகிய அவர்கள் தமது பிள்ளைகளுக்கும் இளையோருக்கும் காலத்தின் பதிவாகிய அப்பாராட்டுப் பத்திரத் தைக் காட்டும் போது இப்படியெல்லாம் வாழ்ந்தீர்களா என அவர்கள் கேட்டு அதிசயப்படுகின்றனர்.

அச்சுத் தொழில் இன்று கணனி யுகத்தினுள்ளும், இணைய, மின்னஞ்சல் உலகினுள்ளும் புகுந்து வெற்றி நடை போடுகின்றது. மின்சாரமின்றிய அக்காலத்தில் பாரம்பரியமான ஈய எழுத்துகளால் அச்சுக்கோர்க்கும் போது அவர்கள் பட்ட கஷ்டங்களை காலத்தின் பதிவுகளாக்க வேண்டுமல்லவா.

அக்காலத்தில் புகைப்படங்களை இப்போதையதைப் போல ஸ்கான் செய்து போடவோ, Pendrive இல் பிரதியாகப் பெறவோ, மின் னஞ்சல் மூலமாகப் பெறவோ முடியாது.

புளக் செய்தல் எனும் தொழிநுட்பத்தின் மூலமாக மட்டுமே பெற முடியும். சதுரப் பலகைக்கட்டை ஒன்றில் ஈயம் போல உலோ கம் ஒன்றை வைத்து இரசாயனக்கலவை மூலமாக ஒற்றி எடுத்தே புகை-ப்படங்களை பிரதியாக்கம் செய்தனர். அச்சிடும் அளவு பார்த்து அதற்கே-ற்ப புளக்கின் அளவு தீர்மானித்து செய்வார்கள். கறுப்பு வெள்ளையில் மட்டும் பத்திரி கைகளில் படங்கள் வரும்.


இப்போதைய கணினி முறை போலப் படத்தை அளவு கூட்டிக்

குறைக்க முடியாது. இவ்வளவு வசதி குறைவுகளுக்கு மத்தியிலும் உணவு, எரிபொருள், வாகன, வாழ்க்கைத்தர வசதி குறைவுகளுக்கு மத்தியிலும் பத்திரிகைகளாக, சஞ்சிகைகளாக அச்சிட்டுத் தந்த அவர்களின் சேவைகள் போற்றுவதற்கு உரியவை.

மாறும் உலகத்தில் மாறும் வாழ்வியலில் அவர்களது சேவைகள் மறைந்து போகக்கூடாது அல்லவா. போர் யுகம் மறைந்த காலம் ஒன்றினுள் பிரவேசித்து விட்டோம்.

இவர்களது பேர் மறைந்து போகக் கூடதல்லவா அச்சு இயந்திரங்களுடன் போராடி கல்வி உலகம் இருளடைந்து விடாமல் ஒளியூட்டிய அச்சுத்தொழில் விற்பன்னர்களின் சேவைகளும் ஆவணப்படுத்தி இனி வரும் சந்ததிகள் தெரிய வைத்துள்ளேன். இலத்திரனியல் யுகத்தின் ஆட்சியினுள் இவர்கள் சேவைகளும் காலச்சுவடுகளால் வாச கர்களால் ஏற்றிப் போற்றப்படுவது நிச்சயம்.

**நன்றி- தினக்குரல் வாரவெளியீடு – 22.04.-2012**



# கிளாலிப் படகும் தென்பகுதி பயணங்களும்

யாழ், குடாநாட்டு மக்கள் வெளி மாவட்டங்களுக்கு பயணம் செய்யவும் வெளிமாவட்டத்தவர்கள் யாழ் மாவட்டத்திற்கு வரவும் 3 வருடங்கள் பயன்பட்ட கிளாலிப் படகு பாதையும் நினைவிற்குரி யது.

யாழ்ப்பாணக்குடாநாடு யாழ் கண்டி வீதி ஊடாக ஆனையிற வைக் கடந்து தென்பகுதி செல்லும் வழி ஒன்றைக் கொண்டுள்ளது. அது போல கேரதீவு - சங்குப்பிட்டி ஊடாக பூநகரி சென்று நாட்டின் இதர பாகங்களுக்கும் செல்லும் வழியொன்றைக் கொண்டுள்ளது. வடமராட்சி கிழக்கின் நாகர்கோவில், மருதங்கேணி, செம்பியன் பற்று, தாளையடி, கட்டைக்காடு, நிச்சியவட்டை, வண்ணாங்குளம், நல்லதண்ணித் தொடுவாய், சுண்டிக்குளம் ஊடாகச் சென்று விசுவம டுவைச் சென்றடையும் வழி ஒன்றும் உள்ளது.

ஆனால், இது மக்கள் நடமாட்டம் மிகவும் குறைந்த ஒழுங்கற்ற பாதையாகும். அப்பாதை யில் சுண்டிகுளம் ஊடாக முல்லைத்தீவின் மாத்தளன் செல்லும் ஓர் வழியும் உள்ளது. ஆனால் இதுவும் மிகவும்

சிக்கலான ஆளரவமற்ற பாதையாகும்.1990 ஜூன் 15 இல்வட பகுதியில் ஆரம்பித்த உள் நாட்டு யுத்தம் காரணமாக ஆனையிறவுப் பாதை தடைப்பட்டுப் போனது.1991 ஒக்டோபரில் வலம்புரி இரணுவ நடவடிக்கை காரண மாக கேரதீவு - சங்குப்பிட்டி பாதையும் தடைப்பட்டுப் போனது.

அதே காலப்பகுதியில் திறக்கப்பட்ட கொம்படி ஊரியான் பாதையும் 1993 மே மாதம் பலவேகய இராணுவ நடவடிக்கை இடம்பெற்று வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு படைத்தளங்கள் ஆனையிறவுடன் இணைக்கப்பட்ட போது மூடப்பட்டு விட்டது. அப்போது பொது மக்களின் பாவனைக்காகத் திறக்கப்பட்ட கிளாலிப் படகுப் பாதையின் நினைவுகளை இங்கே மீட்டுப் பார்ப்போம்.

யாழ், குடாநாட்டினுள் கிளிநொச்சி மாவட்ட நிர்வாகப் பரப்பினுள் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தினுள் வரும் ஓர் கடற்கரைக் கிராமம் தான் கிளாலி. யாகப்பர் கோயில் ஒன்றின் காரணமாக வட பகுதி கிறிஸ்த வர்களால் மட்டும் பெருமளவு அறியப்பட்டிருந்த கிராமம் இது.

பூநகரிப் பெருங்கடலுடன் இணைந்ததாக ஆனையிறவு வரை குறுக்காக இருந்த அலைகள் பெரிதும் அடிக்காத பரவைக்கடல் சார்ந்த கிராமம் தான் கிளாலி. தென்னைமரச் சோலைகள் அடர்ந்த ஆளரவமற்ற அமைதியான யாகப்பர் கோயில் அருளாட்சிபுரியும் இக்கிராமம் 1993 மே மாதத்தின் பின் ஊடகங்களில் பெரிதும் பேசப்பட்ட ஒரு கிராமமாகியது. கிளாலியிருந்து கடல்நீரேரி ஊடாக பூநகரியின் மட்டுவில் நாடு, நல்லூர் போன்ற இடங்களுக்கு படகுச்சேவை நடைபெற்றது. கிளாலி எனப் பொதுவாக கூறப்பட்டாலும் கூட அப்பிரதேசத்தில் இறங்கு துறை வாய்க்கால் புலோப்பளை ஆகிய இடங்களிலிருந்து தான் படகுப்பயணம் ஆரம்பிக்கும்.

இங்கு ஆள்கள் ஓரிடமாகவும் சைக்கிள், மோட்டார் சைக்கிள், உணவு ஏனைய பொருட்கள் வேறிடமாகவும் ஏற்றும் வேறுபட்ட படகுத் துறைகள் இருந்தன. அதேபோலவே பூநகரிப் பிரதேசத்தில் மட்டுவில் நாடு, நல்லூர் எனப் பல பிரதேசங்களில் இங்கிருந்து செல்லும் படகுகள் தரிக்கும். அங்கு ஆட்கள் இறங்கியவுடன் ட்ராக்

டரில் ஏற்றப்பட்டு ஆலங்கேணி எனும் இடத்திற்கு அழைத்து செல் லப்படுவார்கள்.

சீரற்ற மண்பாதைகளில் ட்ராக்டர் துள்ளத் துள்ள உடம்பு நொந்த படி பயணம் நடக்கும். மழை காலமென்றால் ட்ராக் டர் சில்லுபுதைய சாமம் சாமமாக அதனுடன் போராடி மீட்கும் படலமும் நடக்கும். ட்ராக்டர், சைக்கிள், மோட்டார் சைக்கிள் தவிர்ந்த வாகனங்கள் இப்பகுதியில் ஓடுவது என்பது மிகக் கடினமான ஒன்றாகும்.

ஆலங்கேணியில் வைத்து தான் றோசாமினிபஸ், தட்டி வான், ஆட்டோ போன்ற சேவைகளைப் பெற்று வவுனியா வடக்கு பிரதேசமாகிய பன்றிக்கெய்த குளத்தைச் சென்றடைவார்கள். 1993 மே மாதம் கிளாலி படகுப் பாதை திறக்கப்பட்டதும் கிளாலி கடல் நீரே ரி விடுதலைப்புலிகளும், கடற்படையினரும் மோதும் யுத்த களமாகி யது. படகுப் பயணிகளான பொது மக்களும் யுத்தக்களத்தின் இடை யில் சிக்குண்டு இறந்த சம்பவங்களும் பல நிகழ்ந்தன.

இக்காலத்தில் தான் மத்திய ஆபிரிக்க நாடான ருவாண்டா வின் பெரும்பான்மை ஹீட்டு இன மக்களால் சிறு பான்மை டுட்சி இனமக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். உலக ஊடகக்களத்தில் ருவான்டா நாட்டின் தலைப்பட்டினமாகிய கிகாலி நகரின் பெயர் பலமாக அடிபட்டது. அது போல தீவிர யுத்தகளமாகிய கிளாலி யும் கடல் நீரேரி யுத்தகளத்தின் தீவிரம் இருந்தது. பி.பி.ஸி. தமிழ் ஓசையில் கிளாலி கிகாலி பெயர்கள் மாறுபட்டு உச்சரிக்கப்பட்டது நிகழ்ந்தது.

அக்காலத்தில் பாதுகாப்பு அச்சம் காரணமாக கிளாலி படகுப் பயணம் இரவில் தான் நிகழும். அந்நாட்களில் வெளிவந்த ஈழநாடு, உதயன், ஈழமுரசு நாளி தழ்களில் முன்பக்கத்தில் பெட்டிச் செய்தியாக இன்று கிளாலிப்பட குச் சேவையென செய்தி இருக்கும். அதனைக் கண்ணுற்றதும் வெளி மாவட்ட வவுனியா பயணம் செய்வோர் பயண ஆயத்தங்களுடன் இன்று அழிவடைந்த நிலையில் இருக்கும் யாழ் புகையிரத நிலையத் திற்குப் பின்புறமாக ஸ்ரான்லி வீதியின் மரங்க ளின் கீழ் கூடுவார்கள்.

அது தான் அன்றைய நாளைய யாழ் கிளாலி பஸ் தரிப்பு நிலையம். அங்கிருந்து மத்தியான மளவில் பஸ்ஸில் புறப்பட்டு பிற்பகல் நேரம் கிளாலியை அடைவார்கள். அங்கு படகுக்கு டோக்கன் எடுத்தபடியே தென்னஞ்சோலையின் கீழ் இருப்பார்கள். அங்கு யாழ்குடாநாட்டின் அனைத்துப் பிரதேச மக்களையும் வட பகுதியின் அனைத்து மாவட்ட யாழ்ப்பாணம் வந்த பயணிகளையும் காணமுடியும்.

அப்பிரதேசத்தில் தேநீர்க் கடைகள் அமைக்கப்பட்டிருக்கும். அவை இரவு முழுவதும் படு சுறுசுறுப்பாக இயங்கும். கிளாலி கடற்கரை நோக்கி பயணிகள் அழைத்துச் செல்லப்பட்டதும் முழங்கால் அளவு தண்ணீரில் நடந்து சென்று படகில் ஏற்றப் படுவார்கள். அக்காலத்தில் மிகக் கடுமையான பொருளாதாரத் தடை இருந்தது. எரிபொருளுக்கு மிகவும் கட்டுப்பாடு அதன் காரணமாக ஒரு படகு இயந்திரம் இயக்கப்பட்டு ஏனைய படகுகளில் கயிறு மூலமாக இணைக்கப்பட்டு தொடுவையாக கடலில் ஒன்றின் பின் ஒன்றாகச் செல்லும்.

படகில் வெளிச்சம் ஏதும் காட்டாத வாறு இருளாக இருக்கும். கந்தஷஷ்டி கவசம், அபிராமி அந்தாதி, செபமாலை ஆகியவற்றைப் பயணிகள் எடுத்துச் சென்று மனப்பாடம் செய்தவற்றை மெல்ல மெல்ல முணுமுணுப்பார்கள். வெடிச் சத்தங்கள் கேட்டு யுத்தகளம் உருவானால் அல்லோல கல்லோலப்பட்டு குய்யோ முறையோ வெனக் கத்துவார்கள். தூரத்தே வெடிச் சத்தம் கேட்டால் தமது இஷ்ட தெய்வங்களை யெல்லாம் உரக்க கூவி துணைக்கு அழைப்பார்கள்.

பயப்பிராந்தியுடன் கூடிய உணர்வு பூர்வமான அக்கட்டத்தின் கொடுமை அனுபவித்துப் பார்த்தவர்களுக்குத் தான் தெரியும். கிளாலி நல்லூர் இடையேயான 15 கடல் மைல் தூரத்தை ஆயிரக் கணக்கான பயணிகள் கடக்கப்பட்ட வேதனைகள் காலத்தின் பதிவுகளாக்கப்படவேண்டியவை என்பது மறுப்பதிற்கில்லை. இரவு நேர பயணமாகையால் முன்னிரவு, பின்னிலவு பார்த்து பயணப்பட்டார்கள். மின் சாரமற்ற காலத்தில் இயற்கை வெளிச்சம்தான் உதவியது.

கிளாலி படகு பயணக் காலங்களில் இருகரைகளிலும் இறங்கும் பொதுமக்கள் பிரயாணம் செய்ய பயன்பட்ட பிரபலமான மோட்டார் சைக்கிளாக ஜப்பானிய தயாரிப்பு Honda MD 90 இருந்தது. யாழ்குடா நாட்டிலிருந்து கிளாலி ஊடாகவும் பூநகரி, நல்லூரில் இருந்து குடாநாடு நோக்கியும் வரும் பயணங்கள் ஆரம்பத்தில் இரவு சாமநேரப் பயணமாக இருந்தது ஆனால் **1993** டிசம்பர் முதல் பகல் நேரமும் இரவு நேரமும் பயணம் செய்யக் கூடியதாக மாறியது.

கிளாலி கடல்நீரேரி ஊடாக மண்ணெண்ணை பரல்களை ஒன்றிணைத்துக் கட்டிய படகுப்பாதை அமைப்பின் மூலமாக வாகனங்கள் கொண்டு செல்லப்பட்டன. கடலில் யுத்தம் காரணமாகப் பாதை தடைப்பட்ட காலங்களில் அக்கரையிலும் இக்கரையிலும் பயணம் தடைப்பட்டு நாள் கணக்கில் சில வாரங்கள் தவித்த பயணிகளும் இருந்தனர். இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சை, திட்ட மிடல் சேவை என அகில இலங்கை சேவைப்பரீட்சை, பிற பரீட்சைகளுக்குத் தோற்ற முடியாமல் பாதிக்கப்பட்டோர் ஆயிரக் கணக்கில் இருந்தனர். தோற்றி வெற்றி கண்டவர்கள் சிலர் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க முடியாமல் உயர்பதவி வாய்ப்பினையும் இழந்தனர்.

நோயாளிகள் பலர் சிகிச்சைத் தேவைகளுக்காக கொழும்பு செல்ல முடியாது பரிதவித்த சம்பவங்களும் நிறைய இருந்தன. யாழ் குடாநாட்டிலிருந்து கிளாலி ஊடாக பூநகரி சென்றோர் ஆரம்ப காலங்களில் நள்ளிரவுப் பயணமென்றை மினிபஸ்களில் மேற்கொண்டு வவுனியா வடக்கில் ஓமந்தைக்கு அருகாமையுள்ள பன்றிக்கெய்த குளத்தை அடைந்தார்கள். அருகிலுள்ள ஓமந்தை விடுதலைப் புலிகளின் நிலப்பரப்பு ஆளுகையின் இறுதி இடமாக இருந்தது. அங்கு வைத்து விடுதலைப்புலிகளிடம் பெற்றுக்கொண்ட பயண அனுமதிப்பத்திரம் (Pass) கையளிக்கப்படும்.

பின்பு பயணிகள் ஓமந்தையிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் நொச்சிமோட்டை பாலம் வரையில் உள்ளயுத்த சூனியப் பிரதேசத்திற்கு (No Mans Land) நடந்து செல்லமுற்படுவார்கள். எந்நேரமும் மோதல் நிகழலாமென்ற ஆபத்துள்ள இப்பிரதேசத்தில் சைக்கிள் மூலமாக பயணிகளை ஏற்றிச் சென்று உழைக்கும் ஒரு

தொழிலாள வர்க்கத்தினர் இருந்தார்கள்.

இவ் இடைத் தூரத்தைக் கடக்க லொறியொன்றும் சேவையில் ஈடுபட்டது. வவுனியா போவோ ருக்கு 50 ரூபாவும் திரும்பி வரும் போது 100 ரூபாவும் கட்டணம் அறவிடப்பட்டது. இந்த யுத்த சூனிய வலயமும் மோதல் நிகழ்ந்தால் மூடப்பட்டு பயணிகள் போக்கு வரத்து தடைப்பட்டு விடும். மோதல் களில் அகப்பட்டு பொது மக்கள் இறந்த வரலாறும் உள்ளது.

பயணிகள் எடுத்துச் செல்ல உணவுப் பொருட்களுக்கும் பிற பொருட்களுக்கும் அரச படையினர் கட்டுப்பாடுகளை விதிப்பார்கள். ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி 1996 ஆம் ஆண்டு மே மாதம் யாழ்ப்பாண நகரம், கோப்பாய்,புத்தூர் பிரதேசங்கள் ஊடாக விடுதலைப் புலிக ளின் கட்டுப்பாட்டிலிருந்த தென்மராட்சிப் பிரதேசத்தை நோக்கி முன்னேறினார்கள். ஆனையிறவு, கிளாலி வரை முன்னேறினார்கள். அப்போது கிளாலிப் பிரதேசம் பெரும் யுத்தகளமாக பயணப் பாதையும் தடைப்பட்டுப் போனது.

1996 மே மாதம் கிளாலிப் படகுப் பயணம் முற்றாக தடைப்பட்ட போதும் வன்னிப் பிரதேச மக்கள் வவுனியா செல்லும் பாதையாக இப்பாதை தொடர்ந்து திகழ்ந்தது. 2010 ஜனவரி முதல் இரவு பகல் என 24 மணி நேரப் போக்குவரத்திற்கு A9 பாதை வந்து விட்டது. சகலவித வாகனங்களும் கூவிக் கொண்டு பறக்கின்றன தரை வழிப் போக்குவரத்து இல்லாத நிலைமையில் வடபகுதி மக்கள் அனுப வித்த துன்பதுயரங்கள் காலப் பெட்டகத் தில் சேமித்து வைக்கப்பட வேண்டியவையே.

வாழ்ந்த தலை முறைக்கு, வரப் போகின்ற தலை முறைகளுக்கும், எழுத்தாலாகிய ஆவணம் கிளாலிப் படகுப் பயண மும் தென்பகுதிப் பயணங்களும் இருக்க வேண்டுமல்லவா.

**நன்றி, தினக்குரல் வார வெளியீடு – 2012.04.29**




# மே தினமும் சினிமாத்தியேட்டர்களும்

மே முதல் திகதி மே தினம் என உலகத் தொழிலாளர்களால் நூற்றாண்டுகள் கடந்து கொண்டாடப்பட்டு வருகின்றது. அன்றைய நாளில் தொழில் சங்கங்கள், அரசியல் கட்சிகள் ஊர்வலங்ளையும் பொதுக் கூட்டங்களையும் நடத்துவது ஓர் மரபாகவே இருந்து வருகின்றது. இலங்கையிலும் போர்க்கால அரசியலில் மே தினம் மறக்க முடியாத ஓர் நாள். **1993** ஆம் ஆண்டின் மே தினத்தன்று நடைபெற்ற ஊர்வலத்தில் கொழும்பு ஆமர் வீதியில் வைத்து அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ தற்கொலைக் குண்டுத்தாக்குதல் ஒன்றின் மூலம் கொல்லப்பட்டார்.

உலகெங்கும் உள்ள சகல நாடுகளாலும் பொதுவிடுமுறை வழங்கப்படும் ஓர் நாளென்றால் அது மே தினமாகத் தான் இருக்க முடியும். மே தினமும் சினிமாத் தியேட்டர்களும் என்ற தலைப்பிட்டு தொழிலாளர்களின் மதிப்புக் குறைவாக எழுத முற்படுவதாக தயவு செய்து நினைக்க வேண்டாம். எம்மைக்கடந்து சென்றுவிட்ட வாழ்வியல் அம்சமொன்றைப் பதிய வேண்டுமென்ற ஆவல் காரணமாகவே இன்று இப்பத்தியை

எழுதுகின்றேன்.

மேதினம் வரும் நாளில் சினிமாத் தியேட்டரில் குறைந்த கட்டணத்தில் படம் காட்டும் மரபு ஒன்று முன்னைய நாட்களில் இருந்தது. அன்றைய தினம் குறைந்த கட்டணத்தில் படம் காட்டிச்சேரும் பணத்தொகை தியேட்டர் ஊழியர்களுக்கு முதலாளி மாரால் பங்கிட்டுக் கொடுக்கும் நடைமுறையொன்றும் இருந்தது. அக்காலத்தில் தியேட்டர்களில் படம் பார்க்க செல்வோர் உட்கார்ந்திருக்கவென கதிரைகள் கலரி (Gallery) இரண்டாம் வகுப்பு, (Secand Class), ODC, முதலாம் வகுப்பு (First Class) பல்கனி (Balcany) என அடுக்கப்பட்டிருக்கும்.

பல்கனி என்பது மேல்மாடியாகத் தானிருக்கும். ஆனால், இது எல்லாத் தியேட்டர்களிலும் இருக்காது. யாழ்ப்பாண நகரில் ராணி,லிடோ தியேட்டர்களில் பல்கனி இல்லை. ராணி தியேட்டர் இப்போது எங்கேயென யாழ்நகரம் தெரிந்த நீங்கள் மனக்கண்ணால் தேடுவது எனக்குப் புரிகின்றது. யாழ்ப்பாண நகர பஸ் நிலையத்திற்கு வடக்காக Abans கடைகளுடன், வேறு கடைகளும் கலந்துள்ள இடத்தில் தான் அந்நாளைய ராணி தியேட்டர் இருந்தது. லிடோ தியேட்டர் யாழ்.ஸ்ரான்லி வீதியில் கஸ்தூரியார் வீதிச் சந்தியில் கிழக்கு மூலையில் இருந்தது. இது இருந்த இடத்தில் தான் இப்போது பல அடுக்கு கடைத்தொகுதி ஒன்று இருக்கின்றது. கடந்து போன யுத்தம் தின்று தீர்த்து பெயரை மட்டும் எச்சங்களாக விட்டுச்சென்ற தியேட்டர்கள் இவை.

அக்காலத்தில் சாந்தி தியேட்டர் என்ற பெயரில் இயங்கியது. இந்நாளில் செல்லா சினிமாஸ் என்ற பெயரில் இயங்குகிறது. இங்கு மட்டும் பல்கனி, சுப்பர் பல்கனி (Super Balcany) என இரண்டடுக்கு பல்கனி இருந்தது. கலரி எனப்படும் வகுப்பு காந்தி கிளாஸ் என எம்மவரால் செல்லப்பட்டமென்று சூட்டி அழைக்கப்பட்டது. ஏழை, எளியவர்கள் குறைந்த கட்டணத்தில் படம் பார்க்க கூடியதான வகுப்பு அது என்பதால் அவ்விதம் அழைக்கப்பட்டது. அந்நாளைய தியேட்டர்களின் கதிரைகளைப் பார்த்தால் கொடுக்கும் பணத்திற்கேற்ப கதிரைகளின் தரம் இருப்பதைப் பார்க்கலாம். பணம் கூட கூட கதிரைகளின் சொகுசுத் தன்மை, தரை அமைப்பின் தரம் கூடும்.கலரிக்கு வெறும் பலகைக் கதிரைகள் அல்லது பலகை வாங்கில்கள் தான் போடப்பட்டிருக்கும்.

சில கிராமப் புறத்தியேட்டர்களில் வெறும் தரையில் உட்கார வைத்துப்படம் பார்த்ததும் கலரியில் நிகழ்ந்தது. என் நினைவு தெரிந்த நாட்களில் கலரியில் படம் பார்ப்பதற்கு இரண்டு ரூபா வசூலிக்கப்பட்டதை அறிவேன். அப்போது பல்கனியில் படம் பார்க்க ஐந்து ரூபாவாக இருந்தது. பணத்தின் மதிப்பு உயர்வாக இருந்த காலங்கள் அது. காலம் செல்லச் செல்ல பணத்தின் பெறுமதி குறைய VDO, டெக், வருகையால் தியேட்டர்களுக்கு மக்கள் செல்வது குறையத் தியேட்டர்களில் படம்பார்க்கும் வகுப்புகளில் மாற்றம் வந்தது. காந்தி கிளாஸ் என்ற கலரி முதலில் காணாமல் போனது. சற்றுப் பின்னாளில் நடுத்தர வர்க்கத்தவரின் வசதி குறைந்தோரின் இரண்டாம் வகுப்புமுறை கைவிடப்பட்டது. பின்னாளில் முதலாம் வகுப்பு, **ODC,** பல்கனி என்ற வகுப்புகள் மட்டுமே வந்தது. அந்நாளில் தியேட்டர்களில் சென்று மாதமொரு படம் குடும்பமாகப் பார்ப்பது, நண்பர்களுடன் சென்று படம் பார்ப்பது என்பதெல்லாம் வாழ்வின் பண்பாட்டு அம்சங்களில் ஒன்றாகவே இருந்தது.

திருமணமாகிய தம்பதியினர் தமது இனசனத்தவரை அழைத்துக்கொண்டு சென்றுபடம் பார்ப்பது என்பதும் ஓர் சந்தோச முறைமையாக இருந்தது. M.G.R நடித்த சிவாஜி நடித்த படங்களை முதல் நாளே பார்ப்பதற்காக ரசிகர்கள் இரவிரவாக தியேட்டர் வாசலில் வரிசையில் நின்று விழித்திருந்து அடுத்தநாள் காலையில் ரிக்கெற் எடுத்துப்படம் பார்த்ததும் நிகழ்ந்தது. புதுப்படத்தை முதல்நாள் இரவு 9.30 மணிக்கு தியேட்டர் ஊழியர்களுக்கும் அவரது குடும்பத்தவர்களுக்குமெனவும் முதலாளிமார் போட்டுக்காட்டிய நிகழ்வொன்றும் நடந்தது. தியேட்டரில் ரசிகர்கள் நிறைந்ததும் ஹவுஸ்புல் என்ற போட் ஒன்று தொங்கும். முதல் நாள் நெருக்கியடித்து வாய்ச்சண்டையிட்டு ரிக்கற் எடுத்து அதன் விலையில் பல மடங்கு தொகைக்கு கறுப்புச் சந்தையில் விற்றுக் காசாக்கும் நிகழ்வுகளும் நடந்தன.

புதுப்படமொன்று திரையரங்கம் நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்பட்டு சனத்திரள் குறைந்து தியேட்டரின் ஆசனங்களில் அரைவாசி ரசிகர்கள் வரும்போது புதிய நடைமுறையொன்று சில தியேட்டர்களில் இருந்தது. தியேட்டர் ஊழியர்களுக்கு தெரிந்தவர்களின் குடும்பங்களுக்கு 12 வயதிற்கு குறைந்தோரின் அரைத் ரிக்கெட் (அரைவாசிக் கட்டணம்) பெறுமதியில் படம் பார்க்கும் சலுகை வழங்கப்பட்டது.

அக்காலத்தில் முன்னணித்தியேட்டர்களில் வேலை செய்வோர் செல்வாக்கானவர்களாக சமூகத்தில் திகழ்ந்தனர். அவர்களைப் பிடித்து பின்கதவால் ரிக்கெட் பெற்று படம் பார்த்த நிகழ்வுகளும் அரங்கேறின.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, மாதகல், பலாலி, காங்கேசன் துறை, மன்னார் போன்ற கரையோரக் கிராமங்களில் வசித்தோர் இயந் திரப் படகில் ரகசியமாகச் சென்று தென்இந்தியக் கரைகளில் இறங்கி நகரப் பிரதேசங்களுக்குச் சென்று படம் பார்த்து வந்ததுவும் நிகழ்ந்தது. வாத்தியார் என அவர்களால் செல்லமாக அழைக்கப்பட்ட எம்.ஜி.ஆரின் படங்களே அவ்விதம் மிகக்கூடுதலாகப் பார்க்கப்பட்டது.

யுத்தத்தின் சத்தங்கள் எதுவுமே கேட்காத அக் காலப்பகுதில் இலங்கை அரசாங்கத்திற்கு இப்போதையதைப் போல அப்போது பலமான கடற்படையொன்று தேவையாக இருக்கவில்லை. இதனால் படம் பார்த்து வருவதுடன் கள்ளக்கடத்தல் எனும் பொருள் கடத்தலும் மிகத் தாராளமாகவே நிகழும்.

ஆட்களின் பெயருடன் கள்ளக்கடத்தல் எனும் பட்டப்பெயரும் இருந்தது. இப்போதையதைப் போல அப்போது இந்தியா, இலங்கை, உலக நாடுகளெங்கும் ஒரே நாளில் சினிமாப்படம் வெளியாகுவதில்லை.

இந்தியாவில் வெளியாகிய முன்னணி நடிகர் ஒருவரின் படம் ஒரு வருடம், இருவருடம் கழித்த பின்பே எமது மண்ணை எட்டிப்பிடிக்கும். அந்நாளில் வல்வெட்டித்துறை போன்ற கரையோரக் கிராம மீனவமக்கள் தமது வீடுகளில் நிகழும் திருமணம், மங்கைப் பருவ மங்கல நீராட்டு விழா, புதுமனைப் புகுவழா போன்றவற்றிற்கு படகில் தென்னிந்தியா சென்று உடுபிடவை, பாத்திரம், பண்டங்கள் வாங்கி வந்தது நிகழும்.

தென்இந்தியாவின் வேதாரண்ணியம் கிராமத்தில் வல்வெட்டித் துறை ஊரவர் குடியிருந்து வருவதற்கென உருவாகிய வீடுகளின் தெருவை யாழ்ப்பாணத் தெருவென அழைப்பார்கள். அது இப்போதும் அவ்விதம் தான் அழைக்கப்படுவதாக அங்கிருந்து வருவோர் கூறுகின்றனர், எமது மேதின சினிமாப்படம் நோக்கி மீண்டும் செல்வோம்.

- வேதநாயகம் தபேந்திரன் -

அந்நாளில் இலங்கை பூராகவும் மேதின ஊர்வலம், அரசியல் கூட்டங்களுக்கு உணர்வுள்ளோர் பெருந்திரளாக ஒன்று கூடுவார்கள். அதேபோல கலரி வகுப்புக் கட்டணத்தில் படம் பார்க்கவெனவும் அன்றைய தினம் சினிமா ரசிகர் கூட்டமொன்று தியேட்டர்களின் வாசலில் அலை மோதுவார்கள்.

இவர்களில் மிகப் பெரும்பாலும் ஆண் ரசிகர்களாக அதுவும் சிறுவர், இளைஞர், நடுத்தர வயதினரே மிகக் கூடுதலாக இருப்பார்கள். முண்டியடித்துக் கொண்டு போயிருந்து படம் பார்ப்பார்கள்.


வழமையான நாட்களில் காட்டப்படும் படம் போன்று படம் முழுமையாக இருப்பதில்லை. சில இடங்களில் ரீல்ஸ் வெட்டிக் குறைத்து படத்தின் நேரம் குறைக்கப்படுகிறதெனவும் ரசிகர்கள் கூறுகின்றனர்.

மேதினப் படக்காட்சிகளிற்கு கௌரவம் பார்க்கும் குடும்பங்கள் போவதில்லை. விசிலடிச்சான் குஞ்சுகளே தொழிலாளர் தினத்தை கேளிக்கை தினமாக்குகின்றனர் என அக்காலம் தெரிந்தோர் கூறுகின்ற னர். காலச்சக்கரம் மெல்ல மெல்லச் சுழன்றது. மேதினமாகிய தொழிலா ளர் தினத்தை முழுமையாக கௌரவிக்கும் முகமாக அந்நாளில் படம் காட்டப்படுவதை அரசாங்கம் நிறுத்தியது.

யுத்தத்தின் சத்தங்களும் தொலைக்காட்சி, டெக் , சிடி பிளேயர், டி.வி.டி. பிளேயரின் வரவுகளும் பல தியேட்டர்களைக் காணமல் போகச் செய்து விட்டது.

மேதினம் என்றவுடன் தொழிலாளர் கௌரவிப்பு நிகழ்வுடன் சினி மாப் பட நினைவுகளும் கூடவே வருகின்றன. எம்மைக் கடந்து சென்ற வாழ்வியல் அம்சம் ஒன்றை கால நீட்சியில் தொடர்ந்து செல்ல எழுத்து ஆவணமாக்கி உள்ளேன்.

**தினக்குரல் வாரவெளியீடு 06.05.2012**



# கப்பல்களும் பயணங்களும்

போர்க்கால வாழ்க்கையில் 1990 ஜூன் 15 ஆம் நாளன்று ஆனையிறவு ஊடான யாழ் கண்டி வீதிப் போக்குவரத்து தடைப்பட்டது. அன்று தடைப்பட்ட பாதை 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் 08 ஆம் நாளன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித் துணையுடன் பகல் நேரம் மட்டுப்படுத்தப்பட்டதாக மீளவும் திறக்கப்பட்டது. அதற்கு முந்திய காலத்தில் கேரதீவு - சங்குப்பிட்டி ஊடாக 1991 இறுதி வரையும் கொம் படி- ஊரி யான் பாதை ஊடாக, 1993 மே வரையும், கிளாலி கடல்நீரேரி ஊடாக 1996 ஏப்ரல் வரையுமாக சகட ஓட்டத்தில் போக்குவரத்து பல இடர்பாடுகளுடன் நடந்தது.

1996 மே மாதம் யாழ்குடா நாடு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து முழுமையாக இலங்கை அரச படைகளிடம் சென்றது. அப்போது ஆனையிறவுக்குத் தெற்காக வவுனியா, ஓமந்தை, வரையிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்ததால் தரை வழிப் போக்குவரத்து நடைபெறவில்லை. அப்போது தான் கடல் போக்குவரத்திற்கென கப்பல் பயன்படுத்தப்பட்டு பயணிகள் செல்லத் தொடங்கினார்

கள். விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டில் யாழ்.குடாநாடு இருந்த போது ஐரிஷ்மோனா என்ற கப்பல் மூலம் பருத்தித்துறை கடல் பகுதி யிலிருந்து திருகோணமலை நோக்கிய பயணம் இடம்பெற்றது. இதில் நோயாளிகள், அரச அதிகாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள், அனுமதி பெற்ற பொதுமக்கள் பயணம் செய்தார்கள்.

அக்காலத்தில் யாழ். குடாநாட்டின் தீவகப் பகுதியில் நெடுந் தீவு, நயினாதீவு, பிரதேசங்களிலிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் ஐரிஷ்மோனா கப்பல் மூலம் திருகோணமலை சென்று அங்கிருந்து கடற் படையினரின் கப்பல்கள் மூலம் காரைநகருக்குச் சென்று பின்னர் சிறிய படகுகள் மூலம் நெடுந்தீவு, நயினாதீவு பிரதேசங்களுக்குச் சென்ற னர்.

இதனை விட முதல் சொன்ன கேரதீவு - சங்குப்பிட்டி, கொம்படி ஊரியான், கிளாலி கடல்நீரேரி ஆகிய பாதைகளில் அக்காலத்திற்கேற்ப ஏதாவது ஒன்றில் பயணம் செய்துதரைவழிப் பாதை ஊடாக வவுனி யாவை அடைந்தனர். அங்கிருந்து பஸ் மூலமாகத் திருகோணமலை சென்று பின்னர் முதற் சொன்னவாறு கடற்படைக் கப்பல் மூலமாக தமது பிரதேசத்தை அடைந்தனர்.

யாழ்.குடாநாட்டினுள் யாழ் நகரிலிருந்து அரை மணி நேர அல்லது ஓரிரு மணி நேரப் பயணத்தின் மூலம் இன்றைய நாளில் சென்றடையும் இடங்களை பல நாள் பயணத்தின் மூலம் பல்லாயிரம் ரூபா செலவில் அலைச்சல் உலைச்சலுடன் சென்றடைந்தனர்.

1996 மே மாதம் யாழ்.குடாநாடு முழுமையாகவே இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததும் அவர்களுக்கும் யாழ்ப்பாணப் பிரதே சதிற்குமான கப்பல் போக்குவரத்து முடிவுக்கு வந்தது. யாழ்.குடா நாட்டு மக்கள் கப்பல் மூலமாகவே வெளி மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை வந்தது.

அதற்கு முந்திய காலத்திலும் 1977,1983 ஆம் ஆண்டுகளில் தென்னிலங்கையில் நடைபெற்ற இனவன்முறைகளிலிருந்து பாது காப்புத் தேடி கப்பல் மூலமாக யாழ்ப்பாணம் வந்தனர். அக்காலத்தில் தரைவழிப் போக்குவரத்து இருந்த போதும் பாதுகாப்பு அச்சம் காரண மாக பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கொழும்புத் துறைமுகத்தில்

இருந்து யாழ்.காங்கேசன்துறை நோக்கி கப்பலில் தான் வந்தனர் 1977 கப்பல் பிரயாணக் கதையைக் கொண்டு லங்காராணி என்ற முழு நீள நாவல் ஒன்றும் வெளிவந்தது. திலகர் என்பவரால் எழுதப்பட்ட இதுவும் வாழ்வியல் ஆவணம் தான்.

இலங்கைத் தமிழர்களுக்கும் கப்பல்களுக்கும் பலநுற்றாண்டு கால உறவு உள்ளது. பிரித்தானியர் இலங்கையை ஆண்ட போது வல்வெட்டித் துறையிலிருந்து அமெரிக்கா நோக்கி அன்னபூரணியெ னும் கப்பலைச் செலுத்தி வெற்றியடைந்ததாக வரலாறு கூறுகின்றது.

1996 மே மாதத்திற்குப் பின்பாக 2002 ஏப்பிரல் வரையிலான கப்பல் போக்குவரத்துக் காலத்திற்குப் போவோம். 1996ஜூன் மாதமள வில் யாழ்ப்பாணத்திற்கும் காங்கேசன் துறைக்குமான கப்பல் போக் குவரத்து ஆரம்பமானது.

இருமணி நேரப் பயணத்தில் சென்றடையக் கூடிய கிளிநொச்சிக் கும் ஏனைய வன்னிப் பிரதேச மாவட்டங்களுக்கும் கூட கப்பலில் திரு கோணமலை சென்ற பின்பு தான் அடைய முடிந்தது. ஆரம்பத்தில் இலவசமாக ஆரம்பித்த கப்பல் போக்குவரத்து சில நாட்களிலேயே கட்டணம் செலுத்தும் போக்குவரத்தாக மாறியது.

1996 ஜூலை மாதத்தின் பின்பு யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு நிலையில் திடீர் இறுக்கம் ஏற்பட்டது. இராணுவ முகாம்களில் பாது காப்பு அனுமதி **clearance** பெற வேண்டிய நடைமுறையொன்று ஏற்படுத்தப்பட்டது.

இராணுவத்தினரின் குடும்ப அட்டை, பிரதேச செயலகம் மூலம் கிராமசேவகர் ஊடாக விநியோகிக்கப்பட்ட குடும்ப அட்டை, இராணு வத்தினரின் விசேட அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை என்பவை பயண அனுமதி பெறுவதற்கு கட்டாயமாக்கப்பட்டது. பிரதேசங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பகுதியாக இராணுவத்தினரின் நிர்வாகத்தின் கீழ் கையளிக்கப்பட்டு பயண அனுமதி வழங்கப்பட்டது. இப் பயண அனுமதியானது. கப்பல், விமானம் எனத் தனித் தனியாகக் கொடுக்கப் பட்டது.

ஒருவர் ஒரே நேரத்தில் கப்பல் அல்லது விமானத்திற்கென பயண அனுமதியைப் பெற முடிந்தது. விமான பயண அனுமதியை கப்ப லுக்கு மாற்றுவது இலகுவாயிருந்தது. கப்பல் பயண அனுமதியை விமானப் பயணத்திற்கு மாற்றுவது மிகவும் கஷ்டமாயிருந்தது. பயண அனுமதி வழங்கப்படுவதற்கான கால எல்லை கூடிக் குறைந்ததற் கான காரணங்களும் பலவாறாக இருந்தன. கப்பல் பயணத்திற்கென தனி யான பயணிகள் கப்பல் பயன்படுத் தப்பட்டது மிக அரிதாகவே நிகழ்ந்தது1997 இல் நியூகோ எண்டியூரன்ஸ் எனும் கப்பல் பயணிகளை ஏற்றுவதற்காகவென தனியார் கம்பனி ஒன்றால் ஈடுபடுத்தப்பட்டது.2000 ஆம் ஆண்டின் இறுதியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித் துணையுடன் சிற்றி ஒப் றிங்கோ City of Trinco எனும் ஓரளவு வசதிகள் நிறைந்த பயணிகள் கப்பலொன்று போக்குவரத்தில் ஈடுபட்டது.

இதனைத் தவிர போக்குவரத்தில் ஈடுபட்டவை யாவும் சரக்கு கப்பல்களே ஆகும். சரக்குக் கப்பல்கள் சில காலங்களில் மாதத்திற்கு ஒரு முறை, இரு முறையென நடைபெறும். சில நேரத்தில் இருமாதத்திற் கொரு போக்குவரத்து நடைபெறும். இவை பொதுமக்களின் எண்ணிக் கையைப் பொறுத்து தமது சேவைகளை மேற்கொண்டன.

1997 இறுதி காலத்திலிருந்து வன்னிப் பிரதேசத்திலிருந்து பல்லாயிரம் பேர் வவுனியா ஊடாக திருகோணமலை சென்று கப்பல் மூலமாக காங்கேசன்துறை மூலமாக யாழ்ப்பாணம் திரும்பினர். திரு கோணமலை உப்புவெளி கண்ணாடித் தொழிற்சாலை கட்டடம், நகரத்தில் சங்கமித்தா விடுதிகளில் தங்க வைக்கப்பட்டனர். அப் போது திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்தோரும் உள்ளூர் மக்களுமாக நாளாந்தம் நுற்றுக் கணக்கில் திரும்பினார்கள்.

அதனால் யாழ்ப்பாணத்திலிருந்து பலநுறு பேர் திருகோண மலை பயணமாக முடிந்தது. லங்கா முடித , சஜிந்தா, அட்லான்ரிக் றீபர் எனப் பல பெயர்களுடைய சரக்குக் கப்பல்கள் பயணத் தில் ஈடுபட்டன.

அக்காலத்தில் வன்னிப் பிரதேசத்திலிருந்த யாழ்ப்பாண மக்கள் பூநகரியின் நாச்சிக் குடா, பிற கரையோரப் பிரதேசங்களிலிருந்து படகு மூலமாக யாழ்ப்பாணம் குருநகர் இறங்குதுறையை வந்தடைந்ததும்

பதிவிற்குரியது. சரக்குக் கப்பல்களில் பயணம் செய்தமை விசித்திரம் நிறைந்த, துன்பமுள்ள ஒன்றாகும்.

யாழ்ப்பாண நகரப் பிரதேசத்திலிருந்து பயணிகளை ஏற்றப் பல இடங்கள் பயன்பட்டன. சிங்கள மகா வித் தியாலய முன்றலில், மணியம்ஸ் கட்டிட முன்புறம், யாழ்.புகையிரத நிலைய வளாகம் என காலத்திற்குக் காலம் இது மாறுபட்டது. கிளி யரின்ஸ் எனவும் பாஸ் (Pass) எனவும் பொதுமக்கள் அழைத்த பயண அனுமதித் துண்டுகள், பயண ஆயத்தங்களுடன் அதிகாலையே யாழ் நகரை நோக்கிச் செல்வார்கள்.

அங்கு வரிசையில் நின்று சில மணி நேர சோதனைக்கு பின்பாக பஸ்ஸில் ஏறி காங்கேசன்துறை நோக்கிச் செல்வார்கள். அங்கும் சில மணி நேரம் காத்து நிற்பார்கள். பின்பு மாலைபட்டதும் இரவு நெருங்க கப்பல் பயணத்தை ஆரம்பிக்கும். தரைவழியிலிருந்து நீண்ட தூரம் ஆழ்கடல் சென்று கப்பல் பயணத்தைத் தொடரும்.

அக்காலத்தில் கப்பலுக்கு பாதுகாப்பு வழங்கவென அரசின் கடற் படைக்கப்பல்களும் செல்லும். நடுக்கடலில் கடற்படைக்கும் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளுக்குமிடையே சமர் மூண்டால் பயணி களை ஏற்றிய சரக்கு கப்பல் பயணிகளும் அந்தரிப்பார்கள். வெடிச்சத் தங்கள் நெருங்கி வரக் கேட்டால் கூக்குரலிடுவார்கள். இந்தக் கடல் சமர் காரணமாக பயணம் புறப்பட்ட கப்பல்கள் சில நேரங்களில் கரை திரும்பி வர பயணிகள் ஏமாற்றத்துடன் வீடு சென்ற நிகழ்வும் நடந்தது.

சரக்குக் கப்பலில் சென்றபோது அதன் தூசிகள், அழுக்குகள் எல்லாவற்றையும் பயணிகள் தாங்கிக் கொண்டு கோலம் கெட்டு கரை இறங்கிய நிகழ்வும் நடந்தது. நடுக்கடலில் கப்பல் ஆட்டிய ஆட்டத்தில் சத்தி எடுத்து அரை மூச்சையுற்று கரை இறங்கிய அனுபவங்களும் நிகழ்ந்தது.

இரவு புறப்பட்ட கப்பல் அதிகாலையில் கடற்கரையை அடைந்துவிடும். சில வேளைகளில் மதிய நேரம் தான் கப்பல் கரையை அடைந்தது. திருகோணமலையிலிருந்து புறப்பட்ட கப்பல் மதியம்

காங்கேசன்துறையை அடைந்து பயணிகள் இறங்கி பயணிகளின் உடைமைகள் லொறிகளின் மூலம் காங்கேசன்துறைப் பட்டின சபையை வந்தடைய மாலையாகிய நாட்களில் இரவுத் தங்கல் அங்கேயே நிகழும். உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்த காங்கேசன்துறையின் முன்னாள் பட்டின சபை வளாகத்தில் தங்கிய மக்கள் அடுத்த நாள் காலையில் தான் தமது ஊர்களைச் சென்றடைவார்கள்.

அப்போது திருகோணமலையில் புறப்பட்ட பயணம் 3 ஆவது நாளில் தான் பயணிகளுக்கு முடிவைத் தந்தது. திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத் தில் பயணிகள் பதிவை மேற்கொண்டு பாதுகாப்பு அமைச்சின் அனு மதியைப் பெற்ற பின் பயணத்தை ஆரம்பிப்பார்கள்

திருகோணமலை உள்த்துறைமுகத்திலிருந்து நியூகோ என்டி யூரன்ஸ் கப்பல் பயணத்தை ஆரம்பிக்கும். ஏனைய கப்பல்களின் சேவையைப் பெறுவதற்கு அங்கிருந்து பஸ் மூலமாக சீனக்குடாவிலுள்ள பிறீமா துறைமுகம், பெற்றோலியக் கூட்டுத்தாபன துறை முகம் போன்றவற்றிற்கு செல்வார்கள். அங்கு வரிசையில் நின்று கப்பலில் ஏறுவார்கள்.

இதன் போது யாழ்ப்பாணத்தில் தட்டுப்பாடான பொருட்களை எடுத்துச் செல்லும் வியாபாரிகளும் இருந்தனர். வெற்றிலை, அன்னாசிப்பழம், தோடம்பழம் அப்பிள்பழம் உடு பிடவைகள் என இவற்றின் வகைகளுள் அடங்கும். பயணி ஒருவர் எடுத் துச் செல்லும் பொருள்களுக்கு நிறையில் மட்டுப்பாடு விதிக்கப்படும். இதனால் நிறை கூடியதால் பொருள்கள் சிலவற்றை கவலையுடன் கை விடுவார்கள்.

கப்பல் பயணிகள் பல நூற்றுக் கணக்கில் வந்து சேர்ந்ததால் லொட்ஜ் எனப்படும் விடுதிகளும் திருகோணமலையில் பெருக ஆரம்பித்தன. யாழ்ப்பாணம் செல்வோரின் மத்திய நிலையமாகத் திருகோணமலை திகழ்ந்தது. 1998 ஆம் ஆண்டில் மன்னாரிலிருந்தும் காங்கேசன்துறை நோக்கி கப்பல் பயணங்கள் நிகழ்ந்தன.

கப்பல் ஒன்று வெறுமனே நின்ற நிலையில் எரிக்கப்பட்ட

- வேதநாயகம் தபேந்திரன் -

போது அப்பயணம் முடிவுக்கு வந்தது. 2002 ஏப்ரல் 8 இல் தரைவழிப் போக்குவரத்து முகமாலை,ஓமந்தை மையங்களூடாக நடை பெற்ற போது போதுமான பயணிகள் இல்லா ததால் சில நாட்க ளில் கப்பல் போக் குவரத்து நின்றுபோனது.

2006 ஆகஸ்ட் 11 இல் இறுதி ஈழப்போர் தொடங்கிய போது தரைப் பாதை மூடப்பட்டது. பின்பு அவ்வருட இறுதி முதல் மீளவும் கப்பல் போக்குவரத்து நடைபெற ஆரம்பித்தது. இக்காலத்தில் கப்பல்கள் கரையிலிருந்து 50 கடல் மைல் தொலைவில் ஆழ்கடலில் பயணத்தை மேற்கொண்டது. அப்போது கப்பலின் ஆட்டம் காரணமாக பயணிகள் மிகுந்த உபாதைபட்டனர்.

இப்போதும் பயணிகள் இராணுவ முகாம்க ளின் மூலம் பயண அனுமதி பெற்று பயணிக்கும் நிலையே கடைப்பி டிக் கப்பட்டது. கிறீன் ஓசானிக் (Green Ocanic) எனும் கப்பல் பயணி களை ஏற்றி இறக்கி யது. வாரத்தில் 3 நாட்கள் கப்பல் பயணம் இடம் பெறும். 2009 மே மாத இறுதியுடன் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததும் ஜூலை மாதம் முதல் தரைவழிப் பாதை மட்டுப்படுத்தப்பட்டதாக திறக்கப்பட்டது. 2010 ஜனவரி முதல் தரைப்பாதை 24 மணி நேரமும் கட்டுப்பாடுகளற்று திறக்கப்பட்டது. கப்பல் மூலம் பயணிக்கும் தேவை யும் அற்றுப்போ னது. போர்க்கால வாழ்க்கையில் கப்பலும் அதன் பய ணங்களும் ஆவணப்படுத்தப்பட வேண்டியவையே.

நன்றி தினக்குரல் வார வெளியீடு. - 2012-05-13




# விமானங்களும் எமது பயணங்களும்

*காட்சி-1*

"பஸ்ஸில் போவதென்றால் பஸ் ஸ்ராண்டுக்குப் போக வேணும். கப்பலில் போவதென்றால் துறைமுகத்திற்குப் போக வேணும். பிளே னில் போவதென்றால் எயாபோட்டுக்குப் போக வேணும். அதை விட்டுப் போட்டு பிளேனில் போவதற்கு உடைந்து போன அதுவும் றெயின் ஓடாத றெயில்வே ஸ்ரேசனுக்கு ஏனப்பா கூட்டி வந்துள்ளீர்கள்"

அந்தச் சிறுமி தகப்பனைப் பார்த்து இவ்வாறு கேட்டாள். அவளுக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைப்பதெனத் தந்தை திகைத்தார். பக்கத்தில் நின்றவர்களும் எமது வாழ்வு மட்டும் ஏன் இப்படியாகிப் போனதென மன வேதனையுடன் சிறுமியின் கதையை ரசித்தார்கள்.

*காட்சி - 02*

"சேர், யாழ்ப்பாணம் குடாநாடு என்று படிப்பிக்கிறியள். யாழ் கண்டி வீதி ஒரு நீண்டதூர பெரிய வீதியாக இங்கிருக்கிறதென சொல்லு றியள். பிறகேன் சேர் நாங்கள் பஸ்ஸிலோ, றெயினிலோ வெளி மாவட்

டங்களுக்குப் போகாமல் கப்பலிலையும் பிளேனிலையும் போறம்."

அந்தப் பிஞ்சு மாணவனின் கேள்விக்கு எப்படி விடை சொல்வது, இவனுக்கு எமது நாட்டு நடப்பை எவ்விதம் புரிய வைப்பது ஆசிரியர் பலத்த யோசனையில் ஆழ்ந்தார்.

போர்க் காலம் முடிந்து விட்டதாகக் கூறுகின்றார்கள். போர்க் கால வாழ்வியலில் கேட்கப்பட்ட வினாக்கள் தான் அவை.விடை கூறச் சிக்கலான வினாக்கள் என்றாலும் வாழ்வில் மறக்க முடியாத பாகங்கள் அவை.

1996 மே முதல் 2002 ஏப்ரல் வரையும் 2006 ஆகஸ்ட் 11 இன் பின்னரும் 2009 டிசெம்பர் வரையும் யாழ் குடாநாட்டிற்கும் வெளி யிடங்களுக்கும். கப்பலும் விமானங்களும் தான் பயணம் செய்வதற்கு உதவின.

விமானங்களுக்கும் எமக்கும் நிறையவே உறவுகள் இருக்கின் றது. வலிகாமம் வடக்கில் பலாலியில் பிரிட்டிஷ் காலத்தில் யுத்த நோக்கம் கருதி விமான நிலையமொன்று அமைக்கப்பட்டது. அதற்கு முன்னர் கைதடி - நீர்வேலி தரவை வெளியில் தான் பரிட்டிஷார் ஆபிரிக்க காப்பிலி அடிமைகளைக் கெண்டு விமான நிலையம் அமைக்க முற்பட்டார்கள். விமானங்களும் இராட்சத இரைச்சலுடன் தரை இறங்கிச் சென்றன. அவ்வருடம் கடும் வெள்ளப் பெருக்கு காரணமாக விமான நிலையம் பலாலிக்கு மாறியதாக காலம் தெரிந்த மூத்தோர் கூறுகின்றார்கள்.

பலாலியில் விமான நிலையம் அமையப் பெற்றதும் இந்தி யாவின் திருச்சி,சென்னை இடங்களுக்கு விமானங்கள் பறந்தன. அத் துடன் திருகோணமலை சீனக்குடா, கொழும்பின் இரத்மலான போன்ற இடங்களுக்கும் உள்ளூர் பயணங்கள் இடம்பெற்றன. அக்கா லத்தில் அரச உத்தியோகத்தர்கள் தமது ஒரு வருடத்திற்கான 3 செற் விடுமுறை கால புகையிரத ஆணைச்சீட்டுகளையும் வழங்கி ஒரு முறை சென்று வரும் விமானப் பயணச்சீட்டைப் பெற்றார்கள். அப்போது கொழும்பிலிருந்து விமானத்தில் பலாலி வந்து இலண்டன் ICMA போன்ற பரீட்சைகளுக்குக் கற்பித்து விட்டு மாலையில் விமானத் திலேயே திரும்பினார்கள். யுத்த காலம் வந்தது. பலாலி விமானத் தளம்

சிவில் சேவையிலிருந்து இராணுவச் சேவைக்கு மாறியது. உயர்பாதுகா-ப்பு வலயங்களாக பெரும் பிரதேசம் அமைந்தது.

இந்திய அமைதி காக்கும் படை (IPKF) நிலை கொண்டிருந்த காலம். **1989** ஜூன் மாதத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் போது இளைஞர்கள் வீதிகளில் உலாவமுடியாத நிலையேற்பட்டது. பஸ்ஸிலோ, றெயினிலோ கொழும்பு போக முடியாத நிலை வந்தது. அதற்கான அரசியல் சூழலை விபரிக்கப்புறப்பட்டால் இப் பத்தியின் திசை மாறி அரசியல் விவாத மேடையாகி விடும்.

அந் நாட்களில் சுழித்து நெளித்து பலாலி விமான நிலையம் சென்று அவ்ரோ ரக விமானமேறி கொழும்பைச் சென்றடைந்தார்கள். அப்போது பாதுகாப்பு அனுமதி (Clearence) முறைமை இருக்க வில்லை. **1996** மே மாதம் முதல் யாழ் குடாநாடு முழுமையாக இலங்கை அரச படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. யாழ் - கண்டி வீதி. தரை வழிப் போக்குவரத்து தடைப்பட்டது. கப்பல்கள் மூலமும் விமானங்கள் மூலமும் பயணிக்க வேண்டிய தேவை வந்தது.

**1996** ஜூன் மாதம் முதல் அவ்ரோ ரக பயணிகள் விமானத்தில் ஆயிரம் ரூபா கட்டணம் ஒரு வழிப் பயணத்திற்கு வாங்கி அரச படை யினர் பயணிகளை ஏற்றினார்கள். அக்காலத்தில் யாழ்குடாநாட்டில் இராணுவத்தினரிடம் பயண அனுமதி (Clearence) பெற்றே பயணத்தில் ஈடுபட வேண்டியிருந்தது. இராணுவத்தினரின் குடும்ப அட்டை, பிர தேச செயலரின் குடும்ப அட்டை, விசேட அடையாள அட்டை, பயணத் தின் தேவைகளை நிரூபிக்கும் ஆவணங்கள் ஆகியவற்றைச் சமர்ப்பித்தே பயண அனுமதியைப் பெற வேண்டி வந்தது.

ஒரு படிவத்தையும் ஆவணத்தையும் போட்டோ கொப்பி எடுக்கும் காசு சில நூறு ரூபாவாக இருந்தது. கிளியரன்ஸ் வந்து விட்டதா எனக் கால்கடுக்க நின்று பல நாள் திரிந்த அனுபவங்களும் வரும். ஓரிரு மாதங் கள் கிளியரன்ஸுக்காக அலைந்தவர்களும் இருந்தனர். கிளியரன்ஸ் பைல் தொலைந்து போய் பல மாதங்களின் பின்பு புதுப் பைல் போட்ட நிகழ் வுகளும் சிலவேளை நடந்தது.

திருமணம், மரணவீடு, சுகயீனம், பரீட்சை போன்றவற்றிற்கு செல்ல முடியாது போனமையும் நிகழ்ந்தன. பரீட்சைகளைக் கோட்டைவிட்டு பதவி உயர்வில் பின்தங்கியமை 1990 யூனுக்கும் பின்னரான காலப்பகுதியில் சாதாரணமாகவே நிகழ்ந்தது.

ஆரம்பத்தில் அவ்ரோ ரக விமானங்கள் பயணத்தில் ஈடுபட்டன. 1996 செப்டெம்பர் முதல் லயன் எயார் (Lion Air) எனும் தனியார் விமான சேவை நிறுவனம் பயணிகள் சேவையில் ஈடுபட்டது.

சில மாதங்களின் பின்பு மொனரா எயார் (MONARA AIR) எனும் தனியார் நிறுவனமும் இணைந்து கொண்டது. ஆரம்பத்தில் யாழ்.குடா நாட்டிலிருந்து கொழும்பு இரத்மலானை செல்லும் பயணிகளுக்கு ஒரு வழிப் பயணச்சீட்டு மட்டும் வழங்கப்பட்டது.

அவ்வாறு சென்றவர்கள் கொழும்பிலோ, நாட்டின் ஏனைய பிரதேசங்களிலோ தாம் தங்கியிருக்கும் பிரதேச பொலிஸ் நிலையங்களூடாக பயண அனுமதிக்கு விண்ணப்பித்தார்கள். அனுமதி கிடைத்ததும் பயணத்தை மேற்கொண்டார்கள். இதற்காக சில மாதங்களைச் செலவிட வேண்டியும் வந்தது காலத்தின் கொடுமை தான்.

சில மாதங்களின் பின்பு கொழும்பிலிருந்து வருவோர்கள் போல யாழ்.குடாநாட்டு மக்களுக்கும் இருவழிப் பயணச்சீட்டுக்கள் வழங்கப்பட்டன.

பயணிகள் செல்லும் விமானங்களாக இருந்த போதும் பொருட்களின் தட்டுப்பாட்டிற்கேற்ப வெற்றிலை, அப்பிள், உடுபிடவை போன்றவையும் வியாபாரிகளால் எடுத்துச் செல்லப்பட்டன.

பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து நாளாந்தம் விமான சேவை இரண்டு அல்லது மூன்று தடவைகள் இடம் பெற்றன. நல்லூர் திருவிழா போன்ற உற்சவ காலங்களில் விசேட சேவைகளும் இடம் பெற்றன. பயணிகள் நிரம்பி வழிந்த காலங்களில் புறோக்கர்கள் ஐநூறு, ஆயிரம், இரண்டாயிரம் எனத் தமக்கு வாங்கிக் கொண்டு ரிக்கெற் விற்றதும் நிகழ்ந்தது.

விமானப் பயணத்தை மேற்கொள்ள விரும்பும் ஒருவர் தனது பயண ஆயத்தங்களுடன் அதிகாலையே யாழ். புகையிரத நிலைய வளாகத்திற்குச் செல்வார்கள். 1984 ஏப்ரலில் அழிவடைந்த அந்நாளைய சிங்கள மகா வித்தியாலய வளாகத்திற்கும் செல்வதும் எனக் கால மாற்றத்திற்கேற்ப பயண இடம் அமைந்தது. அங்கு ஓரிரு மணி நேரம் காத்திருந்து பஸ்ஸில் பலாலி செல்வார்கள். அங்கும் ஒரு சில மணித்தியாலம் காத்திருந்து உடல்சோதனை, உடைமைச் சோதனைகளின் பின்பு விமானம் ஏற்றுவார்கள்.

யாழ் நகரிலும் பஸ் ஏற்றும் போதும் இதேபோன்ற சோதனைகள் நிகழ்ந்தன. ஒரு சில நூறு ரூபாவிற்கு கொழும்பு செல்ல வேண்டிய பயணத்திற்கு ஐயாயிரம், பத்தாயிரம் எனக் கொடுக்க வேண்டியிருந்தது. பக்கத்தில் இருக்கும் கிளிநொச்சிக்கும் அதுவும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தினுள் வரும் பிரதேசத்திற்கும் கொழும்புக்கு விமானத்தில் சென்றோ, கப்பலில் திருகோணமலை சென்றோ வர வேண்டிய கொடுமையான காலம் அது. 1999 செப்டெம்பர் 29 ஆம் நாளன்று 'லயன் எயார்" பயணிகள் விமானம் மன்னார் குடாக் கடலில் பூநகரி பள்ளிக் குடாவில் வைத்து சுட்டு விழுத்தப்பட்டு பயணிகள் யாவரும் இறந்தனர். அத்துடன் இத் தனியார் விமானங்களின் பறப்புக்கள் தற்காலிகமாக நின்றன.

இத்தனியார் விமானங்களின் விமானிகளாக முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் கீழிருந்த உக்ரெய்ன் நாட்டு விமானிகள் கடமையாற்றினார்கள். 1999 இறுதியில் இலங்கை விமானப் படை 'ஹெலி ரூர்ஸ்' எனும் விமானக் கம்பனியின் பெயரில் யாழ் - கொழும்பு பயணிகள் விமானச் சேவையில் ஈடுபட்டது.

2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இக்கம்பனியின் விமானமொன்று அனுராதபுரம் வில்பத்துக் காட்டுப்பகுதியில் பயணிகள் அல்லாமல் படையினர் சென்ற நிலையில் சுட்டு வீழ்த்தப்பட்டது. அதன் பாதிப்பாக பயணிகள் விமான சேவையும் ஓரிரு மாதங்கள் தடைப்பட்டது.

பின்பு மீளவும் ஆரம்பிக்கப்பட்டது. பொதுமக்களின் தேவையை பூரணமாகப் பூர்த்தி செய்ய முடியாவிட்டாலும் கூட அவ்வப்போது சில தினங்கள் போக்குவரத்து தடைப்பட்டாலும் கூட இச்சேவை

தொடர்ந்தது.


2002 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஏரோ லங்கா (AERO LANKA) எனும் தனியார் சேவை நிறுவனம் விமான சேவையை ஆரம்பித்தது. 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் 08 இல் தரைவழிப் பாதை திறக்கப்பட்ட போதும் சில மாதங்கள் ஏரோ லங்கா விமான நிறுவனம் தனது சேவையைத் தொடர்ந்தது. பயணிகள் போதுமான அளவு இல்லாத காரணத்தால் விமானசேவை இடை நிறுத்தப்பட்டது.

2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11 ஆம் நாளன்று இறுதி ஈழ யுத்தம் தொடங்கியதும் தரைவழிப்பாதை மீண்டும் தடைப்பட்டது. ஓரிரு மாதங்களின் பின்பு மீண்டும் கப்பல், விமானப் போக்குவரத்துகள் தான் யாழ் குடாநாட்டையும் வெளிமாவட்டங்களையும் இணைக்கும் போக்குவரத்துப் பாலங்கள் ஆயின. அப்போது எக்ஸ்போ எயார் (EXPO AIR), ஏரோ லங்கா (AERO LANKA) போன்ற நிறுவனங்கள் சேவையை வழங்க ஆரம்பித்தன.

அப்போது அதே கிளியரன்ஸ் நடை முறைகள் மீளவும் வந்தன. 'பழைய குருடி கதவைத் திறவடி' என்பது போல வாழ்க்கை வந்தது. 2009 மே மாத இறுதியுடன் ஈழப்போர் முடிவுக்கு வந்தது. 4 பேர் பயணிக்கக் கூடிய சிறியரக விமானமொன்று தலைக்கு 30,000 ரூபா வாங்கி பயணத்தை மேற்கொண்டது. 2009 டிசம்பருடன் யாழ் - கண்டி வீதி 24 மணி நேரப் போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டது.

ஓரிரு மாதங்களில் விமானப் போக்குவரத்தும் நின்று விட்டது. பகல், இரவாக தரைவழியாக ஆயிரக்கணக்கில் வாகனங்கள் பயணிக்கின்றன. போர் முகத்தில் வாழ்ந்த காலத்தில் கப்பல், விமானங்களுக்கு கொடுத்த பணங்கள் பல யாழ்ப்பாணங்களைக் கட்டப் போதுமானவை. நூறு ரூபா தூரத்திற்குப் பல்லாயிரம் கொடுத்தோம். காலம் மாறி விட்டது. ஆனாலும் காலத்தின் கோலங்கள் எம் வாழ்வியல் சின்னங்களாக இருக்க வேண்டு மல்லவா ?

நன்றி - தினக்குரல் வாரவெளியீடு - 20.05.2012



# போர்க்காலம் கற்றுத் தந்த சொற்கள்

இலங்கைத் தீவை ஆட்டிப் படைத்து வாழ்வின் அனைத்துக் தளங்களையும் அசைத்து விட்ட மூன்று தசாப்த காலப் போர் முடிந்து விட்டது. முற்றுப் பெற்று விட்டபோர் சில சொற்களையும் மரபு களையும் கற்றுத் தந்து விட்டே போயுள்ளது.

அவை தமிழ் சொற்களாகவும் உள்ளன. ஆங்கிலச் சொற்களா கவும் உள்ளன. சொற்களைப் பார்ப்போம். அரசியல் விஞ்ஞானம் கற்ற மாணவர்கள் மட்டுமறிந்த மிதவாதம், தீவிரவாதம், பயங்கரவாதம்,பாசி சம் போன்ற சொற்கள் யாவும் அன்றாடம் தெரியும் சொற்களாகி விட்டன

இவற்றின் தத்துவார்த்த கருத்துகளை விபரிக்கப் புகுந்தால் இப் பந்தியின் திசையும் மாறிவிடும். பத்தியின் சுவையும் கெட்டுவிடும். அரா ஜகம் என்ற சொல் தமிழர் விடுதலைப் போராட்ட இயக்கங்களிடையே உபயோகிக்கும் சொல்லாகிவிட்டது. இச்சொல்லின் கருத்து நீதிக்குப் புறம்பான செயலெனச் சுருக்கமாகக் கூறலாம்.

பொலிஸ் என்ற சொல்லை மட்டும் தெரிந்த பொது மக்கள் ஆமி (Army), நேவி (Navy), எயார்போர்ஸ் (Air Force - விமானப் படை), ஊர்காவல்படை, துணைப்படை, எல்லைப்படை, கூலிப்படை, உளவுப்படை என்ற சொற்களை மிகச் சாதரணமாகவே சொல்லத் தொடங்கினார்கள். விடுதலைப் போராட்ட அமைப்புகளைக் குறிக்கும் இயக்கம், பெடியள் என்ற சொல் வட மாகாணத்தில் புழக்கத்திற்கு வந்தது. கிழக்குமாகாணத்தில் பார்ட்டி (Party) என்ற சொல் பாவனைக்கு வந்தது. Round up எனும் சொல் சுற்றி வளைப்பைக் குறிக்கின்றது. இது சாதரணமாகவே எல்லோர் வாயிலும் வந்தது.

Sentry எனும் சொல் காவலுக்கு நின்று தகவல் அனுப்புதல் என்ற கருத்தைத் தருகின்றது. சென்றிக்கு நிற்கின்றார்கள் என்பது கருத்து தெரியாமலே பலராலும் உச்சரிக்கப்படும் சொல்லாகியது.

விமானக் குண்டு வீச்சு நிகழ்ந்த காலங்களில் அதிலிருந்து தப்புவதற்காக பதுங்கு குழி அமைப்பது வழக்கத்திற்கு வந்தது. அப்போது பதுங்கு குழி என்ற சொல்லும் அதைக் குறிக்கும் பங்கர் (Bunker) என்ற ஆங்கிலச் சொல்லும் சாதாரண சொற்களாகின.தாக்குதல் என்ற சொல்லைக் குறிக்க அற்றாக் (Attack) எனும் சொல்லும் மிகச் சாதாரண சொல்லாகியது.

1987 ஜூலை 30 ஆம் திகதி முதல் 1990 மாச் மாத இறுதிவரையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இந்தியப் படைகள் நிலை கொண்டிருந்தன. இந்தியப்படைகளை IPKF (Indian peace keeping forces) என அழைக்கும் வழக்கம் இருந்தது. IPKF என்பதற்கான ஆங்கில நகைச்சுவை வியாக்கியானங்களும் இருந்தன.

யுத்தம் தந்த புதிய வரவாக ஊரடங்கு சட்டம் என்னும் சொல்லும் இருந்தது. இதனை Cure few எனும் ஆங்கிலச் சொல் கொண்டு அழைப்பதும் பாமர மக்கள் முதல் படித்தோர் ஈறாக இருந்தது.

போர் நடைபெற்ற காலங்களில் இடையிடையே போர் நிறுத்தம் ஏற்பட்டது. இதன்னைக் குறிக்கும் Cease-fire எனும் சொல்லும் யாவர் வாயிலும் மிகச் சாதாரணமாகவே உச்சரிக்கப்பட்டது. இயக்கத்தின்ர பேஸ் (Base), இயக்கத்தின்ர காம்ப் (Camp), ஆமிக் காம்ப் (Army Camp) என்ற சொற்களும் சாதாரண வழக்கிலுள்ள ஆங்கிலச் சொற்களாயின.

நடப்பீர் கதைப்பீர் என்றால் என்னவென புரியாது. வோக்கி ரோக்கி (WALKY TALKY) எனும் சொல் மக்கள் தெரியும் புதுச் சொல் லாகி விட்டது. அதற்குரிய தூய தமிழ்தான் முற்சொன்ன நடப்பீர கதைப்பீர.

விடுதலைப் புலிகள் இயக்கம் யாழ்மாவட்டத்தின் நிலப்பரப்பின் பெரும் பகுதியைத் தமது ஆளுகைக்குள் வைத்திருந்த போது வெளி மாவட்ட போராளிகளின் முகாமைக் குறிக்க புதிய சொல்லொன்று பாவனையில் இருந்தது. மட்டக்களப்பு - அம்பாறை Embasy (எம்பஸி), றிங்கோ எம்பஸி (Trinco Embasy), மன்னார் எம்பஸி போன்ற சொற்கள் பயன்பட்டன.

Embasy என்றால் தூதரகம் என்ற கருத்தைத் தருகின்றது. இங்கு அந்தந்த மாவட்ட மக்களுக்கான போக்குவரத்துப் பாஸ் வழங்கும் நிலை யமாக இந்த முகாம்கள் தொழிற்பட்டதால் இவ்வாறு அழைக்கப் பட்டது. Pass (பாஸ்) பெறுதல் என்ற சொல்லும் சாதாரண சொல்லாகியது. பயண அனுமதியைப் பெறும் கிளியரன்ஸ் (Clearence) என்ற சொல்லும் சாதாரண மக்கள் பாவிக்கும் சொல்லாகியது.

விமானங்கள் தொடர்பான சொற்களும் புழக்கத்திற்கு வந்தன. குறிப்பாக குண்டுவீச்சு விமானங்களான சியாமார் செட்டி, புக்காரா, கிபிர் போன்றவை யாவரும் உச்சரிக்கும் சொற்களாயின. அவ்ரோ பிளேன், சீப்பிளேன் (Sea Plane) என்பவையும் யாவராலும் சாதாரணமாக உச்சரிக் கப்பட்டன. சீ பிளேனை வண்டு, கோள்மூட்டி என்ற சொற்கள் கொண்டு அழைத்தனர்.

ஷெல் அடித்தல், ஆட்டிலறி தாக்குதல், மிசின் கண் சூடு, கிர னைட் தாக்குதல், பிஸ்ரல் தாக்குதல், 50 கலிபர் தாக்குதல், கிளைமோர் தாக்குதல், மிதிவெடி, கண்ணிவெடி போன்றவை யாவரும் சாதரண மாகக் கூறும் சொற்களாயின. வேவு பார்த்தல் என்றசொல்லை றெக்கி எடுக்கினம் என்ற சொல் கொண்டு அழைப்பது சாதாரண ஒன்றாகியது.

எதிராளி ஒருவரைச் சுட்டுக் கொல்வதை மண்டையில் போடுதல் என அழைக்கப்பட்டது. பிஸ்ரல்குழு என்பதும்சாதாரண சொல்லாகியது.

தூயதமிழ்ச் சொற்கள் குறித்த விழிப்புணர்வு உருவாகிய காலம்

ஒன்று வந்தது. அப்போது நடுவப்பணியகம், வட்ட அவை, கோட்டச் செயலகம், பொறுப்பாளர், வெதுப்பி (பாண்), இனிப்பு வெதுப்பி (பணிஸ்), குதப்பி (கேக்), மாட்டு உருளை (Beaf Roll பீவ் றோல்), ஆட்டு உருளை (Mutton Roll), வண்ணச்சோலை (புடவைக்கடை), நகையகம், குளிரோடை, குளிர்க்களி, வைப்பகம் (வங்கி), தெரு, சாலை போன்ற சொற்கள் ஏராளம் நடைமுறைக்கு வந்தன. அவற்றில் பல இன்னும் உயிர் வாழ்கின்றன.

பொது நிகழ்வுகளில் "நிகழ்வொழுங்கு, அகவணக்கம், சுடரேற்றல்" போன்ற சொற்கள் அறிமுகமாகின. "சாவு அறிவித்தல், துயர் பகிர்வு, இரங்கல் உரை, ஈகைச்சுடரேற்றல்" போன்ற சொற்கள் அமங்கல நிகழ்வுகளில் எம்மிடையே புது வரவாக நிகழ்ந்தன.

பயண இடங்களில் சோதனைச் சாவடி எனும் சொல் அறிமுகமா கியது. இராணுவ நோக்கில் முன்னரங்க நிலை ல, காப்பரண் போன்ற சொற் கள் புதிதாக வந்தன.

இந்தியப் படைகள் இருந்த காலத்தில் அவர்கள் போங்கள் என்பதற்கு "சலோ" எனும் சொல்லை பயன்படுத்தினார்கள். அச்சொல் இன்று வரையிலும் ஓரளவிற்கு புழக்கத்தில் இருக்கிறது.

அதுபோல "மல்லி, மாத்தையா, கொய்த யன்ன, ஒக்கொம, நம மொகக்த" போன்ற சிங்களச் சொற்களும் சாதரண சொற்களாக வழக்கத்திற்கு வந்தன. படையினருடனான தொடர்பாடலால் சிங்கள மொழி கற்க வேண்டிய தேவையும் வந்தது. செஞ்சிலுவைச் சங்கம், ICRC நிறுவனங்கள் NGO, LNGO, INGO போன்ற சொற்களும் பொது மக்களுக்கு அறிமுகமாகின.

வடமாகாணத்தில் முன்பு ஊர்ப் பெயரைச் சொல்லித் தான் தாம் அங்கு போகின்றோம் என்பார்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள ஒருவர் தான் கரவெட்டிக்கு போகிறேன் என்பார். ஒரு சமயம் மீசாலை போகிறேன் என் பார். உடையார்கட்டுக்கு போகிறேன், வேலணை போகிறேன் என்பார்.

போர்க் காலத்தில் நிலப்பிரதேச ரீதியாக நிர்வாகம் வந்த பின்னர் இம் மரபிலும் மாற்றம் வந்தது.முன்பு கரவெட்டிக்கு போகிறேன் என்றவர்

- வேதநாயகம் தபேந்திரன் -

இப்போது வடமராட்சிக்கு போகிறேன் என்று பெரிய நிலப்பரப்பைக் குறித்துச் சொல்லுவது சாதாரண ஒரு முறையாகியது. அதுபோலவே தென்மராட்சி, வலிகாமம், தீவகம், வன்னி என அழைக்கும் புதுமர பொன்று விருத்தியாகி நிலைபெற்று விட்டது.

புலம்பெயர் பயணங்கள் வந்த போது "ஏஜன்ஸி, அந்த றூட்டால் போவது. றூட் அடிபட்டுப் போ யிற்று, உண்டியலில் காசு போட்டு விடுகிறன்" போன்ற சொற்களும் பலரது நாவில் தவழ்ந்தன.

இடம்பெயர்வு, அகதி, மீள்குடியேற்றம், நிவாரணம், குடும்ப அட்டை, பெயர் பதிதல், விடுவிக்கப்பட்ட பிரதேசம், உயர் பாதுகாப்பு வலயம் போன்ற சொற்களும் மிகச் சாதாரண சொற்களாகின. புலம்பெயர் நாட்டிலுள்ள நமது இளைஞர்கள் மணப் பெண்ணை இங்கிருந்து வரவழைப்பதைப் பார்சல் ஒன்று வருகுது என்ற சிலேடைச் சொல்லால் அழைத்தனர். அதேபோல மணமகன் வெளிநாட்டிலிருக்க மணமகளை இங்கு வைத்து அலங்கரித்து திருமணம் செய்வது போன்ற ஒரு விழாவை நடத்துதலை நட்டுப் பூட்டுதல் என்ற சொல் கொண்டழைத்தனர்.

1996 இல் யாழ் குடாநாட்டில் யாழ்ப்பாணம், வலிகாமப் பிரதேசங்களில் மக்கள் மீளக் குடியேறிய போது மண் அணைகள் போடப்பட்டு நிலப் பரப்புக்கள் இரண்டாக பிரிக்கப்பட்டுச் சிலகாலம் இருந்தது. அப்போது மண் அணைகளை (Bund) பண்ட் என மக்கள் அழைக்கும் மரபொன்று உருவாகியது.

பட்டியல் இட்டவற்றில் அகப்படாது தப்பிய சொற்கள் பலவும் எம்முள் புழக்கத்தில் இருக்கலாம். மிக நீண்ட போர்க்கால வாழ்க்கை எமது மொழியில் மட்டுமல்ல, பண்பாடுகள் பலவற்றிலும் புதுவரவுகளை ஏற்படுத்தி விட்டது.

இவையும் எமது வாழ்வியல் ஆவணங்களாகப் பதிவிற்குட்படுத்த வேண்டியவையே. இத்துறை தொடர்பாகவும் பொருத்தமான ஆய்வுகளையும் ஆவணங்கள் உருவாக்குதலையும் செய்ய வேண்டும் என்பது என் கோரிக்கையாகும்.

**நன்றி– தினக்குரல் வாரவெளியீடு – 27.05.2012**



# அருகிவரும் சிறுவர் விளையாட்டுக்கள்

**ஊ**ர்கூடித் தேரிழுக்கும் ஒற்றுமைப் பண்பாட்டின் அம்சங்கள் பல எமது வாழ்வியலில் இருந்தன. அவற்றில் சில முற்றாகவே மறைந்து விட்டன. பல அருகிச்செல்கின்றன. அருகிச் செல்லும் பண்பாட்டம்சங்களில் ஒன்றாக சிறுவர் விளையாட்டுகள் பலவற்றைக் கூறலாம்.

மகாகவி பாரதியாரும் "காலை எழுந்தவுடன் படிப்பு, பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு, மாலை முழுவதும் விளையாட்டு, இதை வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா" என்று பாடினார்.

இதையொத்த வாழ்வியல் முறைமையொன்று எமது நாட்டின் முழுப் பிரதேசங்களிலும் மூவின மக்களிடையேயும் இருந்தன. கிராமியச் சிறுவர் விளையாட்டுகள் எண்ணற்றவையாக ஒவ்வொரு பிரதேசத்திலும் தனித்துவப் பண்புகளுடன் இருந்தன.

தரை அமைப்பு, கிடைக்கத்தக்க பொருட்களின் தன்மை,

இனப் பாரம்பரியம், ஓய்வு நேரத்தின் தன்மை ஆகியவற்றிற் கேற்ப கிராமிய விளையாட்டுகளின் தோற்றம், தன்மை என்பவை மாறு பட்டிருந்தன. யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் இதனையொத் ததாக கிராமிய சிறுவர்கள் விளையாட்டுகள் பல முன்பிருந்தன. இன்று பல விளையாட்டுகள் இல்லையெனச் சொல்லுமளவுக்கு சென்று விட்டன. பல அருகி விட்டன.

இவற்றையும் ஆவணமாக்க வேண்டுமென ஆவல் கொண்டு கருத்துக் கூறிய அன்புள்ளங்களால் இப்பத்தி மலர்கின்றது. எமது பிரதேச சிறுவர்களின் கிராமிய விளையாட்டுகள் அருகிப் போய் விட்டதற்கான காரணம் முதலில் நோக்கப்படல் வேண்டும்.

ரியூசன் எனப்படும் தனியார் கல்வி நிறுவனங்களின் பேரெ மூச்சி இதற்கான முதற்காரணமெனலாம். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு அளவுக்கு மீறி கொடுக்கும் முக்கியத்துவம் சிறார்களின் ஓய்வு நேரத்தை விழுங்கி விட்டது.

ஓடு ஓடு ரியூசனுக்கு காலையும்ஓடு, மாலையும்ஓடு எனப் பெற்றோரின் வேண்டுதல் உள்ளது. இதனைவிட யுத்தமும், இடப் பெயர்வுகளும் ஓரளவுக்கு செல்வாக்குச் செலுத்தின.

சிறுவர்களுக்கு ஓய்வு நேரம் கிடைத்தாலும் கூட வீட்டினுள் முடங்கி குட்டி சுட்டி அலைவரிசை பார்த்தல், ரீ.வி.கேம் விளையாடு தல் என்பதில் தான் நாட்டம் செலுத்துகின்றனர். இலத்திரனியல் யுகத் தின் ஆட்சியினுள் எமது சிறுவர்களும் விழுங்கப்பட்டு விட்டனர்.

அன்றைய சிறுவர்களின் விளையாட்டு வகைகள்,முறைகளுக் குச் செல்வோம்.

“போர்த்தேங்காய்” அடித்தல் எனும் விளையாட்டு தைப் பொங்கல் தினத்தை அண்மித்ததாக விளையாடப்படும். நன்றாக காய்ந்த தேங்காய் ஒன்றை ஒரு புள்ளியில் வைத்து இன்னொரு தேங்கா யைக் கொண்டு அதன் மேல் எறிந்து உடைக்கும் விளையாட்டு இது. தேங்காய் உடையும் போது புள்ளி கிடைக்கும். போர்த் தேங்காய் விளையாட்டு இன்று அங்கொன்றும் இங்கொன்றுமாகவே நடை

பெறுகின்றது.

கிட்டியடித்தல் எனும் விளையாட்டும் இன்று அருகி விட்டது.நன்கு முற்றிய ஒன்றரையடி நீளமான தடியொன்றால் நான்கு அல்லது ஐந்து அங்குல சிறு தடியை சிறிய பள்ளம் போன்ற நில அமைப்பில் வைத்து ஊன்றி எறியப்படும். பின்னர் அச்சிறுதடி அதனை எறிந்தவர் நோக்கி எறியப்படும் போது அது அடிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும்.

"பேணிப்பந்து" என ஒரு வகை விளையாட்டு இருந்தது. பேணிகள் பலவற்றை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைத்து விட்டு பந்தால் அவற்றை நோக்கி எறிந்து விழுத்தப்படும். பேணிகள் திருப்பி அடுக்கப்படும் தன்மைக்கேற்ப பிரதேசத்துக்குப் பிரதேசம் மாறு பட்ட முறையில் விளையாடப்பட்டது.

"கெந்திப் பிடித்தல்" என்பது சுவாரஸ்யம் மிக்க ஓர் விளை யாட்டாகும். ஒற்றைக்காலில் ஒருவர் கெந்தியவாறு பெட்டிகளைப் பாய்ந்து பாய்ந்து சென்று புள்ளி பெறும் விளையாட்டாகும். இதுவும் பிரதேசத்துக்குப் பிரதேசம் மாறுபட்ட முறைகளில் புள்ளிகள் வழங்கப் பட்டது.

"ஒப்பு" என ஒரு வகை விளையாட்டு இருந்தது. இது இந்திய தமிழகத்தில் இன்றும் பிரபலமாக ஆடப்பட்டு வரும். கபடி விளை யாட்டை ஒத்தது எனலாம். இதனைச் சடுகுடு எனவும் அழைப் பார்கள். வட்டமாகவோ அல்லது சதுரமாகவோ ஓரிடம் கீறப்பட்டு அதனுள் எதிரணிவீரர்கள் அனைவரும் நிற்பார்கள். மற்றைய அணி வீரர்கள் ஒவ்வொரு வீரராக அவ்வீரர்களைத் தொட்டு வெளியே வரல் வேண்டும். அவர்கள் மடக்கிப் பிடிக்காதவாறு இவர் தப்பி வரல் வேண்டும். மடக்கிப் பிடித்தால் இவரை மீட்க அவரது அணியி னர் போராடுவார்கள். முரட்டுத் தனமான விளையாட்டு என்றாலும் விரும்பி ஆடப்பட்டது.

"போளையடித்தல்" என்ற விளையாட்டு இன்றும் ஓரள வுக்கு கிராம மட்டத்தில் நடைபெறுகின்றது. இரு கோடுகள் ஒரு சில

அடி தூரத்தில் கீறப்படும். ஒரு கோட்டிலிருந்து போளையை மற்றைய கோடு நோக்கி உருட்டி விடுவார்கள். பின்பு கோட்டிற்கு கிட்ட உள்ளவர் முதலில் தன்னிடமுள்ள போளையால் மற்றைய போளைகளில் ஒன்றை குறி வைத்து எறிவார். இலக்குத் தவறாது அடித்தவருக்கு அந்த போளைகள் முழுவதும் சொந்தமாகும்.

அடுத்த முறையும் அவ்வாறே எல்லாச் சிறுவர்களும் போளைகளை கோட்டை நோக்கி விடுவார்கள். கோட்டிற்கு கிட்ட உள்ளவர் முதலில் போளை களை நோக்கி மீண்டும் உருட்டுவார். சரியாக ஒரு போளையில் பட்ட தும் யார் அவ்விதம் உருட்டினாரோ அவரிடம் முழு போளைகளும் வழங்கப்படும். இதுவும் கிராமத்திற்குக் கிராமம் மாறுபட்ட முறை யில் விளையாடப்பட்டது.

“செஸ்” (Chess) எனப்படும் சதுரங்கத்தைப் போன்றதொரு விளையாட்டும் .எம்மவரிடமிருந்தது. நாயும் புலியும் எனச் சில பிரதேசங்களில் அழைக்கப்பட்டது.வேறுசில பிரதேசங்களில் ஆடுபுலி ஆட்டமென அழைக்கப்பட்டது. மூளைக்கு மிகவும் வேலை கொடுக்கும் நுட்பமான ஒரு விளையாட்டாக இது இருந்தது.

“றைற்றோ றைற்றோ” என ஒரு விளையாட்டிருந்தது. நான்கு நான்கு பெட்டிகள் அருகருகே வரையப்பட்டிருக்கும். ஒருவர் நெற்றியில் சிறிய சப்பட்டை சீற் துண்டு போன்ற ஒன்றை வைத்துக் கொண்டு அது விழுந்து போகாதவாறு நெற்றியை மேலாக உயர்த்திக் கொண்டு பெட்டிகளில் கால் வைத்துக் கொண்டு நடப்பார். கோட்டில் கால் வைக்கக் கூடாது. நெற்றியிலுள்ள சிறு சீற்துண்டு விழக் கூடாது. நடப்பதற்கு ஏற்ற முறையில் புள்ளி வழங்கப்படும்.

“குளம்,கரை” என்ற ஒரு வகை விளையாட்டு இருந்தது. ஒரு வட்டக் கோடுகீறப்படும் குளம் எனக் கூறினால் கரையில் இருத்தல் வேண்டும். கரை எனக் கூறினால் குளத்திலிருத்தல் வேண்டும். செய்கை மாறிச் செய்தல் வேண்டும். சரியாகச் செய்தல் பிழையென புள்ளிகள் கழிக்கப்படும்.

“தாயக்கட்டை” விளையாடுதல் பிரபல்யமான ஒரு சிறுவர்

விளையாட்டாக இருந்தது. தாயக்கட்டைகள் விளையாடுவதற்கு ஏற்ற வகையில் பெட்டிகள் கீறப்படும். இருவரோ அல்லது நால்வரோ இணைந்து தாயக்கட்டைகளின் மூலம் விளையாடுவார்கள். சிறுவர்கள் மட்டுமின்றி இளைஞர், நடுத்தரவயதினர், முதியவர்கள் என யாவரும் ஆர்வத்துடன் விளையாடும் விளையாட்டு இது. இன்றும் பரீட்சைகளின் நுண்ணறிவு வினாவாகத் தாயக்கட்டை உருட்டுதல் கேட்கப்படுகின்றது. தாயக்கட்டை விளையாடியவர்கள் அதிக புள்ளிகளை இலகுவாகப் பெற்று விடுவார்கள். நிஜத்தில் தாயக்கட்டை உருட்டிப் பழக்கமில்லாதோர் கற்பனையில் உருட்டி விடைகாண வேண்டியுள்ளது.

புளியங்கொட்டைகளின் உதவியுடன் வட்ட வடிவமன சிறு கிடங்குகளைக் கிண்டி விளையாடும் விளையாட்டு பாண்டி விளையாட்டும் இன்று காணாமல் போய்விட்டது. சமையலுக்குப் பயன்படும் புளியங்கொட்டைகளைப் பொறுக்கி வைத்து பாண்டி விளையாடுவார்கள்.

“பட்டம் ஏற்றுதல்” சிறுவர் விளையாட்டாக அன்றும் இன்றும் இருக்கின்றது.இதனை வயது வேறுபாடின்றிப் பொழுது போக்காக யாவரும் கடைப்பிடித்தார்கள். பட்டமேற்றுதல் ஏனைய பிரதேசங்களில் அருகி வந்தாலும் வடமரட்சி பிரதேசத்தில் இது இன்றும் செல்வாக்கு மிக்கதாகவே உயிர்த்துடிப்புடன் உள்ளது.

எட்டுமூலை, கொக்குப்பட்டம், நாலுமூலை, செம்பிராந்தன், பருந் தன், ஆறுமூலை, வெளவால், சாணன் எனப் பலப் பல வடிவங்களில் பட்டம் ஏற்றப்படும். பட்டத்தில் மின்குமிழ் வைத்து சிறிய பற்றரிகள் வைத்து இரவு நேரத்தில் ஒளிரவிட்டபடி பட்டம் ஏற்றும் போது தனி அழகாகத்தானிருக்கும்.

சிறுவர்கள் பட்டம் கட்டும் கலையைப் பெரியவர்களிடமிருந்து பழகினார்கள். பட்டம் ஏற்றுவதற்கான காலம் பிரதேசத்திற்குப் பிரதேசம் காலநிலை மாறுபாட்டைப் பொறுத்து இருந்தது. வகைவகையான வர்ணத் தாள்களை ஒட்டி பட்டம் கட்டி ஏற்றப்படுதல் ஓர் தனி அழகாகும்.

- வேதநாயகம் தபேந்திரன் -

"பல்லாங்குழி" விளையாடுதல் என்பது பாண்டி விளையாட்டை ஒத்த ஓர் விளையாட்டாகும். கிராமங்களில் சிறுவர்களின் விளையாட்டுகள் அவற்றுக்கு அழகு கோலங்களைக் கொடுத்தன.

இங்கு கூறப்பட்டவற்றை விட வேறுபல விளையாட்டுகளும் இருந்தன. கிராமத்திற்குக் கிராமம் அவற்றின் பெயர்களிலும் வடிவங்களிலும் மாறுபாடுகள் இருக்கின்றன.

கால மாற்றம் சிறுவர்களுக்கு விளையாடும் நேரத்தைப் பெருமளவில் வழங்காது விழுங்கிவிட்டது. இன்றைய சிறார்கள் இந்தவகை விளையாட்டுகள் பலவற்றை அறி யாது உள்ளனர். வாழ்வியல் ஆவணங்களில் இவையும் பதிவிற்கும், ஆய்விற்கும் உரியவையாகும்.

**நன்றி- தினக்குரல் வாரவெளியீடு – 03.06. 2012**



# கொம்படி ஊரியான் பாதையும் பயணங்களும்

கொம்படி ஊரியான் பாதையாலும் போன காலம் ஞாப கத்திரையில் மங்கலாகச் சிலருக்கிருக்கும். .அந்தப் பாதையும் அதன் துன்பங்களும் தெரியாத தலைமுறையொன்றும் வந்து விட்டது. வடபகுதி மக்கள் போர்க்கால வாழ்வியலில் பாதுகாப்பான தரை வழிப் போக்குவரத்து இன்றிப் பட்ட துன்பங்கள் ஆவணப்படுத்த வேண்டியவையே.

1991 அக்டோபர் மாதம் வலம்புரி இராணுவ நடவடிக்கை யின் மூலம் யாழ்ப்பாணத்தின் தீவகப் பிரதேசங்கள் முழுவதுமா கக் கைப்பற்றப்படட்டது. அப்போது பூநகரியில் 4 ஆம் கட்டை எனும் இடத் திலிருந்த இராணுவத்தினர் சங்குப்பிட்டித்துறை நோக்கி நகர்ந்து வந்து நிலை கொண்டனர்.

அதனால், கேரதீவு சங்குப்பிட்டித்துறை ஊடான பாதை (Ferry) மூலமான போக்குவரத்து தடைப்பட்டது.1990 ஜூன் 15இல் ஆரம்பித்த மூன்றாம் ஈழப்போர் காரணமாக ஏற்கனவே யாழ் கண்டி

வீதி (A9) ஆனையிறவு முகாமூடாகப் போக்கு வரத்து செய்ய முடியாத நிலைக்கு வந்து விட்டது.

இவ்விரு பாதைகளும் தடைப்பட்டபோது "தேவை தான் கண்டு பிடிப்புகளின் தாய்" (necessity is the mother of invention) எனும் ஆங்கிலேயரின் பழமொழியை மெய்ப்பிப்பது போல கொம்படி ஊரியான் பாதை கண்டறியப்பட்டது. கொம்படி ஊரியான் பாதை ஊடாக யாழ். குடாநாட்டிற்கும் வன்னிப் பெருநிலப்பரப்பிற்கும் இடையே போக்குவரத்து நடைபெற்றது.

யாழ்.குடாநாட்டு மக்கள் வன்னிப் பிரதேசம் சென்று பின்பு வவுனியா ஊடாக தமக்குத் தேவையான பிரதேசங்களைச் சென்றடை வார்கள். வன்னிப் பெருநிலப்பரப்பு மக்கள் வவுனியா பிரதேசத்திற்குச் செல்லப்பட்ட துன்பங்களும் பதிவிற்குரியதே.

*1990* ஜூனில் யுத்தம் தொடங்கிய போது வவுனியா நகரிலிருந்து தெற்கு நோக்கியதாக யாழ் - கண்டி வீதியில் குறுகிய தூரமே அரச படைகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. வடக்கின் பெரும்பாலான நிலப்பகுதிகள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்தன. இதனால், வன்னிப் பிரதேசத்தின் ஊடாக செல்லும் பொதுமக்களுக்கு சிலகாலம் கண்டி வீதியூடாகப் போக முடியாத சூழ்நிலை இருந்தது

அப்போது ஓமந்தைக்குத் தெற்காக கண்டி வீதியின் கிழக்காக வயல்ப்பாதையூடாக சாந்தசோலை எனும் இடத்தை அடைந்தார்கள். பின்பு அங்கிருந்து பூந்தோட்டம் எனுமிடத்தை அடைந்து வவுனியா நகரம் போனார்கள். யுத்த சன்னதம் உச்சம் பெற்ற காலத்தில் அப்பயணம் மரணத்தின் விளிம்பில் தான் நடந்தது.

மழை காலங்களில் வயல் சேற்றில் விழுந்தெழும்பி காடு மேடுகளூடாகச் செய்த பயணங்கள் பெரும் துன்பியல் நாடகம் தான்.சில மாதங்களின் பின்பாக கண்டி வீதியில் நொச்சிமோட்டைப் பாலத்தின் ஊடாகப் போக்குவரத்துச் செய்யக் கூடிய நிலை வந்தது. அப்போது விடுதலைப் புலிகளிடம் பாஸ் (Pass) எனும் பயண அனுமதி பெற்று பயணம் செய்ய வேண்டியிருந்தது.

அதுபோல் வவுனியா சென்ற பின் இராணுவத்தினரிடம் பாஸ் பெற்றே பயணம் செய்ய வேண்டியிருந்தது. இருபகுதி மோதல் களமாக இப்பாதை அடிக்கடி இருந்தது.பொதுமக்களில் சிலரின் உயிரிழப்புக் களும் நடைபெற்ற போதும் பயணம் தொடர்ந்தது.

1997 மே மாதம் 13 ஆம் திகதி இராணுவத்தினரால் ஜெயசி க்குறு (வெற்றி நிச்சயம் ) இராணுவ நடவடிக்கை கண்டி வீதியூடா கப் பெருமெடுப்பில் தொடங்கப்பட்டது.

அப்போது யாழ் குடாநாடு முழுமையாக இராணுவக் கட்டுப்பாட்டினுள் வர அவர்கள் கப்பல், விமானப் பயணங்களுக்கு மாறினார்கள்.ஜெயசிக்குறு நடவடிக்கை காரணமாகக் கண்டி வீதிப் போக்குவரத்து தடைப்பட்டது. இதனால் வன்னிப் பிரதேச மக்கள் மாந்தை மேற்குப் பிரதேசம் சென்று பூநகரி மன்னார் வீதியில் கறுக் காய் குளம் போய் உயிலங்குளம் சென்றார்கள்.

அங்கு வைத்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் சென்று மன்னார் நகரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.அங்கு கூட்டு றவுக் கட்டிடத்தின் முன்பாக வரிசையில் நின்று ஒரு நாள் பாஸ் பெற்று வவுனியா சென்று அங்கிருந்து தமக்கு தேவைப்பட்ட இடங்களுக்குப் பயணம் செய் தார்கள்.

வவுனியாவிலும் பாஸ் வழங்கப்படுவது தொடர்பாகக் காலத் திற்குக் காலம் வயது வகுப்பிற்கு ஏற்ப மாறுபட்ட நடைமுறை-கள் கடைப்பிடிக்கப்பட்டன. அவை தனியாக ஆராயப்பட வேண் டியவை. சிலகாலம் சென்ற பின்பு உயிலங்குளம் ஊடாக வவுனியா விற்கு நேரடியாகச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்

மன்னார் பிரசேத்தின் மடுவிற்கு வந்து பிரமணாலங்குளம் ஊடாக வவுனியாவிற்கு பயணம் செய்யும் காலமும் இருந்தது. வவு னியா பறையனாலங்குளம். வந்து பின்பு வவுனியா சென்ற பாதையும் சிலகாலம் புழக்கத்திலிருந்தது.

இராணுவ நடவடிக்கைகளுக்கேற்ப இப்பாதைகளும் அடிக் கடி தடம் மாறியது.இடம் மாறியது. 1999 இறுதியுடன் ஜெயசிக்குறு

இராணுவ நடவடிக்கை பின்வாங்கலுடன் முடிவுக்கு வர வன்னிப் பிரதேச மக்கள் கண்டி வீதியூடாகப் பயணிக் கும் நிலமை 2002 பெப்ரவரி மாதத்துடன் வந்தது.

எமது கொம்படி ஊரியான் பாதை நோக்கி பயணிப்போம். யாழ்.குடாநாட்டின் பெரும் நிலப்பரப்புகளில் ஒன்றாகிய பச்சிலைப் பள்ளி பிரதேசத்தின் இயக்கச்சி பிரதேசத்திலிருந்து இப்பாதையின் பயணம் ஆரம்பிக்கின்றது.

இயக்கச்சி, கோவில்வயல், நித்தியவெட்டை, புல்லாவெளி ஊடாக கொம்படி, ஊரியான், மிசன்சந்தி, ஆவாரம் சாத்தி, பண்டிசுட்டான், வெலிகண்டல் சந்தி என இப் பயணப் பாதை அமைந்தது.வெலி கண்டல் சந்தி, பரந்தன், முல்லைத்தீவு வீதியில் கண்டாவளை பிரதேசச் செயலர் பிரிவிலுள்ளது. சுருக்கமாகச் சொல்லப் போனால் ஆனையிறவு முகாமின் பின்புறம் கிழக்காகச் சுற்றிச் சுழன்று பொதுமக்கள் பயணம் செய்தனர்.

இன்றும் கண்டாவளை, தர்மபுரம் மக்கள் கோடை காலத்தில் மல்வில் கிருஷ்ணன் கோவிலுக்கு இப்பாதை ஊடாகவே பயணித்து வழிபாட்டிற்கு வருகின்றனர் புல்லாவெளிப் பிரதேசத்தில் புகழ்பெற்ற மாதா கோயில் ஒன்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்வோர் இயக்கச்சியின் ஊடாக கொம்படி சென்று ஊரியான் சென்றடைந்து பயணிப்பதால் கொம்படி ஊரியான் பாதை எனத் தான் இது பெரும்பாலும் அழைக்கப்பட்டது.

1991 ஜூலை மாதம் விடுதலைப் புலிகள்ஆகாய கடல் வெளி இராணுவ நடவடிக்கை எனப் பெயர் சூட்டி ஆனையிறவு முகாமை மூர்க்கமாகத் தாக்கினார்கள். அப்போது வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டில் தரை இறங்கிய இராணுவத்தினர் பெரும் மோதலின் பின்பாக ஆனையிறவைச் சென்றடைந்தனர்.

சில காலத்தின் பின்பாக அவர்கள் வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டிலும் ஆனையிறவிலும் மட்டும் முகாமிட்டிருந்தனர்.

அதனால் ஆனையிறவு முகாமுக்கு பின்புறம் கிழக்குப் புறமாக இருந்த புல்லாவெளி, கொம்படி, ஊரியான் பிரதேச சதுப்பு நிலங்கள் வெற்றிடமாக இருந்தன. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த மக்கள் இதனுடாகவே பயணம் செய்தனர். இருபுறமும் இராணுவ முகாம்கள். இடையால் பயணம். பாதுகாப்பு அச்சம் காரணமாக இரவில் மட்டுமே இப்பயணம் பெரும்பாலும் நிகழ்ந்தது.

மழை காலங்களில் கொம்படி துறையிலிருந்து ஊரியான் வரையிலான பிரதேசம் கடல் நீரால் நிரம்பி கடல்போல இருக்கும். அக்காலத்தில் வள்ளத்தில் தான் பயணம் நிகழும்.இடைமழை பெய் தால் சேறும் சகதியுமான இப்பிரதேசத்தில் விழுந்தெழும்பி சேற்றுக் குளியலுடன் தான் பயணம் நிகழும். மழை இல்லாக் காலங்களில் இரவில் சைக்கிள், ட்ராக்ரர், மோட்டார் சைக்கிளில் தான் பயணம் நிக ழும்.பாதுகாப்பு அச்சம் காரணமாக வாகனங்கள் இரவில் வெளிச்சம் போடுவதில்லை.

ட்ராக்ரரில் உடல் குலுங்க துள்ளி விழுந்தெழும்பிச் செய்த பயணங்களில் பட்ட உடல்வலி பெருந்துன்ப கரமானது. பொதுமக் கள் முன்னிலவு, பின்னிலவு பார்த்தே பிரயாணத்தைச் செய்தார்கள். வெளிச்சம் எதுவும் போட முடியாத இப்பாதையில் நிலவு பார்த்துப் பயணம் செய்தார்கள்.

வெளி கொண்ட இப்பரதேசத்தில் நிலவின் வெளிச்சத்தை ஆதாரமாகக் கொண்டு பயணம் நிகழ்ந்தது.முழுநிலவுக் காலத்தில் சைக்கிளில் பயணம் செய்வது கூடியளவுக்கு மக்களால் விரும்பப் பட்டது.கரடுமுரடான பாதைகளில் விழுந்தெழும்பிச் செல்லும் பய ணம் கொடுமையானது.

சைக்கிளில் செல்வோர் காற்றடிக்கும் பம், பழுது பார்க்கும் உப கரணங்கள், சைக்கிள் ரயர் ரியூப்பில் ஓட்டை விழுந்தால் அதனைச் சீர் செய்ய தேவையான ஆயத்தங்களுடன் தான் பயணம் செய்ய வேண்டியிருந்தது.

வவுனியாவிலிருந்து யாழ்குடாநாட்டிற்கு எடுத்துச் செல்லும் பொருட்கள் யாவும் இப்பாதை ஊடாகவே எடுத்துச்செல்லப்பட்டது.

மழை காலங்களில் சைக்கிளில் பொருட்களை எடுத்து வந்தோர்.சேற்றில் விழுந்தெழும்பிப் பட்ட சீரழிவுகள் ஏராளம்,ஏராளம். இரவில் சேற்றுக் கிடங்கினுள் விழுந்து பொருள் மூடை ஆளின் மேல் விழுந்து மூச்சுத் திணறி இறந்த சம்பவங்களும் ஓரிரண்டு நடந்தது.

போர்க் காலத்தில் தொழில் இழந்து சைக்கிளில் வியாபாரம் செய்தோர் இப்பாதையில் பெருந் துன்பப்பட்டனர் சோளகக் காற்று வீசும் காலங்களில் இப்பாதையால் சைக்கிளில் செல்வோர் மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

இரவு நேரப் பயணத்தில் ஊரி மண் மழை மாதிரி வீசும் காற்று சைக்ககிளை இழுத்துத் தள்ளும்.கண்களை மண் நிறைக் கும்.ஊரி மண் ஊசி போலக் குத்தும்.பெரும் உடல் வருத்தத்துடன் இரவிரவாக நித்திரை விழித்து பயணம் இருபக்கமும் தொடரும்.

இப்போதையைப் போல அப்போது வீட்டுக்கு வீடு மோட்டார் சைக்கிள்கள் இல்லை.சைக்கிள் தான் மிகப் பெரும்பாலாரினது தேசிய வாகனம். அதற்கு ஏதும் பழுது வந்தால் கூடத் திருத்துவதற்கு உதிரிப் பாகங்கள் வாங்குவதானால் யானைவிலை, குதிரைவிலை. கொம்படி ஊரியான் பாதையால் மழை, வெய்யில், பனி காற்று என இயற்கையின் அனைத்து உபாதைகளையும் தாங்கி இரவிரவாகப் பயணம் செய்ததின் துன்பம் பட்டவர்களுக்குத் தான் தெரியும்

*1991* நவெம்பரில் ஆரம்பித்த பயணம் *1993* மே மாதம் முடிவுக்கு வந்தது. வெற்றிலைக் கேணி கட்டைக் காட்டில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் பலவேகய எனும் பெயரிலான இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு மீளவும் ஆனையிறவு நோக்கி நகர்ந்து இராணுவ தொடர் வேலிகளை அமைத்தார்கள்.

அதனால் புல்லாவெளி, கொம்படி பிரதேசங்கள் யாவும் இராணுவப் பிரசன்ன மாகியது. விடுதலைப் புலிகளின் நிலப்பரப்பு ஆளுகைக்குள் இருந்த மக்களால் இப்பாதை போக்குவரத்திற்கு பயன்படுத்தப்பட முடியாது.போய்விட்டது.

விதி ஒரு பாதையை மூடி விட்டால் நம்பிக்கை மறு பாதை

- வேதநாயகம் தபேந்திரன் -


யைத் திறந்து விடுமெனக் கூறுவார்கள். அது போலத் தான் அப்போது பச்சிலைப்பள்ளியின் கிளாலித் துறை ஊடான கடல் நீரேரிப் போக்குவரத்து தொடங்கியது. இப்பயணப் பாதையை ஏற்கனவே இத் தொடரில் பார்த்து முடித்து விட்டோம்.

முப்பது வருடப் போர்க்காலம் முடிந்து விட்டது.வடமாகண மக்கள் இக்காலப்பகுதியில் ஒழுங்கான, பாதுகாப்பு அச்சம் இன்றிய போக்குவரத்து இல்லாமல் பட்ட கொடுந்துன்பங்கள் ஏராளம்.

இன்று இரவு, பகலாக நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் வாகனங்கள் ஓடுகின்றது.பாலங்கள் கட்டப்படுகின்றது. காப்பெற் வீதிகள் போடப்படுகின்றது. நவீனங்கள் நிறைய வாழ்வியலில் நுழைந்து விட்டது. போர்க்காலத்தில் பட்ட துன்பங்கள் கால வெள்ளத்தில் எமது ஞாபகத் திரையிலிருந்து மறந்தும் மறைந்தும் போகலாம்.

எமது வாழ்வியலின் வேர்களைத் தேடி எதிர்காலச் சந்ததி ஒன்று புறப்படும் போது அவர்களுக்கு எழுத்தாலாகிய ஆவணம் ஒன்று தேவையல்லவா. கொம்படி - ஊரியான் பாதை வழியாகச் சென்ற போது கண்ட அனுபவங்களை எமது வாழ்வியலின் கோலங்களாக இங்கு வடிவமைத்துள்ளேன்

**நன்றி – தினக்குரல் வாரவெளியீடு – 10.06.2012**



# போர்க்கால வாழ்வாதாரத் தொழில்கள்

போரக்காலமொன்று முடிவடைந்து விட்டது. போரின் போது இயல்பு நிலை பாதிக்கப்படும் போது வாழ்வாதாரத் தொழில்களும் பாதிக்கப்பட்டு விடும். வடமாகாணத்தைப் பார்ப்போமாயின் இங்கு தரை வழிப் பாதை தடைப்படும் நிலையால் வாழ்வாதாரத் தொழில்கள் பாதிக்கப்படுதல் முதற் காரணியாக உள்ளது. விடுதலைப்புலிகளின் ஆளுகைக்கு உட்பட்ட நிலப்பரப்புக்களுக்கு மின்சாரம் வழங்கப்படாமை, தொலைத் தொடர்பு வசதிகள் வழங்கப்படாமை, எரிபொருளுக்கு தடையும், மட்டுப்பாடு விதித்தலும் பொதுப் போக்குவரத்து வசதிகள் மறுக்கப்படுதல் போன்ற காரணங்களாலும் வாழ்வாதரத் தொழில்கள் பாதிக்கப்படுகின்றது.

அதேவேளை பொருட்கள் அதிகவிலையிலும் மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல், ஓயில், சவர்க்காரம் போன்ற பொருள்கள் பல மடங்கு விலையிலும் விற்கப் படுவது மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பாதித்தது. இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட 1987 ஜூலை 29 வரையான காலப் பகுதியை முதலாம்

ஈழப்போர் என்கிறார்கள். 1987 ஒக்டோபர் 10 ஆம் திகதியன்று முதல் 1990 ஆம் ஆண்டு முற்பகுதி வரை இந்தியப் படையினருடன் இடம் பெற்ற மோதல் காலப் பகுதியை இரண்டாம் ஈழப்போர் என்கின்றார்கள்.

1990 ஜூன் 10 ஆம் திகதி முதல்1994 ஓகஸ்ட் மாதம் வரையான காலப் பகுதியை 3ஆம் ஈழப்போர் என்கின்றனர்.1995 ஏப்ரல் 19ஆம் திகதி முதல் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 வரையான காலப் பகுதிப் போரை நான்காம் ஈழப்போர் என்கின்றார்கள். 2006 ஓகஸ்ட் 11 முதல் 2009 மே 18ஆம் திகதி வரையிலான காலப் பகுதியை ஐந்தாவதும் இறுதியுமான ஈழப்போர் என்கின்றார்கள்.

இக் காலப் பகுதியில் வட பகுதிமக்கள் தமது வாழ்வாதாரத்தை நடத்தச் செய்த விஷேடமான தொழில்களும் இப்பத்தியில் உள்ளடக்கப்படுகின்றன. முதலாம் ஈழப்போர் நடைபெற்ற காலப் பகுதியில் பங்கர் (Bunker) எனப்படும் பதுங்கு குழி வெட்டும் தொழில் புதிய தொருதொழிலாக உருவாகியது. வீட்டுக்கு வீடு வாசல் படி என்பது போல வீட்டுக்கு வீடு, பொது இடங்களில் பதுங்கு குழியிருந்தது. விமானக் குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பு பெறுவது இதன் நோக்கமாகும்.

பதுங்கு குழி வெட்ட உடல் வலு இல்லாதோர் சம்பளத்திற்கு ஆள் பிடித்து வெட்டிய போது, தென்னை, பனை, போன்ற மரங்களைத் தறித்து குற்றிகள் தயாரித்த போது புதிய தொரு தொழிலாக உருவாகியது. கிராமங்களில் கூட்டுறவு அடிப்படையில் இத் தொழில் செய்யப்பட்டதும் நிகழ்ந்தது. எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்ட போது சைக்கிளில் சென்று மண்ணெண்ணை கட்டி வந்து கடைகளுக்கு கொடுக்கும் வியாபாரமொன்று உருவாகியது. மண்ணெண்ணெய் வீதியில் வைத்து விற்பதும் சாதாரண தொழிலாகியது.

மின்சார மற்றநிலையில் இருட்டில் விளக்கு வைத்தல், விவசாய நடவடிக்கைக்கு, நீரிறைக்கும் இயந்திரம் இயக்குவதற்கு என மண்ணெண்ணெயின் தேவை மிகப் பிரதானமாக இருந்தது. 1990 இல் 10

ரூபா மண்ணெண்ணெய் 50 ரூபா முதல் 300 ரூபா வரை விற்ற நிலையிருந்தது. இந்தநிலை அடுத்த வருடங்களிலும் 2009 மே இறுதி யுத்தம் வரையிலும் தொடர்ந்தது. விலை காலத்திற்கேற்ப பல மடங்கு அதிகரித்த விலைகளில் இருந்தது.

1990 முதல் 1996 மே வரையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தோட்டங்களில் துலா மிதித்து கிணற்று நீரை இறைக்கும் பாரம் பரியத் தொழிலும் சில இடங்களில் நடந்தது. கட்டிடத் தொழில்கள், மின் சாரத்தைப் பயன்படுத்தும் தொழில்கள் செயலிழந்த போது கூலித் தொழிலாளர்கள் சிலர் கள்ளு சீவும் தொழிலைச் செய்ததும் நிகழ்ந்தது.

1991 முதல் 1997 மே மாதம் வரையில் ஓமந்தை,நொச்சி மோட்டை யுத்த சூனியப் பிரதேசத்தில் 2 மைல் தூரத்திற்கு சைக்கிளில் பயணிகளை ஏற்றி இறக்கும் தொழில் ஒன்றும் நிகழ்ந்தது. உயிராபத்தான இத் தொழிலைச் செய்யும் போது உயிரிழந்தோரும் உள்ளனர். 1990 ஜூன் முதல் 1991 ஒக்டோபர் வரை கேரதீவு, சங்குப் பிட்டி பாதையும் 1991 நவம்பர் முதல் 1993 மே மாதம் வரையில் கொம்படி - ஊரியான் பாதையும் யாழ்குடாநாட்டு மக்களுக்குப் போக்கு வரத்துப் பாதைகளாக இருந்தன.

அப்போது சைக்கிளில் வன்னிப் பிரதேசம் வவுனியா சென்று மண்ணெண்ணெய், சவர்க்கார வகைகள், உருழைக்கிழங்கு, சம்போ வகைகள், பற்றரிகள் எனப் பல பொருள்களை வாங்கி வரும் வியாபாரமொன்று நிகழ்ந்த்து. இக்காலத்தில் வவுனியா நகரத்திற்குச் சென்று சைக்கிள் ஒன்றைப் புதிதாக வாங்கி டைனமோ பூட்டி வாங்கி வந்த அச் சைக்கிளில் தட்டு பாடான பொருள்களை கட்டி வந்து, சைக்கிளையும் பொருள்களையும் விற்றது நிகழ்ந்தது.

சைக்கிள் டைனமோவில் ரேடியோ, தொலைக்காட்சி இயக்குதல் என்பன நிகழ்ந்ததால் அவற்றுக்கு மதிப்பு மிக அதிகமாக இருந்தது. பற்றரியில் இயங்கும் சிறிய ரகவானொலிப் பெட்டிகள் வவுனியாவில் வாங்கி வந்து விற்கப்பட்டது.

உருளைக்கிழங்கு போன்ற தோற்றமுள்ள ராணி சோப்பை மண்

பிரட்டி உருளைக் கிழங்குகளுடன் கலந்து வந்து விற்றனர். வன்னிப் பிரதேசத்து ஆண்களும், பெண்களும் நாள் தோறும் வவுனியா சென்று மரக்கறிகளையும் ஏனைய அத்தியாவசியப் பொருள் களையும் கைப் பாரம் தாங்கக்கூடிய பைகளில் எடுத்து வந்து விற்ற னர்.

இக்காலத்தில் சாக்குத் துணியால் செய்யப்பட்ட பாக் (Bag) ஒன்று சந்திரிக்கா பாக் என்ற பெயரில் பிரபலம் பெற்றிருந்தது குறிப் பிடத்தக்கது. இராணுவக் கட்டுப் பாட்டிலிருந்து விடுதலைப் புலி களின் கட்டுப் பாட்டுப் பிரதேசங்களுக்கு இவர்கள் எடுத்து வரும் பொருள்களை வாங்கி விற்கவென வியாபாரிகள், தரகர்கள் உருவாகி இருந்தனர். தடை செய்யப்பட்ட பொருட்களான பற்ற ரியை பல்வேறு உத்திகளைக் கையாண்டு கடத்தி வரும் வியாபாரி களும் இருந்தனர். அகப்பட்டு அடிவாங்கியும் மாதக் கணக்கில், சில பேர் வருடக் கணக்கில் சிறையில் வாடியதும் நிகழ்ந்தது.

வவுனியா நகரத்தில் மரக்கறிகளை மட்டும் எடுத்து வந்து நாளாந்தம் விற்கும் வியாபாரிகள் குழுவொன்று இருந்தது. இராணு வக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் தட்டுப் பாடான மரக்க றிகளே அவ்விதம் எடுத்து வரப்பட்டது. வறுமையில் வாடும் குடும்பங்களின் பெண்களே இத் தொழிலில் அதிகம் ஈடுபட்டனர். இவர்களுக்கு விடுதலைப் புலி களால் பாஸ் எனப்படும் பயண அனு மதி வாராந்த அல்லது மாதாந்த அடிப்படையில் வழங்கப்பட்டது.

*1990* ஜூனில் ஆரம்பித்த போருடன் வடபகுதியில் அரச பஸ், புகையிரத சேவைகள் யாவுமே நின்று விட்டது. அப்போது ரக்சி, மொறிஸ்மைனர், ஏபோட்டி போன்ற கார்வகைகளே அதிகம் போக்கு வரத்திற்காகப் பயன்பட்டன. மினிபஸ்களும் வான்களும் மட்டுப் படுத்தப்பட்ட அளவில் தான் இருந்தன.

லான்ட்மாஸ்டரின் இயந்திரத்தை மின்பிறப்பாக்கியாகப் பயன்படுத்தும் புதிய வகைத் தொழில் ஒன்றும் உருவாகியது. சைக் கிள் டைனமோவை சைக்கிள் றிம்முடன் பிணைத்து வானொலி கேட்டல், தொலைக் காட்சி பார்த்தல் போன்றவற்றைச் செய்து கொடுக்கும் தொழில் திறமையுள்ளோர் குழாம் ஒன்றும் உருவாகியது.

ஜப்பானியத் தயாரிப்பான MD 90 மோட்டார் சைக்கிள் கேர தீவு - சங்குப்பிட்டிப் பயண வழியிலும் கொம்படி - ஊரியான் பயண வழியிலும், கிளாலி - யாழ்ப்பாணம், பூநகரி, ஆலங்கேணி ஊடான வன்னிப் பிரதேச போக்கு வரத்திற்கும் உறுதிப் பாடான வாகனமா கியது. இம்மோட்டார் சைக்கிளை வைத்திருந்தோர் பலர் பயணி களை ஏற்றியிறக்கும் தொழில்களைச் செய்தனர். மோட்டார் சைக் கிளின் பின்புறம் இருவரை இருத்தி அவர்களின் பெரும் பாரம் கொண்ட பயணப் பொதிகளையும் கொண்டு பெரும்பாலும் இரவி ரவாகப் பயணம் செய்து உழைத்துக் கொள்ளும் காட்சி இப் போதும் மனக் கண்ணில் நிழலாடுகின்றது. மின்சாரமற்ற காலங்களில் பெற் றோமக்ஸ் விளக்கை வாடகைக்கு விடும் வியாபாரமொன்றும் சில இடங்களில் இருந்தது.

யாழ்குடாநாட்டிற்கு கொழும்பிலிருந்து கப்பல் மூலமாகவே அத்தியவசியப் பொருள்கள் அரசாங்க அதிபருக்கு 'அனுப்பி வைக் கப்பட்டது. அப்போது பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து பாஜ் எனப்பட்ட இழுவைப் படகு மூலமாக பொருள்களை இறக்கி வரும் தொழிலாளர் குழாம் ஒன்று உருவாகியது. கப்பலில் இருந்து இறக்கிய பொருள்களை பார ஊர்தி எனப்பட்ட லொறி மூலம் கொண்டு சென்று ஒப்படைக்கும் தொழிலொன்றும் உருவாகியது.

கிளாலி படகுத் துறை செயற்பட்ட காலத்தில் கிளாலி பிரதே சத்திலும் ஆலங்கேணி நல்லூர் பிரதேசத்திலும் பொருள்களை படகில் ஏற்று தல், இறக்கு தலுக்கென தொழிலொன்று உருவாகியது. இதற்கெ னத் தொழிலாளர் கூட்டமொன்றும் உருவாகியது. வடபகுதியில் மிக மோசமாகக் காணப்பட்ட தொழிலின்மை காரணமாக இரவிரவாக நித்திரை விழிக்கும், பாதுகாப்பு உத்தரவாதம் குறைந்த இத் தொழிலில் பல நூறு பேர் ஈடுபட்டனர். கிளாலியில் பொருள்களை ஏற்றியிறக்கத் தனியாக இருந்த இடத்தைச் “சாமான்றூட்” என அழைத்தார்கள்.

பாஜ் எனப்பட்ட இழுவைப் படகுகள் இல்லாத அக்காலத் தில் மண்ணெண்ணெய் வரும் வெற்றுப்பரல்களை இணைத்துக்கட்டி அதனை ஓர் மிதவைப் படகாக்கினார்கள்.அதன்மேல் கார், லொறி, ட்ராக்டர் போன்ற வாகனங்களை ஒவ்வொன்றாக இக்கரைக்கு, அக்க

ரைக்குமாக இடம் மாற்றி உழைக்கும் தொழிலாளர் வர்க்கமொன்று உருவாகியது.

ஆயுதமோதல் நடுவே சிக்குண்டு கடலில் கவிழ்ந்து உவர் நீரில் சங்கமமாகிய வாகன உரிமையாளர்களின் நிலை பரிதாப கரமானது. மின்சாரம் அற்ற காஸ் (Gas) அற்ற மண்ணெண்ணெய் யானை விலை குதிரை விலையெனக் கிடைக்கும் அக்காலத்தில் விறகு தான் சமை யல் தேவையை முழுவதுமாக நிறைவு செய்தது. விறகு காலைக-ளில் மட்டும் விறகு விற்ற நிலை மாறியது. சைக்கிளில் கோடரியுடன் மரங்களைத் தேடிச் சென்று வெட்டி சைக்கிளின் பின் கரியரில் தாங்க முடியாத சுமையுடன் விறகைக் காவி வீடு வீடாக விற்கும் தொழிலா ளர் குழாமொன்றும் உருவாகியது.

மழை, வெய்யில், கடுங்காற்றுடன், போராடி சைக்கிள் உதிரிப் பாகங்களின் உச்ச விலையுடன் போராடி விறகு விற்ற இவர்க ளின் பரிதாபகரத் தொழில் கவலைக்குரியது. கடல் வலயத் தடைச் சட்டம் இறுக்கமாக நடைமுறைக்குப்படுத்தப்பட்ட அக்காலத் தில் மீன வர்கள் கூட விறகு வெட்டுதல், மண்ணெண்ணெய் விற்றல் போன்ற மாற்றுத்தொழில்களைச் செய்ய வேண்டிய கட்டாய நிலையிருந்தது. வன்னிப் பிரதேசமீனவர்கள் சிலர் அரிசி, உப உணவுப் பொருள்கள் போன்றவற்றை யாழ்ப்பாணத்திற்கு சைக்கிளில் கொண்டு வரும் தொழிலைச் செய்ய வேண்டியிருந்தது.

அரச சேவையில் இருந்தோரில் பலருக்கு வேதனம் பெறுவது கூட ஒழுங்கற்ற நிலையிருந்தது. கொழும்பைத் தலைமையகமாகக் கொண்ட திணைக்களங்கள், சபைகள், கூட்டுதாபனங்கள் போன் றவை 3 அல்லது 4 மாதங்களுக்கொரு முறையே சம்பளம் கொடுக்கும் வழக்கம் இருந்தது.

இங்குள்ள தலைமை அதிகாரிகள் கொழும்பு சென்று சம்பளம் பெற்றுவருவார்கள். அந்த இடைப்பட்ட மாதங்களில் அத்தியாவசி யப் பொருள்களின் பலமடங்கு விலையைச் சமாளிக்க மாற்றுத் தொழில் தேடும் நிர்ப்பந்தமொன்றும் உருவாகியது. 1996 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்களில் 500 ரூபா 1000 ரூபா தாள் காசுகள்

மாற்ற சிரமப்பட்ட காலமொன்றும் இருந்தது. அஸ்பெஸ்ரஸ் கூரை தகடுகள் (சீற்றுகள்) ஓடுகள் இங்கு எடுத்து வரப்பட விதிக்கப் பட்டிருந்த போர்க்காலத்தில் கிடுகு பின்னும் தொழில் நல்ல உற்சா கமானதாக இலாபம் தரும் தொழிலாக உருவாகியது.

யாழ் குடாநாட்டின் பெரும்பாலான மக்கள் 1995 நவம் பரில் தென்மராட்சி, வடமராட்சி, வன்னிப் பிரதேசத்திற்கு இடம் பெயர்ந்த போது புதிதாக வீடுகள் அமைக்கும் தேவை உருவாகிய போது கிடுகுகளின் விலை பல மடங்கு உயர்ந்தது. கிடுகு பின்னுதல் மிக இலாபகரமான தொழிலாகியது.

அக்காலத்தில் சிக்கன அடுப்பு எனப்பட்ட இரட்டைச் சூட்டடுப்பு ஒன்றைக் கட்டும் தொழில் உருவாகியது. சைக்கிளில் இச்சூட்டடுப்பைக் காவியவாறு திரிந்து வீடுகளில் அடுப்பு கட்டும் தொழிலொன்றும் உருவாகியது. பெற்றோல் இல்லாத அக்காலத்தில் மண்ணெண்ணெயைக் காய்ச்சி பெற்றோல் போன்ற திரவமொன்றை உருவாக்கி விற்கும் தொழிலும் உருவாகியது. யாழ் குடாநாட்டிற்கும் திருகோணமலைக்கும் இடையே பயணிகள் கப்பல் ஓடிய் காலங்க ளில் வெற்றிலை, அப்பிள்பழம், அன்னாசி, உருளைக்கிழங்கு எனத் தேவைப்பட்ட பொருள்களைக் காவிச் செல்லும் வியாபாரிகள் குழாம் ஒன்றும் உருவாகியது.

அதுபோல விமானப் பயணிகளாகச் சென்று தட்டுப்பா டான பொருள்களை இங்கும் அங்கும் விற்கும் தொழிலும் உருவாகி யது. விமானமொன்றையே வாடகைக் கமர்த்தி உணவுப்பொருள்கள், இலத்திரனியல் உபகரணங்கள் கொண்டு வந்து விற்ற காலமும் இருந்தது. 2006 ஒகஸ் 11 இன் பின்பான யுத்த நிலைமையின் போது யாழ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் விமானங்களின் மூலம் அத்தி யவசியப் பொருள்களைத் தருவித்து பொது மக்களுக்கு விற்றது குறிப் பிடத்தக்கது. தொழிலற்ற போர்க்காலத்தில் பஞ்சம், பசி போக்க இது போன்ற இன்னும் எத்தனையோ தொழில்களை மக்கள் செய் திருப்பார்கள்.

உயிர்காக்க உணவு தேட உழைக்க நடத்திய போராட்டங்

களும், செய்த தொழில்களும் காலவெள்ளத்தில் கரைந்து போகா திருக்க ஆவணப்படுத்தி உள்ளேன்.

நீளுகின்ற காலத்தின் பின்னே நாம் வாழ்ந்த காலத்தை தேடிப் போகின்றவர்களுக்கு இது நிச்சயம் தகவல்களைச் சொல்லும். எழுத்து ஆவணமாகி சாட்சி பகரும்.

**நன்றி. தினக்குரல் வாரவெளியீடு – 2012.06.17, 2012.06.24 திகதிகள்**



# அருகிவரும் கைத்தொழில்கள்

யாழ்ப்பாண வாழ்வியலின் நினைவுப் பக்கங்களில் அருகி வரும், மறைந்து போன சிறு கைத்தொழில்களின் ஞாபமூட்டல-ாக இன்று இக் கட்டுரை மலர்கின்றது. தொழிநுட்பங்களின் தாராள வருகை, யுத்தம், பணவசதிகளின் பெருக்கம் ஆகியன எமது வாழ்க்கை முறையை அடியோடு மாற்றிப் போட்டு விட்டது.மாறும் வாழ்வியல் எமது வாழ்வியல் தளங்களை மாற்றிப் போட்டதன் கோலங்களைப் பார்ப்போம்.

சைக்கிள் வாடகைக்கு விடும் சேவைக் கைத்தொழில் ஒன்று முன்பு யாழ்ப்பாணத்தின்பல பிரதேசங்களில் இருந்தது. பெரும்பாலும் சைக்கிள் திருத்தும் கடைகளே அவ்விதமாகச் சை க் கி ள் க ளை வைத் திருந்து வாடகைக்கு விடுவது வழக்கமானதாகும். சைக்கிள் சின்னச் சைக்கிள், பெரிய சைக்கிள் என இருவகையாக இருந்தது.

சின்னச் சைக்கிளை சிறுவர்கள் வாங்கி ஓடினார்கள். கடை யில் கொப்பி ஒன்று வைக்கப்பட்டிருக்கும். அதில் பெயர், முகவரி.

நேரம் பதிந்து விட்டு சைக்கிளை எடுக்க வேண்டும். கடைக்காரருக்கு அறிமுகமானவர்கள் மட்டுமே சைக்கிளைப் பெறமுடியும். மணித் தியால அடிப்படையில் வாடகை வசூலிக்கப்படும். அக்காலத்தில் ஐம்பது சதம், ஒரு ரூபா பெரிய காசு. எனது சிறு பராயத்தில் வாரவிடுமுறை, பாடசாலை விடுமுறைக் காலத்தில் சின்னச் சைக்கிள் வாடகைக்கு எடுத்து ஆனந்தமாக ஓடித் திரிந்தது பசுமை நினைவாக இன்றும் மனதில் இருக்கின்றது.

பெரிய சைக்கிளைச் சொந்தமாக வைத்திருக்காதோர் வாடகைக்கு எடுத்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்தபின்பு மணித் தியால வாடகையைக் கொடுத்த பின்பதாக கையளிப்பார்கள். சிறு வர்கள் பெரிய சைக்கிளை எடுத்து ஓடிப் பழகியதும் நிகழ்ந்தது. காலமாற்றம் இத்தொழிலை இன்று முற்றாக மறையச் செய்துவிட் டது. சைக்கிள் வீடுகளுக்குள் சர்வசாதரணமாகி விட்டது.

பிரம்பு தயாரிக்கும், பிரம்பினாலாகிய பாவனைப் பொருள்கள் தயாரிக்கும் தொழிலாளர் குடும்பங்கள் அரியாலைப் பிரதேசத்தின் ஒரு பகுதியில் இருந்தது. வன்னிப் பிரதேசம், கிழக்கு மாகாணத்தி லிருந்து பிரம்பு மரக்கொடிகளை வெட்டியெடுத்து வந்து இங்கே விற்பார்கள்.

அதனைக் கதிரை பின்னும் பிரம்பாக மாற்றி விற்பார்கள். கதிரை, சாய்மனைக் கட்டில் போன்றவை பின்னப் பயன்படுத் தப்படும். இக்கைத்தொழில் முற்றாகவே அற்றுப் போய்விட்டது. பிரம்பின் இடத்தைப் பிளாஸ்ரிக் வயர்கள் முற்றாகவே கைப்பற்றி விட்டது காலத்தின் கொடுமைதான்.

முன்னைய காலத்தில் சைக்கிளில் திரிந்து ஐஸ்பழம் விற் போர் அதிகம் பேர் இருந்தார்கள். தற்போது இது மிகவும் குறைந்து விட்டது அக்காலத்தில் சிறிய தள்ளு வண்டியில் ஐஸ்பழங்களை வைத்து மீன்காரன் வைத்திருக்கும் றப்பர் குழலைப் போல ஒன்றை ஹோர்ணாக ஒலிக்க விட்டு ஐஸ்பழம் விற்பார்கள். அப்போது ஐஸ்பழப் பெட்டியுடன் சாக்கு ஒன்று கட்டப்பட்டிருக்கும்.

நாம் எமது வீடுகளிலுள்ள வாளிக்கம்பி, பழைய அலுமினி

யப் பாத்திரங்கள், பித்தளைப் பாத்திரங்கள் என்பனவற்றில் ஏதாவது ஒன்றைக் கொடுத்து ஐஸ்பழம் வாங்கிச் சுவைப்போம். இன்று இவ்விதம் கொடுத்து வாங்கும் கைத்தொழில் முற்றாகவே அற்றுப்போய் விட்டது.

சைக்கிளின் பின் புறம் மரப்பலகையால் பெட்டி அடித்து ஆடு வாங்கும் வியாபாரிகள் கூட்டம் ஒன்று பரவலாக இருந்தது. இன்று இந்தச் சேவை கைத்தொழில் எனச் சொல்லுமளவுக்கு முற்றாகவே அருகிவிட்டது.

பட்டாசு வெடி மருந்தை தென் பகுதியிலிருந்து வாங்கி அம்மியில் நன்றாக அரைத்து வாடிக்கையாளரின் விருப்பத்தை நிறைவேற்றும் வண்ணம் வடிவங்களைச் செய்வார்கள். யுத்தத்தின் வருகை இக் கைத்தொழிலை முற்றாகவே எம்மிடமிருந்து பறித்து விட்டது. ஆனால் தென்பகுதியில் இக் கைத்தொழில் இன்று சிறிய, நடுத்தர, பெரிய கைத்தொழிலாக வளர்ந்து வாழுகின்றது.

நாடக மேடைகள், கூத்துகள் கொடி கட்டிப் பறந்த காலம் ஒன்று இருந்தது. அக்காலத் தில் மேடை திரைச்சீலை (சீன்ஸ்) வாடகைக்கு கொடுக்கும் தொழில் ஓகோவென இருந்தது. சுண்டுக்குளி, பழைய பூங்கா வீதியில் வாழ்ந்து மறைந்த பெஞ்சமின் ஐயா தான் இக் கலையின் தந்தையாகப் போற்றப் படுகின்றார்.

ஸ்பீக்கர் (ஒலிபெருக்கி), பொக்ஸ் என்பவற்றை வாடகைக்கு விடும் கைத்தொழில் அக்காலத்தில் பிரமாண்டமானதாகவும் பிரபலமானதாகவும் இருந்தது. யாழ் ஈச்சமோட்டையிலிருந்த றீகல் நிறுவனம் இதில் முதன்மை பெற்றிருந்தது. இன்று பல கோயில்கள். நிறுவனங்கள் சொந்தமாக இவற்றை வைத்திருப்பதால் ஓரளவு எனக் கூறுமளவுக்கு இத்தொழில் நடைபெறுகின்றது.

1977 ஜூலை மாதத்தின் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் தாராளபொருளாதாரமாகத் திறந்து விடப்பட்டது. அப்போது தொலைக் காட்சி, டெக் வீடியோ, கொப்பி என்பன எமக்கு புதுவரவாக நிகழ்ந்தன. இவற்றை நாளாந்த அடிப்படையில் வாடகைக்கு கொடுக்கும் கைத்தொழில் ஒன்று உருவாகியது. பட்டி தொட்டி

யெங்கும் வெற்றி நடை போட்டது. இத்தொழிலில் பின்னர் டெக் காணாமல் போய் சிடி பிளேயர் (CD) டி,வி,டி, பிளேயர் (DVD) என்பவை அந்த இடத்தைப் பிடித்துவிட்டது. வீடியோ கொப்பியும் சி.டி .டி.வி.டி.என மாற்றம் கண்டது.இவற்றை வாடகைக்கு கொடுக்கும் தொழிலும் இன்று முற்றாவே இல்லையெனக் கூறுமளவுக்கு அற்றுப் போய்விட்டது.

கிடுகு பின்னுதல் தொழில் யாழ்ப்பாண மக்களில் நகர, கிராம வேறுபாடின்றி யாவருக்கும் உரியதாக ஒரு காலத்தில் இருந்தது. பன்னாங்கு எனும் ஒரு வகை கிடுகு பின்னுதல் அமைப்பு இறந்த இந்துக்களின் உடலை வைப்பதற்கு பயன்பட்டது. அது இழைக்கத் தெரிந்தோரை இன்று தேடிக்கண்டு பிடிக்க அலைய வேண்டியுள்ளது.

வீட்டுக் கூரைகளைத் தகரம், ஓடு, அஸ்பெஸ்ரஸ் சீற்கொண்டு அமைக்கும் நிலை பரவலாக எங்கும் பெருகியது. யாழ்ப்பாணத்தின் பெருமை கூறும் கிடுகுவேலிகள் நிறைய மதில்க ளாகியது.கொங்கிறீற் தூண்களும், முள்ளுக் கம்பி வேலிகளுமாகியது. இன்று கிடுகு பின்னும் கைத்தொழில் மிக அருகி விட்டது. தென்னை மரங்கள் நிறையவே நிற்கின்றது. தென்னோலைகள் பல இடங்களில் தேடுவாரற்று அழிகின்றது.

தகரக் கதிரைகள் (Steel Chairs) வாடகைக்கு கொடுக்கும் கைத்தொழில் முன்பு இருந்தது. அது இப்போது பிளாஸ்ரிக் கைத்தொழிலாக மாறிவிட்டது.

குருநகர், பாசையூர் போன்ற மீனவக் கிராமங்களில் முன்பு விடியற்காலையில் வீதியோரம் அடுப்பு மூட்டி பால் அப்பம் சுடச்சுட விற்கும் பெண்கள் இருந்தார்கள். அதிகாலை முதல் காலை 9,10 மணிவரை வியாபாரம் படு சுறுசுறுப்பாக இருக்கும். இன்று இக்கைத்தொழில் முற்றாகவே அற்றுப் போய்விட்டது.

அக்காலத்தில் ஊருக்கு ஊர் இடியப்பம், தோசை, இட்டலி. அப்பம், குழல்ப்பிட்டு என்பவை செய்து விற்கும் குடும்பங்கள் பல இருந்தன. பஞ்சம் காத்த தொழில்களாகவும் இருந்தன. வீதிக்கு வீதி

யெங்கும் வெற்றி நடை போட்டது. இத்தொழிலில் பின்னர் டெக் காணாமல் போய் சிடி பிளேயர் (CD) டி,வி,டி, பிளேயர் (DVD) என்பவை அந்த இடத்தைப் பிடித்துவிட்டது. வீடியோ கொப்பியும் சி.டி .டி.வி.டி.என மாற்றம் கண்டது.இவற்றை வாடகைக்கு கொடுக்கும் தொழிலும் இன்று முற்றாவே இல்லையெனக் கூறுமளவுக்கு அற்றுப் போய்விட்டது.

கிடுகு பின்னுதல் தொழில் யாழ்ப்பாண மக்களில் நகர, கிராம வேறுபாடின்றி யாவருக்கும் உரியதாக ஒரு காலத்தில் இருந்தது. பன்னாங்கு எனும் ஒரு வகை கிடுகு பின்னுதல் அமைப்பு இறந்த இந்துக்களின் உடலை வைப்பதற்கு பயன்பட்டது. அது இழைக்கத் தெரிந்தோரை இன்று தேடிக்கண்டு பிடிக்க அலைய வேண்டியுள்ளது.

வீட்டுக் கூரைகளைத் தகரம், ஓடு, அஸ்பெஸ்ரஸ் சீற்கொண்டு அமைக்கும் நிலை பரவலாக எங்கும் பெருகியது. யாழ்ப்பாணத்தின் பெருமை கூறும் கிடுகுவேலிகள் நிறைய மதில்க ளாகியது.கொங்கிறீற் தூண்களும், முள்ளுக் கம்பி வேலிகளுமாகியது. இன்று கிடுகு பின்னும் கைத்தொழில் மிக அருகி விட்டது. தென்னை மரங்கள் நிறையவே நிற்கின்றது. தென்னோலைகள் பல இடங்களில் தேடுவாரற்று அழிகின்றது.

தகரக் கதிரைகள் (Steel Chairs) வாடகைக்கு கொடுக்கும் கைத்தொழில் முன்பு இருந்தது. அது இப்போது பிளாஸ்ரிக் கைத்தொழிலாக மாறிவிட்டது.

குருநகர், பாசையூர் போன்ற மீனவக் கிராமங்களில் முன்பு விடியற்காலையில் வீதியோரம் அடுப்பு மூட்டி பால் அப்பம் சுடச்சுட விற்கும் பெண்கள் இருந்தார்கள். அதிகாலை முதல் காலை 9,10 மணிவரை வியாபாரம் படு சுறுசுறுப்பாக இருக்கும். இன்று இக்கைத்தொழில் முற்றாகவே அற்றுப் போய்விட்டது.

அக்காலத்தில் ஊருக்கு ஊர் இடியப்பம், தோசை, இட்டலி. அப்பம், குழல்ப்பிட்டு என்பவை செய்து விற்கும் குடும்பங்கள் பல இருந்தன. பஞ்சம் காத்த தொழில்களாகவும் இருந்தன. வீதிக்கு வீதி

சென்று இவற்றை விற்றுப் பின் பாடசாலை சென்று படித்துப் பெரும் பதவிகளை அலங்கரித்தவர்களும் உள்ளார்கள். இன்று உணவு தயாரிக்கும் இக்குடிசைக் கைத்தொழில் குறைவடைந்த நிலையிலாயினும் ஓரளவுக்கு இயங்கி வருகின்றது.

வாழை நாரை எடுத்து அதில் கயிறு தயாரித்தல், சில கை வேலைப் பொருள்கள் தயாரிக்கும் கைத்தொழில் நீர்வேலிப் பிரதேச த்திலிருந்தது வாழை நாரினாலாகிய இவை மிக வும் உறுதியானதாக இருந்தன. இன்று இத்தொழில் முற்றாகவே இல் லையெனக் கூறுமள வுக்கு அற்றுப் போய்விட்டது

கைத்தறி நெசவு யாழ் குடாநாட்டில் அரியாலை உட்பட பல பிரதேசங்களில் வீட்டுக் கைத்தொழிலாக 1970 - 1977 காலப்பகுதியில் பிரசித்தம் பெற்ற இலாபகரமான தொழிலாக இருந்தது. சிறிமாவோ அரசின் உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிக்கும் மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கை காரணமாகவே கைத்தறி நெசவுத் துணிகள் இலாபகரமான தொழிலாயிருந்தது. அக்காலம் தான் உள்நாட்டுக் கைத் தொழில் முயற்சியாளர்களின் பொற்காலமாயிருந்தது. இன்று இக் கைத்தொழில் முற்றாகவே இல்லை எனக் கூறுமளவுக்குச் செயலிழந்து விட்டது.

கத்தி, கத்தரிக்கோல், சாணை பிடித்தல், அம்மி, குழவி, ஆட்டுக்கல், திரிகைக்கல் பொழிதல் எனும் கைத்தொழில் ஒரு காலத்தில் முதன்மையானதாக இருந்தது. சைக்கிளில் சாணை பிடிக்கும் சிறிய ரக இயந்திரத்தை ஊர் ஊராக எடுத்துச் சென்று கத்தி, கத்தரிக்கோல் என்பவற்றைச் சாணை பிடித்து உழைத்தார்கள்.

அம்மி, பிற கல் உபகரணங்களைப் பொழிந்த தொழில்களெல்லாம் இயந்திரயுக ஆட்சியின் நீட்சியால் கைத்தொழில் முயற்சியாளரைக் காலவெள்ளத்தில் ஆழ்த்தி மூழ்கடிக்கச் செய்து விட்டது சமையலறை எங்கும் இயந்திர உபகரணங்களே பெரும்பாலான வீடுகளில் உள்ளது.

மட்பாண்டம் செய்யும் தொழில் சங்கானை போன்ற ஒரு சில

பிரதேசங்களில் அதிக வருவாய் தந்த குடிசைக் கைத்தொழிலாகவும் தொழிற்சாலைக் கைத்தொழிலாகவும் இருந்தது. பிளாஸ்ரிக், அலுமினிய, உருக்கு பாத்திர, சில்வர் வருகை மட்பாண்டக் கைத்தொழிலுக்குப் பெரும் அடியைப் போட்டுவிட்டது. இன்று மட்பாண்டம் விற்கும் கடையைத் தேடியலைய வேண்டியுள்ளது.

இக்கைத்தொழிலும் பெருமளவுக்கு குறைந்து விட்டது. பனை, தென்னை மரங்களில் கள்ளுச்சீவும் கைத்தொழில் ஒரு காலத்தில் அதிகம் இருந்தது. உயிராபத்தான இத்தொழில் இன்று பெருமளவுக்கு குறைந்துவிட்டது. இத்தொழிலில் ஈடுபட்டு அதிக வருவாய் பெறும் நிலையிருந்தும் இதனைக் கைவிட்ட குடும்பங்கள் பல்லாயிரக் கணக்காக உள்ளன.

பனை, தென்னை மரத்தில் கள் இறக்கும் பானையில் சுண்ணாம்பு தடவி கருப்பணி எனும் பதநீர் இறக்கி அதனை பெரிய தாச்சியில் காய்ச்சி பனங்கட்டி தயாரிக்கும் தொழிற் சாலைகள் பல யாழ் குடா நாட்டில் இருந்தன. 1970 - 1977 காலப் பகுதியில் இவை மிகவும் இலாபகரமான தொழிலாக இருந்தன. பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் எனும் அமைப் பும் பலமான நிறுவனமாக உருவாகியது.

இன்று பனங்கட்டித் தொழிற்சாலைகள் பல செயலிழந்து விட்டன. வீடுகளில் கருப்பணி காய்ச்சும் தொழில் செய்வோரையும் விரல்விட்டு எண்ண வேண்டியுள்ளது. பனங்கட்டியுடன் தேநீர் அருந்தி,உணவு தயாரித்து ஆரோக்கியமாக வாழ்ந்த மக்கள் கூட்டம் சீனியை அதிகம் பாவித்து நீரிழிவு நோய்க்கு உட்பட்டுத் தவிக்கின்றனர்.

ஆடி, ஆவணி, புரட்டாதி மாதம் வந்தால் யாழ்ப்பாணத்தில் பனங்காய் (பனம்பழம்) காலம். அப்போது பனம் பழத்தைப் பிசைந்து எடுத்து அதன் களிஎடுத்து பரண்கட்டி ஓலைப்பாயின் மீது பரவி காய வைத்து பனாட்டு தயாரிக்கும் கைத்தொழில் பரவலாக இடம்பெறும். பனாட்டு தென்பகுதிச் சந்தைகளுக்கு பெரும் மவுசுடன் விலை போகும். பனாட்டு பஞ்சமும் காத்தது பனங்காய் சூப்பி பசி போக்கிய

காலமும் இருந்தது.

ஆனால், இன்றோ பனாட்டுப் போடுவது நாகரீகம் இல்லையெனக் கூறிப் பெற்றோரைத் தடுத்து கண்ட கண்ட சிற்றூண்டிகளை உண்டு நோயாளியாகும் தலைமுறையொன்று வந்துவிட்டது.

யாழ் நல்லூர் கந்த சுவாமி கோயில் சந்தியில் புல்லு கட்டு விற்ற காலமொன் றும் இருந்தது. யாழ் நகரப் புல்லுக்குளத்தில் புல்லுவெ-வட்டிக் கட்டு களாக வைத்து சிலர் விற்பார்கள். அக்காலத்தில் நகரப் பிரதேசங்க ளிலும் ஆடு.மாடு வளர்ப்பார்கள். அதனால் புல் விற்கும் கைத்தொழி லும் நடந்தது. காலவெள்ளம் இத்தொழிலையும் விழுங் கிவிட்டது.

சுருட்டுச் சுற்றும் பிரபலமான கைத்தொழில் வலிகாமம், தீவ கம், வடமராட்சியின் சில பிரதேசங்களில் நிகழ்ந்தது. யாழ் திருநெல் வேலியில் மிகவும் அதிகமான சுருட்டுக் கொட்டில்கள் இருந்தன. இவை எண்ணற்றோருக்கு வேலைவாய்ப்பை வழங்கின.காலச்சக் கர த்தின் சுழற்சியில் சிக்குண்டு ஏராளம் சுருட்டுக் கொட்டில்கள் நசிந்து விட்டது கவலைக்குரியது.

சைக்கிளில் பெட்டி கட்டி பழைய சரிகைச்சாறி, அலுமி னியம், பித்தளைப் பாத்திரங்கள் வாங்கும் வியாபாரமொன்று இருந்தது. இவற்றை வாங்கிவிட்டு பணம் அல்லது வீட்டு உபயோ கப் பொருள்கள் கொடுப்பார்கள். இதுவும் காணாமல் போனோர் பட்டியலில் சேர்ந்துவிட்டது.

கொழும்புத்துறை பிரதேசத்தில் வீட்டுக்கு வீடு கயிறு தயா ரிக்கும் கைத்தொழில் ஒரு காலத்தில் இருந்தது. சைக்கிள் றிம்மை பலகை கட்டையுடன் பிணைத்தது போன்ற உபகரணத்தில் கயிறு நூற்றலைச் சாதாரணமாகக் காணமுடிந்தது. கயிறுக்கு தேவை இருந் தும் யுத்தத்தின் சத்தம் இக்கைத்தொழிலாளர் பலரை அற்றுப்போகச் செய்து விட்டது. ரயர்நூலின் வருகையும் தென்பகுதி கயிறுகளின் விலையுடன் போட்டி போடமுடியாத நிலையும் ஓர் காரணம்.

- வேதநாயகம் தபேந்திரன் -

பெட்டி, பாய், கடகம், தொப்பி, நீத்துப்பெட்டி, இடியப்பத் தட்டு போன்ற பனை ஓலையால் ஆகிய பெருள்கள் தயாரிக்கும் கைத் தொழில் வீட்டுக்கு வீடு இருந்தது

பிளாஸ்ரிக், பொலித்தீன், றெக்சீன் வருகை, பணவசதி கூடியமை காரணமாக இக்கைத்தொழிலும் மிகவும் குறைந்து விட்டது. பன்ன வேலைக் கைத்தொழிலெனச் சுருக்கமாக இப்பொருள்களை அழைத் ததும் குறிப்பிடத் தக்கது அப்பளம், போடுதல், மோர்மிளகாய் தயா ரித்தல், சீமெந்து பையில் (Bag) ஒட்டுதல் போன்ற வகையான கைத் தொழில்களும் இன்று பெருமளவுக்கு குறைவடைந்து விட்டது. தையல் மெசினில் தைத்து உழைத்து குடும்பம் நடத்திய குடும்பங்கள் ஏராளம் இருந்தன. றெடிமெற் ஆடைகளின் வருகை காரணமா கவும் தையல் கடைகளின் வளர்ச்சி காரணமாக இத்தொழிலும் குறை வடைந்துள்ளது.

மின்சாரம் எல்லாக் கிராமங்களுக்கும் இல்லாத ஒரு காலம் இருந்தது. அப்போதெல்லாம் பெரிய அளவு மின் பிறப்பாக்கிகள் பல இடங்களிலும் வாடகைக்கு விடவென இருக்கும். லைற் எஞ்ஜின் வந் துவிட்டதெனக் கதைப்பார்கள். மின்சாரம் எல்லா இடங்களுக்கும் பரவிய காலம் வந்தபோது லைற் எஞ்ஜின் தொழிலும் குறைவடைந்து விட்டது.

உரலில் அரிசி இடித்து பின் மாவறுத்துக் கொடுப்ப தென்பது வறுமைப்பட்ட பெண்கள் பலரது வாழ்வாதரத் தொழிலாகப் பரவ லாக இருந்தது. ஈரஅரிசியை அரைத்துக் கொடுக்கும் ஆலை கள் வந்த போது கோதுமைமாவின் தாராளப் புழக்கம் வந்த போதும் அரிசி இடித்துக் கொடுக்கும் தொழிலும் மிகவும் அருகிப் போனது.

இப்படி எத்தனையோ கைத்தொழில்கள், தொழில் முறைகள் அற்றுப் போய்விட்டன. குறைந்து போய்விட்டன. வாழ்ந்த வாழ்வின் சுவடுகளாக இவையும் உள்ளன. இதன் மீது மீண்டும் நடந்து பார்த்த சுக அனுபவத்துடன் விடைபெறுவோம்.

**நன்றி – தினக்குரல் வாரவெளியீடு 01.07.2012, 08.07.2012 திகதிகள்**



# கிராமிய வறுமை தணித்த அற்ஹோம் முறை

யாழ்ப்பாணத்தில் கிராமிய வறுமையை தணித்த பொருளாதார முறைமைகளில் அற்ஹோம் (At Home) எனப்படும் பொருளாதார முறைமைக்கும் பெரும் பங்கு உண்டு. பணவரவு பொருளாதார முறைமை குறித்து ஏற்கனவே ஒரு பத்தியில் பார்த்துள்ளோம் இதனையொத்த ஓர் முறைமையே இதுவாகும்.

கிறிஸ்தவ மக்களின் வாழ்வில் பொருளாதார மறுமலர்ச்சியை ஒரு காலத்தில் ஏற்படுத்திய இப்பொருளாதார முறைமையும் யாழ்ப்பாண நினைவுப் பக்கங்களில் நினைவு மீட்டிப் பார்க்கப்பட வேண்டியதே.

பொருளியல் அறிஞர்கள் நுண்பாகப் பொருளாதார முறைமை (Micro Economy System) என அழைக்கும் இவை எமது மக்களின் வாழ்வில் வெற்றிகரமானதாக இருந்திருக்கிறது. இருந்து வருகிறது.

மேற்குலகிலிருந்து புதிய புதிய பெயர்களில் இன்று கவர்ச்சி

கரமாகக் கூறப்படும் பல கோட்பாடுகள் எமது பண்பாட்டிலிருந்தது ஏற்கனவே தோற்றம் பெற்றுள்ளன. எமது வாழ்வியல் தேவைகளை நிறைவு செய்யும் இக்கோட்பாடுகள் எமது அடிப்படைத் தேவைக ளின் தளத்திலிருந்தே தோற்றம் பெற்றுள்ளன.எமது பண்பாடு, கால நேரத் தேவைகளை இவை முழுமை செய்துள்ளன.

அற்ஹோம் பொருளாதார முறைமைக்குள் செல்வோம். காப்பு றுதிக் கோட்பாட்டில் கூறப்படும் பகிர்தல் எனும் தத்துவத்தை அடி யொற்றியதாகவே இம்முறையும் உள்ளது. சிறுதுளி பெருவெள்ளம் என்பார்கள்.அது போல பலரிடம் உள்ள சிறியளவு பணம் ஒருவரிடம் சேர்ந்து பெரும் தொகையாகி உதவுகிறது.

இந்து மத மக்களில் ஒரு பகுதியினர் தமது வறுமையின் பிடி யிலிருந்து விடுபட பணச்சடங்கு என முன்னாளில் அழைக்கப்பட்ட பணவரவு பொருளாதார முறைமையை அறிமுகம் செய்தனர். அது போலவே கிறிஸ்தவ மக்களின் இம்முறையும் தொழிற்படுகின்றது. அற்ஹோம் முறை ஆரம்ப காலங்களில் பல கடற்கரையோரக் கிரா மங்களில் பணச்சடங்கு என அழைக்கப்பட்டது.

பின்னாளில் இது அற்ஹோம் என்ற பெயரைப் பெற்றது. கிராமிய பணப் பொருளாதார முறைமையில் இது செல்வாக்கு வகித்த காலத் தில் கரையோர சமூகங்களில் ஒரு மாதிரியாகவும் கரையோரமல் லாத சமூகங்களில் வேறொரு மாதிரியாகவும் கொண்டாடப்பட்டது.

கரையோரப் பிரதேசங்களில் கடற்றொழிலுடன் பின்னிப் பிணைக் கப்பட்டதாக வாழ்வு இருக்கின்றது. அதனால் முன்னாளில் அற்ஹோம் நிகழ்வானது கரையோரக் கிறிஸ்தவக் கிராமங்களில் மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையும் படுசுறுசுறுப்பாக இருக்கும். இரவில் தொழிலுக்குச் செல்வோர் விடிகாலை வந்து மீன் களை விற்று தமது உடல்க்களைப்பை யெல்லாம் போக்கிய பின் மாலை நேரத்தில் தான் ஓய்வாக இருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

உணவுப் பொருட்களின் விலைவாசி குறைவாக இருந்த காலத் தில் மதிய உணவு கொடுத்தே இந்நிகழ்வு நடைபெற்றது. பின்னாளில்

மாலை நேரத்தில் கேக், வடை, றோல்ஸ், குளிர்பானம் என மாறியது. அதுவும் செலவு கூடியதாகப் போக இம்முறைமை தற்போது பெரு மளவில் கேக், குளிர்பானம் எனச் சுருங்கிவிட்டது. அற்ஹோம் நிகழ் வால் கிடைக்கக் கூடிய பணத்தின் வரவை அதிகரிப்பதற்காகவே செல வுச் சுருக்கங்கள் வந்துவிட்டது.

அற்ஹோம் அழைப்பிதழில் கொண்டாட்டம் 3 நாட்கள் வரை யும் நடைபெறுமென அச்சிடப்பட்டிருந்தால் அந்த 3 நாட்களும் சென்று தமது பணக் கொடுப்பனவைச் செலுத்தலாம். அவ்வாறு 3 நாட்களெனப் போடாவிட்டால் அந்த ஒரு நாள் மட்டும் பிரதான கொண்டாட்டமாக நிகழும்.

நிகழ்வில் பணம் வாங்குவதற்கு கொப்பி ஒன்று எழுதப் பயன்படுத்தப்படும். இதில் பெயர், முகவரியுடன் கொடுக்கப்படும் தொகையை பழையது, புதியது எனக் குறிப்பிட்டுப் பதிவார்கள். பழைய தொகையெனக் குறிப்பிட்ட பணத்திற்கு 10 வீத வட்டி போட் டுச் செலுத்தும் முறையுமிருந்தது. புதிதாக வழங்கப் படும் காசை பழைய தொகையைச் சமப்படுத்தும் விதமாகவோ, அல்லது அதிக மாவோ வழங்குவார்கள்.

வடமராட்சிப் பிரதேசத்தில் பணவரவுப் பொருளாதார முறை மையில் உள்ளது போல ஆண்களுக்கு தனியான கொப்பி வைத்து எழுதும் முறையும் பெண்களுக்குத் தனியாகவும் அற்ஹோம் முறை மையில் இருந்ததாக அறியப்படவில்லை.

ஆரம்ப காலங்களில் வாங்கும் பணத்தை சாரக் கட்டினுள் வாங்கிப் போடும் முறைமை சில இடங்களில் இருந்ததாக அறி யப்படுகின்றது. பின்னாட்களில் சூட்கேஸ், தோல்பை போன்றவற்றில் பணத்தை வைக்கும் பழக்கம் உருவாகி இப்போது நிலை பெற்று வருகின்றது.

கரையோரக் கிராமங்களின் தேவாலயத்திருவிழா கால மாதத் திலும் கிறிஸ்மஸ் வரும் டிசம்பர் மாதத்திலும் அற்ஹோம் வைக்கும் முறைமை நடைபெற மாட்டாது. உள்கிராமங்களில் பந்தல் போட்டு

இம்முறை கொண்டாடப்படும்.

கரையோரக் கிராமங்களில் வீடுகள் மிகச் சிறிய நிலப் பரப்பில் இருக்கும். இதன் காரணமாக அற்ஹோம் கொண்டாட வீதிகளின் குறுக்கே பந்தல் போடப்படும்.ஸ்பீக்கர்கள் பெரிய சத்தத்தில் அந்தக் காலத்திற்குரிய பிரபலமான பாடலை ஒலித்துக்கொண்டிருக்கும்.

இவ்வழக்கம் இப்போதும் சில கரையோரக் கிராமங்களில் காண முடிகின்றது. கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அற்ஹோம் முறைமைக்கான திகதிகளை வழங்கும் முறை பல கரையோரக் கிராமங்களில் உள்ளதை மரபாகக் காணமுடிகின்றது. அற்ஹோம் வைத்துப் பணத்தைப் பெற்ற ஒரு குடும்பம் பெற்ற பணத்தில் கணிசமான பகுதியை மீளளித்த பின்னர் தான் மீளவும் வைக்க முடியும்.

ஆனாலும் திருமணம். புதுமனைப்புகுவிழா, மங்கைப்பருவ மங்கல நீராட்டுவிழா, பிறந்த தின விழா போன்றவற்றை அற்ஹோம் போல வைத்துப் பணம் வாங்கும் முறைமை அப்போதும், இப்போதும் இருப்பதைக் காண முடிகின்றது. கரையோரக் கிராமங்களில் இந்நிகழ்வை அற்ஹோம் போல நடத்துவதாயின் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அறிவித்தல் கொடுப்பது அவசியமாகின்றது.

கடற்கரையோரக் கிராமங்களைப் பொறுத்தவரையில் ஒரு காலகட்டத்தில் ஏழைக் கடற்றொழிலாளி ஒருவர் சொந்தமாகப் படகு வாங்க, வலைகள், உபகரணங்கள் வாங்க அற்ஹோம் முறைமையினால் பணத்தைப் பெற்றுக் கொண்டனர். சிறிய முதலாளிகள் சம்மாட்டி எனப்படும் பெரிய முதலாளிகளாக மாற இம்முறைமை பெரிதும் உதவியுள்ளது. அதேபோல காணி வாங்குதல், வீடுகட்டுதல், வாகனம் வாங்குதல், பெண் பிள்ளைக்குத் திருமணம் செய்தல், வெளிநாடுகளுக்கு செல்லல், சிறு தொழில்கள் நிறுவுதல் போன்றவற்றிற்கும் இம்முறைமை கைகொடுத்து உள்ளது.

கரையோரம் தவிர்ந்த பிரதேச மக்களும் இந்த வகையான

- வேதநாயகம் தபேந்திரன் -

நன்மைகளை அனுபவித்துள்ளனர். சுருக்கமாகக் கூறுவதாயின் பணவ ரவுப் பொருளாதார முறைமையை கிறிஸ்தவர்கள் கைக்கொண்ட ஓர் வடிவமெனலாம். இன்றய காலத்தில் இந்த அற்ஹோம் முறைமை வலுவிழந்து வருவதைப் பரவலாகக் காண முடிகின்றது.

கரையோரக் கிராமங்களில் இப்பொருளாதார முறைமை ஓரள வுக்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஏனைய இடங்களில் இது பெருமளவுக்கு வழக்கற்றுப் போய்விட்டது. மக்களின் வாழ்க்கைத் தரம் பெருமளவுக்கு உயர்ந்து விட்ட நிலையில் வறுமையைக் காரணம் காட்டி பணம் பெறும் முறைமையை பெருமளவில் விரும்பவில்லை. பணத்தைக் கொடுத்து வாங்குவதை இழிவாக எண்ணும் சமுதாயம் உருவாகிவிட்டதும் இதற்கு காரணமெனலாம். வங்கிகள் கிராமப்புற மெங்கும் தனது கால்களைப் பதித்து விட்டது. இதனால் தேவைக்கு கடன் எடுப்பது இலகுவாகி விட்டதனால் அற்ஹோமின் தேவை குறைந்து விட்டது.

இன்றைய இளைஞர்கள் பலர் அற்ஹோம் வைத்துப் பணம் வாங்குவது தம்மை ஏழைகளாக சமூகத்தில் காட்டுமெனக் கூறிப் பெற் றோரைத் தடுக்கின்றார்கள். கிராமிய வறுமை மிகக் குறைந் தளவுக் குச் சென்று விட்டதும் ஓர் காரணம். யாழ்ப்பணக் குடாநாட்டின் பொருளாதார மறுமலர்ச்சியில் கணிசமான பங்கைச் செலுத்திய அற்ஹோம் முறையும் ஆவணமாகப் பதிவிற்குட்படுத்த வேண்டிய தொன்றாகும். காலமாற்றம் இம்முறைமையைக் கணிசமாக குறைவ டையச் செய்து விட்டது.

அற்ஹோம் என்ற பெயரைத் தாங்காமல் பிறமங்கல நிகழ்வுக ளின் ஊடாகத் தொடரத்தான் போகிறது. மக்கள் தமது வாழ்வியலின் பொருளாதார நலன்களை உயர்த்தும் இது போன்ற முறைமைகள் ஆய்விற்கு உட்படுத்தி ஆவணப்படுத்த வேண்டும். புலமைசார் சமூகம் இதனைக் கவனித்துக் கொள்ள வேண்டுகிறேன்.

**நன்றி. தினக்குரல் வாரவெளியீடு – 2012.யூலை.15**




# வாகனங்களும் வாழ்வியலும்

மனித வாழ்வின் நலமான அசைவியக்கத்திற்கு வாகனங்கள் அவசியமானவை. போக்குவரத்து தரை, கடல், ஆகாயம் எனப் பல வழிகளில் இடம்பெறுகின்றன. வடபகுதி மக்களின் வாழ்வியல் வாகனங்கள் காலமாற்றத்துடன் உள்ள நிலைமை இன்றைய பத்தியில் உள்ளடக்கப்படுகின்றது.

தரைவழிப் போக்குவரத்தின் காலமாற்றத்தின் கோலங்களைப் பார்ப்போம். முதலில்வாகன இலக்கங்களின் காலமாற்றங்களையும் வாழ்வியலையும் பார்ப்போம். பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தான் இயந்திர வாகனங்கள் எம்நாட்டிற்கு வந்தன. அப்போது வாகன இலக்கத் தகடுகள் CY, EY, CN, EN என்றவாறாக உள்ள ஆங்கில எழுத்துக்களுடன் இலக்கங்கள் சேர்க்கப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டன.

**1957** ஆம் ஆண்டு சிங்கள சிறீ எழுத்துக்களுடன் வாகன இலக்கங்கள் அறிமுகம் செய்யப்பட்டது. சிங்கள ஶ்ரீ எழுத்தை வாக

ணங்களில் அழிக்கும் போராட்டத்தை தமிழ் அரசியல் தலைவர்கள் மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது பின்பு 1987 ஆம் ஆண்டின் இறுதியில் சிங்கள ஸ்ரீ கைவிடப்பட்டு - (டாஸ்) அடையாளம் அறிமுகம் செய்யப்பட்டது. அத்துடன், இனவாதக் கண்ணோட்டத்துடன் பார்க்கப்பட்ட சிங்கள ஸ்ரீ யுகம் முடிவுக்கு வந்தது கணனிமயப்பட்ட பதிவுக்கு ஸ்ரீ எழுத்தை உள்ளடக்கவில்லை என்பதும் ஓர் காரணம். 1997 ஆம் ஆண்டு ஜனவரியில் வாகன இலக்கங்களை மாகாண ரீதியில் அடையாளம் காணும் NP, EP, WP, SP, NC, NW, CP, SG, UP முறைமை அறிமுகம் செய்யப்பட்டது.

பாதுகாப்பு படையினரால் வாகனங்கள் எந்த மாகாணத்திலிருந்து வருகின்றது என அறியும் நோக்குடன் இது அறிமுகம் செய்யப்படுவதாக அரசாங்கத்தால் கூறப்பட்டது. அப்போது வாகன இலக்கங்கள் மாகாணக் குறியீட்டுடன் GA என்ற ஆங்கில எழுத்துடன் தொடங்கப்பட்ட போது Goverment Agent ஐக் குறிக்கத் தான் G.A என தொடங்குவதான அபிப்பிராயம் பலரிடம் ஏற்பட்டது.

இவ் ஆங்கிலத் தொடர் இலக்கத்திலும் வேறுபட்ட வகைகள் காலப்போக்கில் அறிமுகம் செய்யப்பட்டது. மாகாணக் குறியீட்டுடன் ஆங்கில எழுத்துக்கள் அறிமுகம் செய்யப்பட்ட 1997 ஆம் ஆண்டில் வாகன இலக்கத் தகடுகளை அரசாங்கம் மட்டும் விநியோகிக்கும் நடைமுறை வந்தது. அதற்கு முன்பு வாகன உரிமையாளர்கள் தான் வாகன இலக்கத் தகடுகளைத் தயார் செய்து பொருத்தினார்கள். வாகன இலக்கங்கள் வாழ்வியலுடன் இணைந்திருந்த காலமொன்றும் இருந்தது. CY செல்லையா, 1 ஸ்ரீ சிங்கராயர், 4000 கந்தையா என வாகன இலக்கங்களுடன் அறிமுகப்படுத்தப்பட்ட வாழ்வியலை இன்று காண முடியாது.

வாகனங்களின் வருகைக்கு முந்திய காலத்தில் மாட்டு வண்டிகள் வடபகுதித் தமிழர்களின் நாளாந்த வாழ்வில் செல்வாக்குச் செலுத்தியது. ஒற்றை நாம்பன் மாட்டைப் பூட்டிய வண்டில் ஒற்றைத் திருக்கல் வண்டி என அழைக்கப்பட்டது. அதுபோல இரண்டு நாம்பன் மாடுகள் பூட்டிய வண்டில் இரட்டைத் திருக்கல் வண்டி என அழைக்கப்பட்டது. இலங்கையர் கோன் என்ற புகழ் பெற்ற சிறுகதை எழுத்

தாளரின் வெள்ளிப்பாதரசம் என்ற சிறுகதை வல்லிபுரக்கோயிலுக்கு மாட்டு வண்டியில் போகும் போது நாகம்மாள் எனும் பெண் கொலுசு கேட்கும் சுவையான கதையாக உள்ளது. மாட்டு வண்டிலுக்கு பலகையிலான வட்டச் சில்லுக்கு ஆரம்ப காலங்களில் தென்னை மட்டை (பொச்சு மட்டை) கட்டப்பட்டது. பின்பு இரும்பினாலா கிய வில்லுத் தகடு பூட்டப்பட்டது. பின்னாளில் ரயர் பூட்டப்பட்ட வண்டில்களும் பாவனைக்கு வந்தன.

இயந்திர வாகனங்களின் எழுச்சி மாட்டு வண்டில்களை மிகப் பெருளவுக்கு இல்லாமல் போகச் செய்துவிட்டது. ஆனால், மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிகள் இன்றும் பெருமளவு ரசிகர்களைக் கொண்ட பெரியதொரு நிகழ்வாக நடைபெற்று வருகின்றது.

றிச்சோ எனப்படும் ஒருவகை வாகனம் போக்குவரத்தில் இருந்தது. மனிதனை வைத்து மனிதன் கையால் இழுக்கும் வண்டி இது. யாழ்ப்பாணம் கொட்டடி, நல்லூர் பிரதேசத்தின் ஒரு பகுதி என்பன றிச்சோ இழுக்கும் தொழிலாளர்களைக் கொண்ட பகுதிகளாக இருந்தன.

இதுவும் சாதியை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழிலா கையால் பின்னாளில் கை விடப்பட்டது. மாட்டு வண்டிலை ஒத்த றிச்சோவின் உருவ அமைப்பில் மாட்டிற்குப்பதிலாக மனிதன் இவ் வாகனத்தை கைகளால் தாங்கி இழுப்பது இழிவாகக் கருதப்பட்ட ஒரு காலம் பலமாக வந்ததும் ஒரு காரணம். பிரித்தானியாவில் ஆதிகா லத்தில் பிரபுக்கள் செல்லப்பயன்படுத்தப்பட்ட இவ் வாகனம் அங்கு குதிரைகள் பூட்டியதாக பின்னாளில் மாற்றம் கண்டது. மோட்டார் வாகனங்களின் பேரெழுச்சி அங்கு இவ் வாகனத்தை நூதன சாலைக் குக் கொண்டு போய் விட்டது.

றிச்சோவின் அமைப்பை சைக்கிளுடன் பிணைத்த வகையில் யாழ் நல்லூர் பிரதேசத்தில் பாடசாலை ஆரம்ப வகுப்பு மாணவரை ஏற்றியிறக்கும் சேவையை ஓர் ஐயா இப்போதும் செய்து வருகின் றார். சைக்கிள் யுகத்தின் வருகையும் யாழ்ப்பாணத்தில் நினைவழி யாத பக்கங்களாக உள்ளது. வடமாகாணத்தின் பெரும்பாலான

நிலப்பரப்புக்கள் சமதரையாக இருப்பது சைக்கிள் ஓட வாய்ப்பானது.

றலி, ஹம்பர் போன்ற சைக்கிள்கள் பிரசித்தம் பெற்றவையா கத் திகழ்ந்தன. அதிலும் றலி சைக்கிள் முதன்மையானதாக இருந்தது. பெரும் பணக்காரர் மட்டுமே சைக்கிள் வாங்கக் கூடியதாக அக்கா லம் இருந்தது. சைக்கிளில் ஒருவர் பாதையால் போவதென்றால் சைக்கிளை விடுப்பு பார்ப்பதற்கென்று ஒரு கூட்டம் கிராமங்களில் இருக்கும். சைக்கிளை வைத்திருப்பது பெரும் சமூக அந்தஸ்தாகக் கரு தப்பட்டது.

ஹம்பர் சைக்கிள் முன்புறம் இரட்டை போக், பின்புறம் இரட்டை பார் (Bar) உள்ளதாக அந்நாளில் வந்தது. இதன் உறுதித் தன்மை காரணமாக இன்றளவிலும் உலாவுகின்றது. இளைய சந்ததி இதனை விரும்பாவிட்டாலும் கூட பழைய சந்ததி இதனைத் தமது பாரம்பரியம் எனப் போற்றி வருகின்றது.

பிற்காலத்தில் றலி சைக்கிளைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் அடிப்படையில் வழங்கிய போது சைக்கிள் மெல்ல மெல்ல நடுத்தரக் குடும்பங்களின் கைகளுக்கும் போனது. வாடகைக்கு சைக்கிள்கள் கொடுக்கும் வியாபார முறையும் 1980 கள் வரையிலி ருந்தது. சைக்கிள் ஆண்கள் மட்டும் ஓடும் வாகனமாகவும் ஆண்களை மட்டும் ஏற்றிச் செல்லக் கூடியதாகவும் மிக நீண்ட காலம் இருந்தது.

ஓர் ஐயா கூறினார் தான் 1968 இல் திருமணம் செய்து யாழ் நக ரப்பகுதியில் தமது மனைவியைச் சைக்கிளில் ஏற்றிச் சென்ற போது இளைஞர்கள் கூக்குரலிட்டுக் கேலி செய்தார்களாம். 1977 இல் தாராள பொருளாதார முறைமை வந்த போது தான் சைக்கிளையும் யாழ்ப்பாணப் பெண்கள் ஓடத் தொடங்கினார்கள். ஆரம்பத்தில் கேலி செய்யப்பட்டாலும் கூட பின்னாளில் சைக்கிளைப் பெண்கள் ஓடுவது, பாடசாலைக்கு எடுத்துச் செல்வது சர்வசாதாரண விடயமா கியது. அது இன்று மோட்டார் சைக்கிள், கார் ஓடுவது வரை சாதா ரண ஒன்றாக வியாபித்துள்ளது

1977 இல் ASIA Bike (ஏசியா சைக்கிள்) வருகை நிகழ்ந்தது.

ஐப்பானிய தொழில்நுட்ப பொருள்களெல்லாம் இலங்கைக்குள் தாராளமாக வரத்தொடங்கிய போது ஏசியா பைக்கும் வந்தது. அக்காலத்தில் மிகவும் பிரபலமானதாக விளங்கியது. இங்கிலாந்து சைக்கிள்களை மட்டும் ஓடிப் பார்த்த எம்மவர் பின்னாளில் இந்தியா கீரோ, ஈஸ்ரேன், RMI, சீனாவின் பிளையிங் பிஜன் போன்ற சைக் கிள்களையும் பாவிக்கத் தொடங்கினார்கள். பணக்காரர் மட்டும் வைத்திருந்த சைக்கிள் இப்போது ஏழை, நடுத்தரவர்க்கமென யாவரும் வைத்திருக்கும் சாமானியப் பொருளாகியது. யாழ்ப்பாணத்தில் சைக் கிள் இல்லாத வீடுகளே இல்லையெனக் கூறுமளவுக்கு சைக்கிளின் பாவனை வளர்ந்துள்ளது.

சைக்கிளோட்டப் போட்டிகளும் பிரபலமான ஒரு விளை யாட்டாக மாறியது. யுத்தத்தின் வருகை எம்மவரின் வாழ்வியலில் சைக்கிளை மறக்கவொணாத பாகமாக்கியது. எரிபொருள் வருகை யின்மை, வாகனங்கள் எடுத்துவரத் தடை நிலவிய காலங்களில் சைக் கிள் தான் கைகொடுத்தது.

இடம்பெயர்வுகள் நிலவிய காலங்களில் சைக்கிள் தான் பேரு தவியாக இருந்தது. தொழில் வாய்ப்பற்ற காலங்களில் சைக்கிள் தான் பலவித வியாபாரங்களைச் செய்யும் தொழில்களைக் கற்றுத் தந்தது.1990 களின் முற்பகுதியில் வவுனியாவிற்கு சைக்கிளில் சென்று பொருள் ஏற்றி வந்து விற்கும் வியாபாரமும் இருந்தது.

1990 இன் பின்பு யாழ்.பல்கலைக்கழகத்தின் அப்போதைய துணைவேந் தர் (V.C) வடமராட்சி வதிரி கிராமத்திலிருந்து தனது சைக்கிளில் யாழ்பல்கலைக்கழகத்திற்கு நாளாந்தம் 70 கிலோ மீற்றர் வரை பயணித்தது யாவரும் அறிந்த ஒன்றே.

பின்னாளில் மோட்டார் இயந்திர வாகனங்கள் பட்டி தொட்டி யெல்லாம் பரவிய போது அன்றைய பணக்கார வாகன மாகிய சைக்கிள் இப்போது ஏழைகளுக்கு மட்டும் கைகொடுக்கும் வாகனமாகிவிட்டது. சைக்கிள் மட்டும் வைத்திருப்பவர் ஏழை யாகப் பார்க்கும் நிலை வந்து விட்டது.

யாழ்ப்பாணத்தவரின் மோட்டார் வாகன வகையில் தட்டி

வான் என எம்மவரால் அழைக்கப்பட்ட Chavalot lorry இனது பாக மும் மறக்க முடியாதது.பொது மக்கள் போக்குவரத்திற்கு வடமாக ாணமெங்கும் பிரபலமான ஒன்றாக இது இருந்தது. சந்தை வியாபாரத்தில் பிரபலமான வாகனம் இது.

இதனை நாம் ஏற்கனவே தினக்குரல் வாசகர்களுக்கு தனியான தொரு அத்தியாயமாகத் தந்திருந்தோம். மோட்டார் கார்களின் வரு கையும் யாழ்ப்பாண வாழ்வியலில் மறக்க முடியாத ஒன்றாகும். பிரித் தானியாவில் உற்பத்தி செய்யப்பட்டு ஒக்ஸ்போர்ட், கேம்பிறிஜ், மொறிஸ் மைனர், மைனர், பரீனா A40, பென்ஸ் போன்ற கார்கள் இன்றளவும் நினைவில் கொள்ளப்படும் வாகனங்களாகும்.

இவற்றில் பல இன்றும் குடும்ப வாகனங்களாக வீடுகளில் இருப்பதைக் காண முடிகின்றது. திருமண வைபவங்களுக்கு மண மக்களை ஏற்றுவதற்கு இவை விருப்பப்பட்டு பிரபலமாக இருந்தது. பணக்கார வீடுகளில் குடும்ப வாகனமாக இவ்வகைக் கார்கள் இருந் தன. கோயில் திருவிழாக்களுக்கு இவற்றில் செல்வது நெடுங்காலம் சமூக அந்தஸ்தாக இருந்தது. மேல் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களும் நடுத்தர குடும்பங்களும் இக்கார்களில் செல்லும் காலமும் உருவாகியது. அப்போது மாலை 6.30 மணி, இரவு 9.30 மணி படக் காட்சிகளுக்கு இக்கார்களில் செல்லும் வாழ்வியல் இருந்தது.

தியேட்டர்களின் வெளி வீதியில் பல கார்கள் அணி வகுத்து நிற்க மக்கள் குதூகலித்து சினிமாப் படங்களைப் பார்த்த அக்காலம் ஓர் அற்புதமான பொற்காலம் தான். கேபிள் ரிவி, DVD பிளேயர், CD பிளேயர் தெரியாத, தொலைக்காட்சிப் பெட்டியைக் காணாத அக்கா லத்தில் தியேட்டர்களின் ரசிப்புத்தன்மை மிக உற்சாகமாக இருந்தது. கார்கள் கிராமத்தில் ஒன்றோ, இரண்டோ தான் இருக்கும்.

நன்மையா தீமையா கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருபவராக கார் உரிமையாளர் இருப்பார். வாடகைக்கு கார் விடுவோர் கிராமங்களில் யாவராலும் மதிக்கப்பட்ட மனிதராக இருந்தார். கார்க்கார இரத்தி னம், கார்க்கார அருள் என அவர்களின் பெயரும் அடையாள ஆவண மாக வாகனமும் இருந்தது.

- வேதநாயகம் தபேந்திரன் -

லண்டன் கார்கள் அலங்கரிக்கப்பட்டு ஆடம்பரமாக பலவித வர்ணப் பல்புகள் பூட்டப்பட்டு பவனி வந்தது. கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். மணமக்களை ஏற்றி இறக்குவதில் இந்தக் கார்கள் மதிப்பு மிக்கதாகத் திகழ்ந்தன. உள்நாட்டு யுத்தத்தின் காலத் திலும் இந்தக் கார்கள் பொதுமக்களுக்கு மிகச் சிறந்த சேவை-களை வழங்கியது.

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தம் வரையிலும் லண்டன் கார்களும் மக்களுக்கு உதவியது. ஜேர்மனிய வொக்ஸ்வேகன் காரும் யாழ்ப்பாண மக்களின் மிக விருப்பத்திற்குரிய வாகனமாக இருந்தது. ரக்சி வாடகை வாகனமாக தனிப்பட்டோர் வாகனமாக இருந்தது. மோட்டார் சைக்கிளின் வகையும் மக்களின் வாழ்வியல் பதிவிற்குரி யது. BSA எனப்படும் பெரிய அளவு மோட்டார் சைக்கிள் அந்நாளில் பிரபலமாக இருந்தது. அதனை இன்று நூதனசாலையில் தான் தேட வேண்டியுள்ளது.

ஸ்கூட்டர்களின் யுகமும் திரும்பிப் பார்க்க வேண்டிய ஒன்று. இத்தாலிய லம்பிறட்டா ஸ்கூட்டர்களும் பிறநாடுகளின் LML, Vespa ஸ்கூட்டர்களும் மக்களிடையே பெரு வரவேற்புப் பெற்றிருந்தது. பெரிய உத்தியோகம் பார்ப்போரின் அடையாள வாகனமாக, கௌர வம் மிக்கதாக ஸ்கூட்டர்கள் இருந்தன. அவற்றின் பாவனையை இன்று தேடித்திரிய வேண்டிய அளவுக்கு அருமையாகி விட்டது.

*1977* இல் தாராள பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக் கப்பட்ட போது ஜப்பானிய வாகனங்களின் வருகை வாகன யுகத் தில் பெரும் புரட்சியை உண்டு பண்ணியது. அரசுடமையாக மட்டும் அதுவரை இருந்த தரைவழிப் போக்குவரத்து தனியார் துறைக்கும் திறந்து விடப்பட்டது. அப்போது ஜப்பானிய தயாரிப்பு மினிபஸ்க ளின் வருகை பெரும் புரட்சியை உண்டு பண்ணியது.

கூடவே ஜப்பானியத் தயாரிப்பு மோட்டார் சைக்கிளான MD 90, CD 125, CD 200 ஆகியவற்றின் வருகை நாடு முழுவதிலும் நிகழ்ந்த போது இங்கும் நிகழ்ந்தது.

மினிபஸ்களின் வருகை வாகன உடமையாளர்களாக உள்ள புதுப் பணக்கார வர்க்கத்தை உருவாக்கியது. மினிபஸ் தொழிலைச் சரிவர நிர்வகிக்கத்தெரியாது நொந்து மிக வறுமைப்பட்டோருமி ருந்தனர். சந்நிதி முருகன், மாவைக்கந்தன், கலிகைக் கந்தன் என மினி பஸ்களின் பெயர்களால் அடையாளப்படுத்தப்படும் குடும்பங்கள் இருந்தன. மினிபஸ்களின் வருகை வடபகுதியில் மக்கள் நகர்வுகளைக் கூட்டியது. அரசபோக்குவரத்துத் துறையின் செல்வாக்கை மங்கச் செய்த மினிபஸ்களின் வருகையில் றோசா மினிபஸ்கள் பெருமளவில் புழக்கத்தில் இருந்தது. இவை அக்கால போக்குவரத்திரல் செல்வாக் குச் செலுத்தின.

மினிபஸ்களின் வருகை கிராமிய மக்களின் ராஜாவாக விளங் கிய தட்டிவானின் செல்வாக்கை பெருமளவில் குறைத்து விட்டது. கோயில் திருவிழாக்கள், சுற்றுலாப் பயணம் எனப் பொதுமக்களின் போக்குவரத்துகள் அதிகரித்தன.

அச்சுவேலி, கொடிகாமம், நெல்லியடி எனச் சில கிராமங்க ளில் வீட்டுக்கு வீடு மினிபஸ்கள் உள்ளன எனச் சொல்லுமளவுக்கு அவற்றின் வியாபகம் இருந்தது. உள்நாட்டு யுத்தத்தின் இடம் பெயர் வுக் காலங்களில் மினிபஸ்கள் டீசலுக்கு பதிலாக மண்ணெண்ணெய், மரக்கறி, எண்ணெய் கலந்து எரிபொருளாகப் பாவித்து ஓடின.

பொதுமக்களின் வாடகை வாகனமாக கார், ரக்சி என்பன பெருமளவில் ஓடியது. வைத்தியசாலைகளின் வெளியே இவை தான் அணி வகுத்து நிற்கும். பொது மக்களின் நடமாட்டமிகு முக்கிய இடங்களில் இவை நிற்கும் 1990 களில் ஆட்டோ (Auto) க்களின் வரவு நிகழ்ந்தது. மினிபஸ்களின் வரவு பெருஞ்செல்வாக்குச் செலுத்தியது போல ஆட்டோக்களின் வரவு கார், ரக்சி, என்பவற்றின் செல்வாக்கைக் குறைத்து விட்டது. கார், ரக்சி என்பனவற்றின் கட்டணங்களை விட ஆட்டோக்களின் கட்டணம் மிகக் குறைவானதால் பொது மக்கள் ஆட்டோக்களின் பாவனையை பெரிதும் விரும்பினார்கள்.

ஆட்டோக்கள் முச்சக்கரவண்டி (Three Wheelar) என அழைக் கப்பட்டு அவற்றுக்கான தரிப்பிடங்களும் தனியாக ஏற்படுத்

தப்பட்டன. கார்களை குடும்ப வாகனமாகக் கொண்டிருந்த வாழ்க்கை முறைமை மாறி ஆட்டோக்களை வைத்திருக்கும் பழக்கம் வந்தது.

*1977* திறந்த பொருளாதார யுகத்துடன் ஹைஏஸ் வான்களின் புழக்கமும் போக்குவரத்து துறையில் நிகழ்ந்தது. சிறிய சுற்றுலா, பாடசாலைச் சேவை என்பவற்றுக்கு இவ்வகை வான் (Van) பிரபலம் பெற்றிருந்தது. அக்காலத்தில் வந்த ஜப்பானியத் தயாரிப்பு வான்கள் இன்றளவும் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளது.

பஸ்களை எடுத்துக் கொண்டால் இந்தியத் தயாரிப்பு டாட்டா, அசோக் லேலண்ட் பஸ்களின் செல்வாக்கு இலங்கைத் தீவின் வாழ்வியலில் முக்கியம் பெற்றது. யாழ்ப்பாண வாழ்வியலும் இந்த பஸ்கள் மதிப்பு மிக்க பாகத்தைக் கொண்டிருந்தது.

*1990* ஜூன் முதல் *1996* இறுதி வரையில் வாகனங்களுக்கு எரிபொருள் பெற முடியாதநிலை யாழ்.குடாநாட்டில் வந்த போது மண்ணெண்ணெய், மரக்கறி எண்ணெய் கலந்து வாகனங்கள் ஓடின. வட பகுதியில் இராணுவக் கட்டுப்பாடற்ற ஏனைய மாவட்டங்களிலும் இதேநிலை *2002* ஏப்ரல் வரை தொடர்ந்தது. பெற்றோல் வரும், டீசல் வருமென யாரும் காத்திருக்கவில்லை. கிடைக்கின்ற மாற்று சக்தி வளங்களைப் பயன்படுத்தினார்கள்.

ஓடமும் ஒரு நாள் வண்டி யில் போகும். வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் போகும் என்பதைப் போல *1996* ஜூன் முதல் *2002* ஏப்ரல் வரை யாழ் குடாநாட்டுக்குத் தேவையான வாகனங்கள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டன. இந்த நிலை *2006* செப்டெம்பர் முதல் *2009* அக்டோபர் வரையிலும் இதே நிலை தொடர்ந்தது.

*1990* களில் தெற்காசிய சலுகை வணிக உடன்படிக்கை சார்க் (SAARC) அமைப்பு நாடுகளிடையே கைச்சாத்திடப்பட்டதும் இந்தியத் தயாரிப்பு வாகனங்கள் இலங்கையின் சந்தைகளில் செல்வாக்குப் பெற்றன. அதன் தாக்கம் யாழ்ப்பாணத்திலும் எதிரொலித்தது *2005* ஆம் ஆண்டிற்குப் பின்னர் சீன நாட்டு வாகனங்களும் எமது நாட்டிற்குள் வந்தன. ஆயினும் யாழ்ப்பாணத்தில் அது அத்தனை தூரம்


செல்வாக்குச் செலுத்தவில்லை.

ஒரு காலத்தில் லண்டன் தயாரிப்பு வாகனங்கள் ஓடின. பிற்காலத்தில் ஜப்பானிய வாகனங்கள் அதற்குப் பிறகு இந்திய, சீன வாகனங்கள் என வாழ்யவில் கோலத்தில் வாகனங்களும் மாறின.

நீண்ட தூரப் போக்குவரத்திற்கு சொகுசு பஸ்கள் 1990 ஜூன் வரை இருந்தது. 2002 ஏப்ரல் 08 கண்டி வீதித் தரைப்பாதை திறப்பின் பின் இது பகலிரவுப் போக்குவரத்தாக மீள வந்தது 2009 டிசம்பரில் தரைப்பாதை 24 மணி நேரமாகத் திறக்கப்பட்டதும் இரவுப் போக்குவரத்தில் இது பெரும் பங்கை வகிக்கின்றது.

1990 இல் தடைப்பட்ட சகல மாவட்டங்களுக்குமான பஸ் போக்குவரத்து இன்று மிகத் தாராளமாக நடைபெறுகின்றது. நாட்டின் அனைத்துப் பிரதேசத்திற்கும் பஸ்களில் போகக் கூடிய நிலைமை மீள வந்து விட்டது. யாழ்ப்பாண மனிதர்களின் இன்பத்திலும் துன்பத்திலும் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் பின்னிப் பிணைந்தவை. இவற்றின் ஞாபகங்களும் ஆவணப்படுத்தப்பட வேண்டியவையே.

**நன்றி–தினக்குரல் வார வெளியீடு 29-07-2012**



# உலக சாதனை முயற்சிகள் மீளும் நினைவுகள்

யாழ்ப்பாணத்தில் உலக சாதனை முயற்சிகளில் இளைஞர்கள் ஆவல் கொண்டு இருந்த காலமொன்று இருந்தது. இலங்கையின் பல பிரதேசங்களிலும் 1977 ஆம் ஆண்டைத் தொடர்ந்து வந்தது போன்ற முயற்சிகள் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டது. அதன் பாதிப்பு யாழ்ப்பாண இளைஞர்களையும் வசீகரித்தது சாதாரணமானது தான்.

1970 இல் ஆரம்பித்த இம்முயற்சிகள் 1980,81 களில் உள் நாட்டு யுத்தத்தின் தீவிர வரவைக் கூறிய முழக்கங்கள் வரை ஓரளவிற்கு நீடித்தது. இளைஞர்களின் நாகரீகப்பழக்க வழக்க அலை காலத்திற்குக்காலம் தோன்றும். அது போன்ற ஒன்றே இதுவுமென லாம். இதுவும் ஓர் காலத்தின் பதிவாகையால் இன்று மலர்கின்றது.

கின்னஸ் சாதனைப் புத்தகத்தைப் பற்றி அறியாதவர் யாருமில்லை எனலாம். உலக சாதனை ஒன்றை ஒருவர் நிகழ்த்துவாராயின் இலண்டன் கின்னஸ் சாதனைக் குழுவின் நடுவர்களால் நேரடியாகப் பரசீலிக்கப்படும். சரியான சாதனையாயின் அது கின்னஸ் சாதனைப்

புத்தகத்தில் இடம்பெறும்.

சாதனை முறியடிக்கப்பட்டு புதியசாதனை நிகழ்த்தப் படுமாயின் அதுவே இப்புத்தகத்தில் புதிதாகப் பதியப்படும். இன் றைய உலகில் நாளுக்குநாள் பலதுறைகளில் நிகழ்த்தப்பட்டு கின்னஸ் புத்தகத்தில் பதியப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

யாழ்ப்பாணத்திலும் உலகசாதனைக் காய்ச்சல் அதிகமாகவே நிலவியது. உலக சாதனைகளைக் கொச்சைப்படுத்துகிறேன் எனத் தப்பபிப்பிராயம் கொள்ள வேண்டாம். மு.நவரத்தினசாமி, ஆழிக் குமரன், ஆனந்தன், பரீட் நசீர் போன்ற சிலர் உண்மையாகவே உலக சாதனைகள் நிகழ்த்தினார்கள்.

ஆனால், ஊருக்கு ஊர் உலகசாதனை முயற்சி என்ற பெயரில் இளைஞர்களின் மேடை ஆட்டம் தான் ருவிஸ் நடனம் எனப் பர வலாக நிகழ்ந்தது. 1970 களின் மத்திய காலப்பகுதியில் உலக சாதனை முயற்சி என்ற அலையினுள் இளைஞர்கள் சிலர் அகப்பட்டுக் கொண் டனர். இவ்வலை 1980 இன் தொடக்கத்துடன் அடங்கிப் போய்விட் டது.

உண்மையாகவே நிகழ்த்தப்பட்ட உலக சாதனையாளர்களை முதலில் பார்ப்போம். வடமராட்சியின் தொண்டமானாற்றை சேர்ந்த மு.நவரத்தி னசாமி என்பவர் இலங்கையையும் இந்தியாவையும் குறு- கலாகப் பிரிக் கும் ஏறத்தாழ 30 கிலோ மீற்றர் தூரமுள்ள பாக்கு நீரி ணையை நீந்திக் கடந்தார். இது ஓர் உலகசாதனையாகப் பதிவு செய்யப்பட்டது.

சில ஆண்டுகளின் பின்பாக வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆழிக்குமரன் ஆனந்தன் என்பவரால் பாக்கு நீரிணை நீந்திக் கடக்கப் பட்டது. மு.நவரத்தினசாமியை விடக் குறைந்த மணித்தியாலங்க ளில் நீந்திக் கடந்து புதிய சாதனை நிகழ்த்தப்பட்டது. இவரது கடல் தொடர்பான சாதனையைப் பாராட்டி வீரகேசரி பத்திரிகை நிறுவ னம் ஆழிக்குமரன் என்ற பட்டத்தை வழங்க அதுவே அவரை அடை யாளப்படுத்தும் ஆவணமாகிவிட்டது.

- வேதநாயகம் தபேந்திரன் -

ஆழிக்குமரன் ஆனந்தன் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையின் பல பாகங்களிலும் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். இலங்கையின் உலக சாதனையாளர்களர்களில் இவர் முதன்மை வாய்ந்தவராகத் திகழ்ந்தார். ஒரு சமயம் கொழும்பில் வீதி விபத்தொன் றில் சிக்கி உடலெங்கும் பாரதூரமான காயங்கள் ஏற்பட்டது. அதி லிருந்து ஓரளவு மீண்ட பின்னரும் சில சாதனைகளை நிகழ்த்தினார்.

பின்னாளில் லண்டன் தேம்ஸ் நதியை நீந்திக் கடக்கும் உலக சாதனை முயற்சியின் போது மரணத்தை தழுவி உலக சாதனை ரசி கர் களையும் குறிப்பாக இலங்கைத் தமிழ் மக்களையும் சோகத்தில் ஆழ்த்தி விட்டார்.

யாழ்ப்பாண நகரத்தில் முஸ்லீம் மக்கள் ஒரு காலத்தில் அதிகம் பேர் செறிந்து வாழ்ந்த ஐந்து சந்திப் பிரதேசத்தில் பரீட் நசீர் எனும் உலக சாதனை இளைஞன் தோன்றினான். இவரும் உலக சாதனை முயற்சிகள் பலவற்றைச் செய்தார். அப்பிரதேசத்திலிருக்கும் ஒஸ்மா னியா கல்லூரி மைதானத்தில் கண்ணாடிக் கூண்டுக்குள் விசப்பாம்பு கள் பலவற்றுடன் பல நாட்கள் இருந்து சாதனை படைத்தார்.

இச்சாதனையைப் பார்க்கவென அக்காலத்தில் வடபகுதியின் பல பிரதேசங்களிலிருந்தும் பொது மக்கள் ஒஸ்மானியாக் கல்லூ ரியை நோக்கிக் கூடுவார்கள். ஐஸ்கிறீம் கடைகள், கடலை கச்சான், இனிப்பு பண்டங்கள் ஆகியவற்றை விற்பனை செய்யும் கடைகள் பல அங்கே முளைத்துவிடும். பொதுமக்கள் இரவு வேளைகளில் மிகப் பெருமளவில் கூடி இச்சாதனை முயற்சியை பார்ப்பார்கள். குறுகலான முஸ்லிம் தெருக்கள் சன வெள்ளத்தில் ஆழ்ந்து இருக்கும்.

கிராமப் புறங்களிலிருந்து வருவோர் பரீட் நசீரின் சாதனை முயற் சியைப் பார்த்துவிட்டு மனோகரா தியேட்டரிலும், ஏனைய தியேட் டர்கள் ஏதாவதொன்றிலும் தமக்கு விருப்பமான படமொன்றை 6.30 மணிக் காட்சியாகப் பார்ப்பார்கள்.

தியேட்டர்களுக்கிருந்த கவர்ச்சியும் மக்கள் அவற்றில் லயித்து வாழ்ந்த சந்தோசமான பொற் காலங்களும் அவை. பரீட் நசீரால் ருவிஸ்

நடனமாடுதல், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சைக்கிளில் பின்னோக்கி ஓடுதல், வேகநடை போன்றபல சாதனைகள் நிகழ்த் தப்பட்டன. அவற்றை மக்கள் பல்லாயிரக் கணக்கில் ஆரவாரமாக ரசித்தார்கள்.

*1990* ஆம் ஆண்டு இடப் பெயர்வுடன் புத்தளம் சென்ற இவர் சில ஆண்டுகளுக்கு முன்னர் இயற்கை எய்திவிட்டார். பரீட் நசீரின் ருவிஸ் நடனத்தைப் பார்த்த இளைஞர்கள் பலர் தமது ஊர்களிலும் சனசந்தடி மிக்க இடமொன்றில் மேடையமைத்து சாதனை செய்ய முற்பட்டனர்.

இந்த அலை சில காலம் நீடித்தது. உயரமான மேடையொன்று போடப்பட்டிருக்கும். சாதனை நிகழ்த்த விரும்பிய இளைஞனுக்கு மாலை அணிவித்து, மங்கல விளக்கேற்றி வைபவமொன்று வைத்து ஆரம்பிப்பார்கள். அவர்களது ஊரவர்கள், மிக நெருங்கிய உறவினர் கள் சைக்கிள் போன்ற சில பரிசுப் பொருள்களை மேடையின் ஒருபுறத் தில் கட்டித்தூக்கி இருப்பார்கள்.

ஒலிபெருக்கி, பொக்ஸ் செற்றில் அக்காலத்தின் பிரபலமான சினிமாப் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்கும். பொது மக்கள் ஆர வாரமாகக் கைதட்டி உற்சாகப்படுத்துவார்கள். அந்த இளைஞனும் ருவிஸ் நடனமாடுவார். இரவு பகலாக நித்திரை விழித்து ஆடுவார். ஒரு நாள் சென்ற பின்பு அவரில் களைப்பும் தளர்வும் தெரியும்.


மாலை, இரவு வேளைகளில் தான் மக்கள் பெரும் கூட்டமாக் கூடி ரசிப்பார்கள். மற்றும்படி சனத்திரளைக் காண்பது அரிது. ருவிஸ் நடனமாடி நிறைவு செய்ய இயலாமல் மேடையில் மயக்கமடைந்து விழுந்து நிறுத்தியவர்களும் உண்டு.

இளைத்துக் களைத்து கண்கள் சிறுத்து ஆடிமுடித்து வெற்றித் திருநாள் கொண்டாடியவர்களும் உண்டு. பரவலாக எல்லா இடமும் ருவிஸ் நடனமாடுதல் நடைபெற நாளாவட்டத்தில் பொது மக்களு க்கு இதன் மீதான கவர்ச்சி மிகவும் குறைந்தது. இதனால் இம்முயற்சி களும் அடியோடு நின்றுபோனது.

- வேதநாயகம் தபேந்திரன் -

*1980 களின் ஆரம்பத்தில் யுத்தத்தின் சத்தங்கள் மெல்ல மெல்லக் கேட்க ஆரம்பித்ததும் பிரதான காரணமெனலாம். யாழ்ப்பாணத்தின் நினைவுப் பக்கங்களில் இந்த இளைஞர்களின் முயற்சிகள் எல்லாம் ஆவணப்படுத்தப்படவில்லை. சிலரின் சாதனைகள் மட்டும் பெயர் குறித்துக்கூற முடிகின்றது. இளைஞர் தலைமுறை ஒன்றின் உற்சாக முயற்சிகள் வரலாற்றில் உச்சரிக்கப்பட வேண்டும். வாழ்வியல் வரலாற்றில் இவர்களின் தடங்களும் தேடிப் பாதுகாக்கப்பட வேண்டும்.*

**நன்றி – தினக்குரல் வாரவெளியீடு – 05.08.2012**



# யாழ்ப்பாணத்தில் சம்போ இல்லாத காலம்

சம்போ (Shampoo) எனும் சொல் தெரியாதவரே இல்லையெனலாம். ஆங்கில மொழிச் சொல் இது. தலைமுடியின் அழுக்கைப் போக்கி முழுகுவதற்குப் பாவிக்கும் ஒரு வகை களித் தன்மையுள்ள திரவம் இது. சம்போவில் பல வகைகள் உள்ளது நீங்கள் யாவரும் அறிந்த ஒன்று தான்.

சம்போவின் வரவு 1970 களின் நடுப்பகுதியில் தான் எமது நாட்டில் நிகழ்ந்தது. அப்படியாயின் அதற்கு முன் எமது நாட்டு மக்கள் தலை முழுக எதைப் பாவித்தார்கள். இயற்கையில் கிடைத்-தவற்றைப் பயன்படுத்தி இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தார்கள்.

உடலைக் குளிர்மையாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும் இயற்கையின் வரப்பிரசாதங்களைப் பயன்படுத்தினார்கள். வடபுல யாழ்ப்பாண மக்களும் இயற்கையுடன் இணைந்து தமது உடல் தூய்மையைப் பேணினார்கள். இயற்கையுடன் இணைந்ததாக வாழ வேண்டுமென் பதில் பழமை பேணுவதில் பெரு

விருப்பம் கொண்டவர்கள்.

அவர்களது முன்னைய வாழ்க்கை முறையை வாசிக்கும் போது சித்த மருத்துவக் குறிப்பு ஒன்று எழுதப்பட்டுள்ளதாக சிலர் நினைக் கக் கூடும். ஆனால், இவற்றை அறியாத தலைமுறை ஒன்று அறியவும் வேண்டும். இம்முறைகளை இன்றும் ஒரு சிலர் பாவித்து இயற்கையுடன் இணைந்தே வாழ்கின்றார்கள்.

சம்போ வரவு இல்லாத காலத்தை நோக்கிப் பயணிப்போம். சிகைக்காய், வெந்தயம், பயறு என்பவற்றை தண்ணீரில் ஊற வைத்து நன்கு ஊறிய பின் அம்மியில் அரைத்து தலையில் வைத்து முழுகு வார்கள். இவற்றை நன்கு ஊற வைத்தபின் அவித்து அரைத்து தலை யில் வைத்து முழுகுவார்கள். இவற்றை வெய்யிலில் நன்கு காயவைத்து அதனுடன் தேசிக்காய்க் கோதையும் காயவைத்து மில்லில் கொடுத்து அரைத்து பொடியாக்கி தகர டப்பாவில் போட்டு வைத்து முழுக் குக்கு எடுப்பார்கள்.

இவ்வாறு முழுகுவதற்கு முன்பு முதல் நாள் நல்லெண் ணெயை தலையில் வைத்து அடுத்த நாள் முழுகும் வாடிக்கையும் இருக்கின்றது. சனிக்கிழமைகளில் காலை எழுந்து உடல் முழுவதும் நல்லெண்ணெய் தேய்த்து, தலையிலும் நிறைய நல்லெண்ணெய் பிரட்டி, வாயிலும் சிறி தளவு நல்லெண்ணெய் விட்டுக் கொப்பளிப் பார்கள்.

இது உடல் சூட்டைத் தணிக்க உதவும். நல்லெண்ணெயால் குளிர்ந்த உடலில் முழுகும் பதார்த்தங்களை வைக்கும் போது உடல் முழுமையாகவே குளிர்மையடையும். சனிக்கிழமைகளில் ஓய்வாக இருந்து முழுகிய பின் ஆட்டிறைச்சி உண்பது விரும்பப்படும் பாரம்பரி யமாக இருந்தது. இப்போது இது அருகிவிட்டது. புதன்கி ழமைகளிலும் தலை முழுகுதல் வழக்கம் அன்றும் இன்றும் இருக்கின் றது.

யாழ்ப்பாணத்தில் கடாய் வெட்டி இறைச்சி பங்கு போடுதல் மிகப் பிரசித்தமான ஒன்று. புலம்பெயர் நாடுகளிலிருந்து வருபவர்க ளுக்கு கடாய் வெட்டி விருந்து படைப்பதன் நாட்டத்தைப் பார்த்தால்

இதன் மவுசு தெரியும். இன்றும் ஆட்டிறைச்சி சாப்பிடும் நிகழ்வை முழுக்குச் சாப்பாடு என அழைக்கும் மரபு தென்மராட்சி போன்ற பிரதேசங்களில் தொடர்கிறது.

சிகைக்காயைச் சீயாக்காய் எனத் தான் பேச்சுவழக்கில் அழைப் பார்கள்.

இதற்கு அடுத்ததாக அரப்பு, தேசிக்காய் என்பவற்றை நீரி லிட்டு அவித்து தலையில் வைத்து முழுகும் முறை பிரபலமானது. அரப்புடன் மாங்காய் அவித்து முழுகும் முறையும் சில பிரதேசங்க ளில் மாங்காய் கிடைக்கும் காலங்களில் கடைப்பிடிக்கப் படுகிறது. அவ்வழக்கம் இன்றும் தொடர்கிறது.

அதேபோல புளியங்காய் கிடைக்கும் காலங்க ளில் அதனை அரப்புடன் சேர்த்து அவித்து முழு குதலும் வழக்கில் இருந்தது. இன்றும் சிலரால் கடைப்பிடிக்கப்படுகின் றது. இம்முறையும் மிகப் பெருமளவில் வழக்கில் இருக்கின்றது. இன்னமும் தொடர்கிறது.

அரப்புடன் தேசிக்காய் அவித்து முழுகுதல் பெருமளவில் கடைப்பிடிக்கப்படுகின்றது. புல்லாந்தி இலையைப் பச்சையாக எடுத்து அம்மியில் அரைத்து தலையில் தேய்த்து முழுகினார்கள். இவ் இலை களைக் காய வைத்து அரைத்த பின் முழுகுதலும் நிகழ்ந்தன.

உடலுக்கும் குறிப்பாக கண்ணுக்கும் குளிர்மை தருவதாக இந்த முழுகுதல் இருக்கும். மருத மர இலைகளை எடுத்து நன்கு காயவைத்து பின்அவற்றை உரலில் இடிப்பார்கள். இடித்து வரும் பொடியுடன் வெந்நீரைச் சேர்த்து பிசைந்து வரும் களித் தன்மையை தலையில் வைத்து முழுகுவார்கள்.

சிலபேர் இதனுடன் வெந்தயம் சேர்ப்பார்கள். வெந்தயம் நன்கு ஊறி அரைக்கப்படும் போது நுரைக்கும் தன்மை கொண்ட-தாக இருக்கும். இதனால் அனேகமான உள்ளூர் இலைவகைளுடன் இதனைச் சேர்ப்பார்கள்.

குழந்தைப் பிள்ளைகளுக்கு முழுகவார்ப்பதற்கு இப்போதை யதைப் போல பேபி சம்போ அப்போது கிடையாது. "கறுத்தப் பூக் கொடி" எனும் ஒரு வகை செடியின் இலையை எடுத்து பச்சையாகவே அதனை இடித்து அதன் சாற்றை குழந்தையின் உடல் எங்கும் தடவு வார்கள். பின் தலையில் சாற்றை வைத்து முழுக வார்ப்பார்கள்.

அதேபோல், முள் முருங்கை இலையில் முற்றாத பிஞ்சு இலைகள், குருத்தை எடுத்து அதனை உரலில் இடித்து அல்லது அம்மியில் அரைத்து சாற்றை எடுப்பார்கள். அதனையும் குழந்தை யின் உடல்,தலையில் தடவி முழுக வார்ப்பார்கள். குழந்தைகளுக்கு குளிர்மையையும் ஆரோக்கியத்தையும் தரும் இம்முறைகள் இன்ன மும் ஓரளவு புழக்கத்தில் உள்ளன. மாதுளம்பழக் கோதை எடுத்து அரப்புடன் சேர்த்து தலையில் வைத்து முழுகினார்கள்.

அரப்பு என்பது கிடைக்கத்தக்க உள்ளூர் மூலவளங்களுடன் சேர்த்து முழுகும் பிரதான பொருளாக அன்றும் இன்றும் தொடர்கி றது. பனம்பழம் (பனங்காய் என்பது பேச்சுவழக்கு) கிடைக்கும் காலங்களில் அதன்களியை எடுத்து தலையில் தேய்த்து அழுக்கைப் போக்கி முழுகும் முறையும் சில பிரதேசங்களில் இருந்தது.

சொறி, சிரங்கு நோய் வந்தவர்கள் வேப்பிலைத் துளிரை எடுத்து அரைத்துக் கூழாக்கி தலை முதல் உடம்பெங்கும் நன்கு பூசி முழுகினார்கள். அதேபோல், புளியமர இலைகளை அவித்து உடம்பெங்கும் தடவி முழுகினார்கள். இம்முறைகளைக் கடைப்படிக் கும் போது சிரங்கு நோய் நீங்கியது. இம்முறைமை இன்னமும் சிறித ளவாயினும் தொடர்கிறது.

ஆவரச மர இலைகளை எடுத்து தண்ணீரில் நனைத்து அவற்றை உரலில் இட்டு இடிப்பார்கள். அது நிறையச் சாறாக வரும். அச்சாற்றை தலையில் வைத்து முழுகும் போது கண்ணுக்கு குளிர்மையாகவும் உடலுக்கு தனித் தெம்பையும் தரும்.

நெருஞ்சிச் செடியின் இலைகளில் முள் வைத்து நன்கு முற்றுவதற்கு முன் பிஞ்சு இலைகளைப் பிடுங்குவார்கள். அவ்

இலைகளுடன் சிறிது தண்ணீர் சேர்த்துப் பிசைவார்கள். அப்போது அது நுரைத்து சாறாக வரும். அதனையும் தலை முழுகப் பயன்படுத் துவார்கள்

பொக்குளிப்பான் நோய் வந்தோர் முழுகுவதற்கு ஆனை நெருஞ்சி இலைகளை பிஞ்சு நிலையில் எடுத்து இடித்து முழுகுவார்கள். உட லின் வெம்மை தணித்து ஆரோக்கியத்தை கொடுக்கும்.

செவ்வரத்தம் பூ மரங்கள் இல்லாத யாழ்ப்பாணத்தவர் வீடுகளே அன்றும் இன்றும் இல்லையெனலாம். செவ்வரத்தம் பூக்கள், இலைகளைப் பிடுங்கி சிறிது தண்ணீர் சேர்ப்பார்கள். பின்பு அவற்றை உரலில் இடித்தோ, அம்மியில் அரைத்தோ நன்கு சாறாக்குவார்கள். நன்கு தலையில் வைத்தும் உடம்பெங்கும் தடவி முழுகுவார்கள். இம்முறையும் மிகப் பெருமளவில் கடைப்பிடிக்கப்பட்ட ஓர் முறை யாக அன்று இருந்தது. இன்னமும் ஓரளவு தொடர்கின்றது.

சம்போ வகைகள் பெருமளவு வருவதற்கு முன்பு யாழ்ப் பாணம் பண்ணையிலே தேவன் உற்பத்திகள் (Thevan Prod ucts) எனும் நிறுவனம் மிகப் பிரபலமாக இயங்கியது. இந்நிறுவனம் தயாரித்த சிகைக்காய் பவுடர் மிகப் பிரபலமாக இருந்தது. அதே போல, உள்ளூர் தயாரிப்பு நிறுவனங்கள் பல இயங்கின.

1975 ஆம் ஆண்டில் சம்போ மெல்ல மெல்ல மக்களுக்குள் ஊடுருவத் தொடங்கியது 1977 ஆம் ஆண்டின் திறந்த பொருளாதார யுகத்தின் வருகையுடன் சம்போவும் பேரெழுச்சி கொள்ளத் தொடங்கி யது. பல்தேசியக் கம்பனிகளும் இந்தியக் கம்பனிகளும் இத்துறையில் பெருமளவு முதலீடுகளைச் செய்தன.

மக்களைக் கவரும் பிரமாண்டமான விளம்பரங்கள் செய்யப்பட்டன. மக்கள் ஈர்க்கப்பட்டார்கள். அடிக்கு மேல்அடித் தால் அம்மியும் நகராதா என்ன. மக்கள் சம்போவில் வசியப்பட்டார் கள். சும்மா வசியம் இல்லை. பெ...ரு...ம்... வசியப்பட்டார்கள்.

மிகப் பெருமளவானோர் முதல் சொன்ன இயற்கைப் பொருட்

களின் முழுக்கு முறையைக் கைவிட்டார்கள். சம்போவிடம் தஞ்சம் புகுந்தார்கள்.


ஆற அமர இருந்து வாழ்ந்த வாழ்க்கை தொலைந்து இயந்திர கதியில் அகப்பட்ட மனிதர்களுக்கு சம்போ நல்ல நிவாரணமாக இருந்தது. பாரம்பரிய ஆரோக்கியம் தரும் முழுக்கு முறையை கடைப்பிடிக்க மூலப் பொருட்களைத் தேடிப் போக நேரமும் இல்லை. அவையும் குடும்பச் சூழலில் கிடைப்பது குறைந்தது.

ஆனாலும் இயற்கையுடன் இசைந்து வாழ விரும்பும் மக்களின் தொகை இருக்கத்தான் செய்கின்றது.

யுத்த காலத்தில் சம்போ கிடைக்க தடையேற்படும் போது மக்கள் இயற்கை முழுக்கு முறைக்குத் தேடிப் போனார்கள். நோய் வரும் போதும் இயற்கையுடன் இணைய விரும்பினார்கள். பாரம்பரிய முழுக்கு முறைகளை விடாது அதனை மட்டும் கடைப்பிடிப்போரை பழசு, பழம் பஞ்சாங்கம் என விளிக்கும் வாழ்வியல் கோலமும் வந்தது.

கால மாற்றம் மனித வாழ்வியல் முறைகளில் பல பழக்கவழக்கங்களைப் பெருமளவில் தகர்த்தெறிந்து வருகின்றது. எப்படி, எப்படியெல்லாம் வாழ்ந்தோமென தேடிப் பார்க்கும், தேடிப்போகும் ஆர்வலர்களுக்கு இவ்வாழ்வியல் முறைமை ஆவணமாக இருக்குமென நம்புகிறேன்.

**நன்றி– தினக்குரல் வாரமலர் 12.08.2013**



# வானொலியும் யாழ்ப்பாணத்தவரும்

யாழ்ப்பாணமக்களின் உயிருடனும், உணர்வுடனும் ஒருகாலம் இரண்டறக் கலந்திருந்த ஓர் இலத்திரனியல் உபகரணம் வானொலி. எம்மவருக்கு மட்டுமல்ல, மனிதகுலம் யாவற்றுக்கும் பெரும் வரப்பிரசாதமாக மிக நீண்டகாலம் நிலைத்துள்ளது.

உலகக்கண்டு பிடிப்புகளில் தலையாய பொருட்கள் சிலவற்றில் வானொலியும் ஒன்று. அதனால் தான் வானொலியைக் கண்டுபிடித்தது மார்க்கோணி என குழந்தைப்பிள்ளைகளும் கூறுகின்றது. இன்று கைத்தொலை பேசியிலேயே வானொலிவந்து விட்டது. வானொலி வடிவங்களின் வருகையை முதலில் பார்ப்போம்.

ஆரம்பத்தில் வந்த வானொலிப்பெட்டி மிகப்பெரிய அளவில் இருந்தது. பாரமானதாகவும் இருந்தது. அதனை தூக்கிவைப்பது கடினமானதாக இருந்தது. வானொலி எனத்தூய தமிழ் இருந்தாலும் றேடியோ (Radio) என்ற ஆங்கிலச்சொல் தான் பரீட்சயமானதாக இருந்தது. அச்சொல்லையே நாமும் இனிப்பாவிப்போம். அந்த நாளில்

றேடியோவில் அலைவரிசைகள் சிற்றலையில் (SW - Short Wave) மட்டுமே இருந்தது. அதனால் றேடியோ நிகழ்ச்சிகளைக் கேட்ப தற்காக உயரப்பனை, உயரவேப்பமரம் என ஏதாவதொன்று பார்த்து அன்ரனாகட்டி வயர் கொண்டு வந்து தொடுத்தார்கள். றேடியோ அலைவரிசை இடையிடையே தெளிவற்று இருந்தாலும் அதனைக் கேட்பது பேரானந்தமாக இருந்தது.

அக்காலத்தில் பிலிப், குரூண்டிக் ஆகிய றேடியோக்கள் தான் பிரசித்தமானவை. இங்கிலாந்து நாட்டுத்தயாரிப்பு (Made In England) பார்த்து வாங்குவார்கள். இங்கிலாந்து பொருள் என்றால் தான்மதிப் பார்கள். சற்றுக்காலத்திற்கு பின்பாக ட்ராசிஸர்வகை றேடியோக் கள் வந்தது. 1970 களில் இலத்திரனியல் றேடியோ வந்து புதுப்புது வடிவங்களை எடுத்தது.

பிலிப், குரூண்டிக் றேடியோக்கள் வந்த காலத்தில் பணக்காரர் மட்டுமே றேடியோ வைத்திருந்தார்கள். அக்கால வாழ்க்கைமுறை அப்படித்தானிருந்தது.

றேடியோ வைத்திருந்தோர் பெரும் சத்தத்துடன் போடு வார்கள். அதில்பாட்டு, செய்தி, கலை நிகழ்வுகளைக் கேட்க ஊரவர்கள் ஒன்று கூடுவார்கள். சில இடங்களில் வாசிகசாலை எனப்பட்ட சனசமூக நிலையங்களில் றேடியோ ஒன்று இருக்கும். நாளாந்தம் குறித் தசில நேரங்களில் றேடியோ போடப்படும்.

கிராம முன்னேற்றச் சங்கக்கட்டிடங்கள் சிலவற்றிலும் றேடியோ இருந்தது. இவையும் குறித்த சில நேரங்களில் றேடியோ நிகழ்வுகளைப் போட்டது. அக் காலத்தில் இப்போதையதைப் போல பரவலாக மின்சாரமில்லை. அதனால் பற்றறியில்தான் றேடியோ போடப்பட்டது.

யாழ்நகர சுப்பிரமணியம் பூங்காவில் உயரக்கட்டிடமொன் றில் றேடியோ ஒருகாலம் இருந்தது. உள்ளூராட்சிசபைகள் பாரா ளுமன்றத். தேர்தல் நடைபெற்றால் தேர்தல் முடிவுகளைக்கேட்க வாசிகசாலை, கிராமமுன்னேற்றச் சங்கங்களுக்கு முன்பாகத்தான் ஊர்

மக்கள் கூடுவார்கள். தேர்தல் முடிவுகளைக் கேட்பார்கள்.

தமக்குப் பிடித்தமான கட்சி அல்லது நபர்கள் வெற்றி பெற்றால் அங்கேயே வெற்றி ஆரவாரம் நடக்கும். பட்டாசு கொளுத்தலும் நடக்கும். தேர்தல் திருவிழாகளைகட்டும். சிற்றலை (SW) வரிசைகள் மட்டும் வானொலி கேட்டமக்களுக்கு 1976 ஆம் ஆண்டில் யாழ். மண்டை தீவில் இலங்கை வானொலியின் அலைவரிசைக் கோபுரம் அமைக்கப் பட்டது. பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது.

அது முதல் மத்திய அலைவரிசையில் (Medium Wave - MW) றேடியோ கேட்கும் வசதி வந்தது. இப்போது மிகத்தெளிவாக றேடியோ நிகழ்வுகளை கேட்க முடிந்தது. 1983 யூலை உள்நாட்டுப் போர் பெரும் போராக வெடிக்க ஆரம்பித்த போது மண்டைதீவு உப-அஞ்சல் அலுவலகம் மூடப்பட்டது.

அது இன்று வரையும் திறக்கப்படவே இல்லை. மண்டை தீவு நிலையம் இயங்கிய போது தான் யாழ்ப்பாணத்தவரின் வானொலியின் பொற்காலம். அக்காலத்தில் றேடியோ பணக்காரவீடுகளின் சொத்து என்ற நிலமை மாறி நடுத்தர வர்க்க வீடுகளுக்கும் வந்துவிட்டது.

பின்னாளில் ஏழைகளின் தொடர்பு சாதனமென்ற நிலையை றேடியோ பெற்றது. றேடியோ சிலோன் (RaioCeylon) என அழைக்கப்பட்ட இலங்கை வானொலி பொதுமக்களின் உயிருடன் உணர் வுடன் இரண்டறக் கலந்தது.

அதிகாலையில் பக்திப் பாடல்கள் தேநீர்க் கடைகளில் ஒலிக்கும். பக்தி பூர்வமாக பொழுது விடியும். கே.பி.சுந்தராம்பாள், சீர்காழி கோவிந்தராஜன், ரி. எம்.சௌந் தர்ரஜனின் பக்திப்பாடல்கள் இறை உணர்வைத்தரும். காலையில் செய்தி கேட்பார்கள். பின்னர் பாடல்கள் ஒலிக்கும்.

மதியம் 12.45 மணிக்கு செய்தி ஒலித்த பின்னர் கொழும்பு புறக் கோட்டைச் சந்தையில் மரக்கறிகள் என்ன விலைகளில்

அன்றையதினம் விற்கப்படுகின்றதெனக் கூறுவார்கள். வெங்காயம், செத்தல் மிளகாய் போன்றவை நல்லவிலை போனால் அன்றைய இரவு கொழும்புக்குச் செல்லும் லொறியில் மூடைகட்டி அனுப்புவார்கள். விலை மலிவாயின் நல்ல விலை வரும் நாள் வரையில் பொறுத்திருப்பார்கள்.

மாலை 6 மணிக்கு செய்தி இசை ஒலிபரப்பாகப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் படிக்க ஆயத்தப்படுத்துமாறு கூறுவார்கள். கடிகாரம் பார்க்காமல் செய்தி இசைவழி நடத்தியது. அக்காலச் செய்தியின் ஆயத்த இசை மிகவசீகரமாக இருக்கும். ஒவ்வொரு செய்தி அறிக்கைக்குப் பின்பாகவும் மரண அறிவித்தல் ஒலிபரப்பாகும். குறிப்பாக இரவு 9 மணிச் செய்தியின் பின்னர் ஒலிபரப்பாகும் மரண அறிவித்தலை உன்னிப்பாக கேட்பார்கள்.

கொழும்பில் இருந்த ஒருவர் தமது நெருங்கிய உறவினர் ஒருவர் இறந்ததை அறிந்தால் அதிகாலை 5.30 மணிக்கு புறப்படும் யாழ்தேவி புகையிரதத்தை பிடித்து மதியம் 1.30 மணிக்கு யாழ்ப்பாணம் வந்து விடுவார். அக்காலத்தில் பாடசாலை உயர்தர வகுப்பில் பௌதீகவியல் (Physics) கற்பிக்கும் ஆசிரியர்கள் வானொலியை தயாரிப்பது தொடர்பான செய்முறைப் பயிற்சிகளை வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

றேடியோ சிலோனில் சனிக்கிழமைகளில் 3 சின்னச் சின்ன நாடகங்கள் போடுவார்கள். இவை அக்கால வாழ்வியல் சூழ்நிலைகளை படம்பிடித்து காட்டும். நகைச்சுவை ததும்பும் நாடகங்களும் இருக்கும்.

1977 ஆம் ஆண்டைத் தொடர்ந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் வாய்ப்பு பெற்றுச் சென்ற யுகம் உருவானது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு தமது மகனை அழைத்துச் சென்று ஏஜென்சிக்காரனிடம் பணம் கட்டிவிமான மேற்றிவிட்டு தந்தை யாழ்ப்பாண வீட்டிற்குவந்தார். அவர் வருவதற்கு முன்பதாகவே விமானமேறிய மகன் வீட்டிலிருப்பதைக்கண்டு அதிசயப்பட்டார். என்னவெண்டு கேட்ட போது ஏஜென்சிக்காரன் கொழும்பில் பிளேன் ஏற்றி விட்

டான். ஒரு மணித்தியாலம் கழியபிளேன் இறங்கிய போது பனைகள் தெரிந்தன. என்ன வென்று பார்த்தால் பலாலி எயார்போர்ட் பேசா மல் வீட்டை வந்திட்டன். ஏஜென்சிக்காரன் ஏமாத்திப் போட்டான் என அழும் நாடக மொன்று நினைவில் நிற்கிறது. றேடியோவில் 1000 நாடகங்கள் வரை எழுதி மக்கள் மத்தியில் பிரபலம் பெற்றவராக அரா லியூர் ந. சுந்தரம்பிள்ளை விளங்கினார். வானொலி தமிழ் நாடகத்தின் விற்பன்னராகத் திகழ்கின்றார்.

வெள்ளிக்கிழமை சைவப்பிரசங்கம் றேடியோவில் பக்திரசத் துடன் கேட்பார்கள். அதுபோல கிறிஸ்தவ, இஸ்லாமிய நிகழ்ச்சிகளும் கேட்பார்கள். ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சிறுவர்களுக் கான வானொலி மாமா எனும் நிகழ்ச்சியை சிறுவர்கள் மெய்மறந்து கேட்பார்கள். அதனைக்கேட்டு ரசித்து சிறுசிறு ஆக்கங்கள் எழுதி அனுப்பியசிறார்கள் சிலர் பின்னாளில் பெரிய எழுத்தாளர்களாகப் பரிணமித்தார்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகல் 3.30 மணிக்கு ஒலிபரப்பான தணியாததாகம் நாடகம் எம்மவரை மயக்கி வசீகரித் துக் கட்டிப்போட்டு வைத்தது.

அன்றைய நாட்களில் அந்த நேரத்தில் யாழ்ப்பாண வீதிக ளில் ஆள்களைப்பார்ப்பது அபூர்வம். தணியாத தாகத்துடன் மனம் ஒன்றித்துப் போனார்கள். அந்த நேரத்தில் வீட்டிற்குயாரும் விருந்தி னர்கள் வந்தால் கூடவெறுப்புடன்தான் பார்ப்பார்கள். அதில் நடித்த வரணியூரான், சில்லையூர் செல்வராசன் போன்றோர் மிகப்பெ ரும் புகழ் பெற்றார்கள்.

தணியாத தாகத்தை அடுத்து இரை தேடும் பறவைகள் எனும் தொடர் நாடகம் ஒலித்தது. அதனையும் மிக்க ஆர்வத்துடன் கேட் பார்கள். அடுத்து ஞாயிறு விரைவாக வந்துவிட வேண்டும் என்று துடிப்பார்கள். நாடகம் கேட்பதில் அவ்வளவு கொள்ளைப்பிரியம்.

யாழ்ப்பாணத்துப் பிரபல கோவில்களின் திருவிழாக்கள் எல் லாம் றேடியோவில் நேரடி ஒலி பரப்பாகியது. இப்போதும் அது போல ஒலிபரப்பாகி இருந்தாலும் அப்போது அதுபெரும் செல்வாக் கைச் செலுத்தியது.

- வேதநாயகம் தபேந்திரன் -

றேடியோ சிலோன் அறிவிப்பாளர்கள் எல்லாம் தமிழ்பேசும் உள்ளங்களில் நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் கலந்து கொள்ளும் கலைநிகழ்வுகளைப் பெரும் கோயில்கள் எல்லாம் தமது திருவிழாக்களில் ஒழுங்கு செய்வார்கள். தலையோ கடல் அலையோவெனக் கூறுமளவு மக்கள் வெள்ளம் அந்த நிகழ்வுகளில் எல்லாம் அலை மோதுவார்கள்.

றேடியோ சிலோன் உருவாக்கிய பி.எச் அப்துல் ஹமீத் இன்று சர்வதேசம் மதிக்கும் முதல் தர தமிழ் அறிவிப்பாளராக உள்ளார். அது போன்ற திறமை மிகு அறிவிப்பாளர்கள் பெயரை மிக நீண்ட வரிசையாகச் சொல்லலாம்.

றேடியோ சிலோனில் இசையும் கதையும், இன் றைய நேயர், குறுக்கெழுத்துப் போட்டி, பொங்கும் பூம்புனல், நீங்கள் கேட்டவை, பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி, ஈழத்துப் பாடல்ள், பொப்பிசைப் பாடல்கள் என ரசிகர்களைக் கொள்ளை கொண்ட நிகழ்ச்சிகள் ஏராளம். மக்கள் றேடியோவின் பக்கம் ஈர்க்கப்பட்டு கலை களைப் படைத்த பொற்காலம் அது.

வானொலி மூலம் பேனா நண்பர்களாகித் திருமணம் வரையும் சென்றோரும் உள்ளனர். பீ.எச் அப்துல் ஹமீத் உருவாக்கிய பாட்டுக்குப் பாட்டு எனும் நிகழ்ச்சி சர்வதேச நிகழ்ச்சியாக மாறி விட்டது. இப்போது தொலைபேசி மூலம் குறுந்தகவல் (SMS) மூலம் நேயர்களின் விருப்பத் தெரிவுகளை ஒலிபரப்புவது போல அக்காலத்தில் தபாலட்டை நேயர்கள் என ஒலிபரப்பினார்கள். மண்டைதீவு அலை வரிசைக் கோபுரம் அமைக்கப்பட்டதன் பின்னர் தென்னிந்தியாவிலும் றேடியோ சிலோன் தெளிவாகக் கேட்க ஆரம்பித்தது.

கவிஞர் வைரமுத்து, பாரதிராஜா, சிவாஜிகணேசன் உள்ளிட்ட பெரும் கலைஞர்கள் எல்லாம் இதன் தீவிர ரசிகர்களாக இருந்தார்கள். அதனால் தான் கலை உலகில் தாம் வளர்ந்ததாகக் கூறினார்கள். யாழ்ப்பாண மக்கள் றேடியோ சிலோனை மட்டுமல்ல இந்திய தமிழகத்தின் திருச்சி, சென்னை வானொலிகளின் நிகழ்ச்சிகளையும் விரும்பிக் கேட்டார்கள்.

மாநிலச் செய்திகள், டெல்லிச் செய்திகள் எல்லாம் யுத்த காலத்தில் ஆவலுடன் கேட்டார்கள். இந்த அலை வரிசைகளில் பழைய, இடைக்காலப் பாடல்கள் ஒலிபரப்பாகும் நேரமறிந்து கேட்டார்கள். தென்கச்சி சுவாமிநாதனின் இன்று ஒரு தகவல் நிகழ்ச்சியைப் போல பல நிகழ்ச்சிகளை விரும்பிக் கேட்டு அறப் பண்புகளை வளர்த்தார்கள்.

இலங்கை இந்திய வானொலிகளில் ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்வதற்காக அறிவிப்பாளர்கள், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் உழைத்தார்கள். நிகழ்ச்சிகளை எழுத்துருவாக்கம் செய்வதில் மிகுந்த போட்டி போட்டார்கள்.

லண்டன் BBC தமிழோசைக்கும் யாழ்ப்பாணத்தவருக்கும் ஆத்மார்த்த உறவு ஒன்று இருந்தது. இலங்கையில் உள்நாட்டுப் போர் மூளும் முன்னர் சிறிய தொகையில் பி.பி.சி தமிழோசை கேட்டனர். போர்க்காலத்தில் பி.பி.சி என்ன சொல்கின்றதெனக் கேட்பதில் மிகவும் ஆர்வம் கொண்டனர். இரவில் பி.பி.சி தமிழ்ச் செய்தி நேரம் வரும் போது றேடியோவைச் சூழ இருப்பார்கள். சங்கர் என்ற சங்கரமூர்த்தி, ஆனந்தி ஆகியோரின் வசீகரக் குரலில் ஒலிக்கும் செய்திகளைக் கேட்பதில் மிகவும் ஆர்வம் காட்டினார்கள்.

யாழ்ப்பாணத்தில் தொலைத் தொடர்புச் சேவைகள் உள்நாட்டு யுத்தத்தால் சீர்குலைந்திருந்த காலங்களில் பி.பி.சி செய்திகள் தான் பொது மக்களின் தகவல் பற்றாக்குறையை நிறைவு செய்தது.

குறிப்பாக **1990** ஜூன் முதல் **1996** மே மாதம் வரையில் மின்சாரம், தொலைத் தொடர்பு ஆகியவை இல்லாத காலத்தில் பி.பி.சி செய்திகள் தான் யாழ்ப்பாணத்தில் வெளியாகிய பத்திரிகைகளுக்கு பெருமளவு தகவல்களைத் தந்தன.

நாட்டின் ஏனைய பகுதிகளில் என்ன நடக்கின்றன. என்பதை அறியத் தந்தது. அந்தத் தகவல் யுத்தத்தின் இருண்ட நாட்களை பி.பி.சி இந்திய, இலங்கை, பிலிப்பைன்ஸ் வெரித்தாஸ் வானொலி அலை வரிசைகள் தான் நிறைவு செய்தன.

- வேதநாயகம் தபேந்திரன் -

யுத்த காலத்தில் வெரித்தாஸ் வானொலிச் சேவைக்கும் யாழ்ப்பாணத்தில் பி.பி.சி க்கு அடுத்ததாக நேயர்கள் இருந்தனர். 1990 -1996 காலத்தில் மின்சாரமில்லை. றேடியோ பற்றிகள் சோடியொன்று 200 ரூபா முதல் 400 ரூபா வரை விற்றது. இதனால் அக்காலத்தில் சைக் கிள் டைனமோவில் ரயரின் ரியூப்பை நாடா போல் இணைத்து றிம் முடன் பிணைத்து சுற்றி மின்சாரம் பெற்று றேடியோ கேட்டார்கள். உள்நாட்டு, வெளிநாட்டு வானொலிகளை இவ்விதம் கேட்ட போர்க் காலத் தொழில் நுட்பம் பதிவிற்குரியது.

தொலைக்காட்சி அலைவரிசைகளைக் கூட இத்தொழில் நுட்பத்தின் மூலம் பார்த்தார்கள். மின்சாரம் வருமென்று காத்திருக்கா மல் பலவித மாற்றுச் சக்தி வளங்களை வடபகுதி மக்கள் கண்டு பிடித்த அக்காலமும் தனியான பதிவிற்குரியது.

யுத்த காலத்தில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத் தப்படும் தகவல், இடம்பெயர்வு பற்றிய விபரமறிய றேடியோவில் தான் முழுதாகத் தங்கியிருந்தார்கள்.

1987 அக்டோபரில் இந்திய அமைதி காக்கும் படைகளுக்கும் (IPKF) விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தின் போது அப்போது நடை பெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் நேர்முக வர்ணனையை றேடியோவில் கேட்டது நினைவில் நிற்கின் றது.

1990 ஜூனுடன் தரைவழிப் பாதை தடைப் பட்ட பின்பு மரண அறிவித்தலை பரிமாறும் பிரதான ஊடகமாக வானொலி இருந்தது. இலங்கை வானொலிகளின் தமிழ்ச் சேவை 1,2 வர்த்தகச் சேவை என்பன யாழ்ப்பாண மக்களை வசீகரித்து மயக்கிப் போட்டன.

விடுதலைப் புலிகளின் ஆளுகைக்கு உட்பட்ட நிலப்பரப்பில் புலிகளின் குரல் வானொலியும் ஒலிபரப்பாகியது. 1990 ஜூன் மாதத் தின் பின்னர் கொழும்பு சர்வதேச வானொலி வடபகுதி ரசிகர்களி டையே பிரபலம் பெற்றது. இதற்கான ரசிப்புத் தன்மை உருவாகியது. பெருகியது. வேறு இலத்திரனியல் ஊடகங்களைப் பாவிக்க முடியாத


யுத்த கால கட்டத்தில் வானொலி தான் கோலோச்சியது.

பின்னாளில் FM எனப்பட்ட சிற்றலை வரிசைகள் செல்வாக்கு இழந்தன. பலாலி இராணுவத் தளத்திலிருந்து பாதுகாப்புப் படையினரால் ஒலிபரப்பப்பட்ட வானொலி அலைவரிசையையும் யாழ்ப்பாண மக்கள் தகவல் பெறுவதற்குப் பயன்படுத்தினார் காலச் சக்கரம் மெல்ல மெல்ல உருண்டோடியது. 1978 இல் தொலைக்காட்சியின் வருகை நிகழ்ந்தது. அது மக்களைக் கவர்ந்தது 2000 ஆம் ஆண்டின் பின்னர் இணையச் சேவைகளும் வந்தன.

1990 களின் நடுப்பகுதியின் பின்னர் தனியான வானொலி நிறுவனங்களும் இயங்க அரசு அனுமதி வழங்கியது. கேபிள் தொலைக் காட்சி அலைவரிசைகளும் நிறைய நிறைய வந்தன. ஆனாலும் யாழ்ப்பாண மக்களை வானொலி வசீகரித்து, மயக்கிக் கட்டிப் போட்ட அளவிற்கு இவற்றால் வசீகரிக்க முடியவில்லை.

யாழ்ப்பாணத்தில் வானொலி அலைவரிசைகளை கேட்போர் தொகை சுருங்கிவிட்டது. கடிகாரம் ஓட முன் நீ ஓடு என்ற அவசர வாழ்வு, கட்புலக் காட்சியுடன் கூடிய இலத்திரனியல் சாதனங்களின் ஆட்சி இச்சுருக்கத்தின் காரணமெனலாம். ஆனாலும், யாழ்ப்பாண மக்களின் பசுமை நிறைந்த நினைவுகளில் வானொலி மறக்க முடியாத ஓர் பாகம் என்பது பதிவிற்குரியது.

**நன்றி – தினக்குரல் வாரவெளியீடு – 19.08.2012 . 26.08.2012**



# கால வெள்ளத்தில் கரைந்து போன தொழிற்சாலைகள்

தொழிலாளர்களை வரவழைக்கும் தொழிற்சாலை சங்கொலிகள் யாழ்.குடாநாட்டில் எங்கேனும் கேட்கின்றதா? இக் கேள்விக்கு இல்லையென்ற விடைமட்டும் தான் எம்மிடம் உள்ளது. அப்படியானால் யாழ் மண்ணில் தொழிற்சாலைகளே இருந்திருக்கவில்லையா? இருந்திருக்கின்றது. இன்னமும் சில வாழ்கின்றன.

கடின உழைப்புக்குப்பேர் போன யாழ். மண்ணின் மக்களால் பல தொழிற்சாலைகள் இயக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் அமைத்த பல தொழிற்சாலைகளும் இருந்திருக்கின்றன.

30 வருட உள்நாட்டு யுத்தம் இவற்றில் பலவற்றை ஏப்பம் விட்டு விட்டது. பொருள்களை வாங்குவதற்குப் பணத்தைச் செலவழிக்கும் நுகர்வுக் கலாசாரம் ஒன்றுக்குள் யாழ்.மக்கள் பழக்கப் பட்டு உள்ளதாக பொருளியளாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மக்களை வாட்டிய உள்நாட்டு யுத்தம் முடிவுற்றபோதும்

யாழ்ப்பாணத்தின் பொருளாதார எழுச்சியை உண்டாக்க வல்ல தொழிற்சாலைகள் மீளவும் குறிப்பிடத்தக்க அளவில் ஆரம்பிக்கப் படவில்லை யாழ்ப்பாணத்தில் இயங்கிய தொழிற்சாலைகளைப் பார்ப்போம் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையைத்தான் முதலாவதாகக் குறிப்பிட வேண்டும். யாழ்ப்பாணத்தை அடை யாளப் படுத்துவற்குப் பனை மரங்களும், நல்லூர் கந்தசுவாமி கோயிலும் இருப்பது போலக் காங்கேசன்துறை தொழிற்சாலை பற்றியும் ஒரு காலத்தில் கூறப்பட்டது.

தமிழ்த் தலைவர் ஜி.ஜி பொன்னம்பலம் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சராக இருந்த போது காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, வாழைச்சேனை காகித ஆலைத் தொழிற்சாலை என்பன ஆரம்பிக்கப்பட்டன.

1952 இல்யாழ்ப்பாணத்தின் நில வளமிக்க வலிகாமம் வடக் கின் துறை முகப்பட்டினமாகிய காங்கேசன்துறையில் சீமெந்துத் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டது. கப்பல் மூலமும், புகையிரத பாதை மூலமும் மூலப் பொருள்களும், முடிவுப் பொருள்களும் ஏற்றி இறக்கக் கூடிய வசதியான அமைவிடமாகக் காங்கேசன்துறை இருந்தது. காங்கேசன்துறை என்ற ஆங்கிலப் பெயரை KKS என்ற கருப் பெயர் கொண்டு பரவலாக அழைப்பார்கள்.

இத்தொழிற்சாலை 3000 பேருக்கு நேரடியான வேலை வாய்ப்பையும் ஆயிரம் பேருக்கு மறை முகமான வேலை வாய்ப்பை யும் வாரி வழங்கியது. அதனை விட நூற்றுக் கணக்கான லொறிகள், பல இலட்சம் கட்டிடத் தொழிலாளரென இதன் வேலை வாய்ப்பின தும் வாழ்வாதாரத்தினதும் எல்லைகள் இன்னமும் நீளும்.

KKS சீமெந்து தொழிற்சாலை இருந்த போது அதன் தொழி லாளர்களுக்கு காலை, மதியம், இரவு உணவுகள், சிற்றுண்டிகள் வழங்கி ஆயிரத்திற்கு மேற்பட்டோர் வருமானம் உழைத்தனர். மாவிட்டபுரம் பிரதேசத்திலிருந்த கடைகளின் கதவுகள் பூட்டப் படுவது இல்லை. கதவு இல்லாக் கடைகளென மக்கள் அழைப் பார்கள். ஏனெனில், இருபத்து நான்கு மணி நேரமும் இயங்கிய சீமெந்து

தொழிற்சாலையின் தொழிலாளர்கள் அதிகாரிகளுக்கு உணவு, சிற்றுண்டி வழங்கவென இக் கடைகளும் கதவு மூடாமல் வியாபாரம் செய்தன. தூங்காத நகரமாக காங்கேசன்துறை இருந்தது.

உள்நாட்டு யுத்தத்தின் கோர முகம் இந்நிறுவனத்தையும் விட்டு வைக்கவில்லை. சிதைத்து விட்டது. குருநகரில் அமைத்த சீநோரின் கட்டிடங்களில் 1997, 1998 ஆம் ஆண்டுகளில் வன்னிப் பகுதியிலிருந்த யாழ்ப்பாண மக்கள் படகு மூலம் கடல் வழியாக வந்த போது இடைத்தங்கல் முகாமாகப்பயன்பட்டது.

சீநோர் நிறுவனத்தை மிக அண்மைய ஆண்டுகளில் பாரம்பரியகைத் தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அமைச்சு வட கடல் (Northsea) நிறுவனம் எனும் பெயரில் மீள இயக்க ஆரம்பித்துள்ளது ஆனால், நாட்டின் ஏனைய பகுதிகளில் சீநோர் எனும் பெயரில் தொடர்ந்தும் இயங்கிவருகிறது.

யாழ்ப்பாணத்தில் சோடாக் கம்பனி லேன் எனும் பெயரில் பல இடங்களில் தெருக்கள் உள்ளன. சோடாக் கம்பனிகள் ஓர் காலம் யாழ். குடாநாட்டில் பரவலாக இருந்தன. வல்வெட்டித்துறையில் சுப்பிரமணியம் கம்பனி தயாரித்த பேபிமார்க் சோடா புகழ் பெற்றதாயிருந்தது. அதேபோல யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட சீதா சோடாவும் மதிப்பு மிக்க தாயிருந்தது. 1970 - 1977 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இறக்குமதிகளுக்குத் தடை விதிக்கப் பட்டிருந்தகாலத்தில் சோடாக் கம்பனிகளின் பொற் காலமாக இருந்தது.

1977 இல் வந்த திறந்த பொருளாதார யுகத்தின் எழுச்சியும் யுத்தத்தின் அதிர்வுகளும் சோடாக் கம்பனிகளைப் பெயர்த் தெறிந்து விட்டன. 1990 - 1996 காலப் பகுதியில் வடபகுதியின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட போது யாழ்ப்பாணத்தில் பல கூட்டுறவு அமைப்புக்களால் சோடா உற்பத்தித் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கின.

சோடா எனும் போது தான் சிங்களக் கடைகளில் சோடா எனக் கேட்டு பிளேன் சோடா வாங்கி அவதிப்பட்டது ஞாப-

கத் தில் நிழலாடுகின்றது. சோடா வகைகளில் பிளேன் சோடாவில் மட்டுமே சோடா என எழுதப்பட்டிருக்கும். ஏனையவற்றின் போத் தல்களில் நெக்ரோ, ஒரேஞ்சுபார்லி, கொகா கோலா, பெப்சி என எழு தப்பட்டிருக்கும். தமிழர்களாகிய நாம் தான் எல்லாவற்றையும் சோடா என்கின்றோம்.

1970 - 1977 இல் அரசாங்கம் கடைப் பிடித்த இறக்குமதித் தடைக் கொள்கையால் சீனியும் இறக்குமதி செய்வது பெருமளவு நிறுத்தப்பட்டது. அப்போது கள்ளைக் கருப்பணியாக்கி பனங்கட்டி காய்ச்சும் குடிசைக் கைத்தொழில் கிராமப் புறமெங்கும் ஓ கோவென நடந்தது. 1972 ஆம் ஆண்டில் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் வடபகுதியெங்கும் தோற்றம் பெற்று வளர்ந் தன. சீனிக்குப் பதிலீடாக உடல் ஆரோக்கியம் தரும் பனங்கட்டிக ளின் உற்பத்தி தொழில்களும் எழுச்சி பெற்றன.

தனியாரும் பனங் கட்டித் தொழிற்சாலைகளைப் பெரும் ஆர்வத்துடன் அமைத்து இலாபம் உழைத்தனர். குட்டான், வட்டவ டிவம், நீள்சதுரம், பார்சவர்க்கார அளவு என பனங்கட்டிகளின் வடிவங்கள் அமைந்தன. வடக்கிலிருந்து தென்பகுதிக்குப் பனங்கட் டிகள் சென்ற காலம் அது. வழமை போலவே 1977 இன் திறந்த பொரு ளாதார யுகம் இத் தொழிற்சாலைகளை பெருமளவில் ஒழித்து விட்டது.

யாழ்ப்பாண நகரில் பொன்னம்மா மில்சந்தி என அழைத்த சந்தி யொன்றை இப்போதைய தலை முறைக்குத் தெரியாது. இப்போது சத் திரத்துச் சந்தி என அழைக்கப்பட்ட இடம் முன்னாளில் பொன்னம்மா மில்ச்சந்தி என அழைக்கப்பட்டது. இங்கு தேங்காய் எண்ணெய் ஊற்றும் மிகப் பெரிய தொழிற்சாலை ஒன்று இருந்தது. மில்லுடன் இணைந்ததாகப் பெரிய வளாகம் இருந்தது. இன்று தனியார் கம்பனி கள், வங்கிகள் பல இவ்வளாகத்தில் அமைத்து மில் காணமல்ப் போய் விட்டது.

பீடி (Beedi) தொழிற்சாலைகள் ஓர் காலத்தில் யாழ்ப்பாணத் தில் இருந்தன. வல்வெட்டித்துறையில் இருந்த ஆர் வீஜி (RVG) பீடிக்

கம்பனி மிகப் பிரபலமாக இருந்தது. அதுபோல கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களிலும் பீடித் தொழிற்சாலைகள் இயங்கின. வறுமைப் பட்ட குடும்பத்துப் பெண் பிள்ளைகள் இத் தொழிற்சாலைகளில் பீடி சுற்றப் போவார்கள். அக்காலத்தில் பீடி இலை இந்தியாவிலிருந்து வந்தது. ஆயிரம் பீடி சுற்ற ஐந்து ரூபா கூலி கொடுக்கப்பட்டது. பீடி சுற்றும் சிறிய கைத்தொழிலாளர்கள் இணைந்து பீடிச் சங்கம் அமைத் தார்கள். தொழிற்சாலைகளில் சுற்றப்பட்ட பீடிகளுக்கு கம்பனி லேபல் ஒட்டும் வேலை வீடுகளில் நடந்தது.

சீயாக்காய் (சிகைக்காய்) தயாரித்த காவேரி என்ற கம்பனி பிரபலமாக இருந்தது. சம்போ தெரியாத அக்காலத்தில் காவேரி சீயாக்காய் தனி மதிப்பு மிக்கதாயிருந்தது.

1980 களில் புலம்பெயர் நாடுகளுக்குச் சென்றோர் இப்போது வரும் போதெல்லாம் காவேரி சீயாக்காய் எங்கே கிடைக்குமெனக் கேட்கிறார்கள்.

கடற் கரையோரக் கிராமங்களில் கருவாடு தயாரிக்கும் தொழில் பரவலான குடிசைக் கைத்தொழிலாக இருந்தது. இந்நாளில் இது மிகவும் குறைந்து விட்டது.

ரொபி தொழிற்சாலைகளும் குடாநாட்டில் பல இடங்க ளில் இருந்தன. மானிப்பாயிலிருந்த ரோஸ் பான்ட் ரொபித் தொழிற் சாலை மிகப் பிரபலமாக இருந்தது. அதுபோல நல்லூர், முத்திரைச் சந்தி, அரியாலை, புங்கன்குளம் சந்தியிலிருந்த அரஸ்கோ எனும் ரொபித் தொழிற்சாலையும் பிரபலமாக இருந்தது.

கண்ணாடித் தொழிற்சாலைகளும் குடாநாட்டில் மிகப் பர வலாக இருந்தன. மாவிட் டபுரத்திலும் நீர்வேலியிலும் இவை இருந் தன. யாழ்.நகர் ஸ்ரான்லி வீதியிலும் பெனின்சுலா எனும் பெயரில் கண்ணாடித் தொழிற்சாலை இருந்தது. வன்செயல் வாழ்வு இவற் றையும் கௌவி எடுத்து விட்டது.

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரிக்கு முன்பாக பழைய

ரயரைப் புதுப்பிக்கும் தொழிற்சாலை நொதேன் கம்பனி எனும் பெயரில் இயங்கியது. தேய்ந்த ரயரைப் புதுப்பிப்பதை ரயருக்குப் பூப்போடுதல் என அழைப்பார்கள். அதாவது ரயரின் அடிப்பாகத்தில் இருந்து அழிந்த பூப்போன்ற அமைப்பை புதிதாக உருவாக்குதலாகும். இத்தொழிற்சாலையும் கால வெள்ளத்தில் அமிழ்ந்து போய் விட்டது.

புன்னாலைக் கட்டுவன் பிரதேசத்தில் ஈவினை என்ற கிராமத் தில் மஸ்கன் சீற் தயாரிக்கும் தொழிற்சாலை இருந்தது. இங்கு தயாரிக் கப்பட்ட அஸ்பெஸ்ரஸ் சீற் லொறி மூலமாக நாட்டின் நாலா பாகங் களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது.

ஐஸ் கட்டி உற்பத்தித் தொழிற்சாலை கரையோர கிரா மங்கள் எங்கும் இருந்தன. இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியின் காற் பங்கை யாழ்ப்பாண மீனவர்கள் வழங்கிய காலம் அது. மிகையா கப் பிடிக்கப்படும் மீன்களை ஐஸ் கட்டியுடன் போட்டு நாட்டின் நாலா பாகங்களுக்கும் அனுப்பினார்கள். அக்காலத்தில் குளிர் சாதனப் பெட்டி (பிறிட்ஜ் fridge) இப்போதையதைப் போல பரவலாகக் காணக் கிடைக் காது. வைத்தியசாலைகள், ஐஸ் கிறீம் கடைகளில் தான் அவற்றைக் காண முடியும். பெரும் செல்வந்தர் வீட்டில் தான் பார்க்கலாம்.

அதனால் வீடுகளில் மங்கல நிகழ்வுகள் நடைபெற்றால் ஐஸ் தொழிற்சாலைகளில் சென்று ஐஸ் கட்டியைக் காசு கொடுத்து வாங்குவார்கள். சைக்கிள் கரியரில் சாக்கில் வைத்து மரத்தூளும் சேர்த்துக் கட்டுவார்கள். பின்பு வீட்டிற்கு எடுத்து வரப்பட்ட ஐஸ் கட்டியை சுத்தியலால் உடைத்து சர்பத்தில் கலப்பார்கள். சர்பத்தில் மிதக்கும் ஐஸ் கட்டித் துண்டுகளை பார்த்து கற்கண்டு போட்டுத் தருகிறார்கள் என்று கூறினார்கள். யுத்த மேக மாரியில் நனைந்து இன்று பல ஐஸ் தொழிற்சாலைகள் கரைந்து போய் விட்டன.

**1977** ற்குப் பிறபட்ட காலத்தில் தென்மராட்சி நாவற்குழிப் பிரதேசத்தில் அன்றூஸ் கம்பனி எனும் பெயரில் ஓர் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. இங்கு இறால் பதனிடப்பட்டு அவை வெளி நாடுகளுக்கும் அனுப்பப்பட்டன. தென்பகுதிச் சிங்கள இனத்தவர் ஒருவரால் ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிற்சாலையில் பணிபுரி

யும் தொழிலாளர்களை வீடுகளில் ஏற்றிவர பஸ் சேவை ஒன்றும் இருந்தது.

யுத்தத்தின் வருகை இத்தொழிற்சாலையை இராணுவ முகாமாக மாற்றிய பின்னாளில் இத்தொழிற்சாலை அழிவடைந்தே போனது. தென்மராட்சியின் நுணாவில் பிரதேசத்தில் டயர் தொழிற்சாலை ஒன்று 1986 காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. குறுகிய காலம் இயங்கிய இத் தொழிற்சாலை 1990 ஜூன் யுத்த வருகையுடன் அழி வடைந்தே போனது.

நாவற்குழியில் சிக்மா கம்பனியால் நீரிறைக்கும் இயந்திர தொழிற்சாலை யொன்றும் இயக்கப்பட்டது. யுத்தம் இதனை முற்றாக அழித்தது. தும்புத் தொழிற்சாலைகள் பல இடங்களிலும் இருந்தன. குறிப்பாகக் கொழும்புத்துறைப் பிரதேசத்தில் சிறியளவில் வீட்டுக்கைத் தொழிலாக இயங்கிய இவையும் பின்னாளில் பெருமளவில் காணா மல் போய் விட்டன.சிலர் தற்போது இத்தொழிலை செய்கின்றனர்.

மாவிட்டபுரத்தில் டொலர் எனும் பெயரில் அலுமினியத் தொழிற்சாலை ஒன்று இயங்கியது. கோயில் திருவிழாக் காலங்களில் இது மாவிட்டபுரம் பாத்திரம் எனக் கூவி விற்றது இப்போதும் காதில் கேட்கின்றது. மாவிட்டபுரத்தில் எல்விகேம் எனும் பெயரில் தொழிற் சாலை ஒன்று இயங்கியது. இங்கு தயாரித்த வாளிகளின் தரச் சிறப்பு இலங்கை முழுவதும் பிரபலமாக இருந்தது.

ஊரெழுவில் அலுமினியப் பாத்திரங்கள் வார்க்கும் தொழிற் சாலைகள் ஒன்று முன்னாளில் ஆரம்பிக்கப்பட்டது. கால வெள்ளத் தில் நீந்திப் பிழைத்து இன்றும் உயிர் வாழ்கின்றது. கல்குவாரி எனப்பட்ட கல் உடைக்கும் தொழிற்சாலைகளும் குடாநாடெங்கும் ஆரம்பிக்கப்பட்டன. ஏழைப் பங்காளர்களின் வாழ்வாதாரத்திற்கு இவை உதவின. யுத்த காலம் இவற்றில் பலவற்றை விழுங்கிவிட்டது. அப்பளத் தொழிற்சாலைகள், ஊறுகாய்த் தொழிற்சாலைகள் பல இடங்களிலும் குடிசைக்கைத் தொழிலாக ஆரம்பிக்கப்பட்டு வெற்றிநடை போட்டன. காலச் சுழற்சியில் அகப்பட்டு பல அழிந்து விட்டன. சில தப்பிப் பிழைத்திருக்கின்றன.

பழப்பாகு எனப்பட்ட ஜாம் (Jam) உற்பத்தித் தொழிற்சாலைகள் பல சிறியளவில் இருந்தன. மா, பலா, வாழைப் பழங்களுக்கு பேர் பெற்ற யாழ்ப்பாணத்தில் இத் தொழிற்சாலைகள் வெற்றி நடை போட்டன. பின்னாளில் உருவான அசாதாரண சூழல் இவற்றில் பலவற்றை அகற்றி விட்டது.

ஸ்ருடியோ (Studio) எனப்பட்ட புகைப்படம் பிடிக்கும் தொழிலும் பிரமாண்டமானதாயிருந்தது. கமெரா என்பது பெரும் பணக்காரர்களின் கைப் பொருளாக இருந்த அக்காலத்தில் ஆவணத் தேவைகளுக்கும், மங்கல அமங்கல நிகழ்வுகளுக்கும் புகைப்படம் எடுப்பதற்கு ஸ்ருடியோக்களைத்தான் நாட வேண்டியிருந்தது. காலத்தின் மாற்றம் கமெரா நடுத்தர மக்களும் உபயோகிக்கும் சாதாரண பொருளாகிய போது நாடு முழுவதும் ஸ்ருடியோ தொழில் வேகம் குறைந்தது போல யாழ்ப்பாணத்திலும் குறைந்தது.

ஆறுகள், மலைகள், பெரும்குளங்கள் எதுவுமற்ற யாழ்ப் பாணத்து மக்கள் தமது விடா முயற்சியின் மூலம் அமைத்த தொழிற் சாலைகளின் பட்டியல் இன்னும் நீளலாம்.

கால நீட்சியில் காணாமல் போன அவை மீண்டும் உருவாக வேண்டும். நாட்டின் தென் பகுதியிலும் புலம்பெயர் நாடுகளிலும் இருக்கும் தொழில் விற்பன்னர்கள் தொழிற்சாலைகளை மீள அமைக் கும் கைத்தொழில் யுகம் வரவேண்டுமென்பதே அனைவரினதும் பேரவா.

பொருட்களை நுகர்ந்து பணத்தைச் செலவழிக்கும் மக்க ளாக அல்லாமல் உற்பத்தித்திறன் மிக்கவர்களாக யாழ்ப்பாணமக்கள் மாறும் பொற்காலத்திற்காகக் காத்திருக்கின்றார்கள். காலம் தான் விடையைக் கூறட்டும்

**நன்றி–தினக்குரல் வாரவெளியீடு– 02–09–2012**



# வெற்றிலையும் எம்மவரும்

வெற்றிலையும் எம்மவரும் என்றவுடன் அரசியல் விடயம் பற்றி அசைபோடப் போகிறேன் என நினைத்து விடாதீர்கள். யாழ்ப்பாண மக்களின் வாழ்வுடன் பின்னிப் பிணைந்த ஒன்று தான் வெற்றிலை. எமது நாட்டிலுள்ள சகல மக்களின் வாழ்வியலுடன் இரண்டறக் கலந்த ஒன்றாக வெற்றிலை உள்ளது.

அதிலும் இந்து மதப் பண்பாட்டைப் பின்பற்றி வரும் தமிழ் மக்களின் பண்பாட்டில் மங்கல, அமங்கல (நன்மை, தீமை) நிகழ்வுக ளில் எல்லாம் வெற்றிலை கட்டாயமிருக்கும். வெற்றிலையின் நினை வலைகளை நோக்கிப் பின்னோக்கிப் பயணிப்போம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமம் வடக்குப் பிரதேசம் தான் வெற்றிலைக்குத் தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு பிரதேசமாக இருந்தது. மாவிட்டபுரம், வீமன்காமம், கொல்லன்கலட்டி, மாரீசன்கூடல், இளவாலை போன்ற பிரதேசங்கள் வெற்றிலைச் செய்கைக்குப் பெயர் பெற்ற பிரதேசங்களாக 1990 ஜூன் மாதம் வரையில் இருந்தன.

இப்பிரதேசம் மண்வளம், காலநிலை, விவசாயிகளின் தனித் திறமை காரணமாக இங்கு பயிரிடப்படும் வெற்றிலைச் செடிகள் மிக உயர்தரமாக இருந்தன. குடாநாட்டின் ஏனைய செம்புலக் கிராமங்க ளில் சிறியளவில் வெற்றிலை பயிரிடப்பட்டாலும் கூட மேற்சொன்ன வலிகாமம் வடக்குப் பிரதேச விவசாயிகளின் வெற்றிலை என்றால் தான் மதிப்பு.

தென்னிலங்கைச் சிங்களப் பிரதேசங்களில் வெற்றிலை பயிரிடப்பட்டாலும் கூட யாழ்ப்பாண வலிகாமம் வடக்கின் வெற்றி லைக்கும் அங்கு உயர் மரியாதை இருந்தது. யாழ்ப்பாணத்தவர்கள் வெற்றிலையை இராச பயிர் என்பார்கள். பயிர்வகைகளில் இதனைத் தான் இராசா அதாவது அரசன் என்கிறார்கள்.

அக்காலத்தில் சூத்திரக் கிணறு மூலமாகத்தான் வெற்றிலைப் பயிருக்கு நீரிறைப்பார்கள். அட இதென்ன சூத்திரக்கிணறு புதி தாக இருக்கிறதே என நீங்கள் கேட்பது என் காதில் விழுகின்றது. எமது முன்னோர்களின் பாரம்பரிய நீரிறைப்பு முறையான இதனை இன்னொரு நாளில் நினைவுகளாக நடந்து பார்ப்போம்.

வலிகாமம் வடக்கின் செம்புலக் கிராமங்களில் மண்ணை வளப்படுத்தி வெற்றிலைக் கொடியின் துளிரை நடுவார்கள். வெற்றிலைச் செடி வளர ஆரம்பித்ததும் அதனைத் தாங்கி நிற்க முள் முருங்கை மரத்தின் கதிகால்களை நடுவார்கள். அக்காலத் தில் வோட்டர் பம்ப் (Water pump) எனப்படும் நீரிறைக்கும் இயந் திரங்களோ, இப்போதையதைப் போன்ற மின்சாரமூலம் நீரிறை க்கும் இயந்திரங்களோ கிடையாது.

ஆறுகளும் குளங்களும் நீர்ப்பாசனம் வழங்க இல்லாத யாழ்ப்பாணத்தில் ஆழக் கிணறுகளில் மாடுகளைப் பயன்படுத்தி சூத்திரக் கிணறு முறையில் தான் வெற்றிலைத் தோட்டங்களுக்கு நீரி றைப்பார்கள்.

வெற்றிலைச்செடி வளர்ந்து நன்கு படர்ந்து இலைகள் விட்டு

வந்ததும் இலைகளைப் பறிப்பது (பிடுங்குவது) கொழுந்து பறித்தல் என்பார்கள். ஏனைய தோட்டப் பயிர்களில் பெண்களும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். ஆனால் வெற்றிலைப் பயிர்ச் செய்கையின் சகல கட்டங்களிலும் ஆண்கள் மட்டுமே ஈடுபடு வார்கள். பெண்கள் ஈடுபடுத்தப்படு வதில்லை. இதற்குப் பண்பாட்டு ரீதியான காரணங்களைக் கற்பிக்கின்றார்கள்.

அக்காலத்தில் வலிகாமம் வடக்கின் வெற்றிலைகளின் பிர தான சந்தையாக சுன்னாகம் சந்தை திகழ்ந்தது. திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் தான் சுன்னாகம் சந்தை கூடி படுசுறுசுறுப்பாக இருக்கும். ஏனைய நாட்களில் சந்தை வெறிச்சோடிப் போயிருக்கும். இந்த நாட்களில் சந்தையில் வெற்றிலைகளை விற்கவென முதல்நாட் களாகிய ஞாயிறு, செவ்வாய், வியாழன் நாட்களில் மாலை நேரங்க ளில் தோட்டங்களில் வெற்றிலைக் கொழுந்து பறிக்கும் வேலைகள் ஆண்களால் பரபரப்பாக செய்யப்படும்.

பறிக்கப்பட்ட வெற்றிலைகள் நன்கு காய்ந்த வாழைத் தடல்க ளில் எண்ணப்பட்டு அடுக்கப்படும். மிகவும் நேர்த்தியாகவும் அழகா கவும் அடுக்கப்பட்ட வெற்றிலைகள் அதிகாலை 3 மணிக்கு கூட ஆரம்பிக்கும் சுன்னாகம் சந்தைக்கு விவசாயிகளால் எடுத்துச் செல்லப்படும். அக்காலத்தில் தலைச்சுமையுடன் நள்ளிரவு ஒரு மணி முதலே நடக்க ஆரம்பித்து வெற்றிலைப் பொதிகளைக் கொண்டு செல்வார்கள். சைக்கிளிலும், தட்டிவான், டக்சி போன்ற வாகனங்க- ளிலும் வெற்றிலை சுன்னாகம் சந்தைக்குப் போகும்.

அதிகாலை 3 மணிக்கு வெற்றிலை வியாபாரம் ஆரவாரமாக நடைபெறும். விவசாயிகளிடம் வாங்கப்பட்ட வெற்றிலைகள் சாவ கச்சேரி, கொடிகாமம் சந்தைக ளுக்கு விடிகாலைப் பொழுதில் எடுத் துச் செல்லப்படும். அங்கு அதி காலை 5 மணி முதல் 6 மணி வரையும் வெற்றிலை வியாபாரம் நடை பெறும். நாட்டின் ஏனைய பகுதிக ளுக்கும் குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கும் சுன்னாகம் சந்தை யின் வெற்றிலை செல்லும்.

வெற்றிலைகள் விற்று வீடு கட்டியோர், நகை நட்டுத் தேடியோர்,

பெண் பிள்ளைகளுக்கு சீதனம் கொடுத்தோர், காணி வாங்கியோர், வாகனங்கள் வாங்கியோர் என வளம் பெற்ற விவசாயிகளின் பட்டியல் நீண்டது.

1980 களில் மெல்ல மெல்ல தலையெடுத்து தீவிரம் பெற ஆரம்பித்த உள்நாட்டுப் போரால் வெற்றிலை வியாபாரிகள் பாதிக் கப்படத் தொடங்கினார்கள். 1990 ஜூன் மாதம் 15 ஆம் நாளன்று வடக்கில் வெடித்த ஈழப் போர் காங்கேசன்துறைப் பிரதேசத்தில் தான் பேரிரைச்சலுடன் போர் இரைச்சலாகியது. வேரடி மண்ணாக நிலத் தடி நீராக மண்ணுடன் பின்னிப் பிணைந்த வலிகாமம் வடக்கின் செம்புல விவசாயிகள் தாய் மண்ணிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட் டார்கள். மிக நீண்ட கொடிய இடம்பெயர்வு வாழ்க்கை முறையினுள் தள்ளப்பட்டார்கள்.

வேரறுந்த பூமியில் நூலறாத நினைவுகளுடன் வாழத் தள்ளப் பட்டார்கள். அவர்களின் வெற்றிலைப் பாரம்பரிய விவசாய வாழ்வை இழக்க நேரிட்டது. இடம்பெயர்ந்த அந்த விவசாயப்பெருமக்கள் தாம் சென்ற செம்புலக்கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு வெற்றிலைச் செய்கையை கற்றுக் கொடுத்தனர்.

வெற்றிலையைத் தாம்பூலம் எனச் சிறப்பித்து அழைக்கும் வழக்கம் தமிழர் வாழ்வில் உள்ளது. வெற்றிலை உண்பதைத் தாம்பூலம் தரித்தல் என்பார்கள். வெற்றிலையை முழு மூலிகை எனத்தான் மருத் துவம் தெரிந்தோர் அழைக்கின்றனர். ஆயுர்வேத மருத்துவ முறையில் வெற்றிலை மிகப் பிரதானமானது. வெற்றிலையில் சுற்றி மருந்து கொடுத்தல், வெற்றிலைச் சாறுடன் மருந்தைக் கொடுக்கும் தமிழ் பரி யாரிமார்கள் குடாநாடெங்கும் இருந்தார்கள்.

வெற்றிலையை முதன்மைப்படுத்தும் பரியாரியை வெற்றி லைப் பரியாரி எனப் பட்டம் சூட்டி அழைக்கும் வழக்கம் யாழ் குடா நாட்டில் இருந்தது. தமிழர்களின் வாழ்விலும் தாழ்விலும் வெற்றிலை கட்டாயமிருக்கும். வீட்டில் நிகழும் மங்கல காரியங்கள் அனைத்திற் கும் நிறைகுடம் வைக்கும் போது வெற்றிலை கட்டாயம் இருக்கும்.

குருதட்சணை, கைவிசேடம் போன்றவை கொடுக்கும் போதும் வெற்றிலையில் வைத்து தான் கொடுப்பார்கள். சத்தியம் பண்ணும் போதும் வெற்றிலையின் மீது கை வைத்துச் செய்யும் சத்தியம் வலிமை மிக்கதாக நம்பப்படும் வழக்கம் இன்றுவரையும் தொடர்கின் றது.

நன்மை காரியங்களில் உணவருந்திய பின்னர் பித்தளை வெற்றிலைத் தட்டத்தில் வெற்றிலை, பாக்குச் சீவல், சுண்ணாம்பு என்பவை வைக்கப்பட்டிருக்கும். அவற்றை வாயிலிட்டு சிவப்புச் சிவ-ப்பாக வாய் தெரிய உண்பது தனி அழகு தான்.

வெற்றிலைக் கொடியைத் தாங்கி நின்ற முள் முருங்கை மரம் முழுவதுமாக அழிந்த நிகழ்வு 2006 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. அவ்வருடம் வந்த சிக்குன் கூனியா காய்ச்சல் கால கட்டத்தின் இனந் தெரியாத நோய் ஒன்று தோன்றி முள்முருங்கை இனத்தின் அழிவை ஏற்படுத்தி விட்டது. அவ்வருடத் தில் ஏற்பட்ட கொடும் வறட்சியும் இதற்கு ஓர் காரணமெனலாம்.

இன்று கிளிசறியா மரத்தைப் பயன்படுத்தி, கிளுவங்கதிகாலைப் பயன்படுத்தி வெற்றிலைச் செய்கை நடைபெறுகின்றது. யாழ்ப்பாண மக்களின் மரண வீடுகளில் இன்றும் தட்டங்களில் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை வைக்கும் மரபுள்ளது. மரண வீட்டிற்கு வரு வோர் வெற்றிலையை வாயில் மென்றபடி இருப்பார்கள்.

நாதஸ்வர வித்துவான்கள் வெற்றிலையை வாயில் அசைபோட் டபடியே இசை வெள்ளத்தை அள்ளி வழங்குவது ஓர் தனி அழகு தான். இரவு முழுவதும் நித்திரை விழித்து வாகனம் ஓட்டும் சார திகளுக்கு உறுதுணை செய்யும் ஒன்றாக வெற்றிலை இன்று வரையு முள்ளது.

பிரபலமான சில கோயில்களின் குருககள் பூசை வழிபாடுக ளின் போது வெற்றிலையை வாயில் மென்றபடியே கிரியைகளைச் செய்வதைத் தவிர்க்க வேண்டுமென இந்து மத ஆர்வலர்கள் கூறுகின் றார்கள். யாழ்பாணத்தின் தீவகப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் வியா

பாரம் செய்வதற்கென நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் சென்ற காலப்பகுதி ஒன்றிருந்தது.

*1940, 50, 60* களில் இது பெருமளவினதாக இருந்தது. அப்போது வெற்றிலை வியாபாரம் செய்யவெனவும் ஆயிரக் கணக்கானோர் சென்றனர். சிங்களக் கிராமமொன்றில் பெரியதொரு வெற்றிலைக் கடையிருக்கும். அங்கு வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை என்பவை விற்கப்படும். பாக்கு எம்மவர்கள் சாப்பிடுவது போல சீவலாகச் சாப்பிட மாட்டார்கள். கமுகம் பாக்கை பழுத்த நிலையில் தோல் நீக்கி துண்டு துண்டாக நறுக்கிச் சாப்பிடுவார்கள்.

பெரிய வெற்றிலைக் கடையிலிருந்து கொள்வனவு செய்த வெற்றிலை சார் பொருட்களை தெருக்கள் தோறும், கிராமங்கள் தோறும் எடுத்துச் சென்று விற்பனை செய்யும் வழி வியாபாரம் ஒன்றையும் யாழ்ப்பாணத்தவர்கள் செய்வார்கள். இந்த வழி வியாபாரத்தில் ஈடுபட்ட சிறுவியாபாரிகள் பலர் காலப்போக்கில் ஓரிடத்தில் நிரந்தரக் கடை அமைத்து பெரிய முதலாளியாகிய நிகழ்வும் நடந்தது.

காலப்போக்கில் நிகழ்ந்த இனவன்முறைகள் காரணமாக ஏராளம் வெற்றிலைக் கடைகள் மூடப்பட்டன. வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணி என மீனவக் கிராமம் இருக்கின்றது. பெயரில் வெற்றிலை இருந்தாலும் அங்கு வெற்றிலை பயிரிடப்படுவதில்லை.

*1995* அக்டோபர் *31* ஆம் திகதி வலிகாமம், யாழ்ப்பாண இடப்பெயர்வு ஏற்பட்டது. *1996* ஏப்ரல் கடைசி வாரம் முதல் மீள் குடியேற்றம் நிகழ்ந்தது. அப்போது யாழ்ப்பாணச் செம்புலக் கிராமங்களின் வெற்றிலைச் செடிகள் யாவும் அழிந்து போயிருந்தன.

*1996* ஜூன் மாதம் முதல் கப்பல் விமானங்கள் மூலம் யாழ்குடா நாடு போக்குவரத்திற்காக தொடர்புபட்டது. அப்போது பத்து ரூபா வரை ஒரு வெற்றிலை விலை போன போது தென் ஓரிருபகுதியிலிருந்து வெற்றிலை ஆயிரக் கணக்கில் எடுத்து வரப்பட்டு வியாபாரம் நடந்தது. அதில் திடீர் பணக்காரரான சிலர் இருந்தார்கள்.

- வேதநாயகம் தபேந்திரன் -

வெற்றிலைக் கொடிகளின் மீள்நடுகையும் உற்பத்திப் பெருக் கமும் வரும் வரையில் கப்பல், விமானம் மூலமான வெற்றிலை வியா பாரம் ஓரிரு வருடங்கள் களை கட்டியது. வலிகாமம் வடக்கின் வெற்றிலை விவசாயக் கிராமங்கள் சில இன்று மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்டு விட்டன. ஆயினும் இழந்த வெற்றிலை வசந் தத்தை அவர்களால் மீட்டெடுக்க முடியாதுள்ளது.

வெற்றிலை விற்பன்ன விவசாயத் தலைமுறையின் வாழ்க்கைக் கோலங்கள் கடந்த இருபது வருடங்களில் மாற்றம் கண்டு விட்டன. இழந்து போன அந் தக் கிராமியக் கட்டமைப்பும் கூட்டுறவு வாழ்வும் மீண்டும் வராதா என ஏங்குகிறார்கள்.

யாழ்ப்பாணத்தவரின் வெற்றிலை நினைவுகள் மிக மிக நீளமானது. குறிப்பிடத்தக்க நினைவுத் தடங்களை இங்கே பதித் துள்ளேன்.

**நன்றி – தினக்குரல் வாரவெளியீடு 2012.செப்ரெம்பர்.16**




# சனசமூக நிலையங்களும் சமூகமும்

சனசமூக நிலையம், வாசிகசாலை, படிப்பகம் இந்த மூன்று சொற்களும் ஒரே கருத்து தருவதாக யாழ்ப்பாணச் சமூகத்தில் வழங்கு பவையாகும்.

**1990** களில் முற்பகுதியில் சனசமூக நிலையம் என்பதற்குப் பதிலாக சனசமூக நலனோம்பு மூலவள நிலையம் என்ற பலநோக்கு கருத்துள்ள சொல் ஒன்றும் வழக்காற்றில் வந்தது.

யாழ்ப்பாணச் சமூகத்தில் ஊர் கூடித் தேர் இழுக்கும் ஒற் றுமையின் பண்பாட்டு அம்சங்களில் நீக்கமறக் கலந்த ஒன்று தான் சனசமூக நிலையம் என்பதுமாகும். கிராமங்களில் சமூகங்களை அடை யாளப்படுத்தும் ஒன்றாகச் சனசமூக நிலையம் உள்ளது.

யாழ்ப்பாணத்துக்கே உரிய சாதி அடையாளத்தைக் காட்டும் ஓர் கண்ணாடியாகத் தான் சனசமூக நிலையம் என்ற அமைப்பு அன்று தோற்றம் பெற்றது அத்தகைய கட்டமைப்புத் தான் இன்றும்

தொடர்கிறது. கிராம மக்கள் தம்மை அடையாளப்படுத்தும் ஆவண மாக சனசமூக நிலையங்களைத்தான் இன்றும் கூறுகின்றனர்

ஒருவர் தான் குறித்த சனசமூக நிலையத்தைச் சேர்ந்தவர் எனக் கூறினால் அவர் எந்தச் சாதியைச் சேர்ந்தவரென அடையாளபடுத் தப்பட்டனர். தமது வீட்டு முகவரியை எழுதும் போது சனசமூக நிலையத்தின் பெயரை எழுதி அடையாளப்படுத்துகின்றனர். சில இடங்களில் கிராம சேவகர்கள் குடும்ப அட்டைக்கு முகவரியிட சனசமூக நிலையத்தை குறிப்பிடுகின்றனர். நகர்ப்புற சனசமூக நிலை யங்களில் இத்தகைய தன்மை ஓரளவுக்கு குறைவாக இருக்கிறது.

யாழ்ப்பாணச் சமூகத்தில் சனசமூக நிலையங்களின் தோற் றுவாயை நூறு ஆண்டுகளுக்குள் தான் வரையறுக்கலாம். ஆனாலும் சனசமூக நிலையங்கள் எழுச்சி பெற்ற ஓர் காலப்பகுதியிலிருந்தது. சனசமூக நிலையங்களின் பெயர்கள் காலமாற்றத்திற்கேற்ப பெயர் மாற்றம் பெற்று பின்னாளில் நிலை பெற்ற பெயர் இன்றுவரை நிலைத்தது வழக்காறாக மாறியது.

கணபதி படிப்பகம் என உருவாக்கப்பட்டு விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் என பின்னர் பெயர் மாறி இளங்கோ சனசமூக நிலையம் எனப் பெயர் மாற்றம் பெற்று இளங்கோ என்ற பெயரே நிலை பெற்று விட்டது போல பல சனசமூ நிலையங்களுக்கும் வர லாறு உண்டு. அந்தக் காலமாற்றங்களின் செல்வாக்கு இப் பெயர் மாற் றத்தில் செல்வாக்குச் செலுத்தின.

இவ் அமைப்புடன் இணைந்ததாக கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் சங்கம், பாலர் பாடசாலை, கல்வி நிலையம், நூலகம் போன்ற அமைப்புகளும் உருவாகி நிலை பெற்ற வரலாறும் உண்டு.

சிறந்த கிரா மத்தின் பண்புள்ள மக்கள் கூட்டத்தை உருவாக் குவதற்காக சனசமூக நிலையங்கள் செய்து வரும் பங்கு தொடர்பாக வரலாறு உள்ளது. கிராமங்களில் மக்களிடையே ஏற்படும் பிணக்குக ளைத் தீர்க்கும் பஞ்சாயத்து மன்றமாகவும் சனசமூக நிலையங்கள் அன்று திகழ்ந்தன.

இத்தகைய நீதிமன்றம் போன்ற அமைப்பு சமூக ஒற்றுமையின் மூலம் இன்றுவரையும் தொடரும் சில கிராமங்களை இன்றும் காணலாம். இன்று நீதிஅமைச்சு உருவாக்கியுள்ள மத்தியஸ்த சபை கள் என்ற அமைப்பை சனசமூக நிலையங்கள் சிறப்பாக செய்துள்ளன. சனசமூக நிலையம் ஒன்றிற்கான நிர்வாகத்தை தெரியும் ஆண்டுப் பொதுக்கூட்டம் ஓர் குட்டித் தேர்தல் போல நடந்த காலம் இருந்தது.

வாசிகசாலைத் தலைவர் எனக் கூறினால் ஊரில் அவருக்குப் பெரிய மதிப்பிருக்கும். சனசமூக நிலையங்களின் தோற்றுவாயில் முன்னாளில் யாழ்ப்பாணத்தில் இயங்கிய சுருட்டுக் கொட்டில்களுக் கும் கணிசமான பங்கு இருந்தது.

சுருட்டு சுற்றும் தொழிலாளர்கள் பத்திரிகை வாசிப்பதற்கென ஒருவரை நியமிப்பார்கள். இத் தொழிலாளர்கள் தாம் கேட்டறிவால் பெற்ற பத்திரிகை தகவல்களைக் கிராம மக்களும் பெற வேண்டுமென்ற நோக்கில் சனசமூக நிலையங்களை அமைத்தார்கள். இவ் ஏழைத் தொழிலாளர்களின் கல்வி தொடர்பான சிந்தனைகள் இச்சனசமூக நிலையங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு கல்வியால் சமூகம் வளர்ந்ததும் தனியாக ஆராயப்படுவதற்கு உரியது.

கிறிஸ்தவ தேவாலயங்களுடன் இணைந்ததாக தேவாலயங்க ளின் பெயரைத் தாங்கியதாக உருவான சனசமூக நிலையங்களும் உருவாகின. கிராமங்களில் சேவை நோக்குள்ள ஓரளவு படித்த அல் லது நன்கு படித்த ஊர்ப் பெரியவர்களே இவ் அமைப்பை நிறுவு தலில் முன்நின்றார்கள். ஆரம்ப காலங்களில் ஆலமரம், அரச மரம், வேப்ப மரம், நாவல் மரம் போன்ற பெரு விருட்சங்களின் கீழ் தான் இவை உருவாகின.

அதனால் நாவலடி சனசமூக நிலையம், வேம்படி படிப்பகம் போன்ற பெயர்கள் கூட இடப்பட்டு இன்று வரையும் நிலைபெற்ற வரலாறும் உள்ளது. இவ்வாறு மர நிழல்களில் கிடுகுக் கொட்டில்க ளாகவோ, பனை ஓலை களாகவோ உருவாகிய சனசமூக நிலையங்கள் கிராம மக்களின் உறவுப் பாலமாகத் திகழ்ந்தன.

இவற்றின் அருகாமையில் கூட்டுறவுச் சங்கக் கிளை, ஊர்ப் பாட சாலை, கோயில் என்பவை அமைந்திருக்கும். விவசாய அறுவடைக் குப் பிந்திய நாட்களில் சனசமூக நிலையச் சூழலில் இளைஞர்கள் ஒரு புறமாகவும், நடுத்தர வயதினர் ஒரு புறமாகவும் முதியோர் இன்னொரு புறமாகவும் இருந்து புதினங்களை உரையாடி மகிழ்வார்கள். சனசமூக நிலையத்தில் அன்றைய நாளிதழ்களான தினபதி, வீரகேசரி, ஈழநாடு போன்றவற்றில் ஏதாவது ஒன்று அல்லது அவையாவும் வாசிப்பிற் கென இடப்பட்டிருக்கும். அத்துடன் தமிழகச் சஞ்சிகைளையும் வாசிப்பிற்கென வைத்திருந்த நிகழ்வுகளும் உண்டு.

கிடுகுக் கொட்டிலால் இருந்த சனசமூக நிலையத்தை சிறு கட் டிடமாக்கும் முயற்சியில் கிராம மக்கள் கடுமையாக உழைத்து வெற்றி கண்டனர். காலச் சுழற்சியில் பெரிய கட்டிடமாகவும் மாடிக் கட்டி டமாகவும் உயர்ந்த சனசமூக நிலையங்களையும் பார்க்க முடிகின்றது.

எழுத்துத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் ஒன்றிணைந்து சிலம் பொலி, முரசொலி போன்ற பெயர்களில் தமக்குப் பிடித்தமான பெயரையிட்டு கையெழுத்துச் சஞ்சிகைகள் வெளியிட்டார்கள்.

சனசமூக நிலையங்களின் ஆண்டு விழாக்கள் பல இடங்க ளில் சித்திரைப் புத்தாண்டு, தீபாவளி போன்ற பண்டிகைகளுடன் இணைந்து நடக்கும்

ஆண்டு விழா என்பது கிராமத்தின் கோயில் திருவிழா போல களைகட்டும். விளையாட்டுப் போட்டிகள் சில தினங்களாக நடக்கும். ஊரே கூடிக் குதூகலிக்கும். இரவு நேரத்தில் கலை விழா ஒரு நாள் அல்லது இரண்டு நாளாக நடக்கும். இயல், இசை, நாடகம் என முத் தமிழ் கோலோச்சி கலைகள் மீதான ஆர்வம் மேலிட்டு கலைஞர்கள் உருவாகி வளர்ந்தார்கள்.

அயல் கிராமங்களின் புகழ் பெற்ற கலைநிகழ்ச்சிகளும் அரங்கே றும். அக்காலத்தின் புகழ்பெற்ற சினிமாப் பாடல்களை உள்ளடக்கிய தாக சமூக நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள் அரங்கேறும்.விடிய விடிய கலை நிகழ்ச்சிகளால் மக்கள் மகிழ்ச்சியில் திளைப்பார்கள்.

ஆரம்ப காலத்தில் இரவு நேரம் ஒளியூட்ட மின்சார வசதிகள் இல்லாத போது பெற்றோமக்ஸ் வெளிச்சத்தில் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

காவோலைகளைச் சேர்த்து நெருப்பு மூட்டி அந்த வெளிச்சத்தின் வெப்பத்தில் கலை நிகழ்வுகளைப் பார்த்ததாக ஓர் மூத்தவர் நினைவு கூர்ந்தார். மிக வறிய மக்களின் சனசமூக நிலையம் அவ்வாறிருந்தது.

ஒலிவாங்கி, ஒலி பெருக்கி வசதிகளில்லாத அக்காலத்தில் உரத்த குரலோசையுடன் தான் கலை நிகழ்வுகள் நடந்தன. ஆண்கள் மட்டும் நடிகர்களாக மேடையேறியதாக அக்காலம் இருந்தது. ஆண்கள் தான் பெண் வேடங்களில் நடித்தார்கள்.

பின்னாளில் மின்பிறப்பாக்கிகள், மின்சார வசதிகள் வந்த போது ஆண்டு விழாக்களின் தரம் கூடியது. ஆண்டு விழாக்களை விட பாரதி விழா, கம்பன் விழா, இளங்கோ விழா எனத் தமிழ் பெரியார்களின் பெயரில் விழாக்கள் வெகு விமரிசையாக எடுக்கப்பட்ட காலமும் இருந்தது. வாசிகசாலை நிகழ்வுகளில் பங்கெடுத்த இளைய வட்டங்கள் காதல் கொண்டு திருமணம் செய்யவும் கலை, விளையாட்டு நிகழ்வுகள் களம் அமைத்தன.

வானொலி பணக்காரப் பொருளாக இருந்த காலத்தில் வானொலிப் பெட்டியொன்றை வாங்கி ஊர் மக்களுக்கு செய்தி, பொழுது போக்கு வழங்கிய நிகழ்வுகளும் நடந்தன.

1978 ஆம் ஆண்டில் தொலைக்காட்சி எமது நாட்டிற்கு வந்த போது அதனை வாங்கி தம் மக்கள் மகிழச் செய்த பெருமையும் இச் சனசமூக நிலையங்களுக்கே உண்டு. சிறுவர்களை, இளைஞர்களை சேவை மனப்பான்மை மிக்கவர்களாக வளர்த்து நல்ல சமூகப் பிரஜைகளாக்கிய வகையில் இவற்றின் மதிப்பு உயர்வானது.

சனசமூக நிலையங்களின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் அவற்றின் குறித்த காலகட்ட வளர்ச்சிக்கு சிலரின் பெயரை குறிப்பிட்

டுக் கூறுவார்கள். சில மனிதர்கள் தமது ஊரின் வாசிகசாலைக்காகவே தமது வாழ்வை அர்ப்பணித்து வாழ்ந்து முடித்தார்கள். அத்தகைய மனிதர்களால் தான் இவை நிலைத்து உயர்ந்தன.

கட்சி அரசியலில் புகுந்த போது சனச்சமூக நிலையங்களில் தலைமைகள் தமது மக்கள் யாவரையும் குறித்த ஓர் கட்சியின் ஆதரவாளர்களாக்கினார்கள். கட்சியின் வெற்றிக்காக உழைத்தார்கள். தேர்தலிலும் வாக்களித்தார்கள். தேர்தலில் வென்றபோது வெடி (பட்டாஸ்) கொளுத்தி ஆரவாரம் செய்தார்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்கள் தோன்றிய போது ஒவ்வொரு சனசமூக நிலையமும் ஏதோவொரு இயக்கத்துடன் தொடர்புபடுத்தப்பட்டது. இது தவிர்க்கமுடியாத காலமாற்றமாகி யது.

வீடுகளில் நிகழும் மங்கல, அமங்கல நிகழ்வுகளுக்கு வாசிக சாலை உறுப்பினர்கள் கைகொடுத்து உதவுவது இன்று வரையும் தொடர்கின்றது. நிகழ்வுகளின் வேலைகளை தாமே முன்னின்று செய்வார்கள்.

ஒரு கிராமத்திற்கென ஒரு சனசமூக நிலையம் இருந்து அங்கத்தவர்களிடையே கருத்து வேற்றுமைகள் வந்தபோது அவை இரண்டாக, மூன்றாக நான்காகப் பிரிந்து வேறு பெயர்களில் இயங்கி யதும் நிகழ்ந்தது. சனசமூக நிலையங்களில் பெண்களுக்கெனத் தனி யாக மாதர் சங்கங்களும் உருவாகின.

உள்நாட்டு யுத்தத்தின் வரவால் புலம்பெயர்வுகள் ஏற் பட்டன. புலம்பெயர்ந்த நாடுகளில் சென்றடைந்த இளைஞர்கள் தமது ஊரின் சனசமூக நிலையங்களை அங்கும் தோற்றுவித்தார்கள். நிதி திரட்டினார்கள். கலை விழாக்களை நடத்தி கிராமியக் கூட்டு றவை அங்கும் நிலை நாட்டினார்கள்.

தமது தாயக நிலையத்திற்கும் பணம் அனுப்பினார்கள். இங்கு சிறுகட்டிடமாக இருந்த நிலையம் பெரிய கட்டிடமாகவும் மாடிக்


கட்டிடமாகவும் மாறின. கல்வி விழா, விளையாட்டு விழா, முதியோர் கௌரவிப்பு விழா என விழாக்கள் பெருகின.

தமது நிலையத்தின் பெயரில் Face Book, Twitter போன்றவற்றில் கணக்குகளை திறந்தும் இணையத் தளங்களை உருவாக்கியும் சர்வ தேசமயப் படுத்தி உள்ளார்கள். சனசமூக நிலையம் என்ற அமைப்பு உள்ளூர் மட்டத்தை தாண்டி சர்வதேச மயமாகியது.

அதேவேளை, உள்ளூரில் சனசமூக நிலையங்களின் நிகழ்வு களை நடத்த சேவை மனப்பாங்கு உள்ள இளைஞர்களின் தொகை வற்றிப் போனது. ஆண்டுப் பொதுக்கூட்டம் நடத்தவே ஆள்களைத் தேடிப் பிடிக்க வேண்டியளவுக்கு புலம்பெயர்வுகளால் பல கிராமங்க ளின் சனத்தொகை குறைந்து போனது. பொது மக்களின் வாழ்க்கைத் தரம் கூடியதால் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வீடுகளுக்கு வாங்க அவற்றை வாசிக்கப் போனவர்களின் தொகையும் வெகுவாகக் குறைந் தன.

யாழ்ப்பாணப் பண்பாடு எனும் விருட்சத்தின் விழுதுகளில் ஒன்றாகச் சனசமூக நிலையங்களும் மறக்க முடியாத ஓர் பாகம் தான். காலமாற்றம் இவ் அமைப்பில் பல மாற்றங்களை ஏற்படுத்தி விட்டா லும் கூட நிலை பெற்ற அமைப்பாகத் தான் உள்ளது.

**நன்றி . தினக்குரல்வாரவெளியீடு 23.09.2012**




# கிணறும் வாழ்வியலும்

ஆறுகள், பெருங்குளங்கள், நன்னீரேரிகள், நீர்வீழ்ச்சிகள், மலைகள் எதுவுமேயற்ற நிலப்பரப்புத்தான் யாழ்ப்பாணம். வழுக்கை யாறு பருவ மழையின் போது பெருக்கெடுத்து ஓடும். கோடை வர மறைந்து விடும். நிலம் வரண்டு விடும். சுதுமலை, கீரிமலை, கம்பர் மலை என ஊரின் பெயர்களில் மலை இருக்கும். நிஜத்தில் மலை யிருக்காது சமதரை ஊர்கள் அவை.

ஆனாலும் இயற்கை அன்னை யாழ்ப்பாண மண்ணை வஞ் சிக்க வில்லை. தரைக்கீழ் சுண்ணக் கற்பாறைகளைத் தந்து அதன் கீழ் சுவையான நீரைத்தந்துள்ளாள். நிலத்தை அகழ்ந்து கிணறு அமைத்து நீரைப் பெற்று வாழ்ந்து வருகின் றார்கள்.

மகாவலிகங்கைத் தண்ணீரைக் கொண்டு வருவோம் என்றார்கள். அதைக் காணவில்லை. இரணை மடு குளத்தண்ணீர் வருமென்றார்கள் இப்போது ஏற்பாடுகளும் நடக்கின்றன. வருமெ னப் பார்த்திருக்கின்றார்கள். கிணறு என்ற நீர்நிலை யாழ்ப்பாணப்

பண்பாட்டு விருட்சத்தின் விழுதுகளில் ஒன்று. ஊர்கூடித் தேரி ழுக்கும் ஒற்றுமையான பண்பாடு ஒன்று கிணற்றை அடியொற்றிய தாக இருந்தது. இப்போதும் மிகச் சில இடங்களில் தொடருகின்றது. இப்போதைய மனிதர்கள் உயர்வான வாழ்க்கைத்தரத்தை அனுபவிக் கின்றார்கள். கிணற்று நீரைப் பெறுவதற்கு மகா கஷ்டப் பட்டகாலம் இப்போது குறைவு.

கிணறு இல்லாத வீட்டை விரல் விட்டு எண்ணி விடலாம். முன்பொரு காலம் அப்படியல்ல. ஊரில் சில கிணறுகள் தான் இருக் கும். தோட்டப்புறங்களில் கிணறு தாராளமாக இருந்தாலும் குடி மனைகள் உள்ள இடங்களில் நான்கைந்து கிணறுகள் தானிருக்கும். கிணற்றடியில் பூவரசு மரம் நிற்கும். அதன் இதமான நிழல் மகிழ் வைத் தரும். குடிநீர் பெறவோ, குளிப்பதற்கோ, ஆடை துவைப்ப தற்கே அதன் கிணறுகள் தான் தஞ்சம். ஊரின் குறிச்சிகள் கிணற்றை அடிப்படையாக கொண்டு குறிக்கப்பட்டிருக்கும். சின்னக்கிணற்றடி, தோட்டத்துக் கிணற்றடி, தென்னைக் கிணற்றடி, வயல் கிணற்றடி என கிணற்றினை அடையாளப் படுத்திப் பெயர் இடப்பட்டிருக்கும்.

கிணற்றை அடிப்படையாகக் கொண்ட ஊர்களின் பெயர்களில் "வத்தை" என்ற சொல் ஒட்டியிருக்கும். இம்மரபு வழி ஊர்ப் பெயர்கள் இன்றும் அப்படியே இருக்கின்றன. கிணறு ஒன்றை ஒருவர் வீட்டில் கொண்டிருப்பாராயின் நிச்சயம் அவர் நிலப்பிரபு வாகத்தான் இருப் பார். ஆழம் குறைந்த கிணறுள்ள கிராமங்களில் இந் நிலை சற்று மாறு பட்டிருக்கும். யாழ்ப்பாணத்துக்கே உரித்தான சாதிப்பாகுபாட்டின் கொடுமைகள் அரங்கேறிய இடங்களில் ஒன்றாக கிணறுகளைத்தான் சமூகவியலாளர்களும், வரலாற்றாய்வாளர்களும் கூறுகின்றனர். கிணற்றைச் சொந்தமாக மிகப்பெருமளவில் உயர்சாதியினரே வைத் திருந்தனர். தாழ்த்தப்பட்ட சாதியினரில் மிகப்பெரும்பான்மையினர் சொந்தக் கிணறில்லாத அல்லற்பட்ட மக்கள் கூட்டமாக இருந்தனர். உயர்சாதியினரின் வீடுகளில் உள்ள கிணற்றை அல்லது கோயில்களின் வெளிவீதியிலிருந்து கிணற்றை நம்பி வாழ்ந்தனர்.

இக்கிணறுகளில் தண்ணீர் அள்ளுவதற்கு உரிமையற்றவர்க ளாக இருந்தனர். அவர்கள் தண்ணீர் அள்ளி ஊற்றும்வரை காத்திருக்க வேண்டும். மீறித் தண்ணீர் அள்ள முடியாது. காரணம் சொந்த நில

மற்ற இம்மக்கள் கூட்டம் ரோசம் காட்டினால் வாழ வழியற்றுப் போய் விடும். இன்றைய நவீன இலத்திரனியல் யுகத்திலும் வாழ்க்கைத் தரம் மலையளவு உயர்ந்த காலத்திலும் கூட இப்பாகுபாட்டு வாழ்க்கையின் எச்சசொச்சங்கள் மிகச் சிலவாகப் பரவிக் கிடக்கின்றன.

சாதி அடக்குமுறைக்கு எதிரான போராட்டங்களில் கிணறும் போர்க் களமாக இருந்தது. பேசுபடு பொருளாயிருந்தது. போராட்டக் களத்தின் உக்கிர இடங்களா கவும் இருந்தன. அக்காலத்தில் சமத்துவ உணர்வு பாராட்டி தண்ணீர் அள்ளிய நிகழ்வுகளும் ஆங்காங்கே நிகழ்ந்தன. அதன் விளைவாகக் கிணற்றில் கழிவு ஓயில் ஊற்றுதல், நாயை வெட்டிப் போடுதல் என்பன சில இடங்களில் நிகழ்ந்தன.

மக்கள் எழுத்தாளர் அமரர்.கே.டானியலின் "தண்ணீர்" எனும் நாவல் தாழ்த்தப்பட்ட சமூகம் என விழிக்கப்படும் மக்களின் தண்ணீர் போராட்டத்தை உணர்வு பூர்வமாக கூறுகின்றது. தண்ணீர் வேண்டி கிணறு வெட்டும் மக்களின் உணர்வலைகள், கிணறு வெட்டும் தொழில் முறைகள் ஆகியவற்றை கிராமிய மண்வாசனை கமழக் கூறுகின்றது. தண்ணீருக்கும் வறிய மக்களுக்கும் உள்ள தவிப்பை கூறும் விதத்தை டானியலை விட அழகாக யாரும் கூறியி ருக்க முடியாதுதான். கிராமங்களில் காலை, மாலை வேளைகளில் தண்ணீர் குடத்தை இடுப்பில் சுமந்தபடி போகும் காட்சியை இப் போது காண்பது அரிது. தென்னிந்திய சினிமாப் படங்களில் காண லாம்.

மூத்தோர் குடிநீரைப் பெறுவதற்கு படாதபாடுபட்ட காலத் தின் கொடுமைகளை வேதனைகளுடன் நினைவு கூறுகின்றனர். அதி காலையில் துயில் எழுந்து ஓட்டமும் நடையுமாகக் கிணற்றடியை நோக்கிச் செல்வார்கள். அங்கு ஊர்ப் புதினங்களை அசைபோடு வார்கள். பேச்சும் சிரிப்புமாக பல பொழுதுகள் இருக்கும். சில வேளை காரசாரமான கதைகளும் இருக்கும். கிராமங்களில் எல்லோ ரையும் எல்லோருக்கும் தெரிய வைக்கும் முகவரியாக கிணறுகள்தான் இருக்கும். இளசுகள் சோடி சேர்ந்து வாழ்க்கைப் பாதையில் கைகோர்த் ததும் சில நிகழ்ந்தன.

ஆதலால் பாதாள ஆழக் கிணறுகளுள்ள கிராமங்களில் அதி காலையே குளித்து முடிப்பதை, குடத்தில் தண்ணீர் அள்ளுவதை வழக்கமாகக் கொண்டிருப்பார்கள். வெய்யில் ஏறினால் குளிக்க முடியாது.

காரணம் ஒருவாளி தண்ணீர் மேலில் ஊற்றி மறுவாளி அள்ளி ஊற்ற முன்பு தேகம் காய்ந்துவிடும். சவற்காரம் போட்டுக் குளிப் பதை நினைத்தும் பார்க்க முடியாது. சவர்க்காரம் ஆடம்பரப் பொரு ளாக இருந்த ஒரு காலமும் இருந்தது.

அதிகாலை தொடக்கம் நீர் அள்ளத் தொடங்கினால் வெய்யில் தொடக்கத்திற்கு முன்பாக கிணறு வற்றி விடும். பிறகு கிணற்றில் நீர் ஊறாது. மெல்ல மெல்ல நீர் ஊறிக் கிணற்றில் நீர்மட்டம் கூட வெகு நேரம் பிடிக்கும். ஆண்கள் சைக்கி ளிலோ கால்நடையாகவோ சென்று தோட்டத்துக் கிணற்றில் குளிப்பார்கள். தண்ணீர் வளம் குறைந்த நீர்ப்பிரதேச மக்களின் தண்ணீர் வாழ்க்கை பெரும் போராட்டமா கவே அன்று இருந்தது. இன்றும் ஓரளவிற்கு அந்த நிலைதான்.

அக்காலத்து வறிய பெண்கள் சாறிகட்டிக் குளிப்பார்கள். நனைந்த சாறியின் ஒரு புகுதியை மரத்தில் கட்டிக்காய விடுவரர்கள். காய்ந்த பகுதியை உடுப்பார்கள். அவ்வளவு வறுமை. துவாய் பாவிப் பது இப்போது போலக்கிடையாது. அதனால்தான் உவர்நீர்ப் பிரதேசங்களில் பிறந்து வளர்ந்தோர் வசதி வந்ததும் நன்னீர்ப் பிரதே சத்தை நோக்கிப் போய்விட்டார்கள். இவ் இடப்பெயர்வுகளால் யாழ்ப்பாணத்தின் சில கிராமங்கள் இன்று ஆள்கள் வற்றிப்போய் வனாந்தரமாகிவிட்டன.

திருமணம் பேசும்போது நன்னீர் வளமுள்ள இடத்தில் சம்பந் தம் செய்வார்கள். நீர்வளம் குறைந்த தீவுப் பிரதேசத்துக் கிராமங்க ளிலிருந்து யாழ் நகரம் நோக்கி வியாபாரம், உத்தியோகம் நிமித்தம் குடிபெயர்ந்த மக்கள் நன்னீர் வளமுள்ள இடங்களில்தான் குடியமர்ந் தார்கள். காணி, பூமி, வீடு, வளவு தேடினார்கள்.

குடிதண்ணீரின் தட்டுப்பாடு காலத்துக்கு காலம் குடிப்பெ யர்வை உண்டாக்கியது. கிணற்று நீர் மூலம் விவசாயம் செய்வ

தற்கு வாய்ப்புக் குறைந்த வடமராட்சி, தீவகப் பிரதேசங்களை சேர்ந்த மக்கள் விவசாயம், தொழில் வாய்ப்புத் தேடி வன்னிப் பிரதே சத்திற்கும், நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும், குடிபெயர்ந்தார்கள்.

இதனால்தான் வடமராட்சி தீவகப் பகுதி மக்கள் நாட்டின் நாலா புறங்களிலும் வசித்து வருவதைக் காண முடிகின்றது. வீடு கட்டும்போது ஈசானமூலை எனப்படும் வடகிழக்குத் திசையில் கிணறு அமைக்கப்படும். சமையலறையிலிருந்து 60 அடி தூரத்தி-ற்குள் கிணறு வெட்டப்படும். நீரும் நெருப்பும் அருகருகே இருக்க வேண்டுமென்ற மரபின் வழிவந்தது.

கிணறுவெட்டும்போது நாளுக்கு மண் எடுத்தல் நிகழும். வெட்டிய கிணற்றில் தண்ணீர் கண்டதும் கிணற்றுப் பொங்கல் என படையல் நடக்கும். அதற்குமுன் நீர் ஊற்றுக் கண்டதும் கோழி வெட்டி பலி கொடுக்கப்படும். கிணறு வெட்டியோருக்கு புத்தம் புது சாறம் வழங்குதல், கைவிஷேடம் வழங்குதல் என்பன இன்றுவரையும் சம்பி ரதாயம் மாறாமல் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும், கிணறு வெட்டியோர் ஒருவராகவும் பொங்கல் பொங்குவோர் வேறு ஒருவராகவும் உள்ள சமூகப்பாகு பாடும் நிலவுகிறது.

ஆழம் கூடிய கிணறுகளில் தண்ணீர் அள்ள துலா பயன்படுத் தப்படும். தோட்டக் கிணறுகளில் தண்ணீர் இறைக்க துலா மிதித்தல் இடம்பெறும். இம்முறையைத் தற்போது காண்பது அரிதாயுள்ளது. இவ்விடயத்தை தனியான ஓர் பத்தியில் பின்பொருமுறை பார்ப்போம் கப்பி மூலம் தண்ணீர் அள்ளும் முறையும் வழக்கில் இருந்தது தற்போ தும் உள்ளது. நீரிறைக்கும் இயந்திரம், மின்சாரம் மூலம் நீர் இறைத்தல் வரும் வரையும் துலாவும் கப்பியும் கோலோச்சின. தோட்டங்களில் நீரிறைக்க சூத்திரக் கிணறும் பயன்பட்டது. குழாய்க்கிணறு அமைக் கும் முறை வந்தபோது பாரம்பரியக் கிணறு வெட்டும் தொழில் நுட்பத்தில் மாற்றமேற்பட்டது.

மொத்தமான மிக நீளமான கூர்க்கம்பி மூலம் நிலத்தில் துளை-யிட்டு ஆழ்நீரோட்டத்திலிருந்து நீரைப் பெறுவதற்கு குழாய்க் கிண றுமுறை வந்தது. குழாய்க் கிணறு அமைக்கும் கைத்தொழிலாளர்

குழாமொன்றும் உருவாகியது. புதியதொரு தொழில் விருத்தியாகியது.

கிணறு அமைக்க பெரிய நிலப்பரப்பு தேவைப்படும் முறைமைக்கு மாறாக குறுகிய நிலப்பகுதியில் கிணறு அமைக் கும் முறை வரவேற்பைப் பெற்றது. கிணற்றில் ஆட்கள் விழுந்து இறப்பது காயப்படுவது போன்ற ஆபத்துகள் அற்ற குழாய்க் கிணறு வரவேற்பைப் பெற்றது. ஆனாலும் நிலத்தடி நீர் வேகமாக வெளியேற்றப்பட்டு நன்னீர் வளம் குறைகிறது எனும் ஆபத்துமுள்ளது.

பின்னாளில் மின்சார இயந்திரங்கள் மூலமாக நிலத்தில் ஆழத் துளையிட்டுக் குழாய்க்கிணறு அமைக்கும் தொழில் நுட்பங்கள் வந்தன. ஆயினும் அடிக்கடி மின்சாரத்தைத் தொலைத்த யாழ்ப்பாண வாழ்க்கையில் வெட்டிக்கட்டிய கிணறுகளுக்குத் தனி மதிப்பு உள்ளது.

வீட்டுக்கு வீடு கிணறு வந்தபோது கிணற்றடியில் ஊர்கூடி உறவாடிய வாழ்க்கைமுறை கிட்டத்தட்ட முற்றாகவே தொலைந்து போனது. இணைப்பு குளியலறை, தண்ணீர்த் தாங்கிகள் என வீடுகளின் வாசலை வசதிகள் பல எட்டி உள்ளே வந்துவிட்டன. குழாய் நீர் மூலம் குடிநீர் பெறும் முறையும் பரவலாகி வருகின்றது.

ஆனாலும் ஏழ்மை அதிகம் இருந்த போது கிணற்றடியில் கிடைத்த சந்தோஷம், உறவுகளின் ஒன்றுகூடல் மீண்டும் வராதா என ஏங்கும் உள்ளங்கள் நிறையவே உள்ளன. புலம்பெயர் தேசங்களில் கூட தாய் நிலத்துக் கிணற்றடியின் சுகம் குறித்து கவிதை, சிறுகதை, தொடர்கதைகள் பல பிரசவமாகி உள்ளன. எமது நாட்டிலும் கிணற்றடிகுறித்த இலக்கியங்கள் பல நல்ல சமூகப் பதிவுகளாக இன்றும் போற் றப்படுகின்றன.

கிணற்றுநீரை மட்டும் ஆதாரமாக்க கொண்டு வாழ்ந்து உயர்ந்த மக்கள் கூட்டத்தின் வசந்த நினைவுகள் நினைக்கும் தோறும் இனிக்கும். நடந்து வந்த பாதையின் மகிழ்ச்சிப் பொழுதுகளில் கிணறும் ஆவணத்துக்குரியது.

**தினக்குரல் வாரவெளியீடு 30.09.2012**




# சினிமாப்பாடல் புத்தக காலங்களில்...

சினிமா என்ற ஊடகம் மக்களை வசீகரித்த அளவுக்கு எந்த ஒரு ஊடகமும் வசீகரிக்கவில்லை என்பதை உறுதியாகக் கூறலாம். தமிழ்ச் சினிமாப் படங்களைப் பொறுத்தளவில் பாடல்களின் பிர பலம் படத்தின் வெற்றியை சொல்லும் எனலாம். அத்தகைய பாடல் கள் சிறு புத்தகங்களாக வந்த காலமொன்று இருந்தது. அக்காலம் அண்மைய சில ஆண்டுகளுக்கு முன்னால் மறைந்து விட்டது.

அதன் இனிக்கும் நினைவுகளோ நினைக்கும் தோறும் இத மானது சுகமானது. சந்தோஷத் தென்றலாய் சங்கீதம் இசைத்த அந்த இன்பப் பொழுதுகளும் எமது வாழ்வியல் பக்கங்களில் ஆவ ணப்படுத் தப்பட வேண் டியவை தான். அவற்றின் காலத்தை நோக்கிப் பயணிப்போம்.

இப்போது சினிமாத் திரைப்படங்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே நாளில் திரையிடப்படுகின்றன. அண்மைய பத்து வருடங்களுக்குள் தான் இந்த வழக்கம் வந்தது.

முன்னைய காலத்தில் தமிழ் சினிமாப் படங்கள் தென்னிந் தியாவில் திரையிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று வருடங்க ளின் பின்பாகத் தான் சிலோன் எனப்பட்ட எமது நாட்டின் திரை அரங்குகளுக்கு வரும். தென் இந்தியாவில் வெள்ளிக்கிழமைகளில் தான் புதுப் படம் திரைக்கு வரும். வந்த பின்பு வரும் ஞயிற்றுக்கிழமை யன்று சென்னை, திருச்சிராப்பள்ளி (திருச்சி) வானொலிகளின் நேயர் விருப்பம் பகுதியில் புதுப் படங்களின் பாடல்கள் ஒலிக்கும்.

புதுப்படம் வெளியாவது பற்றி யாழ்ப்பாணத்தின் பத்திரி கை- களில் ஏற்கனவே, செய்தி வெளிவந்திருக்கும். அதனால் ஞாயிற்றுக் கிழமையன்று நேயர் விருப்பம் பகுதி பாடல்களைக் கேட்பதற்காக வானொலியின் முன்பு இங்குள்ள மக்கள் கூடுவார்கள்.

புதிய படத்தின் பாடல்களை வெகு ஆனந்தமாகக் கேட்டு இரசிப்பார்கள். தென் இந்தியாவில் படம் வந்தவுடன் அங்கு படத் தின் பாடல்களைத் தாங்கிய பாட்டுப் புத்தகம் வந்து விடும். படம் வந்த சில தினங்களில் தபால் மூலமாகவோ கப்பல், விமானப்பயணி கள் மூலமாகவே யாழ்ப்பாணத் திற்கும் வந்துவிடும்.

அக்காலத்தில் யாழ் நகரத்தில் தமிழ்ப் பண்ணை புத்தக நிலை யம் எனும் புத்தகசாலை இருந்தது. இப்புத்தக நிலையம் 1970 களின் முற்பகுதியிலேயே எதிர்பாராத விதமாக மூடப்பட்டு விட்டது. இப் புத்தக நிலையம் இயங்கிய காலத்தில் தென்னிந்தியாவில் வெளியாகிய பாட்டுப் புத்தகத்தையும் படங்களின் முக்கிய காட்சி அடங்கிய புகைப் படங்களையும் பெற்றுக் கொள்ளும்.

பின்னர் யாழ்ப்பாணத்தில் வைத்துப் பாடல் புத்தகம் அச் சிடப்படும். பாடல் புத்தக்தில் படத்தின் காட்சிப் படம் ஒன்று இருக்கும். பாடலாசிரியர் படத்தின் கதாநாயகன், கதாநாயகி, இயக் குநர், இசையமைப்பாளர் போன்றோரின் விபரமும் சுருக்கமாக இடம் பெற்றிருக்கும்.

பாட்டுப் புத்தக அட்டையின் உள்புறம் படத்தின் காட்சி ஒன்று போடப்பட்டிருக்கும். அதனுடன் படச் சுருக்கம் எனும் தலைப்பில் படத்தின் கதை இரத்தினச் சுருக்கமாக விறு விறுப்பாக

போடப்பட்டிருக்கும். படத்தின் கதை சொல்லப்பட்டு முடிவு சொல்லப்பட்டிருக்காது. மிகுதி வெள்ளித்திரையில் எனப் போடப் பட்டிருக்கும். வாசிப்போரின் இரசனையைத் தூண்டிய படச் சுருக்கம் படம் எப்போது வருமென ஆவல் கொள்ள வைக்கும்.

வடமராட்சி, வலிகாமம், யாழ்ப்பாண கரையோரக் கிரா மங்கள், மன்னார், கரையோரக் கிராமங்களைச் சேர்ந்தோர் சிலர் விசை இயந்திரப் படகு மூலம் கள்ளத்தனமாக இந்தியா செல்வார்கள். இப்போதையதைப் போன்ற அரசாங்க கடற்படை விரிவாக்கம் அப்போது இல்லை. போரற்ற காலத்தில் தேவையுமிருக்கவில்லை.

இதனால் தென் இந்தியாவிற்கு நினைத்தவுடன் செல்வது சாத் தியமானது. அங்கு சென்று திரைப்படத்தைப் பார்த்ததுடன் கள்ளக் கடத்தல் பொருட்களை விற்று இலாபமீட்டியும் வருவார்கள். தமிழ்ப் பண்ணை புத்தக நிலையத்தில் யாழ்ப்பாணத்தில் அச்சிடப்படும் பாட் டுப் புத்தகத்தின் உள்பக்கம் கதைச் சுருக்கத்துடன் பாடல் ஒவ்வொன் றின் ஆரம்பத்திலும். பாடியவர் பெயர், பாடலாசிரியர் போன்றோர் விபரங்கள் உள்ளடக்கப் பட்டிருக்கும்.

அப்பாடல் புத்தகங்கள் ஐந்து சதம், பத்து சதம் போன்ற விலை களில் தான் விற்கப்பட்டன. அவற்றை மக்கள் வாங்கிப் படிப்பார்கள். நண்பர்கள் இருவர் சேர்ந்து தலா ஐந்து சதம் போட்டு வாங்குவார்கள். பாடல்களின் மெட்டசை வைப் போலத் தாமும் பாடி மகிழ்ந்தார்கள்.

இன்றைய காலத்தில் 70, 80, 90 வயதுகளை அடைந்து உயிர் வாழும் முதியோர்கள் பலர் தமது நீடித்த ஆயுளுக்கு அக்கால பாடல் கள் தந்த மகிழ்வும் உற்சாகமும் ஓர் காரணம் என்கின்றார்கள்.

தமிழ்ப் பண்ணை புத்தக நிலையம் மூடப்பட்டதும் யாழ் வேம்படி மகளிர் கல்லூரி வீதியிலிருந்த டேவிட் லிகோரி எனும் புத் தக நிலையம் சினிமாப் படப் பாடல் புத்தகங்களை வெளியிட்டது. இவ்வாறு வெளி வந்த பாடல் புத்தகங்கள் யாழ்ப்பாணத்தின் புத்தகக் கடைகளின் முன்புறம் மேற்புறமாகத் தொங்கும். உள்ளூரில் பெரிய பலசரக்கு கடைகள், தேநீர்கடைகளின் முன்புறமும் காட்சிப் படுத்தப் பட்டு விற்பனையாகும்.

பாட்டுப் புத்தகங்களை வாங்கிப்படிப்போர் அவற்றைச் சேக ரித்து பைண்டிங் முறை மூலம் கட்டி புத்தகம் போல ஆக்குவார்கள். ஒருவர் தான் படித்த பாடல் புத்தகத்தை மாற்றாகக் கொடுத்து மற்ற வரிடம் உள்ளதை வாங்கிப் படிப்பார்கள்.

ஆலமர நிழல், அரச மர நிழல், நாவல் மர நிழல்கள், பூவரசு, பலா, மா, தென்னை மர நிழல்கள் தோறும் பாட்டுப் புத்தகத்தின் பாடல்களைப் பாடி இன்புறுவார்கள். பாடல் புத்தகங்கள் இல்ல ாத யாழ்ப்பாணத்து வீடுகளே இல்லை எனலாம். பெற்றோர் களும் பாடல் இரசிகர்களாக இருந்த இடங்களில் பிள்ளைகளைக் கண்டி க்க மாட்டார்கள். தாமும் பாடல்களைப் பாடி மகிழ்ந்தார்கள். பாடப் புத்தகங்களுடன் பாடல் புத்தகங்களை எடுத்துச் சென்று பாட் டுப் படித்து பாடசாலையில் தண்டனை வாங்கிய மாணவர்களும் இருந் தார்கள்.

இதனை பறித்து கள்ளமாகப் பாடி ரசித்த ஆசிரியர்களும் இருந்தனர்.

தென்னிந்தியாவில் வெளியாகிய படம் இங்கு திரைக்கு வர இரண்டு மூன்று வருடங்களாகி விட அப்படத்தின் பாடல்களைப் பாடிப் பாடி வானொலியிலும் நிகழ்வுகளில் ஒலிபெருக்கியில் கேட்டுக் கேட்டு பழசாகி விடும். பாடல் பழசு என்றாலும் வரும் படம் புதுசு அல்லவா. அதனால் படம் வந்ததும் அதனைப் பார்க்க தியேட் டர்க ளில் முண்டியடிப்பார்கள்.

முதல் நாளே தியேட்டர் வாசலில் நித்திரை விழித்திருந்து வரி சையில் நின்று படம் பார்த்தவர்களும் இருந்தார்கள். முதல் நாளில் முதல் காட்சியில் படம் பார்க்கும் வழக்கத்தைக் கொண்டிருந்த சில ரும் இருந்தார்கள். தியேட்டர் ரிக்கெற்றின் கறுப்புச் சந்தை வியா பாரமும் களை கட்டும். அவ்வளவு மோகம். தென்னிந்தியாவில் வெளி யாகிய வசூலில் சக்கை போடுபோட்ட படம் இங்கு திரைக்கு வரும் போது மக்கள் கூட்டம் அலைமோதிப் பெரும் நெருக்கடி வந்தது.

இதனை உணர்ந்த படத்தை இறக்குமதி செய்து கொடுத்த

இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம் போன்ற பெருநகரங்களில் ஒரே நேரத்தில் இரு திரையரங்குகளில் படம் காண்பிக்க அனுமதி வழங்கியது.

என் சிறு பராயத்தில் எம்.ஜி.ஆரின் உலகம் சுற்றும் வாலி பன் திரைப்படம் சிறிதர், மனோகரா ஆகிய தியேட்டர்களில் ஒரே நேரத்தில் திரையிடப்பட்டது. ஞாபகத்திலிருக்கிறது. அதுபோல பல படங்கள் திரையிடப்பட்டதாக எம் மூத் தோர்கள் நினைவு கூர்ந் தார்கள்.

ஒரே படப் பிலிம் சுருள்களைக் கொண்டு இரு திரையரங்குக ளில் படம் காண்பிக்கப்படும். ஒரு தியேட்டரில் காலை 10 மணி, பிற்பகல் 2 மணி, மாலை 6 மணி, இரவு 9 மணி எனக் காட்சிகள் இடம்பெற்றது. மற்றைய தியேட்டரில் அரை மணிநேரம் பிந்தியதாக காலை 10.30 மணி, பிற்பகல் 2.30 மணி, மாலை 6.30 மணி, இரவு 9.30 மணிக்கு எனக் காட்சி நேரங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இரவு 9.30 மணிக்கு ஆரம்பிக்கும் காட்சி முடிவுற நள்ளிரவு 12 மணியா கும். கால் நடையாக, சைக்கிளில் கார்களில் வந்து தான் படம் பார்ப் பார்கள். பஸ் கிடைக்காத நள்ளிரவு நேரம் கால் நடையாக வீடுகளுக் குச் செல்வார்கள்.

காலை 10 மணிக்கு படக் காட்சி காண்பிக்கப்படும் தியேட்ரி லி ருந்து முதலாவது படச் சுருள் சைக்கிள் மூலமோ அல்லது பாதுகா ப்புக் கருதி ரக்சி மூலமாகவோ அப்பிலிம் சுருளின் காட்சி மூடிந்த் தும் மற்றைய தியேட்டருக்கு எடுத்துச் செல்லப்படும். இரண்டாவ தாக படம் திரையிடப்படும் தியேட்டரிலிருந்து படம் முடிந்த்தும் பிலிம் சுருள் பெட்டிகள் மீண்டும் முதலாவது தியேட் டருக்கு எடுத்து வரப்பட்டு விடும்.

இவ்வாறே நான்கு காட்சிகளுக்கும் படச் சுருள்கள் மாறி மாறி நாள் தோறும் எடுத்துச் செல்லப்பட்டு இரசிகர்களின் ஆவல் பூர்த்தி செய்யப்படும். சினிமா நடிகர்களின் படக் கட் அவுட்டுகள் மிகப் பிரமாண்டமாகத் தயாரிக்கப்பட்டு திரை அரங்க வாசலில் வைக் கப்பட்டிருக்கும்.

நடிகர், நடிகைகளை தத்தரூபமாக வரையும் ஆட்டிஸ்ற் மணியம் போன்றோரின் ஓவியத் திறமைகள் இன்றளவும் பேசப்பட்டு வருகின்றன. டிஜிற்றல் பிறின்ற் வந்துள்ள இன்றைய காலத்தில் ஓவியத் திறமைக்கு முதலிடம் என்ற பேச்சை இல்லாதாக்கி விட்டது.

அக்காலத்தில் படத்தின் கதை வசனங்களை தாங்கிய புத்தகம் தென்னிந்தியாவில் அச்சிடப்பட்டது. அப்புத்தகங்கள் இறக்குமதி செய்யப்பட்டு யாழ்ப்பாண கடைகளிலும் விற்பனையாகின. அந் தக் கதை வசனப்புத்தகங்கள் இங்கு அச்சிடப்பட்டதாக தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. அப்புத்தகங்களை வாங்கி படத்தின் கதை வசனத்தைப் படித்து இன்புற்றார்கள். படம் இங்கு வந்து பார்த்த பின்பு அதன் வசனங்களைப் பேசி தாமும் நடித்துப் பார்த்து மகிழ்ந் தார்கள்.

உள்ளூர் நாடக மேடைகளில் சினிமாப் பட வசனங்களைப் போல தாமும் பேசி நடித்து அமோக கை தட்டலைப் பெற்றார்கள். அக்காலப் பிரபல சினிமாப் பாடல்களை மேடைகளில் நடித்துக் காட்ட பெரு ஆரவாரம் எழுந்தது. கலைஞர் கருணாநிதியின் கைவண் ணத்தில் உருவாகிய பராசத்தி படத்தில் சிவாஜி கணேசன் பேசி நடித்த "ஓடினாள் ஓடினாள் வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்" என்ற வசனமும் வீரபாண்டிய கட்டபொம்மன் படத்தில் வெள்ளைக்காரத் துரையைப் பார்த்து சிவாஜி பேசிய வசனங்களும் என பிரபலமான கதை வசனங்களின் நீளம் மிக மிக அதிகமானது.

எமது சினிமாப் படப் பாடல் புத்தகங்களின் தரிசனம் நோக்கி மீண்டும் பயணிப்போம். உழைத்துக்களைத்த உள்ளங்களுக்கும் ஓய்வை நாடிய உள்ளங்களுக்கும் உவப்பான சந்தோசச் சாப்பாடாக இப் பாடல்களே இருந்தன. "நதியில் விளையாடி கொடியில் தலை சீவி நடந்த இளந்தென்றலே" போன்ற பல அற்புதமான பாடல் வரிகள் கவித்திறமைகளை வளர்த்தது. பாடல் வரிகளில் வெளியாகிய அறக் கருத்துக்கள் மக்களை நல்ல மனிதர்களாக்கியது.

மக்கள் பாடல்களை வெறுமனே இரசனைக்காக மட்டும் கேட்கவில்லை, பாடவில்லை, கலைஞர்களாக மாறினார்கள். இலக்கி யத் தன்மையான கருத்துக்களைக் கேட்டு தாமும் கவிதை புனையச்

சிலர் கற்றுக் கொண்டார்கள். குரல் வளத்தை வளர்த்து உள்ளூர் இசைக் குழுக்களில் இணைந்து பாடகர்களாகிப் புகழ் பெற்ற சிலர் இருந்தார்கள்.

இக்காலப் பாடல்கள் போல அக்காலப் பாடல்களின் வரிகள் இசையின் ஆக்கிரமிப்பிற்குள் மூச்சடங்கிப் போகாது. இசை தாலாட்டத் தமிழ் அன்னை பாடல் வரிகளால் அழகு ஆலாபனை செய்வாள். கேட்பவர்கள் இசையால் வசீகரிக்கப்பட்டு மயங்கிப் போவார்கள்.

ஆபாசம் கொப்பளிக்காத நாகரிகம் மிகும் தமிழ் பாடல் வரிகள் இருக்கும். அதனால் தான் அவை காலம் கடந்தும் இன்றும் உயிர் வாழ்கின்றன. மதிக்கப்படுகின்றன. சினிமா இரசிகர்கள் ஓல்ட் இஸ் கோல்ட் (Old Is Gold) என வியந்து கூறும் பாடல்கள் அவை.

ரி.எம்.சௌந்தர்ராஜன், சீர்காழி கோவிந்தராஜன், எஸ்.பி.பாலசுப்பிரமணியம், கே.ஜே.ஜேசுதாஸ், பி.சுசீலா, எஸ்.ஜானகி, எல்.ஆர்.ஈஸ்வரி என இதயங்களைக் கொள்ளை கொண்ட பாடகர்களின் பட்டியல் நீளமானது. கவியரசர் கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், வாலி, புலமைப்பித்தன், உடுமலை நாராணகவி, மருதகாசி என மக்கள் மனம் கவர்ந்த பாடலாசிரியர்களும் பலர் இருந்தார்கள். கே.வி.மகாதேவன், விஸ்வநாதன், இராமமூர்த்தி, இளையராஜா, குமார், எம்.எஸ்.விஸ்வநாதன், சங்கர் கணேஷ் என சுப்பர் ஹிட் (Super Hit) பாடல்களைத் தந்த இசையமைப்பாளர்களின் இரசிகர்களானோர் பலர் இருந்தார்கள்.

இதே போலநடிகர்கள், இயக்குநர்களின் பெயர் சொல்லிப் பாட்டுப் புத்தகங்களை வாங்கியும் இரசித்தார்கள். எம்.ஜி.ஆர் பாடிய பாடல் இது. சிவாஜி பாடல் இதுவெனத் தான் பெரும்பாலனவர்கள் கூறிப் பாடினார்கள்.

*1970* களின் ஆரம்ப ஆண்டுகளில் இலங்கை வானொலி புகழ்பெற்ற அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத்தின் பாட்டுக்கு பாட்டு எனும் புதுமை இசை நிகழ்ச்சி அறிமுகம் செய்யப் பட்டது. இது பிற்காலத்தில் சர்வதேச நாடுகளில் மேடை நிகழ்ச்சி ஆகியது.

அப்துல் ஹமீத்தின் சினிமாப் பாடல் வரிகளின் ஞாபக சக்தி இறைவன் கொடுத்த கொடை தான்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்து மேடைகளிலும் பாட்டுக்குப் பாட்டு இசை நிகழ்ச்சி பிரபல்யம் பெற்றது. அப்போது இச்சினிமாப் படப் பாடல் புத்தகங்களுக்கு புது மௌசு வந்தது. பாடல் புத்த கங்களை வாங்கி மனனம் செய்து மெட்டுடன் பாடினார்கள். பாட் டுக்குப் பாட்டு நிகழ்வில் உள்ளூர் மேடைகளில் பங்குபற்றிப் பரிசு பெற்று வானொலியின் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியில் பங்கேற்ற சிலரும் இருந்தனர்.

சிவாஜி, எம்.ஜி.ஆர், முத்துராமன், சிவகுமார், எஸ்.எஸ்.ராஜேந் திரன், ஜெமினிகணேசன், ஜெய்சங்கர், கமலஹாசன், ரஜனிக்காந்த் போன்ற நடிகர்களும் பத்மினி, சாவித்திரி, சரோஜாதேவி, ஜெயலலிதா, கே.ஆர்.விஜயா, லதா, மஞ்சுளா, சௌகார்ஜானகி, சிறிதேவி, அம்பிகா. ராதா என நீளும் நடிகையர்களும் பிரபலம் பெற இச்சினிமாப் பாட்டுப் புத்தகங்களும் ஓர் காரணம்.

பிற்காலத்தில் சிறந்த எழுத்தாளர்களாகிய பலர்தாம் தமது சிறு வயதில் பாட்டுப் புத்தகம், கதை வசனப் புத்தகங்கள் படித்த அனுபவம் கைகொடுத்தாகக் கூறுகின்றார்கள். கண்டதும் கற்கப் பண்டிதன் ஆவான் அல்லவா. காலச்சக்கரம் மெல்ல மெல்லச் சுழன்றது. ஆனால் தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானம் மிக வேகமாக வளர்ந்தது. தொலைக்காட்சி, **VDO** வருகை நிகழ தென்னிந்தியாவில் வெளியா கிய திரைப்படம் ஒரு சில நாட்களிலேயே சின்னத்திரைக்குள் வந்தது. பாடல்களும் கசெற்றில் பதிவு செய்யப்பட்டு உடனேயே வந்தது.

பாட்டுப் புத்தகம் வாங்கி பாடி மகிழும் தேவையை குறைத் தது. பழைய பாடல்கள் பல ரீமிக்ஸ் (Remix) முறை மூலம் புதுமை யான இசை வடிவத்தைப் பெற்று வரத்தொடங்கி விட்டது. புதிய தலை முறையும் ஆவலுடன் இரசிக்கின்றது.

இலத்திரனியல் ஊடகங்கள் இமாலய வளர்ச்சி பெற்றது. நடுத் தர வர்க்கத்தினரும் வாங்கிப் பாவிக்கக் கூடிய விலைக்கு வந்தது. இதன் வருகை அச்சிடப்பட்டு பாவனையில் இருந்த சிலவற்றைத்

தேய்வடையச் செய்தது. பாடலைப் பாடி மகிழ்ந்த தேவைகளை இல்லாமல் செய்து பாடலை எங்கும் எப்போதும் கேட்டு மகிழும் நவீன வாழ்க்கைக் கோலத்தை தந்தது.


அது மட்டுமின்றி பாடலை அப்படியே சின்னத் திரைகளிலோ கைத்தொலைபேசிகளிலோ இணையத்திலோ ஐபாட் (Ipad) போன்றவற்றிலோ பார்த்து மகிழும் காலமும் வந்தது.

கூகுல் தேடுதளம் தமிழ் மொழியில் பாடலின் முதல் வரியைப் பொறித்து தேடலைக் கொடுத்தவுடன் நாம் கேட்ட பாடலை இசையுடன் கொடுக்கும் அளவுக்கு நவீனங்கள் பெருகி விட்டது.

தனியார் வானொலி நிலையங்கள் படம் வெளிவருவதற்கு முன்ப தாகவே வெளியிடப்பட்ட பாடல்களை வாங்கி நேயர்களுக்குத் தரத் தொடங்கினார்கள். இந்தியாவிலும் இலங்கையில்லும் உலக நாடுக ளிலும் ஓர் படம் ஓரே நாளில் திரையிடப்படும் முறை வந்தது. ஆனால் முன்பு போலக் குடும்பமாகச் சென்று ஆவலுடன் பார்த்த காலங்களும் 100 நாள், 200 நாளென படம் ஓடிச் சாதனை புரிந்த காலங்களும் தொலைந்தே போனது.

சினிமாப் பாடல் புத்தகங்களின் பிறப்பையும் அவை தடுத்து விட்டன. இன்றைய மூத்தோர்கள் வாழ்ந்த அக்காலத்தின் பசுமை நினைவுகளை அவ்வப்போது இரை மீட்டிப் பார்க்கின்றனர். தாம் வாழ்ந்த காலங்கள் தான் உள மகிழ்வைத் தந்த பொற்காலங்கள் என்கின்றனர். அக்காலம் மீண்டும் வராதா, இன்றைய தலைமுறை அதனை அனுபவிக்காதா என ஏங்குகின்றனர்.கால வெள்ளம் அள்ளிச் சென்ற சினிமாப் பாடல் புத்தக வரவைக் காலப் பெட்டகத்தில் சேமிப்போம்.

**தினக்குரல் வாரவெளியீடு 14.10.2012**



# பொப்பிசைப் பாடல் யுகத்தில்...

இசை உலகில் மறக்க முடியாத காலம் பொப் இசைப் பாடல்களின் காலம். இலங்கைத் தமிழ் இசை உலகில் யாழ்ப்பாணத்தில் பிறப்பெடுத்த இசை வடிவம் தான் பொப் இசை. அமெரிக்காவில் எல்விஸ் பிரஸ்லீ எனும் இசைக் கலைஞர் பொப் கிற்றார் இசைக் கருவியை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஆங்கிலத்தில் பாடிய பொப் இசைப் பாடல்கள் உலகப் பிரபலம் பெற்ற தொடங்கியது. 1960 களின் தொடக்கத்தில் நித்தி கனகரட்ணம் எனும் இசை ரசனை மிக்கவர் அமெரிக்க பொப் பாடல்களைப் பின்பற்றித் தானும் தமிழில் பாடல்களை உருவாக்கத் தொடங்கினார்.

அவரால் உருவாக்கப்பட்ட பாடல்கள் யாழ் நகர் ஸ்ரான்லி வீதியில் சிறிதர் தியேட்டருக்கு முன்பாக இருந்த நித்தி றெக்கோடிங்பார் எனும் ஒலிப்பதிவுக் கூடத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டன. அவ்வாறு உருவாக்கப்பட்ட பொப்பிசைப் பாடல்கள் இலங்கையில் மட்டுமல்ல, உலகத்தமிழ் இசை உலகில் பெரும் அதிர்வலைகளை உருவாக்கப்பட்ட பொப் இசைப் பாடல்கள் இவர்களுக்கு ஓர் உந்துதலாக அமைந்தது.

- வேதநாயகம் தபேந்திரன் -

*1966* ஆம் ஆண்டு யாழ்.மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி நடந்ததும் ஒலிபரப்பாளர் நித்தியால் நித்தி கனகரட்ணம் பாடிய பொப் இசைப் பாடல்கள் ஒலிபெருக்கியில் போடப்பட்டது. "சின்ன மாமியே உன் சின்ன மகள் எங்கே, பள்ளிக் குச் சென்றாளோ, படிக்கச் சென்றாளோ, அட வாடா மருமகா என் அழகு மருமகா பள்ளிக்குத் தான் சென்றாள் படிக்கத் தான் சென்றாள். ஐயோ மாமி அவளை அங்கே விடாதே..." என நீளும் பாடல் ஒலித் தது. அதன் பின்னர் "கள்ளுக்கடைப் பக்கம் போகாதே உன் காலைப் பிடித்துக் கெஞ்சுகிறேன்..." எனும் பாடல் ஒலித்தது பின் " ஐயையோ ஊரே கெட்டுப் போச்சு..." எனும் பாடல் ஒலித்தது. விளையாட் டுப் போட்டி முடிந்த பின்பு ஒலித்த இப்பாடல்களுக்கு ரசிகர்கள் மிக உற்சாகமாக நடனமாடினார்கள். மைதானம்களை கட்டியது. சிறு எதிர்ப்புக் கிளம்பினாலும் கூட பெரும் ஆரவாரத் துடன் இப் பாடல் கள் வரவேற்கப்பட்டது. சின்ன மாமியே பாடல் வடமராட்சி அல் வாய் கிராமத்தைச் சேர்ந்த கமலநாதன் என்பவரால் இயற்றப்பட்ட தாகும். இதன் மூலப் பிரதியை நேரில் சென்று பார்த்தேன்.

சின்ன மாமியே பாடலை ரசிகர்கள் தமது உற்சாகத்திற்கேற்ப வரிகளை மாற்றிப்பாடுவார்கள், இப்பாடல் மிகுந்த கலகலப்பைத் தருகின்றது. இலங்கைத் தமிழ் இசை வானில் ஓர் திருப்பு முனையாக யாழ்.மத்தியகல்லூரி மைதான இசை 'நிகழ்ச்சி இருந்தது. "சின்ன மாமியே உன் சின்ன மகள் எங்கே" எனும் பாடல் இன்றும் பல்கலைக் கழகங்களில் இளைஞர் களியாட்ட நிகழ்வுகளில் பாடப்பட்டு வருவதைக் காணலாம். அன்று புறப்பட்ட பொப் இசைப் பாடல்கள் இலங்கையினதும் இசை வரலாற்றில் புதியதொரு அத்தியாயத்தை தோற்றுவித்தது சிங்கள மொழி இலங்கையில் மட்டுமே பேசப்படும் ஓர் மொழியாகும்.

ஆனால் உலகத் திசை யெல்லாம் ஆட்சி செலுத்திய தமிழ் மொழிக்கு இலங்கையின் தலைபோல அமைந்த யாழ்ப்பாணத்திலி ருந்து புறப்பட்ட பொப் இசைப் பாடல்கள் புதிய வரவாக இருந்தது. நித்தி கனகரட்ணத்தையே தமிழ் பொப் இசைப் பாடகர்களின் தந்தை யாகப் போற்றி வருகின்றனர். போர்த்துக்கீசரின் இசைப் பண்பாட் டிலும் பொப் இசை பாடல்கள் பெரும் செல்வாக்கைச் செலுத்திய தாக இசை வல்லுநர்கள் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நித்தி கனகரட்ணம் பொப் கிற்றாருடன் இசைத்த பொப் பாடல்கள் பிரபலமாக ஏ.ஈ.மனோகரன் எனும் அற்புத பொப் பாடகர் உருவாகினார். அவரது குரலில் ஒலித்த பாடல்கள் பெரும் வரவேற்பைப் பெற்றன. அதில் மிகவும் பிரபலமான பாடல் "இலங்கை என்பது நம் தாய்திருநாடு, எழில் மிகுந்த வளம் நிறைந்த இயற்கை நல் நாடு, மாணிக்க முத்துக்களும் மாண்புறும் காட்சிகளும் மனதைக் கவர்ந்திடும் நாடு, யாழ்ப்பாணம் என்று சொன்னால் தேன் சுவை ஊறும், பனை மரமும் புகையிலையும் ஒன்றாக வளரும், கந் தனின் நல்லூர் கண்டு கடல்வளம் நிறைய உண்டு,மங்காத காட்சியும் தானே, மீன் பாடும் தேன்நாடு கிழக்கிலே உண்டு, எண்ணெய் வளம் பேசாலை மன்னாரில் உண்டு மருதமடு நாயகியின் மங்காத காட்சியும் உண்டு, கோணேசர் கோயில் கொண்ட திருமலை ஊரில் இராவணே சன் ஞாபகமும் வருகுது அங்கே, கந்தளாய் இனித்திடுமே, கல்லோயா மயக்கிடுமே கண்களால் காண அழைக்குதே."

என்றவாறே இப்பாடல் ஒலித்தது. மிகப் பிரபலத்தைப் பெற்றது. சிங்களப் பொப் பாடலின் மெட்டைத் தழுவிய இப்பாடல் அன்றைய இசை நிகழ்ச்சிகளில் மிகவும் ஆரவாரத்துடன் பாடப்பட்டது. நிகழ்ச் சியின் இறுதியில் மேடையில் பாடி ஆட ரசிகர்களும் ஆடினார்கள் இலங்கையில் வாழ்ந்த பறங்கியர்கள் பாட்டுப் பாடி ஆடுவது பைலா எனப்பட்டது. அதனைப் பின்பற்றி எம்மவரும் மேடையில் ஆடிப் பாடிய போது அதனை பைலா என்றழைத்தார்கள். சிங்கள மக்க ளிடையே தான் இது பிரபலம் பெற்றிருந்தது.

பொப் இசைப் பாடல்களின் உச்ச யுகம் 1970 - 77 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்தது. இலங்கையின் தமிழ் பேசும் பிரதேசங்க ளில் இசை நிகழ்ச்சி நடக்கும் போது தென்னிந்திய சினிமாப் பாடல் களுடன் பொப் பாடல்களையும் கலந்து பாடும் வழக்கம் உருவா னது. றேடியோ சிலோன் எனப்பட்ட இலங்கை வானொலியில் சனி, ஞாயிறு, திங்களில் 15 நிமிட நேரம் பொப் இசை பாடல்கள் நேயர் விருப்பமாக ஒலிபரப்பபட்டன. அக்காலத்தில் யாழ்.மண்டை தீவிலிருந்து அலைவரிசை நிலையம் மூலமாக தென்னிந்தியாவின் பெரும்பாலான இடங்களில் றேடியோ சிலோன் தெளிவாகக் கேட்டது. இதனால் எம்மவரின் பொப் இசைப் பாடல்கள் அங்கும் பிரபலமாகிப் பாடப்பட்டன.

- வேதநாயகம் தபேந்திரன் -

பொப் பாடல்களில் நித்தி கனகரட்ணம் ஏ.ஈ.மனோகரன் ஆகியோருடன் எஸ்.ராமச்சந்திரன், ஸ்ரனி சிவானந்தன், டேவிட் ரஜேந்திரன், கனகாம்பாள் சதாசிவம், அமுதன் அண்ணாமலை, முத்தழகு எனப் பலர் பிரபலமாக இருந்தார்கள். இதில் அமுதன் அண்ணாமலையின் பாடல்கள் தனித்துவமான திறமையுடன் பிரபலமாயிருந்தது. சிங்களப் பாடகர்களான எம்.எஸ்.பெர்னாண்டோ, எச்.ஆர்.ஜோதிபால, திறீ ஸ்ரார்ஸ் எனப்பட்ட சிங்களப் பெண் சகோதரிகளான பாடகிகளும் பிரபலம் பெற்றிருந்தனர். தமிழ்ப் பிரதேச மேடை பொப் இசை நிகழ்ச்சிகளுக்கு இவர்கள் பெரு வரவேற்புடன் அழைக்கப்பட்டார்கள். அவர்கள் பாடிய சிங்களப் பொப் இசைப் பாடல்களும் எம்மவரால் பாடிப் பிரபலம் பெற்றது.

அவற்றில் ஞாபகத் திரையில் இருப்பவற்றைப் பார்ப்போம்.

1) சூட மாமி கேபலாண்ட ஜனவ மேய பீ...
2) சுராங்கனி, சுராங்கனி, சுராங்கனிக்க மாலு கெனாவா, மாலு மாலு சுராங்கனிக்க மாலு கெனாவா...
3) போர்த்துக்கீசக் காரயா...

இசைக் குழுக்களில் கலந்து பாடப்பட்ட பொப் இசைப் பாடல்கள் நாளடைவில் தனியே பொப் பாடல்களை மட்டும் பாடும் இசை நிகழ்ச்சிகளாக உருவாகின. Super gold in chines (சுப்பர் கோல்ட் இன் சைனீஸ்) எனும் இசைக் குழு மிகப் பிரபலம் பெற்றிருந்தது.

திருமண நிகழ்வுகளில் கோயில் திருவிழாக்களில் அரச, தனியார் நிறுவன திறப்புவிழாக்களில் எல்லாம் பொப் இசைப் பாடல் கச்சேரிகள் தனியே வைக்கும் யுகமொன்று மலர்ந்தது. இவ் இசைக் கச்சேரிகள் நடக்குமிடங்களில் பல்லாயிரக் கணக்கில் ரசிகர்கள் திரண்டார்கள். ஆடினார்கள், ஆனந்தமடைந்தார்கள். தென்னிந்திய சினிமாப் பாடல்களைத் தமிழ் மொழியில் பதிவேற்றம் செய்துள்ளார்கள். கூகுள் தேடு தளத்தில் தமிழ் மொழியில் பாடலின் முதல் வரியை ரைப் செய்தவுடன் வருகின்றது. அதைப்போல இந்தப் பொப் இசைப் பாடல்களையும் பதிவேற்றம் செய்ய முன்வர வேண்டும். அதன் மூலம் இந்த இசை மரபு சாகா வரம் பெற முடியும்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொப் இசைப் பாடல் நிகழ்ச்சிகளுக்கு அரியாலையைச் சேர்ந்த லோகேஸ் என்பவர் அறிவிப்பா


ளராகக் கலந்து கொண்டார். இவரது அறிவித்தல் பாணி தனித்துவமாக இருந்தது. ஒலி வாங்கியைப் பிடித்துக் கொண்டு இவர் அறிவித்த விதத்தைக் கண்டு ரசித்துப் பலர் பின்பற்றினார்கள். இலங்கை வானொலியில் செய்தி வாசித்த சிலர் இவரது அறிவிப்புப் பாணியைப் பின்பற்றியதாகவும் நினைவு கூருகின்றனர். யாழ்ப்பாண பஸ் நிலையம் இப்போதிருந்ததிற்கு முன்பிருந்த நிலையத் திறப்பு விழா வைபவத்தில் பெரும் பொப் இசைக் கச்சேரி ஒன்று நடந்தது. ஆயிரமாயிரமாக மக்கள் திரண்டிருந்து ரசித்தார்கள்.

எம்மவரால் காலத்திற்கு காலம் பாடி ஆடி ரசிக்கப்பட்ட பாடல்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

1. அடிடா சுந்தரலிங்கம், அடிடா சுந்தர லிங்கம்,
   சுந் தரலிங்கமய்யா...
2. மால் மருகா எழில் வேல் முருகா...
3. ஓ சீலா ஓ லீலா, டோன்ற் லுக் அற் மீ...
4. ஹாய் கூய் மீனாட்சியின் எலிகள் பட்டாளம்,
   அங்குமிங்கும் ஓடிடியோடி ஒரே கும்மாளம்... வாலறுந்த போனாலும் வம்புகளோ தாராளம். நாலு காலில் ஓடியோடி ஒரே கும்மாளம்.
5. வாடா இராசநாயகம், வாடா இராசநாயகம், கொண்டு
   வாடா மசாலா வடை இராசநாயகம்...
6. வடை வடையென விற்று வந்தாள் வாயாடிக் கிழவி...
7. சோழன் சோறு பொங்கட்டுமா, இறுங்கு சோறு
   பொங்கட்டுமா சொல்லுங்கோ மருமகனே...

இப்பாடலை ரசிகர்கள் தங்கள் வசதிக்கேற்றவாறு வரிகளை மாற்றியமைத்துப் பாடுவார்கள். அது மிகுந்த வரவேற்பைப் பெற்றது. இப்போதும் பெறுகின்றது. இப்பாடல்களை யார் இயற்றியது யார்? யார் இசையமைத்து போன்ற விபரங்களைச் சரியாகப் பெற முடியவில்லை. ஆனாலும் இப்பாடல்களை இன்றுவரையும் முணுமுணுக்கும் இசை ரசிகர்கள் நிறையவே உள்ளனர். இப்பாடல்களின் புத்தகங்களையே இசைத்தட்டுக ளையோ, பெற முடியாதமை கவலைக்குரியது தான்.

**தினக்குரல் வாரவெளியீடு 21.10.2012, 28.10.2012**



# துலா மிதித்தல் காலம்

துலா இந்தச் சொல் இரண்டு வகையில் உங்களுக்கு அறிமுகமாயிருக்கும். தோட்டங்களிற்கு நீர் இறைத்த வகையில் புராதன தொழில் முறையாக இருந்தது ஒரு வகை. நடந்து முடிந்த உள்நாட்டு யுத்தத்தில் போரில் ஈடுபட்ட இரு தரப்பினரும் சோதனைச் சாவடிகளை ஏற்படுத்தியபோது வீதியை மறிக்கப் பயன்படுத்திய நீள இரும்புக் கேடர்களும் துலா எனப்பட்டது. தேவைப்பட்ட போது வீதியைக் கடக்க அனுமதி வழங்க இந்த துலா உயர்த்தி தடை விலக்கப்பட்டது.

நாம் எமது விவசாயத் துறையின் நீர்ப்பாசன முறைக்குப் பயன்பட்ட துலாவின் மீள் நினைவுகளின் மீது நடந்து பார்க்கச் செல்வோம். யாழ்குடாநாடு தோட்ட விவசாயச் செய்கைக்கு பேர் போன இடமாக அன்று இருந்தது. செம்புல, இருவாட்டி மண் கிராமங்களில் உற்பத்தியாகிய மரக்கறிகள் நாட்டின் நாலா திசைக்கும் சென்றன. ஆறுகளோ, நீர்ப்பாசனக் குளங்களோ எதுவுமற்ற யாழ்ப்பாணத்தில் கிணறுகளை நம்பியே கோடை காலத் தோட்ட

விவசாயம் இருந்தது. இப்போதும் அந்த நிலை தான் தொடருகின்றது.

இயந்திர யுகத்தின் வருகைக்கு முன்பாக மனித உடல் வலுவைப் பெரிதளவும் பயன்படுத்தி துலா மிதித்தல், சூத்திரக் கிணறு எனும் பாரம்பரிய பொறிமுறைகளினூடாக கிணற்றிலிருந்து நீர் இறைக்கப்பட்டது. எமது இன்றைய பதிவான துலா மிதித்தல் முறைமையின் தரிசனத்திற்குச் செல்வோம்

சுண்ணக்கற்பாறைகள் பெருமளவு வியாபித்திருக்கும் யாழ். குடா நாட்டின் செம்புல விவசாயக் கிராமத்தின் கிணறுகளில் நீரைப் பெற விவசாயிகள் துலாவைப் பயன்படுத்தினார்கள். கிணறுகள் ஆழம் கூடியவையாகச் சில இடங்களில் இருக்கும். இன்னும் சில இடங்களில் நடுத்தர ஆழமாக இருக்கும். இன்னும் சில இடங்களில் ஆழம் குறைந்ததாக கிணறுகள் இருக்கும். எப்படியிருந்த போதும் துலா மிதித்தல் மூலமாக தோட்டத்திற்கு நீர் பெறப்பட்டது. இப்போது இருந்தது போல கிணறுகள் பரவலாக தோட்டங்கள் தோறும் இருக்கவில்லை.

தோட்ட உரிமையாளர்கள் பலரது தோட்டங்களுக்கு பொதுவாக ஓர் கிணறு இருந்தது. இதனை கிணற்றுப் பங்கு என்பார்கள். அந்தக் கிணற்றில் துலா மூலம் நீரிறைப்பதற்கு கிணற்றில் பங்குதாரர்ககள் முறைவைப்பார்கள் இன்று மண்ணெண்ணெய், மின்சாரம் மூலமாக நீரிறைக்கும் இயந்திரங்கள் வந்துள்ள போதும் தோட்டச் செய்கையாளர்கள் முறை வைத்து நீரிறைக்கும் வழக்கம் தொடர்கின்றது.

தோட்டங்களின் போதும், காணி விற்று புதியவருக்காக உறுதி எழுதப்படும் போதும் காணியின் பெயரைக் குறிப்பிட்டு அதன் திசையைக் குறிப்பிட்டு குறித்த கிணற்றிலிருந்து நீர் இறைப்பதற்கு உரித்தும், நீர் வரை வழிவாய்க்கால் பாவிப்பு உரித்தும் உள்ளதென எழுதப்படும். அவ்வழக்கம் இன்றும் தொடர்கின்றது. தோட்டக் காணிகளுக்கு உறுதிப் பெயர் இருக்கும். இலட்சிங்கள் ஒல்லை வெள்ளன் புலம், சவரை, ஆவிரம்பிட்டி, பூத்ததிடல் என இப்பெயர் நீளும். உறுதிப் பெயரைக் கொண்டு குடும்பங்களை அழைக்கும்

வழக்கமும் அன்று இருந்தது. இன்றும் ஓரளவு தொடர்கின்றது.

தோட்டக்கிணற்றில் நீரிறைக்கும் முறை வைக்கும்போது பகலில் ஒருவருக்கு முறை ஒரு போகம் வந்தால் அவருக்கு அடுத்த போகம் இரவில் நீரிறைக்கும் முறை வரும். இவ்வாறே இரவில் வந் தவருக்கு பகலில் மாறிவரும். ஏழுநாட்களைக் கொண்ட ஓர் வாரத்தில் தோட்டக் கிணற்றை நீரின் கொள்ளவுக்கு ஏற்பமுறை வைப்பார்கள். இயந்திரத்தின் மூலம் நீரிறைக்கும் போது கிணறு முற்றாக வற்றிவி டும். ஆனால், துலா மூலம் இறைக்கும் போது இவ்வாறு நிகழச் சந் தர்ப்பம் மிகவும் குறைவு. இதனால் நன்நீர் வளம் பாதுகாக்கப்பட்டது. இப்போது இயந்திரங்களால் நீரிறைத்து கிணறு அடியோடு வற்றச் செய்வதால் உவர் நீரின் தன்மை யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வருகின்றது.

இரவுமுறை நீரிறைக்கும் போது வரும் காலங்களில் கொட்டும் பனிக்குள் விறைத்தபடி மிகவும் கஷ்டப்பட்டு நீரிறைப்பார்கள். கிணற் றடியில் இரண்டு பூவரசு மரங்கள் வளர்க்கப்படும். பூவரசு மரத்தின் மேல் வைரம் பாய்ந்த பனை மரம் ஒன்று குறுக்காகப் போடப்படும். இப்பூவரசுகளை ஆடுகால் பூவரசு என்பார்கள். அதாவது துலா பொருத்தி ஆடும் தன்மை உள்ளதால் அப்பெயர் வந்தது. பனை மரத் தால் செய்யப்பட்ட துலா பொருத்தப்படும்.

துலாவில் நீரிறைக்கும் செயற்பாடு நடக்கும் போது துலாவில் இருவர் முன்னும் பின்னும் போய் வருவார்கள். துலாவில் நீரைப் பெறுவதற்காக ஒருவர் நிற்பார். கிணற்றில் நீரைக் கோலுவதற்காக பனை ஓலையில் செய்யப்பட்ட பட்டை உபயோகிக்கப்படும். இப்பட்டை வாளியின் அமைப்பை ஒத்திருக்கும். 50 தொடக்கம் 100 லீற்றர் தண்ணீரைக் கொள்ளக் கூடியதாக இப்பட்டை இருக்கும்.

இப்பட்டை இழைப்பது ஓர் தனிக்கலையாக இருந்தது. நீர் வெளியே சிந்தாமல் பெரிய வாளி போன்ற அமைப்பில் பட்டை அமைந்திருக்கும். சுன்னாகம் சந்தை இவ் ஓலைப்பட்டை விற்கும் பிர தான சந்தையாக இருந்தது. துலாவில் இருவர் முன்னும் பின்னும் சீரான வேகத்தில் நடக்க ஓலைப்பட்டை கிணற்றிலிருந்து நீரைக் கோலி

வரும். தண்ணீரை கொண்டு வரும் ஓலைப் பட்டை நிலத்தில்பட்டு பிரியாமல் இருக்க தண்ணீர் போகும் இடத்தில் வாழைச்சருகுகளைப் போட்டு வைப்பார்கள். .இறைக்கப்படுகின்ற தண்ணீரை பயிர்களுக்கு பாய்ச்ச யாழ்ப்பாணத்தவரின் தனித்துவம் கூறும் தோட்ட மண்வெட்டியுடன் ஒருவர் நிற்பார்.

கேத்திர கணிதம் தெரியாத எமது மூத்தோர் வாய்க்கால் நீர் விரயமாகாது வழிந்தோடச் சிறந்த முறையில் தோட்டங்களை வடிவமைத்தார்கள். துலாவில் இருவர் , நீரிறைக்க ஒருவர் , பயிர்களுக்கு பாய்ச்ச ஒருவர் எனக்குறைந்தது 4 பேர் தேவை. இன்றைய இயந்திர யுகத்தில் ஒருவர் பல பரப்பு பயிர்களுக்கு நீர் பாய்ச்ச முடிகின்றது. ஆனால் அந்நாளில் 4 பேர் தேவைப்பட்டார்கள்.

கடும் வெய்யில் காலங்களில் இறைக்கும் நீர் வாய்க்காலில் காய்ந்து விடும் என்பதற்காக அதிகாலையே துலா மிதித்து சூரிய வெளிச்சம் அதிகம் வர முன்பு இறைப்பை முடித்து விடுவார்கள். துலா மிதித்து முடிந்த பின்பு ஓலைப் பட்டையை வெய்யிலில் காய வைத்து பின்பு வீட்டிற்குள் பாதுகாப்பாக வைப்பார்கள்.

இரவில் நீரிறைப்பு முடிந்தால் கிடங்கு ஒன்றினுள் நெருப்பு மூட்டி ஓலைப் பட்டையைக் காய வைப்பார்கள். துலா மிதித்து நீர்ப்பாசனம் செய்ய குறைந்தது 4 ஆள்கள் தேவை. அக்காலத்துக் குடும்பங்களில் நிறையப் பிள்ளைகள் இருப்பார்கள். இதனால் அண்ணன் தம்பிகள் என 4 பேர் தோட்டத்தினுள் துலா மிதிப்பதில் ஈடுபடுவார்கள்.

சொந்த அண்ணன், தம்பிகள் இல்லாவிட்டால் ஒன்றுவிட்ட சகோதரர் ஈடுபடுவார்கள். மூத்த அண்ணனின் சொல்கேட்டுப் பணிந்து சகோதரர்கள் நடப்பார்கள். குடும்ப உறவு முறைகள் ஒழுங்கான முறையில் கட்டமைக்கப் பட்டிருக்கும். துலா மிதிக்க வலிமையான உடற்கட்டு தேவையாயிருந்தது.இதனால் சகோதரர் இடையே தலைமைத்துவப் பண்பு வளர்ந்தது.

தோட்டத்தில் பயிர் நட்ட காலங்களில் பயிருக்கு தண்ணீர் வார்க்கவென மண் பானைகளே பயன்பட்டன. மண் பானையில்

தண்ணீர் எடுத்து சொட்டுச் சொட்டாக ஊற்றுவது மிகவும் கஷ்டமாக இருக்கும்.

இரவிரவாக கொட்டும் பனியில் தோட்டத்து வாய்க்காலில் படுத்திருந்து விடிகாலை துலா மிதித்து தோட்டத்தில் வைத்தே குளித்து உடுப்பு மாற்றிய பின் ஓட்டமும் நடையுமாகப் பாடசாலைக்குச் செல்வார்கள்.

இவ்வாறு படித்தவர்களில் பலர் பிற்காலத்தில் பெரிய பெரிய பதவிகளை அலங்கரித்துள்ளார்கள். இன்றும் அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்கள். மிகவும் கஷ்டப்பட்டு பொருளாதாரத்தைத் தேடிய அவர்களுக்கு கல்வியின் பெருமையையும் நன்றாகத் தெரிந்து படித்தார்கள். கஷ்டப்பட்டு உழைத்துப் படித்த தமது கடந்த கால பசுமை நினைவுகளை அவ்வப்போது இரை மீட்பது அவர்களுக்கு தனிச் சந்தோஷம் தான்.

பெண்கள் வீட்டு வேலைகள் செய்வதில் பெரும் நேரத்தைக் கழிக்க வேண்டியிருந்தது. மாடுகளுக்குத் தீவனமாக பனை ஓலை கிழிக்கும் வேலையை கண்தூங்கத், கண்தூங்க இரவு வெகுநேரம் விழிக்க வேண்டியிருந்தது. இதனால் பெண் கல்வி மிகவும் குறைவாகவே இருந்தன.

பாரம்பரிய துலா மிதிப்பு முறையில் மிகவும் கஷ்டப்பட்ட மக்களுக்கு இயந்திர யுகத்தின் வருகை பெரும் ஆறுதலாயிருந்தது. வோட்டர் பம்ப் (Water Pump) எனப்பட்ட நீரிறைக்கும் இயந்திரத்தின் வருகை பெரும் புரட்சியைச் செய்தது. 3 பேர் சேர்ந்து செய்த வேலையை ஒரு இயந்திரம் தன்னந்தனியாக சிறப்பாகச் செய்தது. லண்டனில் உற்பத்தியாகிய அல்கன், வூல்ஸ்லீ, ஜப்பானில் உற்பத்தியாகிய ரொபின் ஆகிய நீரிறைக்கும் இயந்திரங்கள் மதிப்பாகவும் பிரபலமாகவும் இருந்தது.

நீரிறைக்கும் இயந்திரத்தின் வருகையால் தோட்டச் செய்கையில் கல்வியைத் துறந்து ஈடுபட்ட பெண்களின் வேலைச் சுமை பெருமளவு குறைந்தது. இதனால், பெண் கல்வி உயரத் தொடங்கியது. இது குறிப்பிடத்தக்க ஓர் மாற்றம் . மின்சாரம் கிராமப்புறங்களை

எட்டிப்பார்க்க மின்சார நீரிறைக்கும் இயந்திரம் புழக்கத்திற்கு வந்தது. நீரிறைக்கும் இயந்திரங்களின் இடத்தை இவை பல இடங்களில் பிடித் தன. யுத்தத்தின் வருகையால் தடைப்பட்டுப் போன போதும், மண் ணெண்ணெய் கிடைக்காத போதும் 1990 ஜூலை முதல் 1996 வரையில் யாழ்ப்பாணத்தின் சில இடங்களில் துலா மிதித்தல் மீளவும் நடைபெற்றது.

ஆனால், இப்போது துலா மிதித்தலை மட்டுமல்ல துலாக் களையும் காணமுடியாது. ஆடுகால்ப் பூவரசுகளையும் தேடியும் காண முடியாதுள்ளது. சில வீடுகளில் துலாவின் அடிப்புறம் பாரமான கல் அல்லது இரும்பு பிணைக்கப்பட்டு கயிற்றின் உதவியுடன் கிணற்றில் நீர் அள்ளும் முறைமை இப்போதும் உள்ளது.

இயந்திர யுகத்தின் எழுச்சி எமது பாரம்பரியத் தொழில் முறை மைகள் பலவற்றை அற்றுப்போகச் செய்து விட்டன. பாரம்பரிய தொழில் முறைகளில் சிறந்த உடற்பயிற்சி கிடைத்தது. மனிதன் ஆரோக் கியமாக வாழ்ந்தான்.

நீவீன இயந்திரங்களின் வருகை மனிதனது உடல் உழைப் பின் தேவையைப் பெருமளவில் குறைவடையச் செய்து விட்டது. காலத்தின் நவீனங்கள் எமது மண்ணின் பாரம்பரியங்கள் பலவற் றைக் காணாமல் போகச் செய்துவிட்ட போதும், துலா மிதித்தல் யாழ்ப்பாண வரலாற்றின் நினைவுப் பக்கங்களில் பதிவிற்குரிய ஓர் ஆவணம் தான்.

**நன்றி. தினக்குரல்வார வெளியீடு 04.11.2012**




# இசைக் குழுக்களின் காலங்களில்

சினிமா இசையும், பக்தி இசையும் யாழ்ப்பாணத்தில் உன்னதமாகக் கோலோச்சிய நினைவின் தடங்களை நோக்கிப் பயணிப்போம். இந்தியாவில் சினிமா பெரும் கைத்தொழிலாக உள்ளது. ஏராளம் பேருக்கு வாழ்வளிக்கும் துறையாக உள்ளது. அதுபோல இல்லாவிட்டாலும் கூட சினிமாப் பாடல்களை இசைத்த இசைக் குழுக்கள் பல யாழ்ப்பாணத்தில் இருந்தன இன்றும் இருக்கின்றன. ஆனாலும் அந்த நாட்களில் இசைக் குழுக்களுக்கு இருந்த மதிப்பு மகத்தானது.

இப்போதையதைப் போல தொலைக்காட்சி, சீடி பிளேயர், டிவிடி பிளேயர், இணையம் என்பவை இல்லை. அதனால் தியேட்டர், வானொலி, இசைக்குழுக்கள் என்பவை ஊடாகத்தான் சினிமாப் பாடல்களை இரசித்தார்கள். சினிமாப் பாடல்கள் என்பது மக்களை வசீகரித்த விதம் மிகப் பெரியதாக இருந்தது.

கண்ணன் இசைக்குழு அக்காலத்தில் மிகப் பிரபலமாக இருந்தது. இக்குழுவின் தலைவரான இசைவாணர் கண்ணன் தான்

பிற்காலத்தில் தமிழீழ விடுதலை புலிகளின் இசைப்பாடல் தட்டுகள், இறுவெட்டுகள் பலவற்றை உருவாக்கிக் கொடுத்திருந்தார். நல்லூரில் கலாலயா இசைக்குழு, மண்டலேஸ்வரன் இசைக்குழு என்பவை இருந்தன. கல்வியங்காட்டில் அருணா இசைக்குழு, யாழ்நகர் கரையோரப்பகுதியில் நெல்சன் இசைக்குழு, யாழ் கச்சேரியடி ரங்கன் இசைக்குழு, ராஜன்ஸ் இசைக்குழு, கோணேஸ் - பரமேஸ் இசைக்குழு என இவ் இசைக்குழுக்களின் பட்டியல் மிக நீளமானது. குடாநாட்டின் முழுப் பாகத்திலும் இயங்கிய இசைக் குழுக்களின் பெயர்களும் கலைஞர்களும் தேடி பாதுகாக்க வேண்டிய ஆவணம் தான்.

ஒரு சில இசைக் குழுக்கள் தான் பொருளாதாரவளம் மிகுந்தவையாக இருந்தன. ஆனாலும் இவற்றின் இசைக் கலைஞர்களும் பாடகர்களும் பெருமளவுக்கு வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களாகத் தான் இருந்தார்கள். பொருளாதார வளம் குறைந்த இசைக் குழுக்கள் இசைக் கருவிகளை வாடகைக்கு எடுத்து இசைக் கச்சேரிகளை நடத்தினார்கள். கிற்றார், பேஸ் கிற்றார், ட்றம், எலெக்ரிக் கிற்றார், பொக்ஸ் கிற்றார் போன்ற கருவிகள் நாளாந்தம் வாடகைக்கு வழங்கும் தொழில் பரவலாக நடந்தது.

யாழ் ஈச்சமோட்டைப் பகுதியில் ஒலிபெருக்கிகளை வாடகைக்கு விட்ட றீகல் சவுண்ட் சேர்விஸ் நிறுவனம் இசைக் கருவிகளை வாடகைக்கு விட்ட வகையில் முதன்மை பெற்றிருந்தது. நாளாந்தம் கூலி வேலைக்குப் போகும் இசைக் கலைஞனால் சொந்தமாக ஒரு இசைக்கருவியை வாங்க முடியாது. இதனால் வாடகைக்கு எடுத்தார். வாடகைக்கு ஐம்பது ரூபாவும் தனக்கு ஐம்பது ரூபாவுமென நூறு ரூபா வாங்கினார்.

இசைக் கச்சேரிகள் குடாநாடெங்கும் பரவலாக நடந்து அக்காலத்தில் இசைக் கருவிகளை வாடகைக்கு விடும் தொழில் இலாபகரமானதாக இருந்தது. தற்போது இதுவும் மறைந்து போன கைத்தொழில்களின் பட்டியலில் சேர்ந்து விட்டது. இந்துக் கோயில்களின் திருவிழாக்களே இசைக் குழுக்களின் மேடையாகப் பெருமளவுக்கு இருந்தது.

பொது மக்களும் கோஷ்டி பார்க்கப் போகிறோமென பாய், தலையணை, பெட்சீற் சகிதம் புறப்பட்டுவிடுவார்கள். ஊர் கூடித் தேர் இழுக்கும் ஒற்றுமைப் பண்பாடாக இருந்தது. திருவிழாவில் ஒரே நாளில் அருகேருகே இரண்டு மேடை, மூன்று மேடை எனப் போடப் பட்டு ஒவ்வொரு மேடைக்கும் ஒவ்வொரு கோஷ்டியாக மாறி மாறி பாட்டுகள் போட்டிக்குப் பாடப்பட்டதும் சில இடங்களில் நிகழ்ந்தன.

பெரும் பணக்காரர்கள் திருவிழா உபயகாரர்களாக இருந்த இடங்களில் இதெல்லாம் சர்வசாதாரணமானது. பணச் செருக்குக் காட்டும் இடமாக திருவிழாக்கள் இருப்பதாக அன்றும் இன்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. சொந்தப் பணக் கையிருப்பு இன்றி போட்டி போட்டு கடனுக்கு திருவிழா செய்து இரவோடிராவாக ஊரை விட்டோடிய சிலரும் இருந்தனர். அக்காலத்தில் கோயில்களில் இரவுத் திருவிழா முடிய ஒன்பது பத்து மணியாகிவிடும். அதன் பிறகு இசைக் கச்சேரிகள் நிகழும் மேடை அமைப்பு இசை நிகழ்ச்சிக்கு பிரதா னமானது.

முன் சொன்ன ஈச்சமோட்டை றீகல் சவுண்ட் சேர்விஸ் நூற்றுக்கு மேற்பட்ட ஸ்பீக்கர், பொக்ஸ் ஆகியவற்றை வைத்திருந் தனர். ஒலி வாங்கி (மைக்) தொழில்நுட்பத்தில் வரும் புதிய தொழில் நுட்பங்களை றீகல் உள்வாங்குவதால் பெரும் வரவேற்பைப் பெற் றார்கள்.

ஒளி அமைப்பிற்கு கோப்பாய் மனோ லைற்ஸ் போன்ற பல நிறுவகங்கள் இருந்தன. திருவிழா மேடையில் இசைக் கச்சேரி தொடங்கும் போது முதல் வணக்கப் பாடலாக பிள்ளையார் பாட லொன்று ஒலிக்கும். அடுத்தும் ஒரு பக்திப் பாடல் ஒலிக்கும்.

அதன் பிறகு அக்காலத்தில் மிகப் பிரபலமான சினிமாப் பாடல் ஒலிக்கும். அத்துடன் சனத்திரளும் ஆரவாரமும் பெருகத் தொடங்கிவிடும். அக்காலத்தில் பிரபலமான சினிமாப் பாடல்கள் ஒலிக்கும் போது சபை தம்மை மறந்து ரசிக்கும். பாடல் முடிந்தவுடன் கைதட்டல் வானைப்பிளக்கும். கோஷ்டி பார்க்க இளைஞர்கள் பல்லா யிரக்கணக்கில் வருவார்கள். ஆனாலும் சலசலப்பு கரைச்சல் எதுவு

மின்றி அமைதியாகவே இசைப் பயணம் நிகழும். திருவிழாக்களும் இசைக் கச்சேரிகளும் இளசுகளை ஒன்று சேர்க்கும் பண்பாட்டு நிகழ் வாக இருந்தது. அது இன்றும் தொடருகின்றது.

குறித்த கோயிலைச் சேர்ந்த இளைஞர்கள், பெரியவர்கள் சில ஆயிரக்கணக்கில் நிற்பார்கள். கோஷ்டி சமூகமாக நிகழ இது ஒரு காரணமாக இருக்கலாம். இப்போது கானாப் பாடல்கள் என்கின் றோம் முன்பு பைலாப்பாட்டு அது போல் ஆட்டம் போடக் கூடிய பாடலை டப்பாங்குத்துப் பாடல் என்பார்கள். அப்பாடல்களை மிக வும் ரசித்தார்கள்.

ஆனாலும் மிக நாகரிகமாகவே ரசித்தார்கள். இக்காலத்தில் இசை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு தயங்குகிறார்கள். வரம்பு மீறிச் சில இளசுகள் செய்யும் அட்டகாசங்களே இதற்கு காரணம்.

அக்கால இசை நிகழ்ச்சிகளில் பெண் பாடகிகளை மிக அரி தாகவே காணமுடியும். இதனால் ஆண் பாடகர்களே சில நேரங்களில் பெண் குரலில் பாடினார்கள். பாடகர்கள் இசைக் கலைஞர்களில் பலர் வறுமைப் பட்டவர்களாக இருந்தாலும் சமூகத்தில் இசை ரசிகர்களால் மதிக்கப்பட்டார்கள். இசைக் குழுக்களில் ஆரம்பத்தில் மேற்கத் தைய இசைக் கருவிகளான கிற்றார், ட்றம் போன்றவற்றையே அதிகம் பயன்படுத்தினார்கள். நாடளவில் தமிழ் இசைக் கருவிகளான தவில், மிருதங்கம், நாதஸ்வரம் என்பவற்றையும் இசை நிகழ்சிசிகளில் சேர்த்து பயன்படுத்தினார்கள்.

அந்நாளில் ஓகன் (Organ) இசைக் கருவி கிடையாது. அதற்குப் பதிலாக எக்கோடியன் எனும் இசைக் கருவியைப் பயன்படுத்தினார் கள். இசைக் கலைஞர்கள் முழுவதும் ஆண்களாகவே இருந்தார்கள். இசை நிகழ்ச்சிகள் கோயில் திருவிழாக்களில் மட்டும்மல்ல சனசமூக நிலையங்களில் ஆண்டு விழாக்கள், தனியார் நிறுவன நிகழ்வுகளில் நடந்தன. இதனை விட நிதி சேகரிக்கும் நோக்குடன் நிதி உதவிக்காட் சிகளும் நடைபெற்றன. இப்போதையதைப் போல கேபிள் தொலைக் காட்சி இசை நிகழ்ச்சிகள் அறவே இல்லாத அக்காலத்தில் இசைக் குழுக்களின் நிகழ்ச்சிகளுக்கு சனக் கூட்டம் களைகட்டும். யுத்தத்தின்

சத்தம் கேட்காத அக்காலத்தில் பொதுமக்களில் கிராமங்களின் கட் டமைப்பு சிதறா மலும் சனக் கூட்டம் வெளியேறாமலும் இருந்தது.

சினிமா இசைப் பாடல்கள் மட்டுமல்ல பக்திப் பாடல் இசைக் கச்சேரிகளும் கோயில் திருவிழாக்களில் நடந்தன. சீர்காழி கோவிந் தராஜன் ரிஎம் சௌந்தராஜன், கேபி சுவுந்தரம்பாள், கே.ஜே.ஜேசு தாஸ் என பாடகர்களின் வருகையும் அமைந்திருந்தது. சீர்காழி கோவிந்தராஜன் வரணி கிராமத்தில் சிட்டிவேரம் அம்மன் கோயி லின் திருவிழாவில் பாட வந்தார். அதன் பின்பு புன்னாலைக்கட்டுவன் கோயில் திருவிழவில் பாடிய போது சனக் கூட்டம் ஆயிரக்கணக்கில் அலைமோதியது.

பார்வையாளர்கள் இருக்க இடமில்லாமல் போனது. உடனே திருவிழா உபயகாரர்கள் அருகிலிருந்த மிளாகாய்த் தோட்ட உரி மையாளர்களுடன் தொடர்பு கொண்டனர். மிளகாய்த் தோட்டம் முழுவதையும் வெட்டி அகற்றி அதற்குரிய முழுப் பணத்தையும் கொடுத்தனர். பின்பு கச்சேரி நடந்தது. இசை ரசனையின் உச்சம் அந்த ளவுக்கு இருந்தது.

ஈழத்துப் பாடகர் பொன் சுந்தரலிங்கம் போன்ற பல பாட கர்களின் பக்திப் பாடல் இசைக் கச்சேரிகள் களைகட்டும். சினி மாப் பாடல்கள், பக்திப்பாடல்கள் இசைக் கச்சேரிகள் நடைபெறும் போது தமது விருப்பத்திற்குரிய பாடல்களைப் பாடுமாறு ரசிகர்கள் துண்டு கொடுத்து விடுவார்கள்.

நேயர் விருப்பங்களாக அப்பாடல்கள் ஒலிக்கும். இதனால் மணித்தியாலக் கணக்கில் நீடிக்கும் இசை நிகழ்ச்சிகளில் மக்கள் மெய் மறந்தார்கள். சினிமா சங்கீதத்தின் ஊடாக இசையை மக்கள் பயின்ற தால் கர்நாடக சங்கீதம் மறந்தும் பிறழ்ந்தும் போனதாக இசை ஆர் வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இசைக் கச்சேரிகள் சினிமாப் பாடல்களில் ஆரம்பித்து பொப் பிசைப் பாடல்களின் வரவுடன் தடம் மாறியது. ஆரம்ப காலத்தில் சில பொப்பிசைப் பாடல்கள் பாடப்பட்டு மிக விரைவில் பொப் இசைப்

- வேதநாயகம் தபேந்திரன் -

பாடல்கள் மட்டும் இடம்பெறும் இசை நிகழ்ச்சியாக மாறியது.


பின்பு சினிமாப் பாடலும் மெல்லிசைப் பாடல்களும் இடம் பெறும் நிகழ்ச்சியாக மாறியது. விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் போராட்ட எழுச்சிப் பாடல்கள் எனும் புது மரபிற்கு வழிவகுத்தது.

கொழும்பிலிருந்தும் இசைக் குழுக்கள் வந்து இசை நிகழ்ச்சியை நடாத்தியபோது ஆரவாரமாக வரவேற்கப்பட்டது. வடமராட்சியின் வல்வெட்டித்துறையில் நடந்த இந்திர விழாக்களில் இதன் சிறப்பை அதிகம் காண முடிந்தது.

1980 களில் பிறந்த யுத்தத்தின் சத்தம் மெல்ல மெல்ல கேட்கத் தொடங்கவே இசைக் குழுக்கள் கோலோச்சிய காலங்கள் விரை வாகவே ஓடி மறைந்தன. இசையால் ரசிகர்களை மகிழ்வித்த மிகப் பெரும்பாலானோர் மேற்கு நாடுகளை நோக்கிப் புலம் பெயர்ந் தார்கள். நாடுகள் தோறும் ஆயிரக்கணக்கில் எம்மவர் அங்கும் சேர்ந்த போது அங்கும் இசைக் குழுக்கள் மீளவும் உருப்பெறத்தொடங்கின. இங்கு இசைக் குழு மரபு அடங்கிப் போக அங்கு இசைக்குழு மரபு உருவானது. மேற்கத்தைய நவீன இசைக் கருவிகளை மிகவும் சாவ காசமாக உபயோகித்தார்கள். இங்கு யுத்தத்தின் மத்தியில் போராட்ட இசை மரபொன்று உருவாகியது. புதிய தேடல்களுக்கும் புதிய கலை ஞர்களின் வருகைக்கும் வழி வகுத்ததாக இசை ஆர்வலர்கள் கூறுகின் றார்கள்.

யுத்தம் முடிவுற்ற இப்போதைய காலத்தில் இசைக் குழுக்களின் தோற்றம் புத்துயிர் பெற்றுள்ளது. ஆனாலும் இலத்திரனியல் ஊடக ஆட்சியால்' அவற்றின் செல்வாக்கு முன்பு போல இல்லை என இசை ரசிகர்கள் கூறுகின்றனர். யாழ்ப்பாண மக்கள் மகிழ்ந்திருந்த இசைக் காலங்களும் பதிவிக்குரிய ஓர் ஆவணம் தான்.

**நன்றி. தினக்குரல் வாரவெளியீடு 2012 நவம்பர் 11**




# துறைமுகப் பட்டினமொன்றின் கதை

"தோணி போனாலும் துறை போகாது" இது எம் முன்னோரின் அனுபவ மொழி. துறைமுகம் (Harbour) என்பதையே துறை என்றனர். யாழ்.குடாநாடு துறை முகங்கள் பலவற்றை கொண்டு கடல் வாணிபத்தில் சிறப்பாக இருந்தது ஒரு காலம். சிறியளவிலான துறை முகங்களும் பல இருந்தன. இன்னும் பெருமளவில் மீன்பிடி நோக்குடன் இயங்குகின்றன.

காங்கேசன் துறை எனவும் கே.கே.எஸ் (K.K.S.) எனவும் அழைக்கப்பட்ட துறைமுக நகரின் தரிசனமாக இன்றைய நாள் மலருகின்றது. தூங்காத நகரமாக காங்கேசன்துறை இருந்த காலத்தையும் பதிவு செய்யுங்கள் என்ற வாசக உள்ளங்களின் வேண்டுதல் இன்று நிறைவு பெறுகின்றது.

வேரறுந்த பூமியில் நூலறாத நினைவுகளாக இன்றய தரிசனம் அமைகின்றது.

பண்டைக்காலத்தில் கயாத்துறை என அழைக்கப்பட்ட இவ்வி

டம் பின்னாளிலேயே பெயர் மாற்றம் பெற்றது. மாருதப்புரவீக வல்லி குதிரை முகம் நீங்கி தென்னிந்தியாவிலிருந்து கடல் வழியாக காங் கேசன் என அழைக்கப்பட்டவர் முருகப் பெருமானின் சிலை களைக் கொண்டு வந்தார். காங்கேசன் (முருகன்) சிலைகள் இறக்கியதுறை தான் பின்னாளில் காங்கேசன்துறை என வந்தது.

யாழ்ப்பாண குடாநாட்டின் வலிகாமம் வடக்கு பிரதேசத்தின் முதன்மையைப் பறை சாற்றுவதாக காங்கேசன்துறை பிரதேசம் திகழ்ந்தது. காங்சேன்துறை நகரம்சார் பிரதேசம், துறைமுகம், சீமெந்து தொழிற்சாலை, புகையிரத நிலையம், மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரம், கீரிமலை புனித தீர்த்தக் கேணி, மயிலிட்டி மார்பு நோய் சிகிச்சை நிலையம் என்பவற்றை பிர தானமாகக் கொண்டிருந்தது.

கே.கே.எஸ். எனச் சுருக்கமாகவே இப்பிரதேசத்தை அழைப் பார்கள். இங்குள்ள சீமெந்து தொழிற் சாலையின் சீமெந்தின் தரத்திற்கு நாடு முழுவதும் மதிப்பு இருந்தது. ஜி.ஜி. பொன்னம்பலம் கைத்தொ ழில் அமைச்சராக இருந்தபோது 1948 இல் அடிக்கல் நாட்டப்பட்டு 1950 இல் சீமெந்து தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டது.

இப்பிரதேசத்தில் கிடைத்த சுண்ணாம்புக் கல் 98 வீதம் கல்சி யம் காபனேற் ($CaCO_3$) உடையதாக இருந்தது தொழிற்சாலை அமைவிடத்திற்குப் பிரதாண காரணம். சீமெந்து உற்பத்திக்குத் தேவையான கிளே எனப்பட்ட ஒரு வகை மண்ணை மன்னார். முருங்கனிலிருந்து எடுத்துவர கிளே ரயின் ஓடியது. யுத்த காலத்தில் முருங்கன் கிளே வராதபோது கைதடி அரச முதியோர் இல்லத்திற்கு முன்பாக இருந்த பிரதேச மண் பதிலீடாகப் பாவிக்கப்பட்டது.

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையில் 4 வேலை முறைகள் வைத்து 24 மணிநேரமும் தொழிற்சாலை இயங்கியது. காலை 6 மணி, காலை 8 மணி, பிற்பகல் 2 மணி இரவு 10 மணி என தொழிற்சாலை வேலை முறைகள் இருந்தது. வேலை ஆயத்தம், முடிவிற்கு பெரிய சத்தத்துடன் சங்கு ஊதப்படும்.

அதேபோல புகையிரத நிலையமும், துறைமுகமும் 24

மணிநேரமும் படு சுறுசுறுப்பாக இயங்கியது. தொழிற்சாலை அலுவலகம் காலை 8 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை இயங்கியது. நாளுக்கு 5 முறை சங்கு ஊதப்பட்டது. இதனால் காங்கேசன்துறை நகரம் மூடாத கடைகளுடன் தூங்காத நகரமாக இருந்தது. சீமெந்து ஏற்றும் லொறிகளும் எந்நேரமும் பயணித்துக் கொண்டிருக்கும்.

சீமெந்து தொழிற்சாலையின் புகைபோக்கி வானுயர இருக்கும். எந்நேரமும் புகையைக் கக்கிக் கொண்டிருக்கும். சிரித்திரன் என்ற நகைச்சுவை வார இதழ் யாழ்ப்பாணத்தில் வந்த போது அதன் ஆசிரியர் சுந்தர் (சிவஞான சுந்தரம்) கேலிச் சித்திரமொன்றை வரைந்தார்.

புகைபோக்கியை பார்த்து 'இது என்ன? பட்டாளத்துக்குப் புட்டவிக் கிறாங்கள்.' என வரைந்தது இன்றளவிலும் நினைவு கூரப்படுகிறது. துறைமுகம் அமைந்திருந்த இடத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரம் தள்ளி புதிய துறைமுகம் அமைப்பதற்கு 1966 ஆம் ஆண்டில் அப்போதைய பிரதமர் டட்லி சேனாநாயக்க அடிக்கல் நாட்டினார். 1977 இல் புதிய துறைமுகம் திறந்து வைக்கப்பட்டது. நாட்டின் நாலா பாகங்க ளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பொருட்கள் கப்பலில் வந்தன. இலங்கைச் சுங்கத் திணைக்கள அலுவலகமொன்று இருந்தது. கப்பல் பொருட்களைப் பரிசோதிப்பது, கள்ளக் கடத்தல், கள்ளக் குடியேற் றம் தடுப்பது இவர்கள் கடமையாக இருந்தது.

பழைய துறைமுகம் இருந்த காலத்தில் தோல்பொருள், பேர்ஸ் ஆகியவற்றை மட்டும் கொண்டு வந்த கப்பலை பெட்டிக் கப்பல் என்றார்கள். அரிசி, மா, சீனி, உரம் போன்ற பொருட்களும் கொண்டு வரப்பட்டன. இங்கிருந்து கே.கே.எஸ்.சீமெந்து, ஆனையிறவு, உப்பு, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை. உற்பத்திகளும் கொண்டு செல்லப்பட்டன.

கப்பலில் இறக்கப்பட்ட பொருட்கள் ஆரம்பத்தில் கடற்கரையிலிருந்து கிட்டங்கி என அழைக்கப்பட்ட களஞ்சியத்தில் வைக்கப் பட்டன. பின்னாளில் கிட்டங்கிகள் உள்புறங்களிலும் கோண்டாவில், நாவற்குழி, சுன்னாகம், பருத்தித்துறை போன்ற இடங்களிலும் அமைக் கப்பட்டன. துறைமுக வாசல் ரேவடி என அழைக்கப்பட்டது.

கப்பலில் இறக்கப்பட்ட பொருட்கள் ஐந்தாறு வத்தைகளில் ஏற்றப்படும். இவ் வத்தைகளை ஒரு இயந்திரப்படகு கரைக்கு இழுத்து வரும். வத்தை என்பது மரப்பலகையால் செய்யப்பட்ட வள்ளம் போல இருக்கும். வத்தைகள் கரைக்கு வந்ததும் கங்காணி ஒருவரின் தலைமையில் தொழிலாளர்கள் இறங்குவார்கள். பொருட்களை இறக்கும் தொழிலாளர்களை வகுப்புத் தொழிலாளர்கள் என அழைக்கும் பேச்சு வழக்கும் இருந்தது. இப்போதும் இருக்கிறது. இவ்வாறு இறக்கப் படும் பொருட்களின் விபரங்களைப் பதியும் இரு எழுதுநர்கள் லாண்டிங் கிளார்க் (Landing Clerk) என அழைக்கப்பட்டார்கள். பின்பு இப்பொருட்கள் லொறியில் ஏற்றப்படும் போது பதியும் வேலைகளைச் செய்வோர் இருவர் டெலிவரி கிளார்க் (Delivery Clerk) என அழைக்கப் பட்டார்கள்.

இவ்வளவு நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்வதற்கு இலங்கை சுங்கத் திணைக்கள அதிகாரிகளும் உடனிருப்பார்கள். வத்தைகளில் பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதைப் பரிசோதிக்கவென இரு எழுதுநர்கள் இருப்பார்கள். இவர்களை நமீச்சிங் கிளார்க் என அழைத்தார்கள். பின்னாளில் துறைமுகம் விரிவடைந்த போதும் இந்த நிர்வாகக் கட்டமைப்பு இருந்துள்ளது. கப்பல் கரை சேர்ந்தவுடன் கப்பல் கப்டனுடன் உத்தியோகத்தர், ஊழியர்கள் தங்குவதற்கென றெஸ்ற் ஹவுஸ் (Rest House) இருந்தது. உல்லாசப் பயணிகள் விரும்பும் இடமாகக் காங்கேசன் துறை இருந்தது.

இயற்கை வனப்புமிகு கடற்கரை, கீரிமலை, புனித தீர்த்தக் கேணி, யாழ்.குடாநாட்டின் மிகப்பெரிய வெளிச்ச வீடு (கலங்கரை விளக்கு- Light House) என்பவை சுற்றுலா செல்வோரைக் கவர்ந்து இழுத்தன. றெஸ்ற் ஹவுஸ், ஹாபர் வியூ ஹொட்டல் என்பன சுற்றுலா பயணிகள் தங்குமிடங்களாக இருந்தன.

காங்கேசன்துறை புகையிரத நிலையம் எந்நேரமும் சுறுசுறுப்பாக இயங்கியது. காலை 6 மணிக்கு உத்தரதேவி, மதியம் 2 மணிக்கு கடுகதி (Express), மாலை 6.10 மணிக்கு மெயில் ரயின், பின்னாளில் இரவு 8.30 மணிக்கு நகர்சேர் கடுகதி (இன்ரசிற்றி- Intercity) என்பவை நாளாந்தம் கொழும்பு நோக்கி ஓடியது.

இன்ரசிற்றி புகையிரதம் கே.கே.எஸ்.ஸில் புறப்பட்டால் யாழ்ப்பாணம், அநுராதபுரம், பொல்காவெல ஆகிய இடங்களில் மட்டும் நின்று கொழும்பைச் சென்றடையும். இதனை விட உணவு, இதர பொருட்களை எடுத்து வரும் குட்ஸ் ரயின் (Goods Train) முன்னர் சொன்ன கிளே ரயின், ஒயில் ரயின், சன்டிங் ரயின் ஆகியவையும் ஓடியது.

கொழும்பு செல்வோர் ரயினில் சீற் பிடிக்கவென காங்கேசன் துறைக்கு பஸ்ஸில் செல்வார்கள். கமலா ராக்கீஸ், இந்திரா ராக்கீஸ் என கூடாரம் அடித்த கொட்டகை சினிமாத்தியேட்டர்கள் முன்னாளில் இயங்கியது. காலப் போக்கில் இவை மூடப்பட்டது. பின்னாளில் ராஜநாயகி. யாழ் என இரு தியேட்டர்கள் இயங்கியது.

அக்காலத்தில் சினிமாத் தியேட்டர்களில் காலை 10.30 மணிக் காட்சியை மோனிங் ஷோ, (Morning Show), பிற்பகல் 2.30 மணிக் காட்சியை மெட்னி ஷோ, மாலை 6.30 மணிக் காட்சியை (F) பெஸ்ற் ஷோ (First Show), இரவு 9.30 மணிக் காட்சியை செக்கண்ட் ஷோ (Second Show) எனவும் அழைத்தார்கள்.

யாழ்நகரில் மாலை 6.30 மணிப் படக்காட்சி முடிந்த பின்னர் இரவு 10.00 மணிக்கு யாழ்நகரிலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் புறப்படும் 769, 764 வழித்தடங்களை படபஸ் எனத்தான் அழைத்தார்கள். அது தான் அன்றைய கடைசி பஸ்ஸாக இருந்த போதும் படபஸ் என்பதே அதற்கான பெயராக இருந்தது.

சினிமாவுடன் மக்களுக்கு இருந்த வசீகரம் அப்படியிருந்தது. படபஸ், சீமெந்து தொழிற்சாலை, கப்பல்கள், புகையிரதம் காரணமாக காங்கேசன் துறை நகரம் இரவு 10, 11 மணிவரையும் சனநடமாட்டம் மிகுந்த தாயிருந்தது.

இரவு 10 மணிக்கு யாழ்நகரிலிருந்து புறப்பட்டு காங்கேசன் துறை வந்த 769, 764 வழித்தட பஸ்கள் அதிகாலை 4 மணிக்கு முதல் பஸ்ஸாக காங்கேசன்துறை நகர பஸ் நிலையத்திலிருந்து புறப்படுவார்கள்.

மாவிட்டபுரம், கருகம்பனை, கொல்லன்கலட்டி, பன்னாலை என்பவை வெற்றிலை, முந்திரிகைப் பயிர்ச் செய்கைக்குப் பிரபலமாக இருந்தன. தையிட்டி, போயிட்டி கிராமங்களும் விவசாயச் செய்கையில் ஈடுபட்டன. மயிலிட்டிப் பிரதேசத்தில் விளைந்த வெங்காயத்திற்கு கொழும்புச் சந்தையிலும் தனிமதிப்பு இருந்தது. அத்துடன் மயிலிட்டியில் குரக்கன், சாமை, மரவள்ளி போன்றவையும் பயிரிடப்பட்டன. மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் மீன்பிடியில் முதன்மை பெற்றிருந்தது. மயிலிட்டி கடல் மீன்களின் தனிச்சுவையை யாழ்ப்பாணம் எங்கும் வாயூற இன்றும் நினைவு கூருகின்றனர்.

ஒல்லாந்தர் கட்டிய கோட்டை மயிலிட்டியில் இருக்கிறது. துறைமுகத்திற்கும் ஒல்லாந்தர் கோட்டைக்கும் இடையே இருந்த இடம் காவற்கடவை எனப்பட்டது. இது பின்னாளில் காட்டுக் கடவை என மருவி உச்சரிக்கப்பட்டது.

மயிலிட்டிக் கடல் காற்று மருத்துவத் தன்மை மிகுந்ததாக இருந்ததைக் கண்ட பிரித்தானிய ஆட்சியாளர்கள் கடற்கரையோரமாக மார்பு நோய் (காச நோய்- T.B) வைத்தியசாலை அமைத்தனர். அது இன்று அழிந்து போய்விட்டது. காங்கேசன்துறை நகரப் பிரதேசத்தின் நிர்வாகத்திற்கென பட்டின சபை (Town Council) இயங்கியது. பின்னாளில் திருகோணமலை, கே.கே.எஸ். பயணிகள் கப்பல் ஓடிய போது ரி.சி.(T.C) எனப்பட்ட இப்பட்டின சபை வளாகத்தில் பயணிகள் இறங்கினார்கள். இங்கிருந்தும் ஏறினார்கள். அப்போது இம்மண்ணில் பிறந்து வாழ்ந்தோர் தம் கடந்த கால நினைவுகளை ஏக்கத்துடன் அசை போட்டதைப் பலமுறை கேட்டிருக்கின்றேன். காலச் சக்கரம் மெல்ல மெல்லச் சுழன்று யுத்த மேகம் சூழ்ந்தது. 1980 களில் யுத்த காலங்களில் எல்லாம் அமைதியற்ற பொழுதுகள் வந்தபோது மக்களின் வாழ்விட இருப்பு பெருமளவில் குலையவில்லை. 1990 ஜூன் 15 ஆம் நாளில் இரண்டாம் ஈழப்போர் ஆரம்பமாகியது. அது துறைமுகப் பட்டினத்தினதும் சூழவுள்ள கிராமங்களதும் வலிகாமம் வடக்கினதும் மக்களின் வாழ்விட இருப்பைக் குலைத்தது.

பரம்பரையாக வேரூன்றிய தம் மண்ணிலிருந்து இடம் பெயர்ந்து குடாநா டெங்கும் நாட்டின் நாலா பிரதேசங்களுக்கும் உலகின் நாலா திசைக் கும் இடம் பெயர்ந்தார்கள். புலம் பெயர்ந்

தார்கள். காலச் சுழற்சி யுத்தத்தின் நிறைவின் பின்னர் மெல்ல மெல்ல மீள்குடியேறும் நிலையை உருவாக்கியது.

ஆனாலும், சில பிரதேசங்கள் மீள்குடியமர்விற்கு இன்னும் உட்பட வேண்டியுள்ளது. தம் தாய் மண்ணின் வாசனை நுகராமலேயே ஒரு தலை முறையும் தோன்றிவிட்டது. ஊர்கூடித் தேரிழுக்கும் கூட்டுறவு வாழ்வை மீண்டும் ஏற்படுத்த முனைப்புக்கள் நடக்கிறது. இழந்து போன வசந்த காலங்கள் மீளவும் கிடைக்காதா என நடுத்தர வயதை, முதுமையை அடைந்த தலைமுறை ஏங்குகிறது.


ஓமந்தை முதல் காங்கேசன்துறை வரை புகையிரதப் பாதை கள் அமைக்கும் பணி நடக்கிறது. கீரிமலை புனித தலத்திலும் பக்தர் கூட்டம் அலை மோதுகின்றது. வலிகாமம் வடக்கின் மீள் எழுச்சிக் காலம் வேகமாக நகருகின்றது.

துறைமுகப் பட்டினத்தின் ஈழத்து இசை நாடக தந்தை எனப் போற்றப்படும் நடிகமணி வி.வி.வைர முத்து அவர்களும் காங்கே சன்துறை மண்ணைச் சேர்ந்தவர் தான். இவரது இசை நாடகத்தி றமை நாடெங்கும் பெரும் புகழாக இன்றும் வியந்து கூறப்படுகிறது. நடிகர் திலகம் சிவாஜி கணேசனிடம் கூடப் பாராட்டுப் பெற்ற பெருங் கலைஞன் இவர்.

அரிச்சந்திர மயான கண்டம் என்றால் நடிகமணி வைரமுத்து தான் என்பார்கள். இவரது அரிச்சந்திரன் வேடம் இன்றளவும் புகழப் படுகிறது. நடிகமணியின் பாதிப்பு இல்லாமல் இசை நாடகத்தை நடிக்காதவர்கள் யாருமே இல்லையெனத் துணிந்து கூறலாம். இம் மண்ணின் புகழ் கூறும் வசந்த கான நாடக சபா நாடெங்கும் பெயரெ டுத்து இன்று வரையும் வெற்றி நடை போடுகிறது.

இப்பத்தி துறைமுகப் பட்டி னத்தின் உன்னத காலங்களை அறியாதவர்கள் அறிய வேண்டுமென ஆவணப்படுத்தும் நோக்-குடன் நிறைவு பெறுகின்றது.

**நன்றி. தினக்குரல் வாரவெளியீடு 2012.நவெம்பர் .18**



# சவாரிப் போட்டிக் காலங்கள்

மக்கள் மனம் மகிழ்ந்து பார்த்த கேளிக்கை விளையாட்டுக்களில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியும் ஒன்று. சிரித்திரன் எனும் நகைச்சுவை மாத இதழ் இருபது வருடங்கள் வரையில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்தது.

அதில் சவாரித் தம்பர் எனும் கேலிச் சித்திரப் பகுதி வந்தது. சவாரிப் போட்டிகளின் ரசனை எந்தளவுக்கு உயர்வாக இருந்தது என்பதைக் குறிக்க இது நல்லதோர் உதாரணம். யாழ்ப்பாணக் கிராமிய வாழ்வில் பெரும் செல்வாக்கைச் செலுத்திய சவாரிப் போட்டிகளின் தடங்கள் மீது இன்று நடந்து பார்ப்போம்.

மேற்கு நாடுகளில் கார் ஓட்டப் போட்டிகள் எவ்வளவு பிரபலமாக இருக்கின்றதோ, அது போல எம் மண்ணில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிகள் மிகப் பிரபலமாக இருந்தன. இன்றும் இருக்கின்றன. இவற்றை எம்மவரின் கார் ரேஸ் எனலாம். எம்மவரின் பாரம்பரியமான விளையாட்டுகளில் மிக மதிப்பு வாய்ந்ததாயிருந்தது.

ஊருக்கு ஊர் விளையாட்டு மைதானம் போல சவாரித் திடல்கள் இருந்தன. ஊரின் மேட்டு நிலப் பகுதிகளே பெரும்பாலும் சவாரித் திடல்களாக இருந்தன. ஆயினும் பிரபலமும் சனத்திரளும் மிக்க திடல்களாக நீர்வேலி, அளவெட்டி பிணாக்கை, ஊர்காவற்றுறை நாரந்தனை, மாவிட்டபுரம், பூநகரி, வட்டுக்கோட்டை, மட்டுவில் எனப் பிரதேசங்கள் தோறும் சவாரித் திடல்கள் இருந்தன.

அந்நாளில் மாட்டு வண்டில் வைத்திருப்போர் ஊரில் மதிப்பு மிக்கவர்களாக பணவசதி படைத்தோராக இருந்தனர். இன்று சைக் கிள் பார்க், கார்ப்பாக் இருப்பது போல பொது இடங்களில் மாட்டு வண்டிக்கு இடமிருந்தது. மாட்டு வண்டில்கள் பரவலாக இருந்த காலத்தில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிகளும் அதிகம் இருந்தன.

இன்றைய கார் பெற்ற மதிப்பை அன்றைய நாளில் மாட்டு வண்டிகள் பெற்றன. மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியில் பங்கே ற்பது உயிராபத்து மிக்க வேலையாகையால் “மாட்டு வேலை மோட்டு வேலை” என அந்நாளைய பெரியவர்கள் கூறினார்கள். சவாரிப் போட் டியில் வெற்றி பெறுவது ஆண்மையின் குறியீடாகப் பார்க்கப்படுவ தாக அக்காலம் இருந்தது.

சவாரிப் போட்டியில் வென்ற ஆண்கள் ஊர்களில் ஹீரோக் களாக மதிக்கப்பட்டார்கள். இந்திய தமிழகத்தில் காளை மாடுகளை அடக்கும் ஜல்லிக்கட்டுப் போன்ற போட்டிகள் எம்மண்ணில் நிக ழவில்லை. ஆயினும் அதற்கு நிகராகவே மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிகள் பார்க்கப்பட்டன. வெற்றி பெறும் சவாரி வீரனுக்கு தனி யாகவும், மாட்டுக்குத் தனியாகவும் பரிசு வழங்கப்படும் வழக்கம் இருந்தது. இன்றைய காலத்தைப் போல வேறு வகையான பொழுது போக்குகள் மிகக் குறைவாயிருந்த அக் காலத்தில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிகள் இருந்தது. ஆண், பெண் இரு பாலாரும் ஒன்று கூடி ரசித்தார்கள். புரட்டாதி மாதம் முதல் மழையுடன் நெற்செய்கை நடைபெறும். செம்புல, இருவாட்டி மண் தோட்டங்களில் கார்த் திகை மழை ஓய்வுடன் மரக்கறிச் செய்கை தொடங்கிவிடும்.

சித்திரை, வைகாசி மாதங்கள் வந்தவுடன் தோட்டச்

செய்கை ஓய்ந்து விடும். நிலம் வெறுமையாகிவிடும். அதன் பின்பாக மழை வரும் காலம் வரையில் பொழுது போக்காக நடைபெறும் விளையாட்டுகளில் ஒன்றாக மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியும் இருந்தது. சித்திரைப் புத்தாண்டுடன் அண்மித்ததாக சவாரிப் போட்டிகள் பரவலாக நடந்தன. மாட்டு வண்டிகள் ஒற்றைத் திருக்கல் வண்டி, இரண்டைத் திருக்கல் வண்டி என இருவகை உள்ளது. ஒரு மாடு பூட்டிய வண்டியை ஒருவர் ஓட்டிச் செல்வது ஒற்றைத் திருக்கல் வண்டியாகும். இரண்டு மாடுகள் பூட்டிய வண்டியை தனி ஒருவரோ, இருவரோ, ஓட்டிச் செல்வது இரட்டைத் திருக்கல் வண்டியாகும். மாட்டு வண்டியில் கூடாரம் போன்ற அமைப்பை ஏற்படுத்தி குடும்பமாக மங்கல, அமங்கல வீட்டு நிகழ்வுகளுக்கும் கோயில் திருவிழாக்களுக்கும் செல்லும் வழக்கமிருந்தது.

விளையாட்டுக் கழகங்கள், கோயில்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தமது நிதி திரட்டும் முயற்சியாக சவாரிப் போட்டிகளை அன்று நடத்தினார்கள். யாழ்ப்பாண நகரில் கோட்டைக்கு முன்பாக இருக்கும் முற்றவெளியில் தினகரன் பத்திரிகை அந்நாளில் சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், வாண வேடிக்கை என்பவற்றுடன் சவாரிப் போட்டிகளையும் நடத்தியது. கட்டணமின்றி இலவசமாகவே சவாரிப் போட்டிகள் நடந்தன. முதலாமிடத்தைப் பெற்ற சவாரிகாரருக்கு பரிசாக இலண்டன் பாட்டி உற்பத்தியாக்கிய வூல்ஸ்லீ நீரிறைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டது. தினகரன் பத்திரிகையின் இசை நிகழ்வும் அந்நாளில் பிரபலமாயிருந்தது.

போட்டிகளின் போது திரளும் மக்களைக் கட்டுப்படுத்தவென பொலிஸ் குதிரைப்படையினர் இருந்தனர். யாழ்.கோட்டையினுள் குதிரை கட்டும் லாயமிருந்தது. மாட்டு வண்டிச் சவாரி நடைபெறும் நாள் பெரும்பாலும் ஓர் ஞாயிற்றுக்கிழமையாக இருக்கும். ரக்சி அல்லது காரில் ஒலிபெருக்கியை இணைத்துக் கொண்டு போட்டிக்கு முதல் நாளும் போட்டி அன்றும் ஊர் ஊராக அறிவிப்புச் செய்யப்படும். கட்டணம் அறவிடப்படும் போட்டியாயின் சவாரி மைதானத்தின் பாதைகளை வழிமறித்து காவல் நிற்பார்கள். கட்டணம் வாங்குவதற்காக ஒரு வழிப்பாதையையே பெரும்பாலும் அமைக்கப்படும். ஊரின் பெரியவர்களுடன் இளைஞர்கள் இணைந்து நின்று

கட்டணம் வாங்குவார்கள்.ஆக முந்திய காலங்களில் 5 சதம், 10 சதம் என இருந்து ஐம்பது சதம், ஒரு ரூபா வரை வந்தது.

போட்டி நடைபெறும் மைதானத்தில் பார்வையாளர்கள் ஒரு கரையாக இருக்க தடுப்புக் கயிறுகள் கட்டப்பட்டிருக்கும். அப்பக் கம் பார்வையாளர்கள் நிற்பார்கள். சவாரி வண்டில்களும் அதனை ஓட்டுபவர்களும் போட்டி நடைபெறும் ஆரம்ப இடத்தில் நிற் பார்கள்.

விசில் அடித்தோ அல்லது கொடி அசைத்தோ போட்டி ஆரம்பித்து வைக்கப்படும். ஒற்றைத் திருக்கல் வண்டியாயின் அவை மட்டும் ஓடக்கூடியதாக சவாரிப் போட்டி அமையும். அதேபோல இரட்டைத் திருக்கல் வண்டியாயின் அவை மட்டும் ஓடும் போட்டி கள் நடைபெறும். போட்டி நடைபெறும் போது தம்மூர் மாடுகள், தமது தெரிந்தவர் மாடுகள் ஓடும் போது பார்வையாளர்கள் உற்சாகம் தெரிவித்து ஆரவாரம் செய்வார்கள்.

சவாரியாளர்கள் உற்சாகம் பொங்க ஓடுவார்கள். சவாரித் தூரம் ஒன்று முதல் இரண்டு கிலோ மீற்றர் தூரம் வரையும் இருக்கும். சவாரியில் ஓடும் நமது மாடு முதலாவதாக ஓட வேண்டுமென்ற நோக் குடன் பல உத்திகளைக் கையாளுவார்கள்.

கையில் ஆணி வைத்திருந்து மாட்டுக்கு குத்தி வேதனை உண்டாக்கி வேகமாக ஓட வைப்பார்கள். மற்றவனின் மாடு முந் திக் கொண்டு ஓடினால் அதன் ஆத்திரமும் தமது மாட்டின் மீதே திரும்பும். ஆணியால் குத்தும் வேகம் இன்னமும் அதிகமாகவே இருக்கும். மாட்டின் பின்புறம் குத்தி இரத்தம் கசியக் கசிய ஓட வைப் பார்கள்.

அந்நாளில் மிருகவதைச்சட்டங்கள் இப்போதையதைப் போல வலுப் பெற்றிக்கவில்லை. இதனால் பல்லாயிரம் பார்வையாளர்கள் பார்த்திருக்க மாட்டின் வேகத்தைக் கூட்டச் செய்யப்படும் இது போன்ற ஈனச் செயல்களைக் கண்டு கொள்வதில்லை .

சினிமாப் படங்களில் காட்டுவது போல மாட்டின் தீவனத்துடன் வெறியூட்டும் தன்மை கலந்தும் சிலரால் வைத்திருக்கப்படலாம். மாட்டுக்கான ஊக்க மருந்துச் சோதனைகள் அன்றுமில்லை. இன்றும் எம்மண்ணில் இல்லை. இதனால் அத்தகைய சோதனைகளுக்கு வாய்ப்பு இல்லை. அந்நாட்களில் சவாரிப் போட்டிகள் ஒற்றைத் திருக்கல் வண்டிகளாகவோ, இரட்டைத் திருக்கல் வண்டிகளாகவோ நிகழ்ந்தது. ஆனால், இந்நாளில் அங்கொன்று, இங்கொன்றாக நிகழும் சவாரிப் போட்டிகள் இரட்டைத் திருக்கல் வண்டிப் போட்டிகளாக மட்டுமே நிகழ்கின்றன.

சவாரிப் போட்டிகள் A.B.C என மூன்று வகைகளாகவும் நடைபெறும் முறை இருக்கின்றது. நலம் போட்ட மாடுகள் இரட்டைத் திருக்கல் வண்டியில் நடைபெறுவது ஒரு வகை. நலம் போடாத இளம் மாடுகளை வைத்து நடைபெறுவது இன்னொரு வகை. வளர்ச்சியடைந்த சின்னப் பருவ மாடுகளை வைத்து நடைபெறும் சவாரிப் போட்டிகள் மூன்றாவது வகை.

சவாரிப் போட்டிகளில் விண்ணர்களாகியவர்களுக்கு அவர்களின் பெயருடன் சவாரி என்பது ஒட்டியிருக்கும். மயிலிட்டியைச் சேர்ந்த ஒருவர் சவாரிச் சபாபதி என அழைக்கப்பட்டார். இவர் தொடர்ந்து பத்து வருடங்களாக சவாரிப் போட்டியில் முதலாவது பரிசைப் பெற்றார். அண்மையில் தான் காலமானார்.

அதேபோல, அச்செழு கிராமத்தைச் சேர்ந்த சுருளி சின்னத்துரையும் சவாரிப் போட்டிகளில் பிரபலம் பெற்றிருந்தார். இதுபோல சவாரியால் பிரபலம் பெற்றவர்கள் ஊருக்கு ஊர் பலர் இருந்தார்கள்.

சவாரி மோகத்தால் தமது கல்வியைத் துறந்து பொன்பொருள் இழந்தவர்களும் பலர் இருந்தார்கள். சவாரி நடைபெறுவதற்குப் பல வாரங்கள் முன்பாகவே சவாரித் திடலில் பயிற்சிகள் நடைபெறும். போட்டி நடைபெறும் போது மாடுகள், வண்டில்கள் ஒன்றுடன் ஒன்று முட்டி மோதி இறந்தவர்களும் சிலர் இருந்தார்கள். படுகாயப்பட்டு ஊனமுற்றவர்களும் இருந்தார்கள். மாடுகள் பார்வையாளர்கள் பக்கம் தெறித்தோடி பொது மக்கள் காயப்பட்ட நிகழ்வுகளும் நடந்தன.

ஆனாலும் சவாரிப் போட்டிகளின் மீது மோகம் கொண்டு அதையே தமது முழுநேரப் பொழுது போக்காகக் கொண்டவர்கள் பலர் இருந் தார்கள்.

கைக்கொடிச் சவாரி எனும் ஒரு வகைச் சவாரிப் போட்டியும் இருந்தது. மாட்டின் கழுத்தின் மீது கயிற்றைப் போட்டு மாடு முன்பாக ஓட கயிற்றைப் பின்புறமாக பிடித்துக் கொண்டு ஓடு வார்கள். சில வேளை மாடு வேகமாக ஓட கயிற்றைப் பிடிப்பவர் கையைவிட வேண்டியிருக்கும். இவ்வகைப் போட்டியைத் தான் கைக் கொடிச் சவாரி என்பார்கள்.

மெல்ல மெல்ல ஆரம்பித்த யுத்தமும் தொலைக்காட்சியின் தாராள புழக்கமும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிகளின் செல்வாக்கை பெருமளவு குறைத்தது.

குறைவான தேவைகளுடன் வாழ்ந்த மக்களுக்கு சவாரிப் போட்டிகள் மதிப்பு மிக்கதாயிருந்தது. பொழுது போக்குகள் தேவை கள் அதிகரிக்கவும் யுத்தத்தின் தீவிரமும் சவாரிப் போட்டிகளின் உச்சக் காலத்தை மங்கச் செய்து விட்டது.

காலச்சக்கரம் மெல்ல மெல்லச் சுழன்று யுத்த மற்ற காலத்தை மீண்டும் தந்துள்ளது. சவாரிப் போட்டிகள் இங்கொன்று அங்கொன் றாக இப்பொழுது நிகழ்கின்றன. ஆயிரக் கணக்கில் மக்கள் முன்பு ரசித் தார்கள். இப்போதோ பலநூறு பேர் ரசிக்கும் ஒரு பாரம்பரிய விளை யாட்டாகச் சுருங்கி விட்டது. சவாரித் திடல்கள் பல அப்படியே தான் இருக்கின்றன.

ஆனால், சவால் விட்டு விளையாடும் தீவிர போட்டி யுகம் குறைந்து விட்டது. புலம்பெயர் நாடுகளில் இருந்து ஜூன், ஜூலை மாத விடுமுறைக் காலங்களில் வரும் எம்மவர்கள் சவாரி வீரனாக, தீவிர ரசிகனாக இருந்து இறந்து போன தம் உறவுகளின் நினைவாகப் போட்டிகளை நடத்துகின்றார்கள். பாரம்பரியமாகத் தொடரும் இந்நிகழ்வுகள் வரவேற்கத்தக்கவை.

- வேதநாயகம் தபேந்திரன் -

ஊர் கூடித் தேரிழுத்த ஒற்றுமைப் பண்பாட்டின் வேர்களில் ஒன்றாகிய சவாரிப் போட்டிகளை ஆதரித்து மறையாத சொத்தாக்குவோம்.

**நன்றி. தினக்குரல் வாரவெளியீடு 2012.நவம்பர் 25**



இந் நூலாசிரியர் திரு.வேதநாயகம் தபேந்திரன் யாழ் வடமராட்சி அல்வாய் கிராமத்தைச் சேர்ந்தவர். இலங்கையின் தலைசிறந்த வரலாற்று பதிவாளரான தபேந்திரன் அவர்கள். சிறந்த குடும்ப. சமூக. கலை இலக்கிய பின்னணியில் இருந்து உருவான நம் சமூகத்தின் ஒரு "முத்து" என்று அவரைக் கூறமுடியும்.

"காலம் விதைத்து செல்கின்ற
உயர்ந்த மதிப்பீடுகளை
சுமந்து நிற்கின்ற ஒரு
மகா புருஷனாக நீ இருக்கின்றாய்"

என்ற பார்வையினூடே நான் எப்போதும் அவரைப் பார்ப்பதுண்டு கிளிநொச்சி மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தராக கடமைபுரியும் தபேந்திரன் தனிமனித சமூக ஈடேற்றத்திற்கான ஒரு ஊன்று கோலாக நின்று சமூகத்தின் வாழ்நிலைப் பதிவுகளுக்காய் தன்னை அர்ப்பணித்து அதனூடே பயணிக்கும் ஒரு சமூகவியலாளர் ஆவார்.

இவர் இது வரை பன்னிரண்டு பதிவுகளை நூலாக வெளியிட்டுள்ளதுடன் தேசிய மற்றும் மாகாண. சர்வதேச. கலை இலக்கிய விருதுகளையும் மிக சிறு வாழ்நிலை பயணத்தில் தொட்டு தொடர்ந்தும் பயணிக்கும் ஒரு சமூக தேடலாளர் ஆவார். இவரது பதிவு நம் சமூகத்தின் இருப்புக்காய் போடப்படும் ஆழமான அத்திவாரமாகும். இப்பணி மூலம் நம் சமூகத்தின் காவலனாய் விளங்கும் அவரது தேடல் பயணத்தின் பதிவுகளின் வழி நம் சமூகத்தின் ஒரு குறிகாட்டியாக நிற்கின்றார். திரு.தபேந்திரன் எதிர்கால நம் சமூகத்தின் தேடல் புதையலாக விளங்குவார் என்பது மகிழ்வுக்குரிய நிலைப்பாடாகும்.

வண. T.S.யோசுவா
நிறைவேற்று இயக்குனர்
காவேரி கலா மன்றம்
கிளிநொச்சி

ISBN 978-955-41392-0-6
9 789554 139206

தேவி Printers, Jaffna